உ

கடவுள் துணை.

ஜாதக சிரோன்மணி

என்னும்

பிருஹத் ஜாதகம்

(Hindu Astrology)

சென்னை முத்தியாலுப்பேட்டை ஹைஸ்கூலில் சைன்ஸ் உபாத்தி ராயிருந்தவரும், கணித சாஸ்திரத்தில், பி. ஏ. பட்டம் வகித்த ம், திருக்கித்த ஆரிய, சூரிய, சித்தாந்த, வாக்கிய கணிதப் பயிற்சி ளவரும் "ஆனந்த போதினி" சுத்த திருக்கணித பஞ்சாங்க கணித " ஜாதக கணிதம் என்னும் ஜோதிட கிரக சட்பலம் ஆயுள் கணி தம்" என்ற புத்தகத்தின் ஆசிரியருமாகிய,

S. G. ராஜன், B. A., (Mathematics)

அவர்களால் எழுதப்பட்டது.

முதல் அத்தியாயம்.

ரபே தோத்யாயம்.

M.

கால புருஷனுடைய ஆத்மா மனசு முதலியவை 17

3 கிரகங்களின் பெயர்கள் 17

Rs 22.00

உ

கடவுள் துணை.

ஜாதக சிரோன்மணி

என்னும்

பிருஹத் ஜாதகம்

(Hindu Astrology)

இது

உலகப் பிரசித்தி பெற்ற வராஹ மிகிரரால் அருளிச்செய்யப்பட்ட கிரந்தத்தின் தமிழ் மொழி பெயர்ப்பு. இது சுலபமான தமிழ் வசன நடையில் எழுதப்பட்டுளது. இதில் வியாக்கியானங்களும், கஷ்டமான இடங்களில் உதாரணங்களும், வாக்கியங்களும் (Tables), ஆயுளைச் சுலபமாய் நிர்ணயஞ் செய்யும் மார்க்கமும் கொடுக்கப்பட்டுள. இதில் இதர கிரந்தத்திலிருந்து விஷயங்கள் எடுத்து தேவையான இடத்தில் சேர்க்கப்பட்டுள.

இது

சென்னை முத்தியாலுப்பேட்டை ஐ ஸ்கூலில் சைன்ஸ் உபாத்தியாயராயிருந்தவரும் கணித சாஸ்திரத்தில், பி. ஏ., பட்டம் வகித்தவரும் திருக்சித்த ஆரிய, சூரிய, சித்தாந்த, வாக்கிய கணிதப் பயிற்சியுள்ளவரும், "ஆனந்த போதினி" சுத்த திருக்கணித பஞ்சாங்க கணிதரும், "ஜாதக கணிதம் என்னும் ஜோதிட கிரக சட்பலம் ஆயுள் க... தம்" என்ற புத்தகத்தின் ஆசிரியருமாகிய,

C. G. ராஜன், B. A, (Mathematics)

...ழுதப்பட்டது.

...ணை.

...ition.

விஷய அட்டவணை.

1-வது அத்தியாயம்.

இராசி பிரபே தோத்யாயம்.

2-வது அத்தியாயம்.

கிரகயோனி பிரபே தோத்யாயம்.

3-வது அத்தியாயம்.

வியோனி ஜன்மாத்யாயம்.

4-வது அத்தியாயம்.

நிஷேகாத்யாயம்.

5-வது அத்தியாயம்.

ஜன்ம விதிர் நாமாத்யாயம்.

6-வது அத்தியாயம்.

அரிஷ்டாத்யாயம்.

7-வது அத்தியாயம்.

ஆயுர்தாயாத்யாயம்.

8-வது அத்தியாயம்.

தசாந்தர் தசாத்யாயம்.

9-வது அத்தியாயம்.

அஷ்ட வர்க்காத்யாயம்.

10-வது அத்தியாயம்.

கர்மா ஜீவாத்யாயம்.

11-வது அத்தியாயம்.

இராஜ யோகாத்யாயம்.

12-வது அத்தியாயம்.

நாபசயோகாத்யாயம்.

13-வது அத்தியாயம்.

சந்திர யோகாத்யாயம்.

14-வது அத்தியாயம்.

த்விகிரக யோகாத்யாயம்.

15-வது அத்தியாயம்.

பிரவி ரஜ்யாயோகாத்யாயம்.

16-வது அத்தியாயம்.

ருக்ஷ சீலாத்யாயம்,

17-வது அத்தியாயம்.

சந்திர ராசி சீலாத்யாயம்.

18-வது அத்தியாயம்.

ராசி சீலாத்யாயம்.

19-வது அத்தியாயம்.

திருஷ்டி பலாத்யாயம்,

20-வது அத்தியாயம்.

பாவாத்யாயம்.

21-வது அத்தியாயம்.

ஆஸ்ரய யோகாத்யாயம்.

22-வது அத்தியாயம்.

பிரகீர்ண காத்யாயம்.

23-வது அத்தியாயம்.

அநிஷ்டாத்யாயம்.

24-வது அத்தியாயம்.

ஸ்ரீ ஜாதகாத்யாயம்.

25-வது அத்தியாயம்.

நைர்யாணிகாத்யாயம்.

26-வது அத்தியாயம்.

நஷ்ட ஜாதகாத்யாயம்.

27-வது அத்தியாயம்.

திரேஷ்காணாத்யாயம்.

28-வது அத்தியாயம்.

உபசம்ஹாராத்யாயம்.

பிழை திருத்தம்.

பக்கம்.	வரி	பிழை	திருத்தம்.
17	19	அலனேய	அவனேய
17	20	லித்	வித்
17	21	வாச்சம்பதி	வசசாம்பதி
17	23	மந்தா	கோனே
34	1	16-வது சுலோகம்	16, 17-வது சுலோகம்
36	31	கிரகங்களின் காலபலன்	கிரகங்களின் காலபலம்
39	6	மகர சிம்மங்களின்	கும்ப சிம்மங்களின்
40	12	கெற்பாதனப் படலம்	கெற்பாதானப் படலம்
56	14	விளக்கில் உளற்றின	விளக்கில் ஊற்றின
56	17	,, ,,	,, ,,
68	9	அவ்வயவத்தில்	அவயவத்தில்
67	14,15	மணித்தவர்	மணித்தர்
12	17	16 செ, (சனி-ல) கு	16 செ, குரு, (சனி-ல), கு
17	9	(a) (b)	(a) (c)
117	11	(c) (d)	(b) (d)
118	5	10-த்திலாவது	10-லாவது
120	11	பலயோகம்	யவ யோகம்
120	12	யம்ஜ யோகம்	யப்ஜ யோகம்
121	16	விஹாக யோகமாகும்	விஹக யோகமாகும்
23	14	சமுதர யோகமாகும்	சமுத்ர யோகமாகும்
23	22	யுக் யோகமாகும்	யுக யோகமாகும்
128	23	கோதார	கேதார
123	25,26	தமனி யோகமாகும்	தாமினி யோகமாகும்
25	19	செல்வத்தால சூரிய மண்டலம்	செல்வதால் சூரிய மண்டலம்
26	7	நவாசயோகப் பெயர்களாகிய	நாபச யோகப் பெயர்களாகிய
132	8	32-வித நபாசாதியோக ஜாபிதா	32-வித நாபசாதியோக ஜாபிதா
134	30	ஆதி யோகம் என்பர்	அதியோகம் என்பர்
148	16	வலிவாயிருந்தாலவன் யாசன வகுப்பு	வலிவாயிருந்தால் வன்யாசன வகுப்பு
197	18	தோற்றுவதாக யூகிக்க வேண்டியது	தோற்றுவதாகத்தோணவில்லை என்று யூகிக்க வேண்டியது
217	5	ஸ்ரீகளுக்குரிய அம்சங்களால்	ஸ்ரீகளுக்குரிய அம்சங்கள்
217	27	பார்க்கப் படிந்தவளுக்கும்	பார்க்கப் பிறந்தவளுக்கும்
219	17	முதலிய நற்குணங்களுள்ளவள்	முதலியதுற்குணங்களுள்ளவ
220	7	ஜாதகி யாருக்கு	ஜாதகி எவருக்கும்
288	30	இருந்து சட்பலம்	இருந்தால் சட்பலம்
41		தலைப்பு 3-வது அத்தியாயம்	4-வது அத்தியாயம்
43		,, ,, ,,	,, ,, ,,
45		,, ,, ,,	,, ,, ,,
47		,, ,, ,,	,, ,, ,,
53		தலைப்பு 4-வது அத்தியாயம்	5-வது அத்தியாயம்
63		தலைப்பு 4-வது அத்தியாயம்	6-வது அத்தியாயம்

பக்கம்.	வரி	பிழை	திருத்தம்.
177		தலைப்பு 19-வது அத்தியாயம்	20-வது அத்தியாயம்
179		தலைப்பு 19-வது அத்தியாயம்	20-வது அத்தியாயம்
181		,, ,, ,,	,, ,, ,,
183		,, ,, ,,	,, ,, ,,
		அடியிற்கண்ட வரிகளை எடுத்து விடவும்:—	
30	14-16	ஆகையால் இவ்விதமாய்..............கொடுக்கப்பட்டிருக்கிறது.	
30	25-26	லக்கின ஸ்புடஞ் செய்யும் வழிகடைசியில் காட்டப்பட்டிருக்கின்றது.	
39	1-5	சர்பத் திரேகாணம் அல்லதுஇரண்டாவது திரேகாணமாகும்	
85	16-17	இந்த உடுமகா தெசை.........கடைசியில் கொடுக்கப்பட்டிருக்கின்றது.	
108	13-15	அஷ்டவர்க்கம் சுலபமாய்......சொல்லியிருப்பதை வாசிக்கவும்	
111	8-9	மேலும் இந்த...................கொடுத்திருப்பதை வாசிக்கவும்	
226	25-26	குறிப்பு:—ஸ்ரீ ஜாதகவிஷயமாக.....................பார்க்கவும்	
		அடியிற் கண்டவைகளைச் சேர்த்துக்கொள்ளவும்	
52		24, 26வது வரிகளுக்குமத்தியில் "4-வது சுலோகம்" 282-வது பக்கம் பார்க்கவும் என்பதைச் சேர்க்கவும்.	
55		10, 12-வரிகளுக்கு மத்தியில் "15-வது சுலோகம் 282-வது பக்கம் பார்க்கவும்" என்பதைச் சேர்க்கவும்.	
65		9, 11-வது வரிகளுக்கு மத்தியில் "5-வது சுலோகம் 282-வது பக்கம் பார்க்கவும்' என்பதைச்சேர்க்கவும்	
118	21	"அனுபவிப்பான்" என்பதுடன் "282-வது பக்கம் பார்க்கவும்" என்பதைச் சேர்க்கவும்.	
135		4-வது முதல் 19-வது வரிவரையிலுமுள்ளவைகளைச் சரியாய் அடுக்காததால் 284-வது பக்கம்பார்க்கவும்.	
177		16, 18-வது வரிகளுக்கு மத்தியில் "20-வது அத்தியாயம்" என்பதைச் சேர்க்கவும்.	
		முன்னுரை.	
7	17	ஒருங்காகவும்	ஒழுங்காகவும்
	32	யோகபாத்திரா	யோக யாத்ரா
	33	பிருஹத	பிருஹத்

முன்னுரை.

ஜ்யோதிஷம், என்பது ஆகாயத்தில் ஜோதியாய் நமக்குப் புலப் ...ன்ற அண்டங்களால் உண்டாகின்ற நன்மை தின்மைகளைப் பற்றி ...யாகவே தெரிவிக்கின்ற ஒரு சாஸ்திரமாகும். இது ஒரு புராதீன சாஸ்திரம். தின்மையை நீக்கி நன்மையைக் கோருவது மனிதரு இயல்பாதலாலும், மனிதருடைய வாழ்நாளில் இனிமேல் வரப் ...ன்ற நன்மை தின்மைகளைப்பற்றி முன்னமே அறிவது அவசிய ...ாலும், இயற்கையாதலாலும், இந்த சாஸ்திரம் எக்காலத்திலும் ...லாராலும் நன்குமதிக்கப்படும் சாஸ்திரமாகும். இந்த சாஸ்திரம் ...யர்களால் மிகவும் பெருமையாகப் பாராட்டப்பட்டு வருகின்ற ...த்தில் ஒரு அங்கமாகப் பாவிக்கப்பட்டிருக்கின்றது. ... சாஸ்திரம் மிகவும் பெருமை வாய்ந்தது என்று கரு... ...தாரு ஐயமுமில்லை. இதை அனேக நிபுண இந்திய வா... ...ரும் ஜோதிடர்களும் படித்து கையாண்டு கொண்டு வ...க ...முடைய தேசத்து வானசாஸ்திர நூல்களாலும், ஜோதிட நூல்களா...ம் இன்னம் இதர சாஸ்திரங்களாலும் புலப்படுகின்றது.

இந்த சாஸ்திரம் இரண்டு பெரிய வருப்புகளாகப் ...படும். ...வை (1) வானசாஸ்திரம் (2) மானிடஜென்ம...யுள்ள ...வராசிகளுக்கு நேரிடும் நன்மை தின்மைகளைத் தெரி... ஜோதி...ம் என்பனவாம். வானசாஸ்திரம் என்பது ஆகாய...ள அனேக ...நட்டங்கள் சென்றுலுங்கூட அசைவற்றிருப்பது... தோற்று ...ன்ற நட்சத்திரங்களைப்பற்றியும், ஒரே இடத்தில் ...மல் அடிக் ... நகர்ந்து கொண்டேயிருக்கின்ற அண்டங்கள் என்... சொல்லப்படு ...ன்ற கிரகங்களைப்பற்றியும், தூமகேது முதலியன...ப்பற்றியும் ...க்குத் தெரிவிக்கும். அதாவது நட்சத்திரங்கள், கிரக... முதலிய ...வகளின் உருவத்தையும், அளவையும், அவைகள் ...லோகங் ...ால் உண்டாக்கப் பட்டிருக்கின்றனவென்பதையும் தெ...டன், ...கங்கள் எவ்விதமாக அசைகின்றன என்பதையும், அ...சைவ ...குக் காரணத்தையும், அந்த காரணத்தைக்கொண்டு நமக்குத் தேவை ...ா ஒரு காலத்தில் கிரகங்கள் ஆகாயத்தில் எவ்விடத்தில் இருக்கும் ...டதை அறியும் மார்க்கத்தையும், கிரஹணங்கள் சம்பவிக்கும் காலத் ...யும் தெரிவிக்கும். ஆனால் இந்த சாஸ்திரம், நட்சத்திரம், கிரகங்கள் ...மகேதுக்கள் முதலியவைகளால் இந்த பூமண்டலத்திலுள்ள ஜீவ ...ணிகளுக்குச் சம்பவிக்கும் நன்மை தின்மைகளைப்பற்றி ஒன்றுந் ...ிவிக்கின்றதில்லை. ஜோதிடசாஸ்திரமோ 'இப்பிரபஞ்சத்திலுள்ள ஜீவ

ராசிகள், தாவர வர்க்கங்கள் முதலியவைகளுக்கும் ஆகாயத்திலுள்ள நக்ஷத்திரங்கள் கிரகங்கள் முதலிய அண்டங்களுக்குமுள்ள ஒருவித சம்பந்தத்தை எடுத்துக் காட்டுகின்றது. மேலும் ஜீவராசி முதலியவைகளுக்கு உண்டாகின்ற நன்மை தின்மைகள் கிரகங்கள் ஆகாயத்திலிருக்கும் இடத்திற்குத் தக்கவாறு மாறுபடுகின்றனவென்றும் ஜோதிடந் தெரிவிக்கும். ஆகையால் ஆகாயத்தில் கிரகங்கள் இருக்குமிடங்களை மிகவும் துல்லிபமாக அறிய வேண்டியதவசியமென்று புலப்படுகின்றது. ஆகாயத்தில் கிரகங்கள் இருக்கின்றவிடங்கள், ஜோதிடத்திற்கு முக்கியமானதால் இந்த இடங்களைப்பற்றி தெரிவிக்கின்ற வானசாஸ்திரம் ஜோதிடத்திற்கு முதற் கருவியாகவும் துணைக்கருவியாகவுமிருக்கின்றது என்பது எடுத்துக்காட்டாமலே நன்றாய்ப் புலப்படுகின்றது. ஆகையால் ஜோதிட சாஸ்திரத்தைக் கையாளுகின்றவர்களுக்கு வானசாஸ்திரந் தெரிந்திருப்பது மிகவும் நன்மையை விளைவிக்கும்.

சோதிடசாஸ்திரத்தைக் கொண்டு சொல்லப்படும் பலாபலன்கள் தவறிப்போகாமல் சரியாக இருக்கவேண்டுமானால் மேலே சொல்லிய காரணத்தினால் வானசாஸ்திரமும் தவறுதலாயில்லாமல் சரியாக விருக்க வேண்டுமென்பது அவசியமாகின்றது, நமது இந்து தேச வானசாஸ்திரம் அநேக வருடங்களாகக் கைபாளப்பட்டு வந்திருந்தும் சுமார் முந்நூறு, நானூறு வருடங்களாக விருத்தியில்லாமலிருந்து கொண்டிருக்கின்றது. இது இப்படி இருப்பதற்குப் பல காரணங்களுள. அவைகளைப்பற்றி இங்கு விவரமாகச்சொல்லுவது அனுவசியமானது. வானசாஸ்திரம் அநேக காலமாக நாளுக்கு நாள் விருத்தி செய்யப்பட்டு அப்போதைக்குப் போது கூடியமட்டும் துல்லிபமாக இருக்கும்படியாக நம் முன்னோர்கள் வானசாஸ்திரப் புத்தகங்களை எழுதி இருக்கின்றார்கள். இப்படி எழுதப்பட்ட புத்தகங்கள் அநேகமாயும், ஒன்றுக்கொன்று வித்தியாசமாயுமிருக்கின்றன. இப்புத்தகங்களுக்குச் சித்தாந்தமென்றும் கரணங்கள் என்றும் வாக்கிய கணிதங்கள் என்றும் பலவாராய் பெயரிடப்பட்டிருக்கின்றது. சோதிடத்திற்கு வேண்டிய கிரகங்களிருக்கின்ற ஸ்தானங்களைப் பெரும்பான்மையோர் பஞ்சாங்கங்கள் மூலமாய் அறிவதாலும், சோதிடத்திற்குப் பஞ்சாங்கங்கள் சரியாக விருக்கவேண்டுமென்பது அவசியமாகின்றது. பஞ்சாங்கங்கள் வானசாஸ்திரப் புத்தகங்களினுதவியால் கணிக்கப்படுவதாலும், இந்து தேசத்து வானசாஸ்திரப் புத்தகங்கள் கிரகங்களினுடைய நிலையில் ஒன்றுக்கொன்று வித்தியாசம் விளைவிக்கக்கூடியவைவாயிருப்பதாலும், பஞ்சாங்கங்கள் ஒன்றுக்கொன்

தியாசமாகவிருக்கின்றன. இவ்வித வித்தியாசமாகவிருக்கின்ற பல சாங்கங்களைப் பலர் உபயோகப்படுத்துவதால் ஓரே ஜாதகம் பல பலவித வித்தியாசத்துடன் எழுதப்பட்டு வருகிறது சகஜமாக க்கின்றது, இவ்விதமாக இருப்பதற்கு இத்தேச வானசாஸ்திரப் தகங்கள் எவ்வளவு வரையிலும் சரியானதாக விருக்கின்றனவென் , இந்தியர்களால் செய்யப்பட்ட சரியான வானசாஸ்திரப் புத்தகம் றுமில்லாமலிருந்தால் சரியான வானசாஸ்திரப் புத்தங்கள் எந்த த்தாரால் செய்யப்பட்டு வருகின்றன என்று அறிந்து அந்த புத்த களைக் கையாளாமலிருப்பதே முக்கிய காரணமாகும். தற்காலத்தில் பான வானசாஸ்திர புத்தகங்களைக்கொண்டு திருக்கணித பஞ்சாங்கம் என்று பெயரிட்டுச்சிலர் பஞ்சாங்கங்களைக் கணித்து வருகின்றார்கள். பஞ்சாங்கங்களினுதவியால் அல்லது சரியான வானசாஸ்திர புத்த களினுதவியாக கிரகங்களின் ஸ்புடத்தைக் கணித்தல் மிகவும் அவ மானது.

மேலும் ஜாதகபலாபலன்களை அறிவதற்குக் கிரகங்களிருக்கும் யையும் அவைகளினுடைய வலிவையும் அறிய வேண்டும். உதாரண க ஒரு ஜாதகருக்கு ஆயுள், அல்லது ஜீவனயோகம் அல்லது களத் யோகம், அல்லது புத்திரயோகம் அறியவேண்டுமானால் அந்தந்த வங்களை எந்த கிரகங்கள் பார்க்கின்றனவென்றும், பார்க்கின்ற கிரகங் ன் பலாபலத்தையும், அந்தந்த பாவங்களுக்கு அதிபதியாயிருக்கின்ற கங்களினுடைய பலத்தையும் அவைகளுடன் சம்பந்தப்பட்ட அல் அவைகளைப் பார்க்கும் கிரகங்களின் பலத்தையும் அந்தந்த பாவங் லிருக்கின்ற கிரகங்களின் பலத்தையும் அறியவேண்டியது மிகவும் சியமாகவிருக்கிறது, ஆகையால் எவ்வித பலாபலன்களைச் சொல்லு ற்குக் கிரகங்களின் பலாபலத்தை முதலில் அறிய வேண்டுமென்று படுகின்றது. கிரகங்களின் பலத்தை அறிய வேண்டுமானால் கணிதம் பது அறிய வேண்டுமேயல்லாமல் ஜாதகத்தை தோராயமாக பார்த்து டுக் கணிதம் செய்யாமல் சொல்லமுடியாது. ஒரு சமயம் சொல்லி அது தோராயமானதே தவிர துல்லியமானதல்ல, ஏனென்றால் ங்களின் பலத்தை அறிவதற்கு அநேக அம்சங்களைக்கொண்டு பலம் யவேண்டுமாதலால் ஜாதகத்தைப் பார்த்த மாத்திரத்தில் கிரகபல க நிர்ணயிப்பது அசாத்தியமாகும். ஆகையால தான் உதாரணமாக இராசியில் குரு, சனி என்ற இரண்டு கிரகங்களும் சம்பந்தப்பட்டி னால் இரண்டு ஜோதிடர்களில் ஒருவர் சனியைவிட குரு வலுவா

யிருக்கின்றார் என்றும், மற்றொருவர் அப்படித் தோன்றவில்லை என்றும் குருவைவிட சனிதான் வலுவாயிருக்கின்றதாகத் தோன்றுகின்றதென்றும் சொல்லுவது மிகவும் சகஜமாகவிருக்கின்றது. இப்படிச் சொல்வதற்கு, இவ்விரண்டு கிரகங்களின் வலிவைக் கணிதரீதியாய் இவ்விரண்டு ஜோதிடர்களும் கணித்துப் பார்க்காமல் ஜாதகத்தைப் பார்த்துவிட்டு அவர்களுடைய மனதிற்குத் தோன்றியபடி சொல்லுவதுதான் காரணமாகும், இப்படிச் செய்யாமல் கணிதரீதியாய்க் கணித்துப்பார்த்தால் இரண்டு ஜோதிடர்களும் வித்தியாசமாய் அபிப்பிராயப்படுவதற்குக் காரணமிராது. ஒரு கிரகத்தினுடைய பலம் 6 வகைப்படும். அவை (1) ஸ்தானபலம், கிரகதிருஷ்டி பலம் (2) காலபலம், (3) அயனபலம், கிரகயுத்தபலம் (4) நைசர்க்கிகப்பலம் (5) திக்குப்பலம் (6) ஜேஷ்டா பலம் என அறுவகைப்படும். இந்த 6 வித பலங்களும் சட்பலம் என்று சொல்லப்படும். இந்த 6 வித பலன்களில் சில அநேக அம்சங்களுடையனவாகும். உதாரணமாக ஸ்தானபலம் என்பது (1) உச்சபலம் (2) கேந்திராதிபலம் (3) திரேகாணபலம் (4) யுக்மா யுக்மபலம் (5) சப்தவர்க்கஜ பலம் என 5 வகைப்படும். இந்த சப்தவர்க்கஜ பலம் என்பது (1) இராசிவர்க்க பலம் (2) நவாம்சை வர்க்கபலம் (3) திரேக்காணவர்க்கபலம் (4) துவாதசாம்ச வர்க்கபலம் (5) சப்தமாம்சவர்க்கபலம் (6) ஓராவர்க்க பலம் (7) திரிம்சாம்சவர்க்க பலம் என 7 வகைப்படும். ஆகையால் ஸ்தானபலம் என்பது மொத்தத்தில் 11 அம்சங்களுடையது. மேலும் காலபலம் என்பது (1) நதஉன்னதபலம் (2) தினராத்திரிகிபாகப்பலம் (3) தினபலம் (4) மாசபலம் (5) வருஷபலம் (6) ஓராபலம் (7) பட்சபலம் என 7 வகைப்படும். ஆகையால் கிரகங்களினுடைய சட்பலம் என்று சொல்லப்பட்டது அடியிற்கண்ட பலன்களை அடங்கியுள்ளதென்று அறியவேண்டியது.

1.	கிரகதிருஷ்டிபலம்	10	சப்தமாம்ச வர்க்கபலம்
2.	உச்சபலம்	11.	ஓராவர்க்க பலம்
3.	கேந்திராதிபலம்	12.	திரிம்சாம்ச வர்க்கபலம்
4.	திரேகாணபலம்	13.	நதஉன்னத பலம்
5.	யுக்மாயுக்மபலம்	14.	தினராத்திரிதிரிபாக பலம்
6.	இராசி வர்க்கபலம்	15.	தினபலம்
7.	நவாம்சவர்க்க பலம்	16.	மாசபலம்
8.	திரேகாண வர்க்கபலம்	17.	வருஷபலம்
9.	துவாதசாம்ச வர்க்கபலம்	18.	ஓராபலம்

19. பட்சபலம்
20. அயனபலம்
21. கிரகயுத்தபலம்
22. நைசர்க்கிக பலம்
23. திக்குப்பலம்
24. ஜேஷ்டாபலம்

ஆகையால் ஒரு கிரகத்தினுடைய பலம் 24 அம்சங்களால் ஏற்பட்டதாகும். ஒரு கிரகத்தின் பலத்தை அறியவேண்டுமானால் மேலே சொல்லிய 24 வித அம்சங்களையும் இந்த அம்சங்களை அறிவதற்காகத் தேவையான கணிதங்களையும் அறியவேண்டியது அவசியம். இவைகளெல்லாம் பெரும்பாலும் கணித்துப் பார்க்க வேண்டியனவாயிருப்பனவே தவிர மனதிலேயே அறியக்கூடியனவாகவில்லை. ஆகையால் ஒரு ஜாதகத்தைப் பார்த்தவுடனே கிரகங்களின் வலிவைப்பற்றி கணித்துப் பார்க்காமல் மனதிலேயே அபிப்பிராயப்படுவது பிசகாகும் அல்லது தோராயமாகும் என்பது எடுத்துக்காட்டாமலே தெரியவரும். ஆகையால் அநேக ஜோதிடர்கள் சொல்லும் பலாபலன்கள் தவறிப்போகின்றது மிகவும் சகஜமாகவிருக்கின்றது. மேலும் மேலே சொல்லியபடி கிரகங்களின் பலத்தைக்கணித்துத் தெரிந்து கொள்ளுவது சிரமமானதாலும் சிரமத்திற்குத் தக்கபடி ஜோதிடர்களுக்கு வெகுமானம் கிடைக்காததாலும் பெரும்பான்மையோர் சட்பலத்தைக் கணித்துப் பார்க்காமலே பலாபலன்களைச் சொல்லி விடுகின்றார்கள். இப்படிச் செய்வதால் பலாபலன்கள் பெரும்பான்மையும் தவறிப்போகின்றன. பலாபலன்கள் தவறிப்போவதால் சோதிட சாஸ்திரம் பொய்யான சாஸ்திரம் என்று சிலர் அபிப்பிராயப் படுவதற்கு முகாந்தரம் ஏற்படுகின்றது. மேலே சொல்லிய சட்பலத்தைச் சோதிடர்கள் கணித்துப்பார்த்து பலாபலன்களைச் சொல்லத் துணிவார்களேயானால் சோதிட சாஸ்திரத்திற்குத் தற்காலம் உண்டாயிருக்கும் அபகீர்த்தி நீங்கி அதனுடைய பெருமை நாளுக்கு நாள் விர்த்தியடையும் என்பதற்குச் சந்தேகமே இராது.

மேலும் மேலே சொல்லிய ஒவ்வொரு பலத்தையும் கணிக்க வேண்டுமானால் கணிதவித்தை தெரிந்திருக்க வேண்டியது அவசியமாகும். கணிப்பதற்கு வேண்டிய சிரமத்தை எடுத்துக்கொள்ள வேண்டியதவசியமாகவிருக்கின்றது. முக்கியமாக இவ்விரண்டு காரணங்களைப்பற்றியே அநேக சோதிடர்கள் கிரகங்களின் சட்பலத்தைக் கணித்துப் பார்க்கின்றதில்லை. கணிப்பதனாலுண்டாகும் சிரமத்தையும் கணிதவித்தை தெரியாமலிருப்பதனாலுண்டாகும் கஷ்டத்தையும் நிவர்த்தி செய்யும் பொருட்டே என்னால் எழுதி அச்சிடப்பட்ட இரண்டு ரூபாய் விலையுள்ள "ஜாதக கணிதம் என்னும் ஜோதிட கிரக சட்பலம் ஆயுள் கணிதம்"

என்ற புத்தகத்தில் அநேக வாக்கியங்கள் கணிக்கப்பட்டு கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த வாக்கியங்களினுதவியால் யாதொரு சிரமமுமில்லால் வெகு சுலபமாகக் கிரகதிருக்பலம், உச்சபலம், திக்குப்பலம், பட்சபலம், காலபலம், அயனபலம், வருஷபலம், மாசபலம், தினபலம், ஓரபலம், தசம்லக்கினம் என்ற மத்திபலக்கினம், ஜெனன காலத்தில் தெற்பச் செல்லுபோய் நின்ற கிரகதிசையின் அளவு, கேந்திரபலம், திரேகாணபலம், சப்தவர்க்கம் ஆகிய முதலியவைகளைப் போடலாம். மேலும் கணிக்கும்போது அநேக சந்தேகங்களுண்டாவது சகஜமானதால் அவைகளை நிவர்த்தி செய்யும் பொருட்டும் கணிக்கும் முறையை நன்றாய் விளக்கிக் காட்டும் பொருட்டும். அநேக உதாரணங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. கணிக்கும் முறையை நன்றாய் விளங்கும் படியாய் விவரித்துச் சொல்லியிருப்பதில் கூறுவதையே கூறுவது என்ற குற்றம் ஒரு சமயமிருந்தபோதிலுங்கூட அதை கவனியாமல் நன்றாய் விளங்கும்படிச் சொல்லுவது விசேஷமென்றே கருதி ஒவ்வொன்றையும் விபரமாகச் சொல்லியிருக்கின்றது. ஆகையால் ஒருவர் ஜாதக கணிதம் என்னும் புத்தகத்தைப்பிறருடைய உதவியில்லாமலே தானே படித்துத்தெரிந்து கொள்ளலாம். மேலும் ஜாதகத்தைச் சரியாய்க் கணிக்கத் தெரியாதவர்களுக்கு ஜாதகத்தைச் சரியாய்க் கணிக்க வேண்டிய முறையையும், கிரகங்களின் சட்பலத்தைக் கணிக்கும் வழியையும், இராசிச்சக்கிரம், நவாம்சச்சக்கிரம், திரேகாணச் சக்கிரம், துவாதசாம்சச் சக்கிரம், சப்தமாம்சச்சக்கிரம், ஓரை, திரிம்சாம்சம் என்று சொல்லப்பட்ட 7 வித வர்க்கங்களென்ற சப்தவர்க்கங்களையும், பாவச்சக்கிரத்தைப் போடும் வழியையும், பாவபலம் முதலியவைகளைக் கணிக்கும் வழியையும் ஒரு ஜாதகத்தை உதாரணமாக எடுத்துக்கொண்டு அந்த ஜாதகத்திற்கு கணித்தும்போட்டும் காட்டியிருக்கின்றது.

ஜோதிடம் ஒரு புராதினமான சாஸ்திரம் என்று மேலே சொல்லியிருக்கிறோம். பூர்வகாலத்தில் (1) சூர்யன் (2) பிதாமகன் (3) வியாசர் (4) வசிஷ்டர் (5) அத்திரி (6) பராசரர் (7) கஸ்பாபர் (8) நாரதர் (9) கர்கர் (10) மரீசி (11) 1-வது மனு (12) அங்கிரசர் (13) லோமசர் (14) பௌலிஷர் (15) ச்யாவனர் (16) யவனர் (17) 2-வது மனு, (18) சௌனகர், ஆகிய பதினெட்டு பெயர்களால் இந்த சாஸ்திரம் உண்டாக்கப்பட்டது. இந்த பதினெட்டு பெயர்கள் ஜீவித்திருந்த காலத்தைக் குறிப்பது கஷ்டமாக விருக்கிறது. இவர்கள் செய்த கிரந்தங்கள் பூர்வமாகவும் அகப்படுவது கஷ்டமாக விருக்கிறது. இவர்களுக்குப் பிந்தி, வந்த மயன்,

மனித்தர், சத்தியாச்சாரி முதலிய பல ஜோதிட கிரந்தகர்த்தர்கள் தங்களுக்கு முந்தி எழுதப்பட்ட சாஸ்திரங்களைப் படித்துச் சில கிரந்தங்கள் எழுதினார்கள். அவைகளும் பூர்த்தியாக அகப்படுவது கஷ்டமாயிருக்கிறது. இப்புத்தகங்களெல்லாம் பெரும்பாலும் பிருஹத் ஜாதகத்தின் கிரந்தகர்த்தராகிய வராஹமிகிரர் காலத்திற்கு முந்தியே பலவாராகச் சிதரிகெட்டுப் போய்விட்டன என்று பலருடைய அபிப்ராயம்.

வராஹ மிகிரர் பிறந்த இறந்த வருஷங்கள் துல்லியமாகத் தெரியவில்லை. இவர் சுமார் கலியுகாதி வருஷம் 3607-ல் பிறந்து சுமார் கலியுகாதி வருஷம் 3689-ல் இறந்தார் என்று தோராயமாக ஏற்படுகின்றது. இவர் விக்கிரமாதித்ய அரசனுடைய சமஸ்தானத்தில் நவரத்தினங்களாக விளங்கியவர்களில் ஒருவர். இவர் காலத்திற்கு முந்தியே ஜோதிட சாஸ்திர கிரந்தங்களும் வான சாஸ்திர கிரந்தங்களும் பலவாராகச் சிதருண்டு போயிருந்ததால் இவர் தனக்கு அகப்பட்ட கிரந்தங்களின் பாகங்களில் முக்கியமான சுலோகங்களையும் சித்தாந்தங்களையும் உபயோகப்படுத்தி ஜோதிட சாஸ்திரத்தில் ஜோதிட கிரந்தங்களுக்குள் "சிரோன்மணியாய்" விளங்கக் கூடிய ஒரு புத்தகமும், வான சாஸ்திரத்தில் ஒரு சித்தாந்தமும் ஒழுங்காகவும் பூர்த்தியாகவும் எழுதினார். ஆகையால் வராஹ மிகிரர் ஜோதிட சாஸ்திரத்திலும் வான சாஸ்திரத்திலும் மிகவும் பிரசித்திபெற்றவர். இவருக்கு வான சாஸ்திரத்தைவிட ஜோதிட சாஸ்திரத்தினால் அதிக புகழும் பேரும் உண்டு. இவர் எழுதிய ஜோதிட சாஸ்திரத்திற்கு பிருஹத் ஜாதகம் என்று பெயர். வராஹ மகிரர் காலத்திலும் இதற்குப் பிந்திய காலத்திலுமிருந்த ஜோதிடர்களில் வராஹ மிகிரருக்குச் சமானமானவர் யாரும் கிடையாது. ஆகையால் இவருடைய கிரந்தமாகிய பிருஹத் ஜாதகம் ஒவ்வொரு ஜோதிடரிடத்திலும் இருப்பது மிகவும் அவசியமானது. வராஹ மிகிரர் எழுதிய சித்தாந்தத்திற்குப் பஞ்ச சித்தாந்தம் என்று பெயர். இந்த சித்தாந்தத்தில் பௌலிஷ சித்தாந்தம், ரோமக சித்தாந்தம், வசிஷ்ட சித்தாந்தம், சௌர சித்தாந்தம், பிதாமக சித்தாந்தம் ஆகிய இவ்வைந்து சித்தாந்தங்களும் அடங்கி இருக்கின்றன. ஆகாயத்திலும் பூமியின் பேரிலும் இயற்கையில் நேரிடக்கூடிய சம்பவங்களைப் பற்றியும் தூமகேது கிரஹணம் முதலியவைகளைப் பற்றியும் பிருஹத் சம்ஹிதை என்ற ஒரு புத்தகத்தை இவர் எழுதி இருக்கின்றார். பிரயாணங்களைப் பற்றி யோக யாத்திரா என்ற புத்தகமும், விவாகங்களைப்பற்றி பிருஹத விவாகப்படலம் என்ற ஒரு புத்தகமும், ஜோதிட பல பாகத்தில் பிருஹத் ஜாதகத்தைவிட

சிறியதாயும் சுருக்கமாயுமுள்ள லகுஜாதகம் என்ற புத்தகத்தையுப் இவர் எழுதி இருக்கின்றார். ஜோதிஷ சாஸ்திரத்தின் அங்கங்களாகிய வான சாஸ்திரம், ஜோதிடம், சம்ஹிதை, முதலியவைகளில் வராஹ மிகி ரரைப் போல் திறமையாகவும் சமர்த்தராகவும் சொல்லக் கூடியவர் வராஹ மிகிரர் காலத்திற்கு முந்தியும் கிடையாது. பிந்தியும் கிடையாது என்று திண்ணமாய்ச் சொல்லக்கூடும். ஆகையால் இவருடைய பெயர் இவர் இறந்து சுமார் 1300 வருடங்களுக்கு மேலாகியும் இறவாமல் ஒவ் வொரு ஜோதிடர்களின் வாயிலும் புழங்கிக் கொண்டிருக்கின்றது.

பிருஹத் ஜாதகத்திற்குப் பலர் வியாக்கியானங்கள் எழுதி இருக்கின் றார்கள். பட்டோத் பலர் வியாக்கியானமும் ஸ்ரீபதி பட்டாச்சாரியாரு டைய வியாக்கியானமும் சிறந்தவைகளாகும். நம்மால் எழுதி அச்சிடப் பட்ட மேற்சொல்லிய "ஜாதக கணிதம்" ஸ்ரீபதி ஜாதக கர்மபத்ததிக்கு வியாக்கியானமாகவும் இருப்பதால் அதையே பிருஹத் ஜாதகத்திற் சொல்லிய சட்பல நிர்ணய விதிகளுக்கும் வியாக்கியானமாகவும் கருத லாம். இந்த பிரஹத் ஜாதகத்தில் ஒவ்வொரு சுலோகத்தின் அடியிலும் தேவையான இடங்களில் வியாக்கியானம் கொடுக்கப்பட்டிருக்கின்றது. இந்த புத்தகத்தை அச்சிடும்போது புரூப் முதலியவைகளைப் பார்த்து எனக்கு உதவி செய்த ஜோதிட சாஸ்திரந் தெரிந்த என்னுடைய மூத்த தமையனுக்கு என்னுடைய அன்பார்ந்த வந்தனத்தை நான் அளிக்கின்றேன். இந்த புத்தகத்தில் எழுத்துப் பிழை, சொற் பிழை, முதலியவைகளிருந்தால் அவைகளை மன்னித்து இதிலுள்ள சாராம்சத்தை ஏற்றுக்கொண்டு இந்த புத்தகத்தை ஆமோதிக்கும்படியாய் இதை வாசிக் கும் பெரியோர்களையும், சிறியோர்களையும், வணக்கத்துடன் கேட்டுக் கொள்ளுகிறேன. மேலும் இந்த புத்தகத்தை இன்னும் விருத்தி செய்வ தற்காக யாராகிலும் தெரியப்படுத்தும் அபிப்பிராயங்களை வந்தனத்து டன் அங்கீகாரஞ் செய்வதுடன் அவ்வபிப்பிராயங்களுக் கிணங்க விருத்திகளை அடுத்த பதிப்பில் செய்யச் சித்தமாயிருக்கின்றேன்.

---

5. ஜூலை, 1925.
நெ. 7 வெங்கடேசமேஸ்திரி
தெருவு சௌகார்பேட்டை
சென்னை.

C. G. ராஜன் B. A.,

உ

கடவுள் துணை.

ஜாதக சிரோன்மணி

என்னும்

"பிருஹத்ஜாதகம்"

(HINDU ASTROLOGY)

1-வது அத்தியாயம்.

1-வது சுலோகம்:—சூரியன் தன்னுடைய ஒளியினாலே சந்திரனைப் பிரகாசிக்கும்படிச் செய்கின்றார். மறுபிறப்பு அடையாதவர்களுக்கு வழிகாட்டியாயிருக்கின்றார். ஆத்மாவின் சொரூபம் அறிந்தவர்களின் ஆத்மாவாயிருக்கின்றார். யாகாதி காரியங்களிலே துதிக்கப்படும் தெய்வமாய் இருக்கின்றார். தேவர்களுக்கும் ஆகாயத்திலுள்ள ஒளிகளுக்கெல்லாமும் அதிபதியாய் இருக்கின்றார். உலகங்கள் உண்டாவதற்கும், விருத்தியடைவதற்கும், அழிவதற்கும் மூலகாரணமாய் இருக்கின்றார். வேதங்களிலே பற்பலவிதமாகப் போற்றப்பட்டவர். பலவிதமான கிரணங்களை யுடையவர். மூவுலகங்களுக்கும் ஒரு விளக்காய் உள்ளவர். இப்படிப்பட்டவரான சூரியபகவான் நமக்குச் ஜோதிட சாஸ்திரத்தின் பெருமையை எடுத்துச்சொல்ல சக்தியைக் கொடுப்பாராக.

2-வது சுலோகம்:—சோதிட சாஸ்திரத்தைப் புத்திமான்கள் அறியும் வண்ணம், திறமையும் கீர்த்தியுமுள்ள பலர்கள் (*) சோதிட சாஸ்திரத்தைப்பற்றிப் பல கிரந்தங்கள் எழுதி இருக்கின்றார்கள். ஆயினும், ஜோதிட சாஸ்திரமாகிய ஒரு மகா சமுத்திரத்தைக் கடக்க ஒரு சிறிய படகாகிய இக்கிரந்தத்தை எழுத ஆரம்பிக்கின்றேன்.

(*) சத்தியாச்சாரி, பாராசர், கார்கி, பாதராயணர், புலிச்சாசாரி, மாதவர், வலிஷ்டர், நாரதர், முதலிய பலர்.

3-வது சுலோகம்:—"ஹோரா" (a) என்பது பகலும் இரவும் கொண்ட ஒருதினத்தைக் குறிக்கும் பதமாகிய "அஹோராத்ரி" என்ற பதத்தின் ஆதிபாகிய "அ" என்பதையும் அந்தமாகிய "த்ரி" என்பதையும் விலக்கி மிகுதியாக நிற்கும் பதம். சோதிடசாஸ்திரம் மனிதர்கள் தங்களுடைய முன் ஜென்மத்திலே தாங்கள் செய்த நற்கர்மம் துற்கர்மம் ஆகிய இவைகளின் பலாபலன்களைக் குறித்துச் சொல்லும் ஒரு சாஸ்திரம் என்பதாம்.

(a) "ஹோரா" சாஸ்திரம் என்பது பகலும் இரவுங் கொண்ட தினத்திலே ஒருவன் செய்யும் கர்மங்களைப்பற்றிச் சொல்லும் சாஸ்திரம் என்பதாம். சிலர் "ஹோரா" மேல்நாட்டிலேயுள்ள "கிரீக்" தேசத்துப் பதம் என்றும் அதனாலே ஹோராசாஸ்திரத்தைக் கிரீக் தேசத்திலிருந்து இந்தியர்கள் கற்றுக்கொண்டார்கள் என்றுஞ் சொல்லுகிறார்கள்.

4-வது சுலோகம்:—இராசிமண்டலத்தில் மேஷாதி 12 இராசிகள் அடங்கி இருக்கின்றன. மேஷம் அஸ்வனி நட்சத்திரம் முதல் $2\frac{1}{4}$ நட்சத்திரம் அடங்கியது. இப்படியே இதர ஒவ்வொரு இராசியும் $2\frac{1}{4}$ நட்சத்திரம் உடையது. இம்மண்டலம் காலபுருஷனுடைய தேகம். மேஷாதி 12 இராசிகளும் கீழ்கண்டபடி காலபுருஷனுடைய அவயவங்களாகும்.

1 மேஷம்-சிரசு	5 சிம்மம்-வயறு	9 தனுசு-இரண்டுதொடைகள்
2 ரிஷபம்-முகம்	6 கன்னி-தொப்புள்	10 மகரம்-இரண்டு முழங்கால்
3 மிதுனம்-மார்பு	7 துலாம்-அடிவயறு	11 கும்பம்-இரண்டுகணுக்கால்
4 கடகம்-இருதயம்	8 விருச்சிகம்-சிசுனம்	12 மீனம்-இரண்டு பாதங்கள்

(வியாக்கியானம்)—"இராசிமண்டலம்" என்பது ஆகாயத்தில் ஒரு வட்டமாக (Circle) இருக்கின்றது. ஒரு வட்டத்தை 360 சம பாகமாக்க வரும் ஒரு பாகத்திற்கு "பாகை" (Degree) என்று பெயர். ஒரு பாகையில் 60 கலை (Minutes of arc) களும், ஒரு கலையில் 60 விகலைகளும்(Seconds of arc)களும் அடங்கி இருக்கின்றன. ஆகையால் இராசிமண்டலத்தில் 360 பாகைகளும், அல்லது 21,600 ($360 \times 60 = 21,600$) கலைகளும், அல்லது 12,96,000 ($360 \times 60 \times 60 = 12,96,000$) விகலைகளும் அடங்கி இருக்கின்றன. இம்மண்டலத்தில் அஸ்வனி முதல் ரேவதி நட்சத்திரம் வரையிலுமுள்ள இருபத்தேழு நட்சத்திரங்களும் அடங்கி இருக்கின்றன. இந்த 27 நட்சத்திரங்களையும் 12 இராசிகளுக்குச் சமமாகப்பங்கிட ஒவ்வொரு இராசிக்கும் $2\frac{1}{4}$ நட்சத்திரம் ஏற்படும். ஆகையால் ஒரு இராசி $2\frac{1}{4}$ நட்சத்திரம் அடங்கியது என்று சொல்லுகிறார்கள். மேற்கண்டபடி 12 இராசி அடங்கிய மண்டலத்திற்கு 360 பாகையானதால் ஒரு இராசிக்கு 30 பாகையும், 27 நட்சத்திரங்கொண்ட மண்டலத்திற்கு 21,600 கலை ஆனதால் ஒரு நட்சத்திரத்திற்கு 800 கலையும் வரும்.

60 விகலை கொண்டது	ஒரு கலை ஆகும்
60 கலை ,,	ஒரு பாகை ,,
30 பாகை ,,	ஒரு இராசி ,,

12 இராசி கொண்டது	ஒரு மண்டலம் ஆகும்
ஒரு நட்சத்திரத்திற்கு	800 கலை ,,
ஒரு நட்சத்திரத்திற்கு	4 பாதம் ,,
ஒரு பாதத்திற்கு	200 கலை ,,

☞ இது விஷயமாக கடைசியில் கொடுத்திருக்கும் வாக்கியத்தைப் (Table) பார்க்கவும்.

5-வது சுலோகம்:—இராசிகளிலே மேஷம் ஆடு-உருவமுடையது. ரிஷபம்-எருது, மிதுனம்-கையில் கோல் ஏந்திய ஒரு ஆணும் வீணையை ஏந்திய ஒரு பெண்ணும் ஒரே பீடத்திலிருப்பது, கடகம்-நண்டு, சிம்மம்-சிங்கம், கன்னி-ஒரு கையில் விளக்கும் மற்றொருகையில் பயிறும் பிடித்த ஒரு கன்னிகை ஒரு படகில் இருப்பதுபோன்ற உருவம், துலாம்-கையில் தராசு தாங்கிய மனிதன், விருச்சிகம்-தேள், தனுசு-அரையின் கீழ் குதிரை உருவமுடையதாயும், கையில் வில்லு ஏந்தியதாயும் உள்ள ஒரு மனிதன், மகரம்-மான்தலையுடைய ஒரு முதலை, கும்பம்-குடத்தை ஏந்திய ஒரு மனிதன், மீனம்-ஒரு மீனின் தலை மற்றொரு மீனின்வாலின் அருகிலிருக்கும்படி இரண்டு மீன்கள் தலையும் வாலும் மாறிகிடப்பது. இந்த ராசிகளின் வாசஸ்தானம் ராசிகளுக்குரிய ஜந்துவின் வாசஸ்தானமே என்பதாம். (ஆ)

(ஆ) 12 இராசிகளின் வாசஸ்தானம் அடியிற்கண்டபடி ஆகும்.

(1) மேஷம்—ஆடுகள் வசிக்கக்கூடிய இடம், சுரங்கம், உலோகங்களும், விலையுயர்ந்த கற்களாகிய மாணிக்கம், வைரம், வஜ்ஜிரம் முதலிய நவரத்தினங்களும் அகப்படக்கூடிய விடங்கள்.

(2) ரிஷபம்—ரிஷபங்கள் வசிக்குமிடம், மாட்டுத்தொழுவம் மேய்கால் பூமிகள், பயிரிடுமிடங்கள், காடுகள்.

(3) மிதுனம்—தோட்டம், உல்லாச சல்லாப நந்தவனங்கள் (Parks), சூதாடுமிடங்கள்.

(4) கடகம்—நண்டுகள் வசிக்குமிடம், குட்டை, குளம், ஏரி, ஜலத்தின் மத்தியிலுள்ள மணல் திட்டு.

(5) சிம்மம்—சிங்கங்கள் வசிக்கப்பட்டவிடம். மலைகள், குகைகள், அடர்ந்த காடுகள்.

(6) கன்னி—மேய்க்கால் பூமிகள், ஸ்திரீகள் காமக்கிரீடை செய்யும்படியான பள்ளியறை

(7) துலாம்—வர்த்தகமும் வர்த்தகத்திற்குரிய சாமான்களும் இருக்குமிடம். கடைத்தெருவு, மார்க்கட்டு. ஏற்றுமதி, இறக்குமதி செய்யுமிடங்கள்.

(8) விருச்சிகம்—தேள் முதலிய விஷ ஜந்துகளிருக்குமிடம், கடினமான கற்களிருக்குமிடம்.

(9) தனுசு—சைன்யங்கள் நிலையாய்த் தங்கியிருக்குமிடம், சண்டைக்குதிரைகளும், யானைகளும், ரதங்களுமிருக்குமிடம்.

(10) மகரம்—முதலைகளிருக்குமிடம், ஆறுகள், ஏரிகள், குளங்கள், ஜலம் தங்கி இருக்குமிடம்.

(11) கும்பம்—ஜலத்தைக் கொட்டிவைக்குமிடம், வீட்டில் பாத்திரங்களிருக்குமிடம்.

(12) மீனம்—மீன்கள் வசிக்குமிடம். சமுத்திரம் ஆறு, ஏரி குட்டை, குளம், ஜலம் தங்கி இருக்குமிடம், என்பதாம்.

6-வது சுலோகம்:—மேஷம் முதல் மீனம் வரையிலுமுள்ள 12 இராசிகளுக்கும் (a), நவாம்சத்திற்கும் (b), துவாதசாம்சத்திற்கும் (c) முறையே செவ்வாய், சுக்கிரன், புதன், சந்திரன், சூரியன், புதன், சுக்கிரன், செவ்வாய், குரு, சனி, சனி, குரு இராசி அதிபதிகளும், நவாம்சாதிபதிகளும், துவாதசாம்சாதிபதிகளும் ஆகின்றார்கள். 12 இராசிகளின் நவாம்சங்கள் முறையே, மேஷம் முதலும், மகரம் முதலும், துலாம் முதலும், கடகம் முதலும் ஆரம்பிக்கின்றன. (d)

வியாக்கியானம். (a)

1	மேஷத்திற்கு	செவ்வாயும்	7	துலாத்திற்கு	சுக்கிரனும்
2	ரிஷபத்திற்கு	சுக்கிரனும்	8	விருச்சிகத்திற்கு	செவ்வாயும்
3	மிதுனத்திற்கு	புதனும்	9	தனுசிற்கு	குருவும்
4	கடகத்திற்கு	சந்திரனும்	10	மகரத்திற்கு	சனியும்
5	சிம்மத்திற்கு	சூரியனும்	11	கும்பத்திற்கு	சனியும்
6	கன்னிக்கு	புதனும்	18	மீனத்திற்கு	குருவும்

இராசி அதிபதிகளாகின்றார்கள்.

(b) நவாம்சம் என்பது ஒரு இராசியை 9 சமபாகமாகப் பங்கிட வரும் பாகமாகும். ஒரு இராசியில் 9 நட்சத்திரப் பாதம் இருப்பதால் ஒவ்வொரு பாதத்திற்கும் நவாம்சம் ஒன்றாகும்; அல்லது ஒரு இரா

சிக்கு முன்சொல்லியபடி 20 பாகை யாதலால் நவாம்சம் ஒன்றுக்கு பாகை 3-கலை 20 ஆகும். நவாம்சாதிபதி என்பது நவாம்சம் எந்த ராசி யாகிறதோ அந்தராசியின் அதிபதியே ஆகும். நவாம்சசக்கரம்போடும் வழிகள்:—(1) நட்சத்திரப் பாதத்தைக்கொண்டுபோடுவது:—அதாவது லக்கின உதையம், கிரகங்கள் இவைகள் இருக்கின்ற நட்சத்திரப்பாதம் அஸ்வணி முதலாவது பாதமுதல் எண்ண எத்தனை பாதமாகுமோ அந்த எண் 12-க்கு மேற்பட்டிருந்தால் அதை 12-ஆல் வகுக்க வரும் மிச்சம் எத்தனையோ அத்தனைவரையிலும் மேஷம் முதலாக எண்ண வரும் இராசியில் அந்த லக்கினத்தை அல்லது கிரகத்தைப் போட வேண்டியது. உதாரணமாக பூரட்டாதி 4-ம் பாதத்தில் மீனராசியில் லக்கினம் உதையமாகவாவது அல்லது சூரியன் இருப்பதாகவாவது வைத்துக்கொள்வோம். அசுவணி முதல்பாதம் முதல் பூரட்டாதி 4-ம் பாதத்தையுஞ்சேர்த்து பூரட்டாதி 4-ம் பாதம் வரையிலும் எண்ண 100-பாதம் ஆகும். இந்த 100-யைப் 12-ஆல் வகுக்க மிச்சம் 4 வரும். மேஷம் முதல் 4 வீடு எண்ண கடகம் வரும். ஆகையால் நவாம்சை சக்கிரத்தில் லக்கினத்தை அல்லது சூரியனைக் கடகத்தில் போடவேண்டியது. மறுபடியும் உதாரணமாக உத்திரட்டாதி 4-ம் பாதத்தை அல்லது ரேவதி 4-ம் பாதத்தை எடுத்துக்கொண்டு முன்போலவே எண்ண முறையே 104 அல்லது 108 வரும். 104-யைப் 12-ஆல் வகுக்க மிச்சம் 8 வரும். ஆகையால் மேஷம் முதல் 8 ராசி எண்ண விருச்சிக நவாம்சை வரும். 108-யை 12-ஆல் வகுக்க மிச்சம் 0 வரும்.

மிச்சம் பூஜ்ஜியமாக வரும்போதெல்லாம் பூஜ்ஜியத்திற்குப் பதிலாக 12-யை எடுத்துக்கொண்டு மேஷம்முதல் எண்ண மீனம் நவாம்சையாக வரும். ஆகையால் மிச்சம் பூஜ்ஜியமாக வந்தால் உடனே மீனம் நவாம்சை என்று அறிந்துகொள்ளவும். மறுபடியும் உதாரணமாக கிருத்திகை 3-ம் பாதத்தை எடுத்துக்கொண்டு முன்போல எண்ண 11-வரும். இதை 12-ஆல் வகுக்க முடியாததலால் 11-யை மிச்சமாகவே வைத்துக் கொள்ளவேண்டியது. மேஷம் முதல் 11-இராசி எண்ண கும்ப நவாம்சைவரும். இப்படியே எல்லா லக்கினங்களுக்கும் கிரகங்களுக்கும் நவாம்சைபோடவும். இது ஒரு வழி. (2) நட்சத்திரத்தை மும்மூன்றாக எண்ணிப்போடுவது:—லக்கினம் அல்லது கிரகம் இருக்கும் நட்சத்திரம் வரையிலும் மேஷம் முதல் ஆரம்பித்து மும்மூன்றாக எண்ணிவர லக்கினம் அல்லது கிரகம் இருக்கும் நட்சத்திரம் முதலாவது நட்சத்திரமானால் மேஷம் முதலாகவும், இரண்டாவது நட்சத்திரமானால் ரிஷபம்

முதலாகவும், மூன்றுவது நட்சத்திரமானுல் தனுசு முதலாகவும் ஆரம்பித்து, அந்தந்த நட்சத்திரத்தில் லக்கினம், அல்லது கிரகம் இருப்பது எத்தனையாவதுபாதமோ அத்தனைப்பாதம் எண்ணவரும் இராசி நவாம்சம் ஆகும். உதாரணமாக பூரட்டாதி 4-ல் லக்கினம் அல்லது கிரகம் இருப்பதாக வைத்துக்கொள்வோம். அஸ்வணி முதல் மும்மூன்றாக எண்ண பூரட்டாதி முதல் நட்சத்திரம் ஆகும். ஆகையால் மேஷம் முதல் ஆரம்பித்து, பூரட்டாதி 4-ம்பாத மாகையால், 4-வீடு எண்ண கடகம் வரும். அதாவது நவாம்சை கடகம் ஆகும். உத்திரட்டாதி 4-ல் கிரகம் அல்லது லக்கினம் இருந்தால் உத்திரட்டாதி 2-வது நட்சத்திரமாகையால் சிம்மம் முதலாக 4-வீடு எண்ண, விருச்சிகம், நவாம்சை ஆகும். ரேவதி 4-ல் லக்கினம் அல்லது கிரகம் இருந்தால் ரேவதி 3-வது நட்சத்திரமாகையால் தனுசு முதலாக 4-வீடு எண்ண மீனம் நவாம்சையாகும். இது ஒருவழி. (3) திரிகோணராசிகளைத் தொட்டு போடுவது:— மேஷம், சிம்மம், தனுசு இம்மூன்று இராசிகளுக்கு மேஷம் முதலாகவும், ரிஷபம், கன்னி, மகரம் இம்மூன்று இராசிகளுக்கும் மகரம் முதலாகவும், மிதுனம், துலாம், கும்பம் இம்மூன்று இராசிகளுக்கும் துலாம் முதலாகவும், கடகம், விருச்சிகம், மீனம், இம்மூன்று இராசிகளுக்கும் கடகம் முதலாகவும் எண்ணி போடுவது. ஒவ்வொரு ராசியையும் 9 சமபாகமாகப் பங்கிட எத்தனையாவது பாகத்தில் லக்கினம், அல்லது கிரகம் இருக்குமோ அத்தனை வீடு, மேஷாதி திரிகோண இராசிகளுக்கு மேஷம் முதலாகவும், ரிஷபாதி திரிகோண இராசிகளுக்கு மகரம் முதலாகவும், மிதுனுதி திரிகோண ராசிகளுக்கு துலாம் முதலாகவும், கடகாதி திரிகோண ராசிகளுக்குக் கடகம் முதலாகவும், எண்ணவரும் வீடு நவாம்ச இராசி ஆகும். உதாரணமாக மேஷ ராசியில் 9 வது பாகத்தில் லக்கினம் அல்லது கிரகம் இருக்குமானுல் மேஷம் முதலாக 9 வீடு எண்ணிவரும் தனுசு ராசி நவாம்சராசி ஆகும். ரிஷபராசியில் 9 வது பாகமானுல் மகரம் முதல் 9 ராசி எண்ணிவரும் கன்னியா ராசி நவாம்ச இராசி ஆகும். மிதுன ராசி 9-வது பாகமானுல் துலாம் முதலாக 9 வீடு எண்ணிவரும் மிதுனம் நவாம்ச இராசி ஆகும் கடகராசி 9-வது பாகமானுல் கடகம் முதலாக 9 இராசி எண்ணவரும் மீனம் நவாம்ச இராசி ஆகும். இவ்விதமே மற்ற இராசிகளுக்கும் நவாம்சம் போடவும். இது ஒருவழி.

(c) துவாதசாம்சம்:—துவாதசாம்சம் என்பது ஒரு இராசியைப் 12-சமபாகமாகப் பங்கிடுவது துவாதசாம்சாதிபதி என்பது துவாதசாம்

ராசி எதுவோ அந்த ராசிக்குடைய கிரகம் என்பதாம். துவாதசாம்ச சக்கிரம் போடும்வழி:—ஒரு இராசியை 12-சமபாகமாகப் பங்கிட எத்தனையாவது பாகத்தில் லக்கினம் அல்லது கிரகம் இருக்குமோ அத்தனை வீடு அந்த இராசி முதலாக எண்ணவரும் இராசியே துவாதசாம்ச இராசியாகும். உதாரணமாக மேஷராசியில் 12-வது பாகத்தில் லக்கினம் அல்லது கிரகம் இருக்குமானால் மேஷம் முதலாக 12-இராசி எண்ணவரும் மீனம் துவாதசாம்ச ராசியாகும். மீனராசியில் 9-வது பாகத்தில் கிரகம் அல்லது லக்கினம் இருக்குமானால் மீனம் முதல் 9-ராசி எண்ணவரும் விருச்சிகம் துவாதசாம்ச இராசி ஆகும். இவ்விதமே மற்ற இராசிகளுக்கும் துவாதசாம்சம்போடவும்.

(ஒரு இராசிக்கு முன்சொல்லியபடி 30 பாகைபாகும். இதை 12-சமபாகமாகப் பங்கிட பாகம் ஒன்றுக்குப் பாகை 2-கலை 30-ஆகும். ஆகையால் துவாதசாம்சம் ஒன்றுக்குப் பாகை 2-கலை 30-ஆகும்.)

(d) இது (b) என்பதில் சொல்லிய நவாம்சை போடும் வழிகளில் மூன்றுவது வழி ஆகும்.

☞ நவாம்சசக்கிரமும் துவாதசாம்ச சக்கிரமும் சுலபமாகப் போட வாக்கியங்கள் (Tables) கடைசியில் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

7-வது சுலோகம்:—திரிம்சாம்சம்:—(a)ஒரு ராசியை 30 சமபாகமாகப் பங்கிடுவது. அப்படிப் பங்கிடுவதில் ஒற்றைராசிகளில் முதல் 5-பாகம் செவ்வாய்க்கு உரியது. அடுத்த 5-பாகம் சனிக்கு உரியது. அடுத்த 8-பாகம் குருவிற்கு உரியது. அடுத்த 7-பாகம் புதனுக்கு உரியது. அடுத்த 5-பாகம் சுக்கிரனுக்குரியது. இரட்டை இராசிகளில் மேல் சொல்லியவைகள் தலைகீழாகவரும். அதாவது முதல் 5-பாகம் சுக்கிரனுக்கு உரியது. அடுத்த 7-பாகம் புதனுக்கு உரியது. அடுத்த 8-பாகம் குருவிற்கு உரியது. அடுத்த 5-பாகம் சனிக்கு உரியது. அடுத்த 5-பாகம் செவ்வாய்க்கு உரியது. கடகம், விருச்சிகம், மீனம், இவைகளின் அந்தியம் "ரிக்ஷ" சந்திகள் (அ) என்பதாம்.

வியாக்கியானம் (a) முன் சொல்லியபடி ஒரு ராசிக்கு 30-பாகையானபடியால் இதை 30-சமபாகமாகப் பங்கிட ஒவ்வொரு பாகத்திற்கும் ஒரு பாகைவரும். ஆகையால் கிரகங்கள் கீழ்கண்டபடி திரிம்சாதிபதிகளாவார்கள்.

ஒற்றை இராசிகளாகிய மேஷம், மிதுனம், சிம்மம், துலாம்,
தனுசு, கும்பம் முதலிய ஆண் ராசிகளுக்கு.

பாகை	பாகை	கிரகம்
1 முதல்	5 வரையும்	செவ்வாய் திரிம்சாதிப[தி]
6 ,,	10 ,,	சனி ,,
11 ,,	18 ,,	குரு ,,
19 ,,	25 ,,	புதன் ,,
26 ,,	30 ,,	சுக்கிரன் ,,

இரட்டை இராசிகளாகிய ரிஷபம், கடகம், கன்னி, விருச்சிகம்,
மகரம், மீனம் முதலிய பெண் ராசிகளுக்கு.

பாகை	பாகை	கிரகம்
1 முதல்	5 வரையில்	சுக்கிரன் திரிம்சாதிப[தி]
6 ,,	12 ,,	புதன் ,,
13 ,,	20 ,,	குரு ,,
21 ,,	25 ,,	சனி ,,
26 ,,	30 ,,	செவ்வாய் ,,

உதாரணமாக சூரியன் மேஷராசியில் 4-வது பாகையிலிருந்தா[ல்] மேஷம் ஒற்றை ராசியாயும் ஆண் ராசியாயும் இருப்பதால் சூரியனுக்[கு] மேற் சொல்லிபபடி செவ்வாய் திரிம்சாதிபதி ஆவார். உதாரணமாக சூ[ரி]யன் ரிஷபராசியில் 5-வது பாகையிலிருந்தால் ரிஷபம் இரட்டை ரா[சி]யாயும் பெண்ராசியாயும் இருப்பதால் சூரியனுக்கு மேற்சொல்லியப[டி] சுக்கிரன் திரிம்சாதிபதி ஆவார். இப்படியே மற்றக் கிரகங்களுக்கு[ம்] லக்கினத்திற்கும் திரிம்சாதிபதி அறியவும்.

☞ திரிம்சாதிபதி வெகு சுலபமாக அறிவதற்கு கடைசியி[ல்] வாக்கியம் (Table) கொடுக்கப்பட்டிருக்கிறது.

(அ) "ரிக்ஷ" சந்தி என்பது கடகம் விருச்சிகம் மீனம் இவை[]களின் கடைசி நவாம்சைகள் ஆகும்.

8-வது சுலோகம்:—கிரிய, தௌரி, ஜிதுமா, குளிரா, லேய[] பாதூனை, ஜூக, கௌர்ப்பி, தௌக்ஷிகா, அகோகேரா, ஹிரித்துரோ[] அந்தியபா. என்பவைகள் இராசிகளின் பெயராகும். (a)

(a) மேற் சொல்லியவைகள் பெரும்பாலும் "கிரீக்" தேசத்து[] பதங்கள். ஆகையால் "கிரீக்" தேசத்தாரிடமிருந்து இந்தியர்கள் ஜோதி[] டத்தைக் கற்றுக்கொண்டார்கள் என்று சிலர் சொல்லுகிறார்கள்.

9-வது சுலோகம்:—ஒரு கிரகம் தன்னுடைய சுப க்ஷேத்திரம் (a) ஓரை (b) திரேகாணம் (c) நவாம்சம் (d) துவாதசாம்சம் (e) திரிம்சாம்சம் (f) ஆகிய இவைகளில் ஏதாகிலும் ஒன்றில் இருந்தால் வர்க்கம் அல்லது வர்க்கோத்தமம் என்று பெயர். ஓரை என்பது லக்கினத்திற்கும் ஒரு ராசியின் இரண்டு பாகத்திற்கும் பொதுவான பெயர்.

(a) சுப க்ஷேத்திரம் என்பது சொந்த வீடு, ஆட்சி வீடு.

(b) ஓரை என்பது ஒரு ராசியை இரண்டு சமபாகமாகப் பங்கிட வரும் பாகம்.

(c) திரேகாணம் என்பது ஒரு ராசியை மூன்று சமபாகமாகப் பங்கிடவரும் பாகம்.

(d) நவாம்சம் என்பது ஒரு ராசியை 9 சமபாகமாக முன் சொல்லியபடி பங்கிட வரும் பாகம்.

(e) துவாதசாம்சம் என்பது முன் சொல்லியபடி ஒரு ராசியை 12 சமபாகமாகப் பங்கிட வரும் பாகம்.

(f) திரிம்சாம்சம் முன் சொல்லியபடி ஒரு ராசியை 30 சமபாகமாகப் பங்கிட வரும் பாகம்.

10-வது சுலோகம்:—மேஷம், ரிஷபம், கடகம், தனுசு, மகரம், இவ்வைந்து ராசிகளும் பிருஷ்டோதய ராசிகள். இவைகள் தங்கள் பின் பாகங்களாலே உதயமாகின்றன; இவைகளும் மிதுனமும் இரவில் வலியன. மீனம் தவிர மற்ற இதரராசிகளும் சிரோதயராசிகள். இவைகள் தங்கள் சிரசாலே உதயமாகின்றன. இவைகள் பகலில் வலியன. மீனம் சிரபிருஷ்டோதய அல்லது உபோதயராசி, இது சிரசாலும் பின் பாகத்தாலும் உதயமாகின்றது; இது இரவும் பகலும் சம்மந்தமுள்ள சந்தி காலங்களில் வலிது.

11-வது சுலோகம்:—இராசிகள் சுபராசி என்றும் (a) பாப ராசி என்றும் (b) ஆண் ராசி என்றும் (c) பெண் ராசி என்றும் (d) சரம், ஸ்திரம், உபயமென்றும் (e) சொல்லப்படும். மேஷமும், ரிஷபமும், மிதுனமும், கடகமும், இவைகளின் திரிகோண ராசிகளும் முறையே கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு திக்குகளாகும் (f) ஒற்றை ராசிகளாகிய ஆண் ராசிகளின் முதல்பாதி சூரிய ஓரை, இரண்டாம் பாதி சந்திர ஓரை. இரட்டைராசிகளாகிய பெண் இராசிகளின் முதல் பாதி சந்திர ஓரை; இரண்டாம் பாதி சூரிய ஓரை (g) ஒரு இராசியின் திரேகாணாதிகள் அந்த ராசிக்கு 1, 5, 9, ஆம் இராசிக்குரியவைகள். (h)

வியாக்கியானம்:—(a) யும் (c) யும் ஒற்றை ராசியும், ஆண்ராசியு கிய, மேஷம், மிதுனம், சிம்மம், துலாம், தனுசு, கும்பம், ஆகிய இ ஆறு இராசிகளும் குரூரமான இராசிகள்.

(b) யும் (d) யும் இரட்டை ராசியும், பெண் ராசியுமாகிய, ரிஷப கடகம், கன்னி, விருச்சிகம், மகரம், மீனம், ஆகிய இந்த ஆறு இராசி ளும் நல்ல ராசிகள்.

(e)

சரம்	ஸ்திரம்	உபய இராசிகள்
1 மேஷம்	2 ரிஷபம்	3 மிதுனம்
4 கடகம்	5 சிம்மம்	6 கன்னி
7 துலாம்	8 விருச்சிகம்	9 தனுசு
10 மகரம்	11 கும்பம்	12 மீனம்

(f)

கிழக்கு	தெற்கு	மேற்கு	வடக்கு திக்குக
1 மேஷம்	2 ரிஷபம்	3 மிதுனம்	4 கடகம்
5 சிம்மம்	6 கன்னி	7 துலாம்	8 விருச்சிகம்
9 தனுசு	10 மகரம்	11 கும்பம்	12 மீனம்.

(g) ☞ ஓரை வெகு சுலபமாகப் போடுவதற்காகக் கடைசியி வாக்கியம் (Table) கொடுக்கப் பட்டிருக்கிறது.

(h) உதாரணமாக மேஷ ராசிக்குத் திரேகாணாதிபதிகள் இ யாயும்க்கு 1 - ஆம் இராசியாகிய மேஷத்தின் அதிபதியாகிய செ சக்ரிம், 5-ஆம் இராசியாகிய சிம்மத்தின் அதிபதியாகிய சூரியனும், 9 வது இராசியாகிய தனுசிற் கதிபதியாகிய குருவும், திரேகாணாதிபதிகள் ஆவார்கள். இப்படியே மற்ற இராசிகளுக்கும் காணவும்.

☞ திரேகாணாதிபதிகள் வெகு சுலபமாய் அறிய கடைசியி வாக்கியம் (Table) கொடுக்கப்பட்டிருக்கின்றது.

12-வது சுலோகம்:—சிலர் கொள்கைபடி, ஒருராசியின் முத ஓராதிபதி அந்த இராசியின் அதிபதியும் இரண்டாவது ஓராதிபதி அந் ராசிக்குப் 11-ஆம் வீட்டு அதிபதியும் ஆவார்கள். (a) ஒருராசிக்கு அந் ராசியின் அதிபதியும், அந்தராசிக்கு 12-ஆம், 11-ஆம் வீட்டு அதிப களும் முறையே முதலாவது, இரண்டாவது, மூன்றாவது திரேகாண பதிகள் ஆவார். (b)

(a) உதாரணமாக மேஷ ராசிக்குமுதல் ஓராதிபதி அந்த ராசிக்கு திபதியாகிய செவ்வாயும்; 2-வது ஓராதிபதி, அந்த ராசியாகிய மேஷத் ற்கு 11-ஆம் வீடாகிய கும்பராசிக்கு அதிபதியாகிய சனியும் ஓராதி திகளாவார். இப்படியே மற்ற ராசிகளுக்கும் பார்க்கவும்.

(b) உதாரணமாக மேஷராசிக்கு, அந்த மேஷராசியின் அதிபதி ாகிய செவ்வாய் முதல் திரேகாணாதிபதியும் அந்த மேஷராசிக்கு 12-ம் வீடாகிய மீனத்தின் அதிபதியாகிய குரு இரண்டாவது திரேகா ணாதிபதியும், அந்த மேஷராசிக்கு 11-ஆம் வீடாகிய கும்பத்தின் அதி தியாகிய சனி மூன்றும் திரேகாணாதிபதியும் ஆவார்.

13-வது சுலோகம்:—

உச்சராசிகள்.

1 சூரியனுக்கு-மேஷமும்
2 சந்திரனுக்கு-ரிஷபமும்
3 செவ்வாயிற்கு-மகரமும்
4 புதனுக்கு-கன்னியும்
5 குருவிற்கு-கடகமும்
6 சுக்கிரனுக்கு-மீனமும்
7 சனிக்கு-துலாமும்
உச்சராசிகளாகும்.

நீச்ச இராசிகள்.

1 சூரியனுக்கு-துலாமும்
2 சந்திரனுக்கு-விருச்சிகமும்
3 செவ்வாயிற்கு-கடகமும்
4 புதனுக்கு-மீனமும்
5 குருவிற்கு-மகரமும்
6 சுக்கிரனுக்கு-கன்னியும்
7 சனிக்கு-மேஷமும்
நீச்சராசிகளாகும்.

சூரியன் முதல் சனிவரையிலுமுள்ள கிரகங்களுக்கு மேற்சொல் ய நீச்ச, உச்ச இராசிகளில் முறையே 10-வது, 3-வது, 28-வது, 15- து, 5-வது, 27-வது, 20-வது பாகைகள் பரம உச்சம், நீச்சம், குகும். (a)

(a) பரம உச்சம், பரம நீச்சம் என்றால் அதிக உச்சம், அதிக நீச் ம் என்பதாம். பரம உச்சத்திலுள்ள கிரகங்கள் அதிக வலிவுடை ன. பரம நீச்சத்திலுள்ள கிரகங்கள் அதிக பலயீனமானவை. அடி ற்கண்ட வாக்கியத்தால் (Table) உச்சம், நீச்சம், பரம உச்சம், பரம ச்சம், சுலபமாக அறியலாம்.

பரம உச்சபாகை	உச்சராசி	கிரகம்	நீச்சராசி	பரமநீச்சபாகை
10	மேஷம்	சூரியன்	துலாம்	10
3	ரிஷபம்	சந்திரன்	விருச்சிகம்	3
28	மகரம்	செவ்வாய்	கடகம்	28
15	கன்னி	புதன்	மீனம்	15
5	கடகம்	குரு	மகரம்	5
27	மீனம்	சுக்கிரன்	கன்னி	27
20	துலாம்	சனி	மேஷம்	20

14-வது சுலோகம்:—சர ராசியில் முதல் நவாம்சையும் ஸ்திர ரா சியில் மத்திய அல்லது 5-வது நவாம்சையும் உபய ராசியில் கடை அல்லது 9-வது நவாம்சையும் வர்க உத்தமம் அல்லது வர்க்கோத்தமம் ஆகும். (a)

வர்க்கோத்தமத்தி லிருக்கின்ற கிரகங்கள் நல்லபலனைக் கொடுப்பா

மூலத்திரிகோண ராசிகள்.

சூரியனுக்கு—சிம்மமும் குருவிற்கு—தனுசும்
சந்திரனுக்கு—ரிஷபமும் சுக்கிரனுக்கு—துலாமும்
செவ்வாயிற்கு—மேஷமும் சனிக்கு—கும்பமும்
புதனுக்கு—கன்னியும் மூலத்திரிகோண ராசிகளாகும். (b

(a) சர ராசியாகிய மேஷ ராசிக்கு முதலாவது நவாம்சமாகிய மே ஷமும், ஸ்திர ராசியாகிய ரிஷபத்திற்கு 5-வது நவாம்சமாகிய ரிஷபமு உபயராசியாகிய மிதுனத்திற்கு 9-வது நவாம்சமாகிய மிதுனமும், வர் கோத்தமம் ஆகும். மற்ற சரம், ஸ்திரம், உபயம், ராசிகளுக்கும் இப் டியே. அதாவது ஒவ்வொரு ராசிக்கும் அந்தந்த ராசியே நவாம்சமாக வ தால் வர்க்கோத்தமம் என்பதாம். ஒரு கிரகம் இராசிச்சக்கரத்திலு நவாம்சை சக்கரத்திலும் ஒரே ராசியில் இருந்தால் வர்க்கோத்தம அடைந்திருக்கிறது என்பதாம். அப்போது அது நல்லபலனைக் கொடு கும் என்பதாம்.

(b) ஒரு ராசியே சுவக்ஷேத்திரமாகவும், உச்சராசியாகவும், மூல திரிகோண ராசியாகவும் வந்தால் அடியிற்கண்டபடி அறியவும்.

(1) சூரியனுக்குச் சிம்மத்தில் முதல் 20-பாகை மூலத் திரிகோ ணம், மீதி 10-பாகை சுவக்ஷேத்திரம்.

(2) சந்திரனுக்கு ரிஷபத்தில் முதல் 3-பாகை உச்சம், மீதி 27 பாகை மூலத்திரிகோணம்.

(3) செவ்வாயிற்கு மேஷத்தில் முதல் 12-பாகை மூலத்திரிகோ
ணம், மீதி 18-பாகை சுவக்ஷேத்திரம்.

(4) புதனுக்கு கன்னியில் முதல் 15-பாகை உச்சம், அடுத்த 10
பாகை மூலத்திரிகோணம், கடைசி 5-பாகை சுவக்ஷேத்திரம்.

(5) குருவிற்கு-தனுசில் முதல் 20-பாகை மூலத்திரிகோணம், மீதி
10-பாகை சுவக்ஷேத்திரம்.

(6) சுக்கிரனுக்கு-துலாத்தில் முதல் 20-பாகை மூலத்திரிகோணம்,
மீதி 10-பாகை சுவக்ஷேத்திரம்.

(7) சனிக்கு-கும்பத்தில் முதல் 20-பாகை மூலத்திரிகோணம்,
மீதி 10-பாகை சுவக்ஷேத்திரம்.

சிலர் இராகு என்கிற சாயாகிரகத்திற்கு (Ascending Node)
கன்னி சுவக்ஷேத்திரமென்றும், மிதுனம் உச்சராசி என்றும், கும்பம்
மூலத்திரிகோணராசி என்றும், சொல்லுகிறார்கள்.

15-வது சுலோகம்:—ஜென்ம லக்கினம் முதலுள்ள 12-இராசிகளில்,

ஜென்மம்—உயிர்ஸ்தானம்	இரண்டாமிடம்—குடும்பஸ்தானம்
மூன்றாமிடம்—சகோதரஸ்தானம்	நான்காமிடம்—பந்துஸ்தானம்
ஐந்தாமிடம்—புத்திரஸ்தானம்	ஆறாமிடம்—சத்துருஸ்தானம்
ஏழாமிடம்—களத்திரஸ்தானம்	எட்டாமிடம்—ஆயுள்ஸ்தானம்
ஒன்பதாமிடம்—புண்ணியஸ்தானம்	பத்தாமிடம்—ஜீவனஸ்தானம்
பதினொராமிடம்-லாபஸ்தானம்	பன்னிரண்டாமிடம்-விரையஸ்தானம்,

என்பதாம் (a)

லக்கினத்திலிருந்து 3, 6, 10, 11-வது வீடுகள் உபஜயஸ்தானம்
என்பதாம் (b)

(வியாக்கியானம்):—(a) ஜென்மலக்கினம் முதலுள்ள 12-இராசி
களின் ஆதிபத்தியங்களை அடியிற்காணவும்.

(1) ஜென்மம்-தேகம், அதன் உருவம், நிறம், குணாதிசயங்கள்,
கீர்த்தி, சுகம், சந்தோஷம் அல்லது துக்கம், பலம், பலயீனம், வெளியி
லே குடி இருப்பு.

(2) இரண்டாமிடம்-தனம், பார்வை, வாக்கு, வித்தை, குடும்பம்,
முகம், ஆகாரம், நேத்திரம், யாத்திரை.

(3) மூன்றாமிடம்-சகோதரம், காது, ஆபரணம், உடை, தைரியம்,
[illegible]தானி, [illegible], [illegible], [illegible],

(4) நாலாமிடம்-வித்தை, தாய், சுகம், பந்து, வாகனம், பூமி, வீ மாடுகள்.

(5) ஐந்தாமிடம்-உபவாசதெய்வம், அரசன், புத்திரர், தகப்ப புத்தி கூர்மை, சன்மார்க்கம், யாத்திரை,

(6) ஆறுமிடம்-சத்துரு, வியாதி, கெட்ட நடவடிக்கை, காபம்,

(7) ஏழாமிடம்-யாத்திரை, களத்திரம், புத்திரர், காமம்.

(8) எட்டாமிடம்-ஆயுள்.

(9) ஒன்பதாமிடம்-பாக்கியம், தகப்பன், நற்கர்மம், அதிகாரம்,

(10) பத்தாமிடம்-யாத்திரை, அதிகாரம், அந்தஸ்து, ஆபரண உடை, விவசாயம், தூக்கம், ஜீவனம், நற்கர்மம், கீர்த்தி, சாஸ்திரங் ளறிதல்,

(11) பதினோராமிடம்-லாபம்.

(12) பன்னிரண்டாமிடம்-தூரதேசசஞ்சாரம், துர் அதிர்ஷ்ட கெடுதி, தயாளம், சயனசுகம், அந்தஸ்து, தனவிரையம்.

(b) உப ஜெயஸ்தானம் என்றால் விருத்தியடையும் ஸ்தான என்பதாம்:—1, 2, 4, 5, 7, 8, 9, 12 ஆம் வீடுகள் அப ஜெயஸ்தான கள் என்று சொல்லப்படும். அபஜெயஸ்தானம் என்றால் ஹிம்சை வி விக்கக்கூடிய ஸ்தானம் என்பதாம்.

16-வது சுலோகம்:—லக்கினம் முதல் 12-இராசிகளும் முறை (1) வல்லமை, (2) தனம், (3) தைரியம், (4) கிருகம், (5) புத்தி, (காயம், (7) காமம், (8) ரந்திரம், (9) குரு, தகப்பன், (10) அந்தஸ் (11) லாபம், (12) விரையம், இவைகளைத் தெரிவிக்கும். 4-ஆம் வீ 8-ஆம் வீடுகளுக்கு சதுராஸ்டிர ராசியென்றும், 7-ம் வீட்டிற்கு தயூ என்றும், 10-ம் வீட்டிற்கு ஆக்ஞ என்றும் பெயர்.

17-வது சுலோகம்:—லக்கினத்திற்கு 1, 4, 7, 10, ஆம் வீடுக கேந்திரங்கள் என்று பெயர். 1-ஆம் வீடு இருகால் ராசியாய் இருந்தா வலிது (a), 4-ஆம் வீடு ஜலராசியாய் இருந்தால் வலிது. 7-ஆம் வீடு கால் இராசியாய் இருந்தால் வலிது. 10-ஆம் வீடு நாற்கால் இராசியா இருந்தால் வலிது. (இதற்கு இராசித் திக்குப்பலம் என்றுபெயர்)

மேஷம்—நாற்கால் ராசி	மிதுனம்—இருகால் ராசி
ரிஷபம்—நாற்கால் ராசி	கடகம்—ஜலராசி

ிம்மம்—நாற்கால் ராசி	தனுசு பின்னரை—நாற்கால் ராசி
ன்னி—இருகால் ராசி	மகரம் பின்னரை—ஜல ராசி
லாம்—இருகால் ராசி	மகரம் முன்னரை—நாற்கால் ராசி
ிருச்சிகம்—பலகால் ராசி	கும்பம்—இருகால் ராசி
னுசு முன்னரை—இருகால் ராசி	மீனம்— ஜலராசி

18-வது சுலோகம்:—கேந்திரராசிகளாகிய 1, 4, 7, 10-ஆம் வீடு ளுக்கு அடுத்த வீடுகளாகிய 2, 5, 8, 11-ஆம் வீடுகள் பணபரம் என் தாம். பணபரத்திற்கு அடுத்த வீடுகளாகிய 3, 6, 9, 12-ஆம் வீடு ள் ஆபோக்லீபம் என்பதாம். (a)

(a) கேந்திரம்-1, 4, 7, 10. பணபரம், 2, 5, 8, 11.
ஆபோக்லீபம்-3, 6, 9, 12.

கேந்திரம், பணபரம், ஆபோக்லீபம், கிரீக் தேசத்துப் பதங்கள் ன்றும், அதனாலே இந்தியர்கள் ஜோதிட சாஸ்திரத்தைக் கிரீக் தேசத் ாரிடமிருந்து கற்றுக்கொண்டார்கள் என்று சிலர் சொல்லுகிறார்கள்.

19-வது சுலோகம்:—லக்கினாதிபதி, அல்லது குரு, அல்லது தன், லக்கினத்திலிருந்தாலும் அல்லது பார்த்தாலும் லக்கினம் வலி ள்ளதாகும். மற்ற கிரகங்கள் இருந்தாலும், பார்த்தாலும் லக்கினம் லிவுள்ளதாகாது. கேந்திரராசிகள் மிகவும் வலிவுள்ளராசிகள். பணபர ாசிகள் சமவலிவுள்ளன. ஆபோக்லீபராசிகள் பலயீனமானவை (a). ிருகால் இராசிகள் பகலில் வலியன. (b) பலகால் இராசி பகலும் இர ம் சந்திக்கும் சந்திவேளையில் வலிது, (c) நாற்கால் இராசிகள் இரவில் லியன (d) மேஷம் முதல் 12-இராசிகளின் மானம் முறையே 20, 4, 28, 32, 36, 40, 40, 36, 32, 28, 24, 20 ஆகும் (e)

(a) கேந்திரம் 1, 4, 7. 10, அதிக வலியுள்ள ராசிகள். பணபரம் 5, 8, 11, சமவலிவுள்ள ராசிகள். ஆபோக்லீபம் 3, 6, 9, 12, பலியீ மான ராசிகள். கேந்திரத்திலுள்ள கிரகம் அதிகவலிவுள்ளது. பணபரத் லுள்ள கிரகம் சமவலிவுள்ளது. ஆபோக்லீபத்திலுள்ள கிரகம் பல னமானது என்பதாம்.

(b) இருகால் ராசிகள்-மிதுனம், கன்னி, துலாம். தனுசுமுன்னரை, ம்பம், இவைகள் பகலில் வலியன.

(c) பலகால் ராசி—கடகம், விருச்சிகம், மீனம் சந்தி வேளையில் லிது.

(d) நாற்கால் ராசிகள்—மேஷம், ரிஷபம், சிம்மம், தனுசு பின்ன ர, மகரம் முன்னரை, இரவில்வலியன.

(e) மானத்திலிருந்து இராசிகள் நீண்டதென்றும் சமமானதென்றும் குறைந்ததென்றும் அறியலாம். இந்த அத்தியாயம் 4-வது சுலோகத்தில் மேஷாதி 12-இராசிகளுக்கும் காலபுருஷனுடைய அங்கங்களை சொல்லியபடி கிரமமாய் லக்கின முதல் 12-ராசிகளுக்கும் ஜாதகருடைய அவயவங்களாகும். நீண்ட இராசியிலுள்ள அங்கம் நீண்டதாயும், சமமானராசியிலுள்ள அங்கம் சமமாயும், குறைந்த ராசியிலுள்ள அங்கம் குறைந்தும் இருக்கும் என்பதாம். மானங்கள் 12-யையும் கூட்ட 3... ஆகும். இதை 10-ஆல் பெருக்க 3,600 வரும். இதை விநாடியாக வைத்துக் கொண்டு 60-ஆல் வகுக்க 60 நாழிகை வரும் என்று அறியவு... இதைப்பற்றி 5-வது அத்தியாயம் 23-வது சுலோகம் பார்க்கவும்

20-வது சுலோகம்:—இராசிகளின் நிறம் கீழ்கண்டபடி ஆகும்.

மேஷம்—சிகப்பு	துலாம்—கறுப்பு
ரிஷபம்—வெண்மை	விருச்சிகம்—பொன்னிறம்
மிதுனம்—பச்சை, (கிளிப்பச்சை)	தனுசு—மஞ்சள்
கடகம்—மங்கலான சிகப்பு	மகரம்—மங்கலான சிகப்பு
சிம்மம்—மங்கலான வெள்ளை	கும்பம்—பழுப்பு நிறம்
கன்னி—பலவர்ணம்	மீனம்—வெண்மைநிறம்

ஆகும் என்பதாம்

12-இராசிகளும் தங்கள் ராசியாதிபதியின் திக்காகச் சாய்ந்திருக்கும். இதற்குப் "பிளவா" என்பதாம் (a). சூரியனிருக்கும் வீட்டிற்கு இரண்டாம் வீட்டிற்கு "வேசி" என்று பெயர் (b)

(a) கிரகங்களின் திக்கு:—

சூரியனுக்கு—கிழக்கு	குருவிற்கு—வடகிழக்கு
சந்திரனுக்கு—வடமேற்கு	சுக்கிரனுக்கு—தென்கிழக்கு
செவ்வாயிற்கு—தெற்கு	சனிக்கு—மேற்கு திக்கு
புதனுக்கு—வடக்கு	[என்பத...

இவ்விடத்தில் சொல்லாமலிருக்கும் அஷ்டதிக்குகளில் ஒன்றான தென்மேற்கு இராகுவின் திக்கு ஆகும்.

(b) சூரியனிருக்கும் வீட்டிற்கு 4 - ஆம் வீட்டிற்கு "அபிஜித்" என்று பெயர். இந்த "அபிஜித்" என்பது "அபிஜித்" என்னும் நட்சத்திரம் அல்ல.

முதலாவது அத்தியாயம்

முற்றிற்று.

2-வது அத்தியாயம்.

1-வது சுலோகம்:—கால புருஷன் என்பவருக்கு சூரியாதி கிர
ங்கள் அடியிற் கண்டபடி ஆத்மா முதலியவைகளைத் தெரிவிக்கும்.

சூரியன்-ஆத்மா	குரு-வித்தை, ஞானம், சுகம்
சந்திரன்-மனது	சுக்கிரன்-காமம்
செவ்வாய்-தேகபலம்	சனி-துக்கம்
புதன்-வாக்கு	என்பதாம். (a)

கிரகங்களில், சூரியன், சந்திரன் } அரசர்கள்

செவ்வாய்-சேனாதிபதி

புதன்-முதல் இராஜகுமாரன்

குரு, சுக்கிரன் } மந்திராலோசனாதிபதிகள் அல்லது மந்திரிமார்கள்

சனி-வேலைக்காரன் என்பதாம்

(a) மானிட ஜென்மத்திற்கு ஆத்மா முதலியவைகளைக் கால
ருஷனுக்குச் சொல்லி யதைக்கொண்டே அறியவும்.

2-வது, 3-வது சுலோகம்:—கிரகங்களின் பெயர்கள்:—

1 சூரியனுக்கு-ஹெலி
2 சந்திரனுக்கு-சீதாரஸ்மி
3 செவ்வாயிற்கு-ஆரா, வக்ரா, குரூரதிருக், அலனேய
4 புதன்-எம்ஞ, ஞாஞ, வித், போதஞ, இந்துபுத்திரா
5 குரு-ஆங்கிரசா. தேவகுரு, ஜுவ, வாச்சம்பதி, இஜ்யா
6 சுக்கிரன்-பிருகு, சுக்கிரா, பிருகுசுத, சிதா, அஸ்புஜித்
7 சனி-மந்தா, சூர்ய புத்திரா, மந்தா, அசிதா
8 ராகு-அசுரா, ஹகு
9 கேது-சிகி.

கடைசியில் கிரகங்களின் பெயர்கள் அதிகமாக கொடுக்கப்பட்
ருக்கின்றன.

4-வது சுலோகம்:—கிரகங்களின் நிறம் அடியிற் சொல்லியபடி
ஆகும். (b)

1 சூரியன்-சிகப்பு, விசேஷ பழுப்பு	5 குரு-மஞ்சள், பொன்னிறம்
2 சந்திரன்-வெண்மை	6 சுக்கிரன்-வெண்மையும், [கறுப்புங் கலந்த நிறம்
3 செவ்வாய்-சிவப்பு	
4 புதன்-பச்சை	7 சனி-கறுப்புநிறம் என்பதாம்.

(b) ஜெனன காலத்தில் வலிவுள்ள கிரகங்களின் நிறத்தை கொண்டு ஜாதகனுடைய நிறம் சொல்லவும்.

5-வது சுலோகம்:—சோரம்போன வஸ்துவின் நிறத்தை அ கிரகங்களின் நிறம் அடியிற் சொல்லியபடி ஆகும்

1 சூரியன்-செம்பு ஒத்தநிறம்
2 சந்திரன்-வெண்மை
3 செவ்வாய்-சிகப்பு
4 புதன்-பச்சை
5 குரு-மஞ்சள்
6 சுக்கிரன்-பலவர்ணம்
7 சனி-கறுப்பு

கிரகங்களின் தேவதைகள் அடியிற் கண்டபடி ஆகும் (a)

1 சூரியன்—அக்கினிதேவதை
2 சந்திரன்—வருணன்
3 செவ்வாய்—முருகக்கடவுள்
4 புதன்—மகாவிஷ்ணு
5 குரு—இந்திரன்
6 சுக்கிரன்—இந்திராண
7 சனி—பிரம்மா,

[என்பத

கிரகங்கள் அடியிற் கண்டபடி அஷ்டதிக்குக் கதிபதிகளாவார்

1 சூரியன்—கிழக்கு
2 சந்திரன்—வடமேற்கு
3 செவ்வாய்—தெற்கு
4 புதன்—வடக்கு
5 குரு—வடகிழக்கு
6 சுக்கிரன்—தென்கிழக்கு
7 சனி—மேற்கு
8 இராகு—தென்மேற்கு

[என்பத

சூரியனும், செவ்வாயும், சனியும், இவர்களுடன் சம்மந்தமுள்ள புதனும், தேய்பிறை சந்திரனும் பாபிகள் என்பதாம். குருவும், சுக் னும், இவர்களுடன் சம்மந்தமுள்ள புதனும், வளர்பிறை சந்திர சுபர்கள் என்பதாம் (c)

(a) இதைக்கொண்டு ஒரு ஜாதகனுடைய உபதேச தேவதைக அறியலாம்.

(b) இதைக்கொண்டு, பிரசவ வீட்டின் வாசக்கால் திக் சோரம்போன விஷயத்தில் திருடர்கள் போனதிக்கும் அறியலாம்.

(c) இராகுவும் கேதுவும் பாபிகள். பாபக் கிரகங்களிலே செ வாயும் சனியும் அதிக பாபிகள். சுபக்கிரகங்களில் குருவும் சுக்கிர அதிக சுபர்கள். வளர்பிறை பிரதமை முதல் தசமிவரையிலும் ச சந்திரன் என்றும், வளர்பிறை ஏகாதசி முதல் தேய்பிறை பஞ்

வரையிலும் சுபன் என்றும், தேய்பிறை சஷ்டி முதல் அமாவாசை வரையிலும் பாபி என்றுஞ் சொல்லுகிறார்கள். சந்திரன் வளர்பிறையில் சுபன் என்றுந் தேய்பிறையில் பாபி என்றுஞ் சொல்லியிருப்பதால் சந்திரன் சுபனு அல்லது பாபியா என்று தீர்மானஞ் செய்வது சந்திரனுடைய ஒளி அல்லது கிரணங்களைக்கொண்டு முதலில் தீர்மானஞ் செய்யவேண்டியது அவசியம் என்று ஏற்படுகின்றது. ஆதலால் சந்திரன் தேய்பிறை ஏகாதசி முதல் வளர்பிறை பஞ்சமிவரையிலும் பாபி என்றும், வளர்பிறை சஷ்டி முதல் வளர்பிறை தசமிவரையிலும், தேய்பிறை சஷ்டி முதல் தேய்பிறை தசமி வரையிலும் சமன் என்றும், வளர்பிறை ஏகாதசி முதல் தேய்பிறை பஞ்சமிவரையிலும் சுபன் என்றும் சொல்லுவது சந்திரனுடைய ஒளியின் பிரமாணத்தைக் கொண்டு சந்திரன் பாபி, சமன், சுபன் என்று தீர்மானஞ் செய்யவேண்டும் என்ற கொள்கைக்கு ஒற்றுமையாக இருக்கும் என்பதாம். சந்திரன் பாபியாயிருக்கும்போது சுபர் திருஷ்டி பெற்றால் சுபனாகும்.

6-வது சுலோகம்:—கிரகங்களின் ஜாதிகள் அடியிற் கண்டபடி ஆகும். (a)

1 சூரியன்—ஆண்
2 சந்திரன்—பெண்
3 செவ்வாய்—ஆண்
4 புதன்—பெண் அலி
5 குரு—ஆண்
6 சுக்கிரன்—பெண்
7 சனி—ஆண் அலி

[என்பதாம்

கிரகங்கள் அடியிற் கண்டபடி பஞ்சேந்திரியங்களுக்கு அதிபதிகளாவார்கள்

1 சூரியனும் செவ்வாயும் அக்கினி
2 புதன்—பூமி
3 குரு—ஆகாயம்
4 சந்திரனும் சுக்கிரனும் ஜலம்
5 சனி—வாயு

[என்பதாம்

(a) இராகு—ஆண், கேது—பெண் என்பதாம்

7-வது சுலோகம்:—கிரகங்களின் குலம் அடியிற் கண்டபடி ஆகும்

1 சூரியன்-க்ஷத்திரியகுலம்
2 சந்திரன்-வைசியகுலம்
3 செவ்வாய்-க்ஷத்திரியகுலம்
4 புதன்-சூத்திரகுலம்
5 குரு-பிராமணகுலம்
6 சுக்கிரன்-பிராமணகுலம்
7 சனி-தாழ்ந்தகுலம்

[என்பதாம்.

கிரகங்களின் குணம் அடியிற் கண்டபடி ஆகும்.

1 சூரியன்-சத்வகுணம்
2 சந்திரன்-சத்வகுணம்
3 செவ்வாய்-தமசுகுணம்
4 புதன்-ரஜசுகுணம்
5 குரு-சத்வகுணம்
6 சுக்கிரன்-ரஜசுகுணம்
7 சனி-தமசுகுணம்
[என்ப

சத்வகுணம் என்பது நல்லகுணமாகும். ரஜசுகுணம் அல் ரஜோகுணம் என்பது காமம், கோபம் முதலிய ஆத்திரமான குணங் தமசுகுணம் அல்லது தமோகுணம் என்பது கெட்ட குணங் என்பதாம்.

8-வது சுலோகம்:—சூரியன் கொஞ்சம் மஞ்சளான கண்களை சம உயரமான தேகத்தையும், கொஞ்சமான மயிருள்ள தலையை பித்தமான தேகத்தையு முடையவர்.

சந்திரன் திரண்டு உருண்ட வடிவமான நீண்டதேகமும், கான கண்களும், மதுரமான குரலும், ஞானமும், வாய்வு, சிலே மான தேகமும் உடையவர்.

9-வது சுலோகம்:—செவ்வாய் எவ்வன தேகமும், கூர்மை கொடுமையுமான பார்வையையுடைய் கண்களும், குறுகிய இடுப் நிலையில்லாத மனதும், பித்தமான தேகமும் உடையவர்.

புதன் வாதபித்த சிலேஷ்மமான தேகமும், தெத்துவாயும் உ யவர்.

10-வது சுலோகம்:—குரு பெருத்த தேகமும் பொன்னி போன்ற மயிர்களும், கண்களும், சிலேஷ்ம தேகமும், உயர்ந்த ஞ சக்தியும், யூகிக்குஞ் சக்தியும் உடையவர்.

சுக்கிரன் அழகான தேகமும் கண்களும், சுருண்ட கறுப்பு மயிரும், வாத சிலேஷ்மமான தேகமும், சுக வாழ்க்கையும் உடைய

11-வது சுலோகம்:—சனி, நீண்ட மெலிந்த தேகமும், பெரு பற்களும், முரட்டுமயிர்களும், வாததேகமும், சோம்பலும் உள்ளவர்

கிரகங்களுக்குத் தாது ரசம் அடியிற் கண்டபடி அறியவும்.

1 சூரியன்-எலும்பு
2 சந்திரன்-இரத்தம்
3 செவ்வாய்-எலும்பிலிருக்கும்மூளை
4 புதன்-தோல்
5 குரு-தசை, மாமிசம்
6 சுக்கிரன்-இந்திரியம்
7 சனி-நரம்புத்தசை
[என்ப

(a) சந்திரன் — எவ்வனவயதுள்ளவர், வெண்மையான தேகத் தையுடையவர். செவ்வாய் மங்கலான சிகப்பு நிறமுடையவர். புதன் அழகான நெல்-பச்சைநிற முடையவர். குரு மஞ்சள் நிறமான தேக முடையவர். சுக்கிரன் வெண்மையான தேகமுடையவர். சனி கறுப்பு தேகமுடையவர். இராகு கறுத்த தேகமுடையவர். கேது பற்பல வித மான நிறமுடையவர்.

12-வது சுலோகம்:—கிரகங்களுக்கு அடியிற் கண்டவிடங்களுக்கு அதிகாரம் உண்டு.

1 சூரியன்-பூஜாதி முதலிய கிரிகைகள் செய்யுமிடம்
2 சந்திரன்-கிணறும், ஜலசமீபமுள்ளவிடம்
3 செவ்வாய்-நெருப்புக் கருகிலுள்ளவிடம்
4 புதன்-விளையாட்டிற்கென்று ஏற்பட்ட விடம்
5 குரு-உக்கிரான வீடு
6 சுக்கிரன்-சயனிக்கும் பள்ளிஅரை
7 சனி-குப்பை கொட்டி இருக்கும் இடம் என்பதாம்

கிரகங்களின் உடை அடியிற் கண்டபடி ஆகும்

1 சூரியன்-தடித்த வஸ்திரம்
2 சந்திரன்-புதிய வஸ்திரம்
3 செவ்வாய்-நெருப்புபட்ட வஸ்திரம்
4 புதன்-ஈரமான வஸ்திரம்
5 குரு-கொஞ்சம் நாள் உடுத்தப்பட்டிருந்த வஸ்திரம்
6 சுக்கிரன்-உரத்த வஸ்திரம்
7 சனி-கிழிந்த வஸ்திரம் என்பதாம்

கிரகங்களுக்குறிய நிரசவஸ்துக்கள் அடியிற் கண்டபடி ஆகும்

1 சூரியன்-செம்பு
2 சந்திரன்-இரத்தினங்கள்
3 செவ்வாய்-பொன்
4 புதன்-பித்தளை
5 குரு-வெள்ளி (a)
6 சுக்கிரன்-முத்து
7 சனி-இரும்பு
[என்பதாம்

(a) குரு தன்னுடைய ஆட்சி அல்லது சுவக்ஷேத்திர வீடுகளாகிய தனுசு, மீனத்திலிருந்தால் அதற்கு உறிய உலோகம் பொன் என்பதாம்.

ருதக்கள் அறியும் விதம்:— லக்கினத்தில் ஒரு கிரகமிருந்தால் அந்தக் கிரகத்தின் ... கிரகமிருந்தால் ... வலி

வுள்ள கிரகத்தின் ருதுவென்றும், ஒரு கிரகமுமில்லாமலிருந்தா
திரேகாண லக்கினாதிபதியின் ருதுவென்றும் அறியவும். கிரகங்களி
ருதுக்கள் அடியிற் கண்டபடி ஆகும்.

1 சூரியன்-கிரீஷ்மருது
2 சந்திரன்-வருஷருது
3 செவ்வாய்-கிரீஷ்மருது
4 புதன்-சரருது
5 குரு-ஹேமந்தருது
6 சுக்கிரன்-வசந்தருது
7 சனி-சசிருது

[என்பதாம் (

a	ருதுக்கள்	காலங்கள்	தமிழ் மாதங்கள்	இங்கிலீஷ் மாதங்க
1	வசந்தருது	இளவேனில்	சித்திரை, வைகாசி	ஏப்ரல், மே, ஜூன்
2	கிரீஷ்மருது	முதுவேனில்	ஆனி, ஆடி	ஜூன், ஜூலை, ஆகஸ்ட்
3	வருஷருது	கார்காலம்	ஆவணி, புரட்டாசி	ஆகஸ், செப்டம், அக்டே
4	சரருது	கூதிர்காலம்	ஐப்பசி, கார்த்திகை	அக்டோ, நவம், டிசம்ப
5	ஹேமந்தருது	முன்பனி	மார்கழி, தை	டிசம்பர்,ஜனவரி பிப்ரவ
6	சசிருது	பின்பனி	மாசி, பங்குனி	பிப்ரவரி, மார்ச்சு ஏப்

[என்பதா

சித்திரையும் வைகாசியும் வசந்தருது என்று இந்த வானசாஸ்
ரத்திலும், ஜோதிட கிரந்தங்களிலுஞ் சொல்லி இருக்கின்றது. இ
சுமார் 1400-வருஷங்களுக்கு முந்தி சரியாய் இருந்ததென்றும், த
காலத்தில் ருதுக்களும் அயனங்களும் சுமார் 23-நாள் வரையிலும் வி
தியாசமாய் இருக்கின்றன வென்றும், சித்திரையும் வைகாசியும் வச
ருது அல்லவென்றும், தர்க்காலத்திற்கு பங்குனியும் சித்திரை
வசந்தருது வென்றுஞ் சொல்லுகிறார்கள். மேலும் உத்ராயண பு
ணியகாலம் தைமாதம் 1-ந் தேதி சுமார் 1400-வருடங்களுக்கு முந்
நேர்ந்ததென்றும், தற்காலத்தில் தைமாதம் பிறப்பதற்கு சுமார் 2
நாள் முன்னமே மார்கழி மாதத்தில் சுமார் 7, 8, தேதிகளில் (டிசம்ப
மாதம் 22-ந் தேதியன்று) மகராயனம் என்று பஞ்சாங்கங்கள்
போட்டிருக்கும் வேளையில்தான் சூரியபகவான் உத்திரதிக்கை நே
கிச்செல்ல தன்னுடைய இரதத்தைத் திருப்புகிறாரென்றும் சொல்லு
றார்கள். அவ்விதமே தக்ஷணாயம் ஆடி மாதம் 1-ந் தேதி சுமார் 140
வருடங்களுக்கு முந்தி நேர்ந்ததென்றும் தற்காலத்தில் ஆனிமாத
சுமார் 8, 9, தேதிகளில் (ஜூன் மாதம் 21-ந் தேதியன்று) பஞ்சாங்க
களில் கடகாயனம் என்று போட்டிருக்கும் வேளையில் சூரியன் தக்ஷ
திக்கை நோக்கிச்செல்ல ஆரம்பிக்கிறாரென்றும் சொல்லுகிறார்கள். இ
வாஸ்தவந்தான் என்று வானசாஸ்திரந் தெரிந்த ஒவ்வொருவரும்

றுக்கொள்ள வேண்டியதாகும் என்பதாம். உத்ராயண, தக்ஷிணாயன புண்ணிய காலங்கள் விசேஷ தினங்களென்று நம்முன்னோர்கள் கொண்டாடப்பட்டு வருகின்றபடியால் அவைகளைச் சரியான காலங்களில் கொண்டாட ஜனங்கள் முயலவேண்டும். இதற்கு முந்தி அயனங்கள் மாறினதால் உத்ராயன, தக்ஷிணாயன புண்ணிய காலங்களை நம் முன்னோர்கள் மூன்று தடவைக்குக் குறையாமல் சரியான காலங்களில் நேரும்படியாய் மாற்றி வைத்துக் கொண்டார்கள் என்று காலஞ்சென்ற கற்றறிந்த மேதாவி "பால கெங்காதர தில்லக்கு" என்பவர் "வேதம்" ஏற்பட்ட காலத்தை நிர்ணயஞ் செய்ய எழுதிய "ஓரயன்" (The Orion) என்ற தமது புத்தகத்தில் சொல்லி இருக்கின்றார். இது விஷயமாக வைதிகர்களும், பெரியோர்களும் தேவையான சீர்திருத்தங்களைச் செய்வார்களாக.

தற்காலத்திற்கு ருதுக்கள் அடியிற் கண்டபடி இருக்கவேண்டும் என்றும் இதன் பிறகாரந்தான் பலன் சரியாய் இருக்கும் என்றும் அறியவும்.

	ருதுக்கள்	காலங்கள்	தமிழ் மாதங்கள்	இங்கிலீஷ் மாதங்கள் *
1	வசந்தருது	இளவேனில்	பங்குனி, சித்திரை	மார்ச்சு 21 முதல் மே 20 வரை
2	கிரீஷ்மருது	முதுவேனில்	வைகாசி, ஆனி	மே 21 முதல் ஜுலை 22 ,,
3	வருஷருது	கார்காலம்	ஆடி, ஆவணி	ஜுலை 23 ,, செப்டம்பர் 22,
4	சரருது	கூதிர்காலம்	புரட்டாசி, ஐப்பசி	செப்டம் 23 ,, நவம்பர் 21 ,,
5	ஹேமந்தருது	முன்பனி	கார்த்திகை மார்கழி	நவம்பர் 22 ,, ஜனவரி 19 ,,
6	சசிருது	பின்பனி	தை, மாசி	ஜனவரி 20 ,, மார்ச்சு 20 ,,

*இதில் கண்டிருக்கும் இங்கிலீஷ் தேதிகளில் ஒருநாள் முந்தி பின்தி வித்தியாசம் நேரிடும்.

குருவிற்கு ருக்கு வேதமும், சுக்கிரனுக்கு யஜுர் வேதமும், செவ்வாயிற்குச் சாமவேதமும் புதனுக்கு அதர்வண வேதமும் என்பதாம்.

12-வது சுலோகத்தில் சொல்லியவைகளெல்லாம், பிரசவமான இடமும், திருடுபோன சொத்து இருக்குமிடமும், பிரசவமானவிடத்தில் இருந்தவர்கள் உடுத்தியிருக்கும் வஸ்திரமும், பிரசவமும், திருடும் நேர்ந்த காலங்களும், தெரிவிக்கும் என்பதாம்.

13-வது சுலோகம்:—எல்லா கிரகங்களும் தாங்கள் இருக்கும் ஸ்தானத்திலிருந்து 3, 10-ஆம் ஸ்தானத்தை கால் பார்வையுடனும், 5, 9-ஆம் ஸ்தானத்தை அரை பார்வையுடனும், 4, 8-ஆம் ஸ்தானத்தை

முக்கால் பார்வையுடனும், 7-ஆம் ஸ்தானத்தை முழு பார்வையுட
பார்ப்பர். கால் பார்வையில் சனியும், அரை பார்வையில் குரு,
கால் பார்வையில் செவ்வாயும், மிகவும் வலியராவர் (a)

(a) எல்லா கிரகங்களும் தாமிருக்கும் வீட்டிலிருந்து அடி
கண்ட வீடுகளை அடியிற்கண்ட பார்வையுடன் பார்ப்பர்.

1 ஓராமிடம்—(b)	7 ஏழாமிடம்—1 பார்வை
2 இரண்டாமிடம்—(c)	8 எட்டாமிடம்—$\frac{3}{4}$,,
3 மூன்றாமிடம்—$\frac{1}{4}$ பார்வை	9 ஒன்பதாமிடம்—$\frac{1}{2}$,,
4 நான்காமிடம்—$\frac{3}{4}$,,	10 பத்தாமிடம்—$\frac{1}{4}$,,
5 ஐந்தாமிடம்—$\frac{1}{2}$,,	11 பதினோராமிடம்பார்வையில்லை
6 ஆறாமிடம்—(d)	12 பன்னிரண்டாமிடம்பார்வையில்லை

வியாக்கியானம்:—செவ்வாய் 4, 8-ஆம் வீட்டையும், குரு 5, 9-
வீட்டையும், சனி 3, 10-ஆம் வீட்டையும், எல்லா கிரகங்களும் 7-
வீட்டையுந்தான் பார்ப்பர் என்றும், மற்ற வீடுகளைப் பார்ப்பதி
என்றும் அவ்விதமே சாதாரண ஜோதிட சாஸ்திரங்களில் சொ
இருக்கிற தென்றும் அபிப்பிராயப் படுவது சரியல்ல. உண்மை
கிரகங்கள் தாங்கள் இருக்கும் வீட்டிலிருந்து 10-ஆம் வீடு முடி
வரையிலுமுள்ள வீடுகளையும், அவைகளிலுள்ள கிரகங்களையும்
ப்பர். 10-ஆம் வீட்டிற்கு மேற்பட்ட வீடாகிய 11, 12-ஆம் வீட்
யும் அவைகளிலுள்ள கிரகங்களையும் பார்ப்பதில்லை. கிரகங்களின்
வையின் பலத்தை அடியிற் கண்டபடி அறியவும்.

* (1) முதலில் லக்கினஸ் புடமும் கிரக ஸ்புடமும் செ
கொள்ள வேண்டியது.

(2) பிறகு பார்க்கப்படும் கிரகத்தின் ஸ்புடத்திலிருந்து பார்க்
கிரகத்தின் ஸ்புடத்தைக் கழிக்கவேண்டும். கழிந்து வரும் மிச்சத்
"கலை"யாக மாற்றிவைத்துக் கொள்ளவும். கணித சௌகரியத்திற்
இந்த கலையை "ஸ்புடகலை" என்று பெயரிட்டுச் சொல்லுவோம்.

(3) இந்த ஸ்ப்புடகலை 10,800-க்கு மேல் 18,000-க்குள் இருந்
அதை 18,000-த்திலிருந்து கழிக்க வரும் மிச்சத்தை 7,200-ஆல்
க்கவரும் ஈவு பார்க்கின்ற கிரகத்தின் பார்வையின் அளவைத் தெரி

---

* ஜோதிடம் புதியதாய் கற்றுக்கொள்பவர் இதை முதலில் படி
மல், கிரகஸ்புடம் செய்யத்தெரிந்துகொண்ட பிற்பாடு இதைப்படி
இதன் பிரகாரம் கிரகங்களின் பார்வையின் கணிதம் செய்வார்களா

றும். இவ்விடத்தில் சொல்லிய ஈவு என்பது பூச்சியம் முதல் ஒன்று வரையிலும்வரும் அதாவது ஈவு, வீசம், கால், அரை, முக்கால், ஒன்று எனவரும், அதாவது ஸ்புடகலைப 18,000-த்திலிருந்து கழிக்கவரும் மிச்சம், 7,200 என்பதில் எவ்வளவு பங்கு அதாவது வீசம்பங்கா, அரைக்கால்பங்கா, கால்பங்கா, அரைபங்கா, முக்கால்பங்கா, முழு பங்கா என்று பார்க்கவும். அவ்வளவு பங்கு பார்வையின் அளவு என்று ஏற்படும். உதாரணமாக ஸ்புடகலை 17,550 வந்தால் அதை 18,000 த்திலிருந்து கழிக்க மிச்சம் 450 வரும். இந்த 450 என்பது 7,200-என்பதில் எத்தனை பங்கு என்று பார்க்க, 16-பங்கில் ஒரு பங்கு அல்லது வீசம் பங்கு என்று ஏற்படும். இந்த வீசம் பங்குதான் கிரகத்தின் பார்வையின் அளவு என்று அறியவும்.

(4) இந்த ஸ்புடகலை 9,000-க்குமேல் 10,800-க்குள் இருந்தால் இந்த ஸ்புடகலையிலிருந்து 9,000-கலையைக் கழிக்க வரும் மிச்சத்தை 1,800-ஆல் வகுக்க வரும் ஈவு, பார்க்கின்ற கிரகத்தின் பார்வையின் அளவைத் தெரிவிக்கும்.

(5) இந்த ஸ்புடகலை 7,200-க்குமேல் 9,000-க்குள் இருந்தால் இந்த ஸ்புடகலையை 9,000-த்திலிருந்து கழிக்கவரும் மிச்சத்தை 3,600 ஆல் வகுக்க வரும் ஈவு, பார்க்கின்ற கிரகத்தின் பார்வையின் அளவு ஆகும்.

(6) இந்த ஸ்புடகலை 5,400-க்கு மேல் 7,200-க்குள் இருந்தால் இந்தஸ்புடகலையை 7,200-லிருந்து கழிக்கவரும் மிச்சத்துடன் 3,600-யை கூட்டவரும் எண்ணை 7,200-ஆல் வகுக்கவரும் ஈவு, பார்க்கும் கிரகத்தின் பார்வையின் அளவு ஆகும்.

(7) இந்த ஸ்புடகலை 3,600-க்கு மேல் 5,400-க்குள் இருந்தால் அதிலிருந்து 3,600-யைக் கழிக்கவரும் மிச்சத்துடன் 900-யைக் கூட்டி வரும் எண்ணை 3,600-ஆல் வகுக்க ஈவுபார்க்கும் கிரகத்தின் பார்வையின் அளவு ஆகும்.

(8) இந்தஸ்புடகலை 1800-க்குமேல் 3600-க்குள் இருந்தால் அதிலிருந்து 1,800-யைக்கழிக்க வரும் மிச்சத்தை 7,200-ஆல் வகுக்கவரும் ஈவு பார்க்கும் கிரகத்தின் பார்வையின் அளவு ஆகும்.

(9) இந்த ஸ்புடகலை 1,800-க்குள் இருந்தால், ஒருராசிக்கு 1,800 கலையானபடியால் கிரகங்களின் பார்வை என்று சொல்லாமல் சம்மந்தம்

என்று சொல்லவேண்டியது. ஆகையால் ஸ்புடகலை 1,800-க்குள் இ
தால் அப்போது பார்வையின் அளவைக் கணிக்க வேண்டியதி
அதைக்கிரகசம்மந்தம் என்று எண்ணி கிரகசேர்க்கை அல்லது சம்ப
பலனைச் சொல்லவேண்டியது. கிரகங்கள் 10-இராசிக்குமேற்பட்ட
சிகளாகிய 11, 12-ஆம் இராசிகளைப் பார்ப்பதில்லை. ஆனதால் 10-
யாகிய 18,000-கலைக்குமேற்பட்டு ஸ்புடகலை இருக்குமானால் பார்
யின் அளவு பூஜ்ஜியம் என்று வைத்துக்கொள்ளவேண்டியது. இ
வியாக்கியானத்தில் சொல்லியிருக்கும் "ராசி" என்பது மேஷம் மு
லிய 12 இராசிகள் அல்ல, 1,800 கலை கொண்ட தூரத்திற்கு இ
என்று அர்த்தங் கொள்ள வேண்டியது, உதாரணமாக சூரியன் 40
கையில் ரிஷபராசியிலும், சந்திரன் 205 பாகையிற் துலாராசியி
இருந்தால் இவ்விரண்டுகிரகங்களுக்கும் மத்தியில் மிதுனம், கடகம், சி
மம், கன்னி ஆகிய 4-இராசிகள் இருக்கின்றன. இவைகள் மேஷ
12 இராசிகள் என்று சொல்லப்பட்ட ராசிகளில் 4 இராசியாம். கிரகப
வை அறிய இராசிகளை இவ்விதமாக எண்ணக் கூடாது ஆனால் ச
ரன் ஸ்புடமாகிய 205 பாகையிலிருந்து சூரியனுடைய ஸ்புடமாகிய
பாகையைக் கழிக்க 165 பாகைவரும். இதை ஒரு ராசிக்குறிய 30
கையால் வகுக்க 5 இராசியும் 15 கலையும் (அதாவது 5½-இராசி) வரு
இவ்விதமாகத்தான் இராசியை எண்ணி கிரகபார்வை கணிக்க வே
டியது.

சனி கால்பார்வையாகிய 3, 10-ஆம் பார்வையிலும், குரு அ
பார்வையாகிய 5, 9-ஆம் பார்வையிலும், செவ்வாய் முக்கால்பார்வை
கிய 4, 8-ஆம் வீட்டுபார்வையிலும் மிகவும் வலியர் என்று சொ
இருப்பதால் இவர்களுக்குப் பிரத்தியேகமாக அடியிற்கண்டபடி கிரி
செய்துவரும் பார்வையின் அளவை மேலே எல்லா கிரகங்களுக்
பொதுவாய் சொல்லிய வழிப்படி வரும் பார்வை அளவுடன் கூட்
மொத்தப்பார்வையின் அளவை காணவும்.

(1) சனி:—சனியால் பார்க்கப்படும் கிரகத்தின் ஸ்புடத்திலிருந்
சனியின் ஸ்புடத்தைக் கழிக்க வருகின்றது ஸ்புடகலை ஆகும்: இ
ஸ்புடகலை 3,600-க்கு மேல் 5,400-க்குள் இருந்தால் (அதாவது 3-
பார்வையாயிருந்தால்) இந்த ஸ்புடகலையிலிருந்து 3,600-யைக் கழி
வேண்டியது.

ஸ்புடகலை 16,200-க்குமேல் 18,000-க்குள் இருந்தால் (அதாவ
10-ஆம் பார்வையாயிருந்தால்) இந்தஸ்புடகலையை 18,000-த்திலிருந்

ழிக்கவேண்டியது. பிறகு இப்படி கழித்து வரும் மிச்சத்தை 2,400-ல் வகுக்க வரும் ஈவு சனியின் பிரத்தியேகபார்வையின் அளவாகும். இந்த பிரத்தியேகப்பார்வையின் அளவு எப்போதும் முக்காலுக்குமேற்படாது. பிரத்தியேகமாகவந்த சனியின் பார்வையின் அளவை எல்லா கிரகங்களுக்கும் பொதுவாகச்சொல்லப்பட்ட பார்வையின் வழிபிறகாரம் சனிக்குவந்த பார்வையின் அளவுடன் கூட்டினால்வரும் மொத்தபார்வைதான் சனியின் பார்வையின் அளவு என்று சொல்லப்படும்.

(2) குரு:—குருவால்பார்க்கப்படும் கிரகத்தின் ஸ்புடத்திலிருந்து குருவின் ஸ்புடத்தைக்கழிக்க வருகின்ற ஸ்புடகலை 7,200-க்கு மேல் 9,000-க்குள் இருந்தால் (அதாவது 5-ஆம் பார்வையாயிருந்தால்) 9,000 த்திலிருந்தும், 14,400-க்குமேல் 16,200-க்குள் இருந்தால் (அதாவது 9-ஆம்பார்வையாயிருந்தால்) 16,200-த்திலிருந்தும் இந்தஸ்புடகலையைக் கழிக்கவரும் மிச்சத்தை 3,600-ஆல் வகுக்கவரும் ஈவு குருவின் பிரத்தியேகப்பார்வையின் அளவாகும். இந்த பிரத்தியேக பார்வையின் அளவு எப்போது அரைக்கு மேற்படாது. பிரத்தியேகமாக வந்தகுருவின்பார்வையின் அளவை எல்லாகிரகங்களுக்கும் பொதுவாகச் சொல்லப்பட்ட பார்வையின் வழிபிறகாரம் குருவிற்குவந்த பார்வையின் அளவுடன் கூட்டினால் வரும் மொத்தபார்வைதான் குருவின் பார்வையின் அளவு என்று சொல்லப்படும்.

(3) செவ்வாய்:—செவ்வாயால் பார்க்கப்படும் கிரகத்தின் ஸ்புடத்திலிருந்து செவ்வாயின் ஸ்புடத்தைக் கழிக்க வருகின்ற ஸ்புடகலை 5,400-க்குமேல் 7,200-க்குள் இருந்தால் (அதாவது 4-ஆம் பார்வையாயிருந்தால்) 7,200-லிருந்தும், 12,600-க்குமேல் 14,400-க்குள் இருந்தால் (அதாவது 8-ஆம் பார்வையாயிருந்தால்) 14,400-லிருந்தும் இந்த ஸ்புடகலையைக் கழிக்கவரும் மிச்சத்தை 7,200-ஆல் வருக்க வரும் ஈவு செவ்வாயின் பிரத்தியேகப் பார்வையின் அளவாகும். இந்தப் பிரத்தியேகப் பார்வையின் அளவு எப்போதும் காலுக்கு மேற்படாது. பிரத்தியேகமாகவந்த செவ்வாயின்பார்வையின் அளவை எல்லா கிரகங்களுக்கும் பொதுவாகச் சொல்லப்பட்ட பார்வையின் வழிபிறகாரம் செவ்வாயிற்குவந்த பார்வையின் அளவுடன் கூட்டினால் வரும் மொத்தபார்வைதான் செவ்வாயின்பார்வையின் அளவு என்று சொல்லப்படும்.

உதாரணம்:—சாதாரணபார்வை, விசேஷ பார்வை, மொத்தபார்வை, இவைகளின் அளவைக்கணிக்க ஒரு உதாரணம் எடுத்துக்கொள்

வோம். குரு 5 பாகையில்மேஷத்திலும் சந்திரன் 145 பாகையில் சி ராசியிலும் இருப்பதாக வைத்துக்கொள்வோம். அதாவது குரு ஸ்புடம் 5 பாகையும் சந்திரனின் ஸ்புடம் 145 பாகையும் ஆகும். போது சந்திரனைக் குரு எவ்வளவு பார்வையுடன் பார்க்கின்றார் எ ன்தக் கவனிப்போம். பார்க்கப்படும் கிரகமாகிய சந்திரனுடைய ஸ்ட மாகிய 145 பாகையிலிருந்துபார்க்கும்கிரகமாகிய குருவின் ஸ்புடம 5-பாகையைக் கழிக்க 140 பாகைவரும். இந்த 140 பாகையை கலை மாற்ற 8,400 கலைவரும். இந்த 8,400 கலைதான் " ஸ்புடகலை " என் அறியவும்.

(1) சாதாரணபார்வை:—இந்தஸ்புடகலையாகிய 8,400 கலை, 7,2 கலைக்கு மேற்பட்டும் 9,000-கலைக்குள்பட்டும் இருப்பதால் சாதார பார்வையின் 5-வது லக்கத்தில் சொல்லியபடி 9,000-த்திலிருந்து 8,4 யைக்கழிக்க மிச்சம் 600 வரும். இந்த 600-யை சாதாரணபார்வையி 5-வது லக்கத்தில் சொல்லியபடி 3,600-ஆல் வகுக்க ஈவு $\frac{600}{3600}$ வரு அதாவது ஈவு சுமார் அரைக்காலே வீசம், அதாவது 3 வீசம் வரு ஆகையால் குருவின் சாதாரணபார்வை மூன்று வீசம் ஆகும்,

(2) விசேஷபார்வை:—இந்த ஸ்புடகலையாகிய 8,400-கலை 7,200 குமேல் 9,000-க்குள் இருப்பதால் விசேஷபார்வையின் 2-வது லக் தில் சொல்லியபடி 9,000-த்திலிருந்து 8,400 யைக் கழிக்க மிச்சம் 6 வரும், இந்த 600-யை விசேஷபார்வை 2-வது லக்கத்தில் சொல் படி 3,600-ஆல் வகுக்க ஈவு $\frac{600}{3600}$ வரும், அதாவது ஈவு சுமார் அ காலே வீசம் அதாவது 3 வீசம் வரும். ஆகையால் குருவின் விசே பார்வை மூன்றுவீசம் ஆகும். இந்த உதாரணத்தில் நேர்ந்தபடி விசே பார்வையின் அளவும் சாதாரணபார்வையின் அளவும் ஒன்றுப் இரு வேண்டும் என்று எண்ணவேண்டாம். விசேஷபார்வையின் அளவு தாரண பார்வையின் அளவிற்கு ஒரு வேளை சரியாகவும் ஒரு வே வித்தியாசமாகவும் வரும் என்பதைக் கவனிக்கவும்.

(3) மொத்தபார்வை:—சாதாரண பார்வையின் அளவாகிய சும மூன்று வீசத்தையும் விசேஷபார்வையின் அளவாகிய சுமார் மூன் வீசத்தையும் ஒன்றுய்க்கூட்ட சுமார் ஆறுவீசம் அல்லது காலேஅ கால் வரும். ஆகையால் குரு, சந்திரனைக் காலே அரைக்கால் பார் யுடன் பார்க்கின்றார் என்று அறிய வேண்டியது.

இப்படியே மற்ற கிரகங்களாகிய சனி, செவ்வாய், இருவர்களுக்கும் கணிக்கவேண்டியது. செவ்வாய், குரு, சனி தவிர மற்றகிரகங்களுக்கு விசேஷ பார்வை கிடையாது. அதாவது சாதாரண பார்வையேயொத்த பார்வை என்று அறியவேண்டியது.

☞ இந்த வியாக்கியானத்தில் சொல்லியபடி கணிப்பது சிரமமாயிருந்தால் கடைசியில் கொடுத்திருக்கும் வாக்கியத்திலிருந்து (Table) வெகுசுலபமாகக் கிரகப்பார்வையை கணிக்கலாம்

துவாதச பார்வைபலம்:—இதுவரையிலும் கிரகங்கள் ஒன்றுக்கொன்றைப் பார்க்கும் பார்வையின் அளவைக்கணிக்கும் வழிகள்சொல்லப்பட்டன. இனிமேல் கிரகங்கள் துவாதச ஸ்தானங்களாகிய பன்னிரண்டுவீடுகளேயும் பார்க்கும் பார்வையின் அளவைக்கணிக்கும் விதம் சொல்லப்படும். லக்கினமுதல் 12 பாவங்களின் பலனை அறிவது ஜோதிடத்தின் கருத்தானபடியால் ஒவ்வொரு பாவத்திற்கும் உள்ள சுபதிருஷ்டி, பாவதிருஷ்டி அறிந்து பாவங்களின் பலனைச்சொல்வதே உத்தமம் என்று ஜோதிடசாஸ்திரத்தில் வல்லவர்கள் சொல்லி இருக்கிறார்கள். ஆகையால் பாவச்சக்கிரம் போட்டுதான் பலன் சொல்லவேண்டும் என்று சொல்லுகிறார்கள். பாவச்சக்கிரம் என்பது இராசி சக்கிரமும் அல்ல. இராசிசக்கிரத்தைக்கொண்டு இரண்டாவதுவீடு, மூன்றாவதுவீடு என்று அறிவது மல்ல. பாவச்சக்கிரம் போடுவதுகொஞ்சம் சிரமமானது. அதற்கு கொஞ்சம் வானசாஸ்திரமும் தெரிந்திருக்கவேண்டும்.

(1) உதாரணமாக மேஷராசியில் எந்தபாகத்திலாவது லக்கினம் நேரிட்டால் லக்கினவீடாகிய மேஷத்தை முதல்பாவம் என்றும் இரண்டாவது வீடாகிய ரிஷபத்தை இரண்டாம் பாவம் என்றும் மூன்றும் வீடாகிய மிதுனத்தை மூன்றும்பாவம் என்றும் இப்படியே பன்னிரண்டாம் வீடாகிய மீனத்தை பன்னிரண்டாம் பாவம் என்றும் சொல்லலாம். ஆனல் அப்படிச்சொல்வது மிகவும் தோராயமானது என்று அறியவும் இப்படியாக பாவம் கணக்கிட்டு பலன்சொல்லுவது பெரும்பாலும் வழிப்போகும் என்று அறியவும்.

(2) லக்கினம் என்பது அடிவானம் அல்லது ஆகாசமும் பூமியும் சம்மந்தப்படுவதுபோல தோற்றப்படும் வட்டமும் மேஷாதி, 12 இராசிகளின் வட்டமும், கிழக்கே சந்திக்கும் இடம் என்பதாம். ஒரு ஜெனனகாலத்தில் லக்கினத்திற்கும் உச்சிக்கும் இடையிலுள்ள தூரத்தை 3 சமபாகமாகப் பகுத்து 12-ஆம் பாவமத்தியஸ்தானமும் 11-ஆம் பாவமத்தி

யஸ்தானமும் 10-ஆம் பாவ மத்திபஸ்தானமும் வரும். உச்சிக்கும் ராசிகளின் வட்டமும் அடிவானமும் மேற்கே சந்திக்கும் இடத்திற்கும் இடையிலுள்ள தூரத்தை 3 சமபாகமாகப் பங்கிட வரிசையாக 9-ஆம் பாவ மத்திபஸ்தானமும் 8-ஆம் பாவ மத்திபஸ்தானமும் 7-ஆம் பாவ மத்திபஸ்தானமும்வரும். இராசிகள் வட்டமும் அடிவானமும் மேற்கே சந்திக்கும் இடத்திற்கும் பாதாளத்திற்கும் இடையேயுள்ள தூரத்தை 3-சமபாகமாகப்பங்கிட வரிசையாக 6-ஆம் பாவ மத்திபஸ்தானமும் 5-ஆம் பாவ மத்தியஸ்தானமும் 4-ஆம் பாவ மத்திபஸ்தானமும் வரும். பாதாளத்திற்கும் லக்கினத்திற்கும் இடையிலுள்ள தூரத்தை 3 சமபாகமாகப் பங்கிட வரிசையாக 3-ஆம் பாவ மத்தியஸ்தானமும், 2-ஆம் பாவ மத்தியஸ்தானமும், லக்கினபாவ மத்தியஸ்தானமும் வரும். இவ்விதமாக பாவ சக்கிரம் போடவேண்டும். இந்தவிதமாக பாவசக்கிரம் போடுவது 1-வது வழியைவிட துல்லிபமானது. இவ்விதமாகப் போடுவதற்கு கொஞ்சம் வானசாஸ்திரம் தெரிந்திருக்கவேண்டும். ஆகையால் இவ்விதமாய் போடுவதற்கு உதாரணம் இவ்விடத்தில் கொடுக்காமல் கடைசியில் கொடுக்கப் பட்டிருக்கிறது. இந்த வழியை வானசாஸ்திரந் தெரிந்தவர்கள் அனுஷ்டிக்கலாம். மேலே சொல்லியபடி சமபாகமாகப் பங்கிடும் இடங்கள் பாவங்களின் மத்தியஸ்தானமாகும். ஒவ்வொரு மத்தியஸ்தானத்திற்கு முந்தி15-பாகையும் பிந்தி 15-பாகையும் சேர்ந்தது ஒருபாவம் என்பதாம். இந்த வழியைவிட இன்னம் அதிக துல்லியமானவழி ஒன்று இருக்கின்றது. அதற்கு வானசாஸ்திரம் அதிகமாய் தெரியவேண்டியதால் அந்தவழியை இந்தப்புஸ்தகத்தில் கொடுக்கப்படவில்லை. ஆனால் வானசாஸ்திரம் தெரியாதவர்கள் போடுவதற்காக சமானவழி கீழே சொல்லப்பட்டிருக்கிறது.

(3) முதலில் லக்கின ஸ்புடஞ்செய்து கொள்ளவேண்டியது. லக்கினஸ்புடஞ் செய்யும் வழி கடைசியில் காட்டப்பட்டிருக்கிறது. பிறகு லக்கினஸ்புடத்தில் ஒரு ராசிக்குறியபாகையைக் கூட்டிக் கொண்டேவந்தால் 12-பாவங்களின் மத்தியஸ்தானங்களும் வரும். உதாரணமாக லக்கின ஸ்புடம் 10 பாகை 30 கலையாய் இருந்தால் அத்துடன் 30 பாகை கூட்ட இரண்டாவது பாவமத்தியஸ்தானமாகிய 40 பாகை 30 கலைவரும். இத்துடன் 30 பாகை கூட்ட மூன்றாவது பாவ மத்தியஸ்தானமாகிய 70 பாகை 30 கலைவரும் இவ்விதமே மீதி பாவ மத்தியஸ்தானஸ்புடங்களை அறியவும். ஒவ்வொரு பாவ மத்திபஸ்தானத்திற்கு முந்தி 15 பாகையும் பிந்தி 15 பாகையும் சேர்ந்தது ஒரு பாவமாகும். பாவ மத்தியஸ்தான ஸ்புடமும் பாவங்களின் ஸ்புடமும் வித்தியாசமிருப்பதை நன்றாய்க் கவனிக்கவும்.

பிறகு கிரகங்கள் பாவங்களைப்பார்க்கும் பார்வையின் அள கணிக்கும் வழியைப்பற்றி கவனிப்போம். பாவ மத்தியஸ்தானங் கிரகங்களாக எண்ணிக்கொண்டு கிரகங்கள் ஒன்றுக்கொன்றைப் கும் பார்வையின் அளவைக்கணிப்பதுபோல பாவங்களைக் கிரக பார்க்கும் பார்வையின் அளவைக் கணிக்கவேண்டியது.

உதாரணம்:—உதாரணமாக சூரியன் 10 பாகை 15 கலையி ஷத்தில் இருப்பதாக வைத்துக்கொள்வோம். மேலே சொல்லிய உ ணத்தில் ஏழாவது பாவத்தைச்சூரியன் பார்க்கும் பார்வையின் வைக் கணிப்போம். ஏழாவது பாவமத்தியஸ்தானத்தின்ஸ்புடம் ப 190 கலை 0 இந்த ஏழாவது பாவ மத்தியஸ்தானத்தை ஒரு கிர வைத்துக்கொள்ளவும். இந்தமத்தியஸதானஸ்புடமாகிய பாகை 19 30-லிருந்து சூரியனுடைய ஸ்புடமாகிய பாகை 10-கலை 15 கழிக்க பாகை 180-கலை 15 வரும். இதை கலைபாக மாற்ற 10,805 வரும். இந்த 10,805 கலைதான் ஸ்புடகலை ஆகும். இந்த ஸ்பு 10,800-க்குமேல் 18,000-த்துக்குள் இருப்பதால் இந்த ஸ்புடக சாதாரணபார்வை 3-வது லக்கத்தில் சொல்லியபடி 18,000 லிருந்து கழிக்க 7,185 மிச்சம்வரும். இந்தமிச்சத்தை சாதாரணப 3-வது லக்கத்தில் சொல்லியபடி 7,200 ஆல் வகுக்க வரும் ஈவு வரும். அதாவது ஈவு சுமார் ஒன்று வரும். ஆதலால் சூரியன் ஏழ பாவத்தை ஒரு பார்வையுடன் (அதாவது முழு பார்வையுடன்) கின்றார் என்பதாம். இப்படியே ஒவ்வொருகிரகமும் ஒவ்வொரு ப தையும் பார்க்கும் பார்வையின் அளவைக் கணிக்க வேண்டும்.

(b) (c) (d) (e):—ஒராம்வீடு, இரண்டாம்வீடு, ஆறாம்வீடு ஞோராம் வீடு, பன்னிரண்டாம்வீடு, இந்த வீடுகளின் பார்வை வி யானத்தில் சொல்லியபடி கணிக்க வேண்டியது.

14-வது சுலோகம்:—கிரகங்கள் அடியிற்கண்ட காலத்தில் வைத் தெரிவிக்கும்.

(1) சூரியன்—6 மாதம்
(2) சந்திரன்—2 நாழிகை (a)
(3) செவ்வாய்—1 நாள்
(4) புதன்—2 மாதம்
(5) குரு—1 மாதம்
(6) சுக்கிரன்—15 நாள்
(7) சனி—1 வருஷம்

கிரகங்களின் ரசங்கள் அடியிற் கண்டபடி ஆகும்

(1) சூரியன்—காரம்
(2) சந்திரன்—உப்பு
(3) செவ்வாய்—கசப்பு
(4) புதன்-பலரசங்களுடையது
(5) குரு—தித்திப்பு
(6) சுக்கிரன்—புளிப்பு
(7) சனி—துவர்ப்பு

(a) சந்திரனுக்கு 2-நாழிகை கொண்ட ஒரு முகூர்த்தமேயல்லாமல் காலம் என்ற $3\frac{3}{4}$ நாழிகை அல்லவென்று அறியவும்.

15-வது சுலோகம்:—கிரகங்களுக்கு நட்பு, பகை அடியிற்கண்டபடி ஆகும்.

சிலர் அபிப்பிராயபடி:—(a)

கிரகம் நட்பு	கிரகம் பகை
(1) சூரியனுக்கு—குரு	(1) சூரியனுக்கு-சந்,செ பு,சு,சனி
(2) சந்திரனுக்கு—புதன், குரு	(2) சந்திரனுக்கு-செ, சு, சனி, சூ
(3) செவ்வாயிற்கு—புதன், சுக்கிரன்	(3) செவ்வாயிற்குகுரு,சனி,சூ,சந்
(4) புதனுக்கு-சந்,செ,குரு,சு,சனி	(4) புதனுக்கு-சூரியன்
(5) குருவிற்கு-சூ, சந், பு, சு,சனி	(5) குருவிற்கு-செவ்வாய்
(6) சுக்கிரனுக்கு-செ,பு,குரு,சனி	(6) சுக்கிரனுக்கு-சூரியன், சந்திர
(7) சனிக்கு-பு, குரு. சுக்கிரன்	(7) சனிக்கு-சூ, சந், செ.

(a) இதில் சமம் என்பது கிடையாது,

சத்தியாச்சாரி மதம் பிறகாரம் கிரகங்களுக்கு அடியிற்கண்டபடி நட்பு, பகை, சமம் ஆகும். (a) ஒவ்வொரு கிரகத்திற்கும் தன்னுடைய மூலத்திரிகோண ராசிக்கு 2, 4, 5, 8, 9, 12-ஆம் வீட்டிற்குடையவரும் தன்னுடைய உச்ச ராசிக்குடையவரும் நட்பு கிரகங்களாவர். ஒவ்வொரு கிரகத்திற்கும் தன்னுடைய மூலத்திரிகோண ராசிக்கு 1, 3, 6, 7, 10, 11 ஆம் வீட்டிற்குடையவர் பகைகிரகங்களாவர். ஒரே கிரகம் 2, 4, 5, 8, 9, 12 ஆம் வீடுகளில் ஒருவீட்டிற்குடையவராகவும் 1, 3, 6, 7, 10, 11 ஆம் வீடுகளில் ஒரு வீட்டிற் குடையவராகவும் இருந்தால் அந்த கிரகம் நட்பாகவும் பகையாகவு மில்லாமல் சமமாக இருக்கும்.

(a) இவ்விதமான சத்தியாச்சாரி, மதம் வராஹமிகி ராச்சாரியாருக்குச் சம்மதமான மதம் என்றறியவும்.

16-வது சுலோகம்:—சத்திபாச்சாரி, வராஹ மிகிராச்சாரி இ களின் மதம் பிறகாரம் கிரகங்களுக்கு நட்பு, பகை, சமம் அடியிற்கண் படி ஆகும். (இதற்கு "நைசர்க்கிக" அல்லது சுபாவ பலம் என்றுபெ

கிரகங்கள்	நட்புகிரகங்கள்	பகை கிரகங்கள்	சமகிரகங்
1 சூரியனுக்கு	சந் செ குரு,	சு, சனி	புதன்
2 சந்திரனுக்கு	பு, சூ,	(இல்லை)	செ, கு, சு, ச
3 செவ்வாயிற்கு	குரு, சூ, சந்	புதன்	சு, சனி
4 புதனுக்கு	சு, சூ	சந்	குரு, சனி செ
5 குருவிற்கு	சூ, சந், செ	சு, பு,	சனி
6 சுக்கிரனுக்கு	சனி, பு	சூ, சந்	செ, குரு
7 சனியிற்கு	பு, சு	சூ, சந், செ, குரு	

உதாரணமாக:—குருவை எடுத்துக் கொள்வோம். குருவி மூலத்திரிகோண ராசி தனுசு. தனுசிற்கு 9 ஆம் வீட்டிற் குடை ராகிய சூரியனும் 8 ஆம் வீட்டிற் குடையவராகிய சந்திரனும், 5, ஆம் வீட்டிற் குடையவராகிய செவ்வாயும் நட்பாவர். தனுசிற்கு 11, ஆம் வீட்டிற் குடைய சுக்கிரனும் 7, 10 – ஆம் வீட்டிற் கு யவராகிய புதனும் பகையாவர். தனுசிற்கு 2 - ஆம் வீட்டிற் கு யவராய் சனி இருப்பதால் ஒருவிதத்தில் நட்பாயும் தனுசிற்கு 3 வீட்டிற் குடையவராய் சனி இருப்பதால் மற்றொரு விதத்தில் பகை யும் இருப்பார். அதாவது நட்பும் பகையும் கலந்ததால் சனியைச் ச என்று சொல்ல வேண்டியது. இவ்விதமே குருவிற்கு நட்பு, பகை. ச மேலேகொடுத்திருப்பதைப்பார்க்கவும். கிரகங்களுக்கு நட்பு,பகை,ச இவைகளைத் தெரிவிக்க மேலே கொடுத்துள்ள வாக்கியத்தை (Tal கியாபகத்தில் வைத்துக்கொள்வது கஷ்டமாகவிருக்கும். ஆகையால் கங்களின் மூலத்திரிகோண ராசியைக் கொண்டு நட்பு,பகை,சமம் இ களை 15-வது சுலோகத்தில் சொல்லிய விதிப்படி தேவையான வே வெகு சுலபமாகத் தெரிந்து கொள்ளலாம். ஒவ்வொரு கிரகத்திற் ஆட்சி, உச்சம், நீச்சம், மூலத்திரிகோண வீடுகள் தவிற மற்ற வீடுக நட்பு,பகை, சமவீடுகள் 15-வது சுலோகத்தின் பின்பாகத்தில் சொல் விதிப்பிறகாரம் அறிய வேண்டியது,

18-வது சுலோகம்:—தற்காலபலம் ஒரு கிரகத்திற்குதான் இ கும் வீட்டிலிருந்து 2, 3, 4, 10, 11, 12 ஆம் வீட்டிலிருக்கும் கி கள் அக்கிரகத்திற்குத் தற்காலம் மித்துரு என்பதாம். சிலர் ஒரு கி தின் உச்சவீட்டிலிருக்கும் கிரகங்கள் அக்கிரகத்திற்கு தற்கால மித்

ன்கிறார்கள், (a) இந்த தற்கால பலத்தையும் நைசர்க்கிக பலத்தையும் சேர்த்து கவனிக்கும் பட்சத்தில் கிரகங்களுக்கு அதிக மித்துரு, மித்துரு, சமம், சத்துரு, அதிசத்துரு என்று ஐந்துவித பலம் ஏற்படும். (b)

(a) தற்கால பலத்தில் 2, 3, 4, 10, 11, 12 ஆம் வீடுகள் தவிற மற்ற வீடுகளிலிருப்பவர்கள் தற்கால சத்துரு வென்றறியவும். இதில் சமம் இல்லை என்று அறியவும்.

(b) நைசர்க்கிகபலம் ரீதியாய்	தற்காலபலம் ரீதியாய்		
1 மித்துருவாயும்	மித்துருவாயும்	இருந்தால்	அதிமித்துரு
2 சமமாயும்	மித்துருவாயும்	,,	மித்துரு
3 மித்துருவாயும்	சத்துருவாயும்	,,	சமம்
சத்துருவாயும்	மித்துருவாயும்	,,	சமம்
4 சமமாயும்	சத்துருவாயும்	,,	சத்துரு
5 சத்துருவாயும்	சத்துருவாயும்	,,	அதிசத்துரு

ஒரு கிரகம் இருந்த வீட்டிற்கு 2, 3, 4, 10, 11, 12 ஆம் வீட்டிலிருந்த கிரகம் தற்கால மித்திரனென்று பிருஹத் ஜாதகம் ஜாதகபாரிஜாதம் முதலிய கிரந்தங்களில் சரியாய்ச் சொல்லியிருக்க, 2, 3, 4, 10, 11, 12 ஆம் வீட்டிற்குடையவர் தற்கால மித்திரன் என்று சில பஞ்சாங்கங்களில் தவறுதலாய்ப்போட்டு வருகின்றார்கள். இதைப் பஞ்சாங்க கணிதர்கள் திருத்திக் கொள்வார்களாக.

19-வது சுலோகம்:—கிரகங்களின் ஸ்தானபலம்—கிரகங்கள் உச்சராசி, மூலத்திரிகோணராசி, சுவக்ஷேத்திரராசி இவைகளிலும் தங்களுடைய நவாம்சையிலும் நட்பு வீடுகளிலும் இருந்தால் அவர்களுக்கு ஸ்தானபலம் உண்டு (a) அப்போது அவர்கள் வலியராவர்.

கிரகங்களின் திக்குப்பலம்:—புதனும் குருவும் உதயராசியாகிய லக்கினத்தில் அல்லது கிழக்கில் இருந்தால் வலியர். சந்திரனும் சுக்கிரனும் 4 ஆம் வீட்டில் அல்லது வடக்கில் இருந்தால் வலியர். சனி 7 ஆம் வீட்டில் அல்லது மேற்கில் இருந்தால் வலியர். சூரியனும் செவ்வாயும் பத்தாம் வீட்டில் அல்லது தெற்கில் இருந்தால் வலியர். (b)

(a) இருபதாவது அத்தியாயம் 11-வது சுலோகத்தில் சொல்லியபடி. உச்சத்திற்கு முழு பலமும் மூலத்திரிகோணத்திற்கு $\frac{3}{4}$ பலமும் சுவ க்ஷேத்திரத்திற்கு (சுய நவாம்சமும்) $\frac{1}{2}$ பலமும், நட்பு வீட்டிற்கு $\frac{1}{4}$ பலமும் என்று அறியவும்.

(b) லக்கினத்திற்கு உதையராசி என்றும் 4 ஆம் வீட்டிற்கு த்ாளம், நீர்க்கிழ் என்றும் 7 ஆம் விடத்திற்கு அஸ்தமனராசி என் 10 ஆம் வீட்டிற்கு உச்சி என்றும் பெயர்.

20-வது சுலோகம்:—ஜேஷ்டாபலம்:—சூரியனும் சந்திரனும் முதல் ஆறு ராசிக்குள் இருந்தால் ஜேஷ்டா பலத்தில் வலியர். மற்ற கங்கள் வக்கிரமாயிருக்கும் போதும் சந்திரனுடன் சமாகமாயிருக் போதும் (a) மிகவும் பிரகாசமாயிருக்கும் போதும் (b) கிரகயுத்தத் வடக்கே யிருக்கும்போதும் (c) ஜேஷ்டா பலத்தில் வலியர்.

(a) சமாகம் என்பது இரண்டு கிரகங்கள் அல்லது இரண்டி மேற்பட்ட கிரகங்கள் ஒரே இராசி, பாகை, கலையில் இருப்பது. அ வது அவைகளின் ஸ்புடம் ஒன்றாகவிருப்பது. சந்திரசமாகமம் என் சந்திரனஸ்புடமும் மற்ற எந்தகிரகத்தின் ஸ்புடமும் சரியாய் இருப்ப

(b) கிரகங்களின் பிரகாசம் சூரியனைவிட்டு, செல்லச்செல்ல பூமிக்கு அருகில் கிரகங்கள் நெருங்கிவரவரவும் அதிகப்படும். புதன் யனைவிட்டு சுமார் 29 பாகைக்கு மேற்பட்டும் சுக்கிரன் 46 பாகைக் மேற்பட்டுப் பிரிந்திருக்கமாட்டா இவைகள் சூரியனைவிட்டு அதிகம பிரிந்திருக்கும் காலத்திற்குச் சமீபத்தில் அதிக பிரகாசமாய் இருக் புதன் மேற்கில் உதயமாயிருக்கும்போது அதிகமாய்ப் பிரிந்திருப்பத கொஞ்சம் முந்தியும், கிழக்கில் உதையமாகியிருக்கும்போது அதிகம பிரிந்த பிற்பாடும், அதிக பிரகாசமாய் இருக்கும். சுக்கிரன் மேற்கில் யமாயிருக்கும்போது அதிகமாய்ப் பிரிந்த பிற்பாடும் கிழக்கில் உதை கியிருக்கும்போது அதிகமாய்ப் பிரிந்திருப்பதற்குக் கொஞ்சம் முந் அதிக பிரகாசமாய் இருக்கும். மற்றகிரகங்களாகிய சந்திரன், செவ் குரு, சனி, சூரியனைவிட்டு சுமார் 180 பாகை பிரிந்திருக்கும்பே பிரகாசமாய் இருப்பர் என்பதாம்.

(c) கிரகயுத்தம் என்பது கிரகங்கள் ஒன்றோடொன்று நெரு வருவது. அதாவது ஒன்றுக்கொன்று அருகில் இருப்பது. கிரகயு திலே சனியை சூரியனும், செவ்வாயைச்சனியும், குருவைச் செவ்வா சந்திரனைக் குருவும், சுக்கிரனைச் சந்திரனும், புதனைச் சுக்கிரனும், ச னைப் புதனும், வெல்லுவர் என்பது சிலர் அபிப்பிராயம்.

21-வது சுலோகம்:—கிரகங்களின் காலபலன்.

1 சூரியன் பகலினும்
2 சந்திரன் இரவினும்
3 செவ்வாய் இரவினும்
4 புதன் எப்போதும்
5 குரு பகலினும்
6 சுக்கிரன் பகலினும்
7 சனி இரவினும் காலபத் வலியர் என்ப

சுப கிரகங்கள் வளர் பிறையிலும் பாபக்கிரகங்கள் தேய் பிறையிலும் கால பலத்தில் வலியா.

ஒவ்வொரு கிரகமும் தன்னுடைய வருஷம், மாதம், வாரம், ஓரை, இவைகளில் கால பலத்தில் வலியர் என்பதாம்.

கிரகங்களின் நைசர்க்கிக (அல்லது சுபாவ) பலம்.

சனி நைசர்க்கிகபலத்தில் எல்லா கிரகங்களை விட பல ஈனமானது அதைவிட செவ்வாயும், செவ்வாயைவிட புதனும், புதனைவிட குருவும், குருவைவிட சுக்கிரனும், சுக்கிரனைவிட சந்திரனும், சந்திரனைவிட சூரியனும் வலியராவர்.

3-வது அத்தியாயம்.

1-வது சுலோகம்:—ஜெனன காலத்தில் சுபர்கள் பலவீனமாகவும் பாபர்கள் பலவந்தர்களாகவுமிருந்து அலிகிரகங்களாகிய சனி புதன் இவர்கள் இருவரில் ஒருவர் கேந்திரத்திலிருந்தாலும் அல்லது லக்கினத்தைப் பார்த்தாலும் ஒருவியோனி ஜென்மம் (a) உண்டாகும். இந்த ஜெனனத்தின் ரூபம் சந்திரனிருக்கும் துவாதசாம்சவீட்டின் ரூபம் ஆகும். (b)

(a) வியோனி ஜென்மம் என்பது மானிடஜென்மத்திற்குத் தாழ்ந்த ஜென்மம் என்பதாம். அது நடப்பன, பறப்பன, நகர்வன, ஊர்வன முதலிய ஜென்மங்களாக விருக்கலாம்.

(b) உதாரணமாகச் சந்திரன் மேஷ துவாதசாம்சத்தி லிருந்தால் மேஷத்திற்குரிய ரூபமாகிய ஆடு என்று அறியவும். ஜெனனகால லக்கினத்திற்குச்சொன்னது போலவே பிரஷ்னகால லக்கினத்திற்குஞ் சொல்லலாம். சந்திரனிருக்கும் துவாதசாம்சராசி மானிடராசிதவிரமற்றராசியாக விருக்கவேண்டியதென்பதாம்.

மானிடராசி என்பது 1-வது அத்தியாயம் 17-வது சுலோகத்தில் சொல்லியபடி இருகால் ராசிகளாகிய மிதுனம், கன்னி, துலாம், தனுசு முன்னரை, கும்பம் ஆகும்.

2-வது சுலோகம்:—லக்கினம் மானிடராசி தவிற மற்ற ராசியாயிருந்து சுபர்கள் தங்களுடைய நவாம்சைகளில்லாமல் பலவீனமாயிருந்து பாபர்கள் தங்களுடைய நவாம்சைகளிலிருந்து பலவந்தர்களாயிருந்தால் மானிடஜென்மத்திற்குத் தாழ்ந்த வியோனி ஜென்மம் முன் சொல்லியது போல (a) பிறக்கும் என்பதாம்.

(a) முன் சொல்லியது போல என்பதால் சந்திரன் எந்த து சாம்ச வீட்டிலிருக்கிறதோ அந்த வீட்டின் உருவம் அந்த ஜெ உடையதென்பதாம். சந்திரனிருக்கும் துவாதசாம்சராசி மானிட தவிர மற்றராசியாயிருக்க வேண்டும்.

3-வது சுலோகம்:—நாற்கால் ஜென்மங்களின் அவயவங்கள் யிற்கண்டபடி 12 இராசிகளுக்கும் உரியன.

1 மேஷம்—தலை	7 துலாம்—வயிறு
2 ரிஷபம்—முகம், கழுத்து	8 விருச்சிகம்—ஆசனம்
3 மிதுனம்—தோள்களும் முன் னங்கால்களும்	9 தனுசு—பின்னங்கால்கள்
4 கடகம்—முதுகு	10 மகரம்—விரை, சிசுனம்
5 சிம்மம்—மார்பு	11 கும்பம்—புட்டம்
6 கன்னி—விலாபக்கம்	12 மீனம்—வால், என்பதாம்

4-வது சுலோகம்:—வியோனி ஜென்மத்தின் நிறம் லக்கினத்தில் கும் கிரகத்தின் நிறமாகும். (a) லக்கினத்தில் கிரகமில்லாமலிருந் லக்கினத்தைப் பார்க்கும்கிரகத்தின் நிறமாகும். லக்கினத்தை எந்த மும் பார்க்காமலிருந்தால் நவாம்சலக்கின வீட்டின் நிறமாகும். ல னத்தில் எத்தனை கிரகங்கள் இருக்கின்றனவோ அல்லது பார்க்கின் வோ அவ்வளவு நிறங்களும் அந்தந்த கிரகங்களின் நிறமும் உடை கும். ஏழாம்வீட்டிலுள்ளகிரகங்களின் நிறத்தையும் எண்ணையுங்கொ அந்த ஜென்மத்தின் முதுகிலுள்ள ரேகைகளின் நிறமும் எண்ணை சொல்லவேண்டும்.

(a) பல கிரகங்களிருந்தால் வலிதான கிரகத்தின் நிறம் பெ பான்மையாயிருக்கும் மற்ற கிரகங்களின் நிறமும் கலந்திருக்கும்.

5-வது சுலோகம்:—திரேகாண லக்கினம் பட்சித் திரேகாணமா (a) அல்லது நவாம்ச லக்கினம் சரராசியாயும் (b) அல்லது புதனுை நவாம்சை யாயும் (c) இருந்து இவைகளில் வலிவான கிரகங்களிரு பட்சி ஜென்மம் உண்டாகும். இந்த திரேகாண லக்கினத்தில் அல் நவாம்சை லக்கினத்தில் சனி இருந்தாலும் அல்லது இவைகளைப் பா தாலும் வனங்களில் சஞ்சரிக்கும் பட்சி என்பதாம். சனி அல்ல சந்திரனுமிருந்தால் ஜலத்தில் வசிக்கும் பட்சி என்பதாம்.

(a) சர்பத்திரேகாணம் அல்லது பாசத்திரேகாணம் என்பது கட தின் இரண்டாவது திரேகாணமும், மீனத்தின் கடைசி திரேகாண ம் விருச்சிகத்தின் முதல் திரேகாணமும் ஆகும். பாஷத்திரேகாணம் ன்பது. நிகடத்திரேகாணம் என்பது விருச்சிகத்தின் இரண்டாவது ரேகாணமாகும்.

பட்சித்திரேகாணம் என்பது மகர சிம்மங்களின் முதல் திரேகா மும் மிதுன துலாத்தின் நடுத்திரேகாணமும் ஆகும்.

(b) சராசி என்பது மேஷம், கடகம், துலாம், தனுசு ஆகும்.

(c) புதனுடைய நவாம்சை என்பது மிதுன, கன்னி நவாம்சை கும்.

6-வது சுலோகம்:—லக்கினமும் குருவும், சூரியனும், சந்திரனும், வீனமாயிருந்து நவாம்ச லக்கினம் ஜலராசி (a) யாயிருந்தால்ஜலத் ல் உண்டாகும் செடியும் மற்ற ராசியாயிருந்தால் பூமியிலுண்டாகும் மும் ஜெனனம் என்பதாம். லக்கினத்திலிருந்து எத்தனை யாவது ட்டில் நவாம்ச லக்கினதிபதி இருக்கின்றாரோ அத்தனை மரங்களும் சடிகளும் முளைக்கும் என்பதாம். (b)

(a) ஜலராசி என்பது கடகம், மகரம் பின்னரை, மீனம் ஆகிய வைகள்.

(b) உதாரணமாக லக்கினம் மேஷமாயிருந்து. அமிசாலக்கினம் ருச்சிகமாயிருந்து விருச்சிகத்திற்கு அதிபதியாகிய செவ்வாய் துலாத் இருந்தால் மேஷத்திற்கும் துலாத்திற்கும் 7 வீடு ஆனபடியால் 7 மரங் ளும் செடிகளும் முளைப்பு என்பதாம்.

7-வது சுலோகம்:— முன் சுலோகத்தில் சொல்லிபபடி இருந்து ம்சலக்கினதிபதி அடியிற்கண்டபடியானல் அடியிற்கண்ட மரங்க ந் செடிகளும் முளைக்கும்.

சூரியன்-வயிரமானமரம்
சந்திரன்-பாலுள்ளமரம், எண்ணெயுள்ள மரம்
செவ்வாய்-முள்ளுள்ள மரம்
துவர்ப்புள்ள மரம்
புதன்-பழம் கொடுக்காத மரம்
5 குரு-பழம் தரும் மரம்
6 சுக்கிரன்-புஷ்பமாத்திரம் கொடுக்கும் மரம்
7 சனி-விகாரமான மரம்
என்பதாம்.

8-வது சுலோகம்:—6-வது சுலோகத்தில் சொல்லியபடி இ நவாம்சைலக்கினதிபதி சுபகிரகமாயிருந்து பாபருடையராசியி தால் நல்ல மரங்கள் கெட்டவிடத்திலும், நவாம்சைலக்கினதிபதி கிரகமாயிருந்து சுபருடைய வீட்டிலிருந்தால் கெட்ட மரங்கள் விடத்திலும் உண்டாகும். நவாம்சலக்கினதிபதி தன்னுடைய சை வீட்டிலிருந்து (a) எத்தனை வீடு பிரிந்திருக்கின்றாரோ அ மரம் செடிகள் என்பதாம்.

(a) ஒரு கிரகத்திற்கு இரண்டு நவாம்சை வீடுகளிருந்தால் கிரகம் கடைசியாயிருந்த நவாம்சை வீட்டிலிருந்து கணக்கிடவே யது,

---

4-வது அத்தியாயம்.

கெற்பாதனப் படலம்.

1-வது சுலோகம்:— ஸ்ரீகளுக்குண்டாகும் மாதப் பிரவிடை காரணம் சந்திரனும் செவ்வாயும் என்பதாம். (a) மாதப் பிர யான பிறகு சந்திரன் அனு உபஜயராசிகளில் (b) இருக்கும் கெற்பந்தரிக்கும் சந்திரன் மற்ற ராசிகளிலிருந்து (c) அதை ஆ கிரகம் (a) பார்த்தால் ஒரு ஸ்ரீ தன்னுடைய கணவனுடன் ச கஞ் செய்வாள் என்பதாம்,

(a) பித்தத்திற்கும் ரத்தத்திற்கும் அதிகாரமுடைய கிரக கிய செவ்வாயும் சந்திரனும் தம்முள் ஒருவரை யொருவர் பார் னும் கூடுவதாலும் உண்டாகும் சம்பந்தத்தினால் ஜன்ம ராசிக்கு 1 5, 7, 8, 9, 12 ஆம் இராசிகளாகிய அபஜயராசியில் சந்திரனி போது ஒவ்வொரு மாதமும் ஸ்ரீகளுக்கு மாதப் பிரவிடை நேரிடு விடத்தில் ஸ்ரீகள் என்றது ருதுவாகாத பெண்களையும் மாதப் டைக்கு வயது கடந்தவர்களையும் குறிக்காது (b) அனு உப ஜ என்பது லக்கினத்திலிருந்து 1, 2, 4, 5, 7, 8, 9, 12 ஆம் இர என்பது. இவைகளுக்கு அபஜயராசி என்றும் பெயர் உபஜயரா பது லக்கினத்திலிருந்து 3, 6, 10, 11 ஆம் வீடுகள் என்பதாம்.

(c) மற்ற ராசிகள் என்பது உபஜெயராசிகளாகிய 3, 6, 1 ஆம் வீடுகள் என்பதாம்,

(a) ஆண் சுபக்கிரகம் என்பது "குரு" என்றறிபவும்

2-வது சுலோகம்:—நிஷேக லக்கினத்திற்கு 7 - ஆம் வீட்டிற்கு டைய ஜந்துகள் கிரீடைசெய்வதுபோல ஸ்ரீபுருஷர்கள் சம்போகஞ்செய் பார்கள். கிரீடை செய்யும்போது நிஷேகலக்கினத்திற்கு 7 - ஆம் இடத் தில் சுபக்கிரகம் இருந்தாலும் அல்லது அதைப்பார்த்தாலும் ஸ்ரீபுருஷர் ள் சந்தோஷத்துடனும், சிரிப்புடனும் விளையாட்டுடனும் காமக்கிரீடை லலிதமாகச் செய்வார்கள். 7-ஆம் இடத்தில் பாபக்கிரகம் இருந்தாலும் பார்த்தாலும் கோபத்துடன் சம்போகஞ்செய்வார்கள் 7-ஆம் இடத்தில் சுபக்கிரகமும் பாபக்கிரகமும் இருந்தாலும் பார்த்தாலும் ஸ்ரீபுருஷர்கள் சந்தோஷத்துடனும் கோபத்துடனும் சம்போகஞ் செய்வார்கள.

3-வதுசுலோகம்:—நிஷேககாலத்தில் சூரியன், சந்திரன், செவ் வாய், சுக்கிரன் இவர்கள் தங்களுடைய நவாம்சைகளிலிருந்தாலும், அல் லது குரு நிஷேககால லக்கினத்திற்கு 1, 5, 9-ஆம் வீடுகளிலிருந்தாலும் கெற்பந்தரிக்கும். குருடனுக்குச் சந்திரனுடைய கிரணங்கள் உபயோக மற்றதுபோல வீரிய ஈனமுள்ள ஸ்ரீபுருஷர்களுக்கு மேற்சொல்லிய கிரக ங்கள்உபயோகமற்றவைகளாகவிருந்து,கெற்பந்தரிக்காதுஎன்பதாம்(a)

(a) மேலேசொல்லிய கிரகங்களாகிய சூரியன்,சந்திரன், செவ்வாய், சுக்கிரன் இவர்கள் நால்வரும் ஏககாலத்தில் சுய நவாம்சையில் இருக்க வேண்டும் என்பது அல்ல. நிஷேககாலத்தில் ஸ்ரீக்கு ஜென்ம லக்கினத் திற்கு உபஜெயராசியிலும் சுப நவாம்சையிலும் ஏககாலத்தில் செவ்வா யும் சந்திரனும் இருந்தாலும், அல்லது புருஷனுக்கு ஜென்மலக்கினத் திற்கு அபஜயராசியிலும் சுய நவாம்சையிலும் ஏககாலத்தில் சூரியனும், சுக்கிரனும் இருந்தால் கெற்பந்தரிக்கும் என்பதாம். ஏககாலம் என்ப தால் சுய நவாம்சையிலும் உபஜெயராசி அல்லது அபஜெயராசிகளிலும் ஒரே காலத்திலிருக்கவேண்டும் என்பது அர்த்தம்.

4-வது சுலோகம்:—கெற்பாதான காலத்தில் செவ்வாய் அல்லது சனி, சூரியனுக்கு 7-ஆம் வீட்டிலிருந்தால் புருஷனுக்கும், சந்திரனுக்கு 7-ஆம் வீட்டிலிருந்தால் ஸ்ரீக்கும் நலியுண்டாகும். (a) செவ்வாய், சனி இவர்களிருவரில் ஒருவர் சூரியனுக்கு 2-லும் மற்றொருவர் 12-லும் இருந் தால் புருஷனுக்கு மரணமுண்டாகும், இப்படியே சந்திரனுக்கு இருந் தால் ஸ்ரீ மரணமாவாள். செவ்வாய் சனி இவர்கள் இருவரில் ஒருவர் சூரியனுடனாவது சந்திரனுடனாவது சம்மந்தப்பட்டு, மற்றொருவர் சந்தி ரனையாவது, சூரியனையாவது பார்த்தால் ஸ்ரீபுருஷர் இருவர்களுக்கும் மரணமுண்டாகும் என்பதாம்.

(a) செவ்வாயால் தனக்குறிய மாதமாகிய கெற்பந்தரித்த இரண்டாவது மாதத்திலும், சனியால் தனக்குறிய மாதமாகிய கெற்பந்தரித்த ஆறுவது மாதத்திலும், நலி, மரணம் முதலியவை நேரிடும் என்பதாம்.

5-வது சுலோகம்:—பகலில் கெற்பந்தரிக்கப்பட்ட (அல்லது பிறக்கப்பட்ட) குழந்தைகளுக்கு சூரியன் தகப்பனும், சனி பெரிய, சிறிய தகப்பனும், சுக்கிரன் தாயும், சந்திரன் பெரிய, சிறிய தாயும், இரவில் கெற்பந்தரிக்கப்பட்ட (அல்லது பிறக்கப்பட்ட) குழந்தைகளுக்குச் சனி தகப்பனும், சூரியன் பெரிய, சிறிய தகப்பனும், சந்திரன் தாயும், சுக்கிரன், பெரிய, சிறிய தாயும் என்று அறியவும். தாய் தகப்பன் வர்க்கங்களைக் குறிக்கும் மேற்சொல்லிய கிரகங்களில் ஆண் கிரகம் ஆண் ராசியாகிய ஒற்றைராசியிலும், பெண் கிரகம் பெண்ராசியாகிய இரட்டை ராசியிலும் இருந்தால் தாய், தகப்பன் வர்க்கத்தார் சுகமாக விருப்பார்கள். (a)

(a) சனியை ஆண் கிரகமாக (ஆண் அலி) வைத்துக்கொள்ள வேண்டியது.

6-வது சுலோகம்:—கெற்பாதான காலத்தில் நிஷேக லக்கினத்திற்கு 2, 12-ஆம் வீடுகளில் பாபக்கிரகங்களிருந்து, நிஷேகலக்கினத்தை சுபர்கள் பார்க்காமலிருந்தாலும் அல்லது நிஷேக லக்கினத்தில் சனியிருந்து செவ்வாய், தேய்பிறை சந்திரன் இவர்களால் பார்க்கப்பட்டாலும், கெற்ப ஸ்ரீ மரணமாவாள் என்பதாம்.

7-வது சுலோகம்:—நிஷேகலக்கினமாவது, அல்லது சந்திரனாவது, அல்லது இரண்டுமாவது, பாபர்களுக்கு மத்தியில் (a) இருந்தால் கெற்ப ஸ்ரீ மரணமாவாள் என்பதாம்.

(a) பாபர்களுக்கு மத்தியில் என்பது நிஷேக லக்கினத்திற்காகிலும் அல்லது சந்திரனுக்காகிலும் 2, 12-ஆம் இடங்களில் பாபர் இருப்பது என்பதாம். பாபர்கள் நிஷேக லக்கினத்தில் அல்லது சந்திரனுடனிருந்து, ஸ்புடாதிபாய் இவைகளுக்கு முந்தி பிந்தி பாபர்கள் இருப்பதும் என்பதாம்.

8-வது சுலோகம்:—நிஷேக காலத்தில் நிஷேக லக்கினத்திற்கு சந்திரனுக்கும் 4-ஆம் வீட்டில் பாபர்களும், 8-ல் செவ்வாயுமிருந்தால் கெற்ப ஸ்ரீ மரணமாவாள், தேய்பிறையாயிருந்து, நிஷேகலக்கினத்திற்கு 12-ல் சூரியனும், 4-ல் செவ்வாயும் இருந்தால் கெற்பஸ்ரீ மரணமாவாள்.

9-வது சுலோகம்:—நிஷேக காலத்தில் நிஷேக லக்கினத்தில் செவ்வாய் இருந்து, நிஷேக லக்கினத்திற்கு 7-ல் சூரியனிருந்தால் கெ

பினி ஆயுதங்களால் மரணமாவாள். பலவீனமாயுள்ள கிரகத்தின் மாத
த்தில் (a) கெற்பிணிக்குக் கெற்பப்பிரஷ்டம் உண்டாகும் என்பதாம்

(a) கிரகங்களின் மாதங்கள் பின்னால் வருகின்ற 16-வது சுலோ
கத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன.

10-வது சுலோகம்:—சுபர்கள் நிஷேகலக்கினத்திலாவது அல்லது
சந்திரனுடனாவது இருந்தாலும், அல்லது நிஷேக லக்கினத்திற்காவது
அல்லது சந்திரனுக்காவது 2, 4, 5, 7, 9, 10-ல் சுபர்கள் இருந்து
நிஷேக லக்கினத்திற்காவது அல்லது சந்திரனுக்காவது 3, 11-ல் பாபர்
கள் இருந்தாலும் அல்லது நிஷேக லக்கினத்தையாகிலும் அல்லது சந்
திரனையாகிலும் சூரியன் பார்த்தால், பிரசவம் கஷ்டமில்லாமல் சுகமாக
நடக்கும் என்பதாம்.

11-வது சுலோகம்:—நிஷேக லக்கினமும், சூரியனும், சந்திரனும்,
குருவும், பலமாயிருந்து ஒற்றைராசிகளிலும் ஆண்ராசி நவாம்சைகளி
லும் இருந்தால் ஆண்குழந்தை பிறக்கும், இரட்டைராசிகளிலும் பெண்
ராசி நவாம்சைகளிலும் இருந்தால் பெண்குழந்தை பிறக்கும். சூரியனும்
குருவும் ஒற்றைராசிகளிலிருந்தால் ஆண்குழந்தையும், சந்திரனும், செவ்
வாயும், சுக்கிரனும் இரட்டைராசிகளிலிருந்தால் பெண்குழந்தையும்
பிறக்கும். சூரியனும், குருவும் இரட்டை உருவமுள்ள ஆண் நவாம்சை
(a) ராசிகளிலிருந்து அவர்களைப் புதன் பார்த்தால் இரட்டை ஆண்குழ
ந்தைகள் பிறக்கும். செவ்வாயும், சுக்கிரனும் இரட்டை உருவமுள்ள
பெண் நவாம்சை (b) ராசிகளிலிருந்து அவர்களைப் புதன் பார்த்தால்
இரட்டை பெண்குழந்தைகளும் பிறக்கும் என்பதாம். (c)

(a) இரட்டை உருவமுள்ள ஆண்ராசிகள்-மிதுனம், தனுசு என்ப
தாம்.

(b) இரட்டை உருவமுள்ள பெண்ராசிகள்-கன்னி, மீனம் என்ப
தாம்.

(c) சில கிரகங்கள் ஆண் இரட்டைராசியிலும் சிலகிரகங்கள் பெண்
இரட்டை ராசியிலும் இருந்தால் இரட்டைக் குழந்தைகள் ஒன்று
ஆணாகவும் மற்றொன்று பெண்ணாகவும் இருக்கும். சில கிரகங்கள் ஆண்
ராசியிலும் நவாம்சையிலும், சில கிரகங்கள் பெண்ராசியிலும் நவாம்சை
யிலும் இருந்தால் வலிவாயுள்ள கிரகத்தின் ஜாதியினுள் ஆண், பெண்,
என்று சொல்லவேண்டியது. 10-வது, 11-வது சுலோகங்களில் சொல்
லிய லக்கினம் என்பது ஜெனனகால லக்கினமென்றும், பிரஷ்னகால லக்
கினம் என்றும் நிஷேககால லக்கினமென்றும் வைத்துக்கொள்ளலாம்.

12-வது சுலோகம்:—நிஷேககாலத்தில் சனி நிஷேக லக்கின ற்கு, ஒற்றைராசிகளிலிருந்தால் ஆண்குழந்தை பிறக்கும் (a) மேற்செ லிய விதங்கள் எல்லாவற்றிலும் வலிவாயுள்ள கிரகத்தின் ஜாதியிலிரு குழந்தை ஆண், பெண் என்று அறியவேண்டியது.

(a) நிஷேககாலத்தில் அல்லது ஜெனனகாலத்தில் சனி நிஷேக கினத்திலாவது அல்லது ஜென்மலக்கினத்திலாவது இல்லாமலிருந் அதற்கு 3, 5, 7, 9, 11-ல் இருக்கவேண்டும் என்பதாம்.

13-வது சுலோகம்:—அடியிற்கண்டபடி கிரகங்களிலிருந்தால் னும் பெண்ணுமல்லாத அலிஜெனனம் உண்டாகும்:—

(1) நிஷேககாலத்தில் சூரியன் ஒற்றைராசியிலும் சந்திரன் இ டைராசியிலுமிருந்து ஒருவரை யொருவர் பார்த்தாலும்,

(2) நிஷேககாலத்தில் சனி இரட்டைராசியிலும் புதன் ஒற்றைர யிலுமிருந்து ஒருவரை யொருவர் பார்த்தாலும்,

(3) நிஷேககாலத்தில் செவ்வாய் ஒற்றைராசியிலிருந்து இரட் ராசியிலுள்ள சூரியனைப்பார்த்தாலும், அல்லது சூரியனால் பார்க்கப் டாலும்,

(4) இரட்டைராசியில் செவ்வாயிருந்து ஒற்றைராசியிலுள்ள நி கலக்கினத்தையும் சந்திரனையும் பார்த்தாலும்,

(5) சந்திரன் இரட்டைராசியிலும், புதன் ஒற்றைராசியிலுமிருந் செவ்வாய் அவர்களைப்பார்த்தாலும்,

(6) நிஷேகலக்கினமும், சந்திரனும், சுக்கிரனும், ஆண் நவாம்ச ளில இருந்தாலும், அலிகுழந்தை பிறக்கும் என்பதாம்.

இங்கே சொல்லியவைகள் எல்லாம் ஜெனனகாலத்திற்கும், பிரஷ் காலத்திற்கும் பொருந்தும் என்பதாம். ஆண் குழந்தை அல்லது பெ குழந்தை பிறக்க கிரகயோகம் இல்லாமலிருந்து அலிபிறக்க கிரகயே மிருந்தால் அலிபிறக்கும். மற்ற காலத்தில் அலிபிறக்காது.

14-வதுசுலோகம்:—சந்திரனும், சுக்கிரனும் இரட்டைராசியி ந்து, லக்கினமும், செவ்வாயும், புதனும், குருவும் ஒற்றைராசியிலி தாலும், அல்லது இரட்டைராசியிலுள்ள லக்கினத்தையும் சந்திரனை ஆண்கிரகம் பார்த்தாலும், அல்லது லக்கினமும், செவ்வாயும், புத குருவும் இரட்டை இராசியில் வலிவாயிருந்தால், இரட்டைக் குழ

ள் ஆனும் பெண்ணுமாகப் பிறக்கும் லக்கினமும் எல்லா கிரகங்களும்
பயராசி நவாம்சையிலிருந்து, தன் நவாம்சையிலுள்ள புதனுல் பார்க்
ப்பட்டால் மூன்று குழந்தைகள் பிறக்கும். இவைகளில், புதனிருக்கும்
வாம்சைராசி மிதுனமாஞல் இரண்டு குழந்தைகள் ஆணும், (a) புதனி
நக்கும் நவாம்சைராசி கன்னியானுல் இரண்டு குழந்தைகள் பெண்ணும்
) ஆகப்பிறக்கும் புதன் மிதுன நவாம்சையிலிருந்து, லக்கினமும் மற்
க்கிரகங்களும் மிதுனம், தனுசு நவாம்சைகளிலிருந்தால் மூன்று குழந்
தைகளும் ஆணுகும். புதன் கன்னியா நவாம்சையிலிருந்து லக்கினமும்
ற்றக்கிரகங்களும் கன்னி மீனம் நவாம்சைகளிலிருந்தால் மூன்று குழந்
தைகளும் பெண்ணுகும், என்பதாம்.

(a) மற்றொரு குழந்தை பெண்.

(b) மற்றொரு குழந்தை ஆண்.

15-வது சுலோகம்:—தனுசு லக்கினமாயிருந்து, தனுசின் கடைசி
வாம்சை (a) நவாம்சை லக்கினமாயிருந்து, தனுசு நவாம்சையில் (b)
எல்லாக் கிரகங்களும் வலிவாயிருந்து, லக்கினத்தைப் புதனும் சனியும்
பார்த்தால் அனேக (c) குழந்தைகள் பிறக்கும் என்பதாம்.

(a) தனுசின் கடைசி நவாம்சம் தனுசு என்பதாம்.

(b) சிலர் தனுசிற் குரிய ஒன்பது நவாம்சைகளிலும் மற்ற கிரகங்க
ளிருந்தால் என்கிறார்கள். இது சரியானதென்று தோற்றவில்லை. அனே
கக்குழந்தைகள் பிறப்பது மிகவும் அறிதானதால் அறிதாகநேரிடும் கிரக
யோகம் இருக்கவேண்டும். லக்கினமும் எல்லாக்கிரகங்களும் தனுசு நவாம்
சையில் இருப்பது மிகவும் அறிதானதால், எல்லாக்கிரகங்களும் தனுசு
நவாம்சையில் இருக்கவேண்டும் என்பது பொருத்தமானதாகும்.

(c) மூன்றுக்கு மேற்பட்ட எண்கள், என்பதாம்.

16-வது சுலோகம்:—கெற்பமாயிருக்கும் மாதங்களிலே முதல்மா
தத்தில் சுக்கிலம் கெற்பமாகத் தங்கி நிற்கும். இரண்டாவது மாதத்தில்
சுக்கிலம் வளர்ந்து மாமிசமாகும். மூன்றும்மாதத்தில் மாமிசம் வளர்ந்து
அவயவங்களாகும். நாலாவது மாதத்தில் எலும்புகள் உண்டாகும். ஐந்
தாவது மாதத்தில் தோல் உண்டாகும். ஆறுவது மாதத்தில் உரோமம்
வளரும். ஏழாவது மாதத்தில் ஞானேந்திரியம் என்று சொல்லப்பட்ட
ஐந்தேந்திரியங்களும் உண்டாகின்றன.

எட்டாவது மாதத்தில் உந்திக்கொடியின் மூலமாகத் தாய் உண்ணும் உணவின் சத்தை உண்ண சிசு ஆரம்பிக்கின்றது. ஒன்பதாவது மாதத்தில் சிசுவிற்கு மானிடஜென்மத்தின் கவலைகள் ஏற்படுகின்றன. பத்தாவதுமாதத்தில் சிசு பூமியில்வந்து பிறக்கின்றது.

கெற்பகாலமாகிய 10-மாதங்களுக்கு அதிபதி அடியிற்கண்டபடி ஆகும்.

1-வது	மாதம்—	சுக்கிரன் (a)	6-வது	மாதம்—	சனி
2-வது	,,	செவ்வாய் (a)	7-வது	,,	புதன்
3-வது	,,	குரு	8-வது	,,	நிஷேக லக்கின
4-வது	,,	சூரியன்	9-வது	,,	சந்திரன் [ப
5-வது	,,	சந்திரன்	10-வது	,,	சூரியன்

என்பதாம்.

(a) முதல் மாதாதிபதி செவ்வாயும், இரண்டாவது மாதாதிபதி சுக்கிரனும் என்பர் சிலர்.

தற்காலத்தில் மேல்நாட்டார் தங்களுடைய சாஸ்திரப்பிரகாரம் அடியிற்கண்டபடி சொல்லுகிறார்கள்.

(1) கெற்பந்தரித்த 4-வது வாரம் முடிவில் கெற்பபிண்டம் தலையும் வாலும் உள்ள உருவமாக விருக்கின்றது மூளையும், முதுகெலும்பில் உள்ள மூளையும் மாமிசத்துள்ளே அடைக்கப்படுகின்றன. கண்களும், காதுகளின் இருப்பிடமும் தெரிகின்றன: கை, கால்களின் முளைத்து தெரிகின்றன. இருதயம் உண்டாகப்பட்டு நான்கு அரைகளாகப் பிரிய ஆரம்பிக்கின்றது.

(2) 8-வது வாரமுடிவில் தலை, மானிட ஜன்மத்தின் தலையின் உருவமடைகின்றது. வால் ஏறக்குறைய முழுவதும் மறைந்துவிடுகின்றது. கைகளும், கால்களும் தெரிய ஆரம்பிக்கின்றன. கண்களும், காதுகளும், மூக்கும் நன்றாய்த்தெரிகின்றன. சிசுனம் அல்லது யோனி இருக்குமிடம் தெரியும். ஆனால் ஆண், பெண், என்று சொல்ல முடியாது.

(3) 12-வது வாரமுடிவில் அடிவயிற்றில் குடல்களுண்டாகின்றன. உந்திக்கொடி சுருண்டு சுருண்டிருக்க ஆரம்பிக்கின்றது. ஆண், பெண் என்று ஒருவாராகச் சொல்ல முடியும். எலும்புகளில் அன்னநம் எலும்புகள் உண்டாக ஆரம்பிக்கின்றன.

(4) 16-வது வாரம் முடிவில் ஆண் பெண், என்று நிச்சயமாய் சொல்ல முடியும். பூனை மயிர் உண்டாக ஆரம்பிக்கின்றது.

(5) 20-வது வாரம் முடிவில் தலை மிகவும் பெரியதாக இருக்கின்றது. தோலின்கீழ் உள்ள கொழுப்புச்சதை உண்டாகின்றது.

(6) 24-வது வாரம் முடிவில் தோலின்கீழ் கொழுப்புமூடி இருக்கின்றது.

(7) 28-வது வாரம் முடிவில் கண் இரப்பைத் திறக்கின்றது. உடம்பு முழுதும் மிருதுவான மயிர் மூடியிருக்கின்றது. குடலில் காட்டுமலம் வந்து சேருகின்றது.

(8) 32-வது வாரம் முடிவில் தலையின்மேல் உள்ள மயிர் தடித்து இருக்கின்றது. விரல்களில் நகம் உண்டாகி விரல்களின் நுனிவரையிலும் வராமல் இருக்கின்றது.

(9) 36-வது வாரம் முடிவில் நெற்றியிலும் முகத்திலும் உள்ள சுறுங்கலெல்லாம் மாறுகின்றன. உடம்பு திரண்டு உருண்டு இருக்கின்றது.

(10) 40-வது வாரம் முடிவில் விரல்களின் நுனிவரையிலும் நகம் வளர்ந்து இருக்கின்றது தோல் மிருதுவாக இருக்கின்றது. உடம்பிலுள்ள மிருதுவான மயிர் குறைந்துவிடுகின்றது. ஆண் சிசுவில் விரை தன்னுடைய பையில் வந்து சேருகின்றது.

கெற்பந்தரித்த $6\frac{1}{2}$-வது மாதத்தில் உயிரைப்பெற்று ஜீவிக்க ஆரம்பிக்கின்றது. இந்த $6\frac{1}{2}$-வது மாதத்தில் பிறந்த குழந்தை ஜீவித்திருப்பது மிகவும் கஷ்டமானது.

28-வது வாரங்கடைசியிற் பிறந்த குழந்தையை மிகவும் அருமையாகப் பாதுகாத்தால் அது ஜீவித்திருக்கும்.

32-வது வாரக் கடைசியில் பிறந்த குழந்தையை அருமையாகப் பாதுகாத்தால் அது ஜீவித்திருக்கும். 36-வது வாரக் கடைசியில் பிறந்த குழந்தையை ஜாக்கிரதையாகக் காப்பாற்றினால் அது ஜீவித்திருக்கும் என்பதாம்.

17-வது சுலோகம்:—லக்கினத்திற்கு 5, 9-ல் புதனிருந்து மற்ற கிரகங்கள் பலவீனமாயிருந்தால் முகம், கைகள், கால்கள் அதிகமாக இருக்கும். பாபர்கள் ரிக்ஷ (a) சந்தியிலிருந்து சந்திரன் ரிஷபத்திலிருந்தால் குழந்தை ஊமை ஆகும். ஆனால் சுபர்கள் இந்தச்சந்திரனைப் பார்த்தால் வெகுநாள் பொறுத்து குழந்தை பேச ஆரம்பிக்கும். (b)

(a) கடகம், விருச்சிகம், மீனம் இவைகளின் கடைசி நவாம் ரிக்ஷசந்தியாம். அதாவது பாபர்கள் கடகம், விருச்சிகம், மீனம், இ களில் இருந்து இவைகளின் கடைசி நவாம்சையாகிய மீனநவாம்சை இருத்தல் என்பதாம்.

(b) பாபர்கள் பார்த்தால் ஊமையாயிருக்கும் என்பதாம். பா களும் சுபர்களும் பார்த்தால், பாபர்வலிவும், சுபர்வலிவும் பார்த்து வுள்ளவர்களினுலுண்டாகும் பலனைச் சொல்லவும்.

18-வது சுலோகம்:—செவ்வாயும், சனியும் புதனுடையராசி கைது நவாம்சை (a) யிலிருந்தால் குழந்தை பிறக்கும்போதே அதற் பற்கள் இருக்கும். லக்கினம் கடக மாகவிருந்து அதில் சந்திரனிரு அச்சந்திரனைச் செவ்வாயும், சனியும் பார்த்தால் குழந்தைகளுக்கு மு கு கூனுகவிருக்கும். லக்கினம் மீனமாயிருந்து அதைச்சந்திரன், செ வாய், சனி இவர்கள் பார்த்தால் குழந்தை காலுனமாக விருக்கும். திரனும், எதாகிலும் ஒரு பாபக்கிரகமும் கடகம், விருச்சிகம், மீ ஆகிய இவைகளின் கடைசி நாம்சையில் (b) இருந்தால் குழந்தை டாகும். மேற் சொல்லிய யோகங்கள் எல்லாவற்றிலும் மேலே செ லிய கிரகங்களைச் சுபக் கிரகங்கள் பார்த்தால் மேற்சொல்லிய பலன் நேரிடா என்பதாம்.

(a) மிதுனம், கன்னி என்பதாம்.

(b) கடகம், விருச்சிகம், மீனம் இந்த ராசிகளிலிருந்து இவை ளின் கடைசி நவாம்சையாகிய மீன நவாம்சையில் இருத்தல் என்பத இதற்கு ரிக்ஷ சந்தி என்று பெயர்.

19-வது சுலோகம்:—மகர லக்கினமாயிருந்து மகரத்தின் கடை நவாம்சை நவாம்சைலக்கினமாகவிருந்து, இந்த நவாம்சையைச் சூரிய சந்திரன், சனி இவர்கள் பார்த்தால் குழந்தைவாமன ரூபம் என்று சொ லப்பட்ட குள்ளமான ரூபத்துடனிருக்கும். லக்கினம், 5-ஆம் வீடு 9-ஆ வீடு இந்த வீடுகளின் முதல் திரேகாண ராசியில் செவ்வாய், இரு இந்தச் செவ்வாயைச் சூரியன், சந்திரன், சனி இவர்கள் பார்த்த முறையே (a) சிரசு ஈனமாகவும், புஜவீனமாகவும், கால் ஈனமாக குழந்தை பிறக்கும் என்பதாம்.

(a) லக்கினத்தின் திரேகாணமானல் சிரசும், 5-ஆம்வீட்டுத்தி காணமானல் புஜமும், 9-ஆம் வீட்டுத்திரேகாணமானல் காலும் ஈன விருக்கும். இவர் 5-ஆம் வீட்டின்முதல் திரேகாணத்திற்குப்பதிலாக

னத்தின் ஐந்தாவது வீடாக நேரிடும் லக்கினத்தின் இரண்டாவது ரேகாணத்தையும், 9-ஆம் வீட்டின் முதல் திரேகாணத்திற்குப் பதிாக லக்கினத்தின் ஒன்பதாவது வீடாக நேரிடும் லக்கினத்தின் மூன்றுது திரேகாணத்தையும் எடுத்துக் கொள்ளவேண்டும் என்கிறார்கள். தல் வீடு சிரசையும், 5-ஆம் வீடு வயிற்றையும், 9-ஆம் வீடு தொடையுங் குறிக்கும் என்று முதலாவது அத்தியாயம் 4-வது சுலோகத்தில் ல்லியிருப்பதாலும், இங்கே சிரசும், காலும் ஈணமாகவிருக்கும் என்று சால்லியிருப்பதாலும், லக்கினம், 5-ஆம் வீடு, 9-ஆம் வீடு, இவைகளின் முதல் திரேகாணம் என்பது அதிக பொருத்தமாகவிருக்கும் என்தாம்.

20-வது சுலோகம்:—சிம்மம் லக்கினமாயிருந்து அதில் சூரியனும் ந்திரனுமிருந்து, அதைச்செவ்வாயுஞ் சனியும் பார்த்தால் குழந்தைக் கண்குருடாய் இருக்கும் (a) ஆனால் மேற்சொல்லியபடி இருந்து க்கினத்தைச் சுபர்கள் பார்த்தால் குழந்தைக்குக் கண்களில் பூவிழுந்திருக்கும். லக்கினத்திற்கு 12-ல் சூரியனிருந்தால் வலது கண்ணிலும், ந்திரன் இருந்தால் இடது கண்ணிலும் பூவிழுந்திருக்கும். (b) மேலே சால்லிய யோகங்களில் கண்ட கிரகங்களைச் சுபக்கிரகங்கள் பார்த்தால் மற்சொல்லிய பலன்கள் நேரிடா என்றறியவும்.

(a) 12-ல் உள்ள சூரியன், சந்திரனைப் பாபர்கள் பார்த்திருக்க வண்டும் என்று யூகிக்கவேண்டியது.

(b) சூரியனிருந்து, செவ்வாய் சனிபார்த்தால் வலதுகண் என்றும் திரனிருந்து சனி, செவ்வாய் பார்த்தால் இடது கண் என்றும், இருருமிருந்து செவ்வாய், சனி பார்த்தால் இரண்டுகண்களும்என்றும் யூகிக்வேண்டியது.

21-வது சுலோகம்:—நிஷேக காலத்திலாவது பிரஷ்னை காலத்திலாது உதய லக்கினத்தின் எத்தனையாவது துவாதசாம்சம் நேரிடுகின்ற அந்த துவாதசாம்ச வீட்டிலிருந்து அத்தனையாவது வீடு எண்ணிம் வீட்டில் பிரசவமாதத்தில் சந்திரன் வரும்போது பிரசவம் நேரி. (a) நிஷேக காலத்திலாவது பிரஷ்னை காலத்திலாவது நவாம்ச லக்ராசி பகல் ராசியானால் பகலிலும் இராத்திரி ராசியானால் இரவிலும் வம் நேரிடும். நிஷேக காலத்தில் அல்லது பிரஷ்னை காலத்தில் னத்தில் எவ்வளவுபாகம் உதயமாகி (அதாவது செல்லாகி) யிருக்கிா அவ்வளவு பாகம் பகலில் அல்லது இரவில் செல்லாயிருந்தும் ான காலத்தில் பிரசவம் நேரிடும். (b)

(a) உதாரணமாக, மேஷ லக்கினமாயிருந்து அதில் 9-வது து-
தசாம்சமாயிருந்தால், மேஷத்திலிருந்து ஒன்பதாவது வீடு தனுசா
இந்த தனுசிலிருந்து 9 வீடு எண்ண சிம்மம் வரும். ஆகையால் சிம்
தில் சந்திரன் வரும்போது பிரசவம் நேரிடும். நிஷேக காலத்தில்
லது பிரஷ்ணை காலத்தில் சந்திரன் தானிருக்கும் ராசியில் எத்த
துவாதசாம்சம் அல்லது நவாம்சம் (அல்லது எத்தனை பாகை) செல்
யிருக்கின்றதோ அத்தனையாவது துவாதசாம்சம், அல்லது நவாம்
(அல்லது பாகை) மேற்சொல்லிய சிம்ம லக்கினத்தில் செல்லாயிருக்
போது பிரசவம் நேரிடும். உதாரணமாகச் சந்திரன் விருச்சிகத்தில்
வது துவாதசாம்சத்தில், அல்லது 7-வது நவாம்சையில், (அல்லது
வதுபாகை) யிலிருந்தால் சந்திரன் மேற்சொல்லிய சிம்மராசியில் 9-வ
துவாதசாம்சத்தில், அல்லது 7-வது நவாம்சத்தில் (அல்லது 21-வ
பாகையில்) இருக்கும்போது பிரசவம் நேரிடும். எத்தனையாவதுநவ
சமோ, அந்த சிம்ம ராசியின் அத்தனையாவது நட்சத்திர பாதத்தில்
திரன் வரும்போது பிரசவம் நேரிடும். 7-வது நவாம்சத்தில் சந்தி
ருப்பதால் மேற்சொல்லிய சிம்ம லக்கினத்தின் 7-வது நட்சத்திரப
மாகிய பூரம் 3-ல் சந்திரன் வரும்போது பிரசவம் நேரிடும் என்பது
(மகம் 4-பாதம், பூரம் 3-பாதம் ஆகமொத்தம் 7-பாதம் என்றறியவு

(b) உதாரணமாக நிஷேக காலத்தில் அல்லது பிரஷ்ணை காலத்தி
லக்கினமாகிய மேஷ லக்கினத்தில் 21-வது பாகையில் லக்கினம் நே
டால், மேஷம் இரவில் வலிவுள்ளராசியானதால் இரவில் 21-வது ந
கையில் பிரசவம் நேரிடும். 21 நாழிகை என்பது பகலும், இரவும்
யாய் 30 நாழிகையுள்ள தினங்களில் துல்லியமாய் இருக்கும். மற்ற ந
களிலே உள்ள பகல் அல்லது இரவு மொத்த நாழிகையை ஒரு ராசி
கிய 30 பாகையால் வகுத்து செல்லான 21-பாகையால் பெருக்க வ
நாழிகை விநாடியில் பிரசவம் நேரிடும் என்பதாம். பகலில் வலிது
ராசி இரவில் வலிதுள்ளராசிகள் 1-வது அத்தியாயம் 10-வது சுலோ
தில் சொல்லப்பட்டிருக்கின்றன.

21-வது சுலோகம்:—நிஷேக காலத்தில் சனியினுடைய நவா
ராசிகளாகிய மகரம், கும்பம் லக்கினமாயிருந்து சனி 7-ல் இருந்
கெர்ப்பந்தரித்த மூன்று வருஷம் பொறுத்து பிரசவம் நேரிடும் நிஷே
காலத்தில் சந்திரனுடைய நவாம்சராசியாகிய கடகம் லக்கினமாயிரு
7-ல் சந்திரனிருந்தால் கெற்பந்தரித்து 12-வருஷம் பொறுத்து பிரச
நேரிடும் என்பதாம்,

இந்த அத்தியாயத்தில் சொல்லப்பட்ட யோகங்கள் நிஷேக காலத்திற்குப் பொருந்தக்கூடுமானால் நிஷேககால லக்கினத்தைக் கொண்டும், ஜெனனகாலத்திற்குப் பொருந்தக் கூடுமானால் ஜெனனகால லக்கினத்தைக்கொண்டும், நிஷேக காலத்திற்குச் சொல்லியவைகளெல்லாம் பிரச்னை காலத்திற்குப் பொருந்துமாதலால், பிரஷ்னை லக்கினத்தைக் கொண்டும் யூகித்து யோகங்களின் பலன்களைச் சொல்லவேண்டும் என்பதாம். (a)

(a) உதாரணமாகக் கெற்பப் பிரஷ்டம் ஜெனனத்திற்கு முந்தி நேரிடுமானதால் நிஷேக கால லக்கினத்தை அல்லது பிரஷ்னை கால லக்கினத்தைக் கொண்டு சொல்ல வேண்டியது என்பதாம்.

5-வது அத்தியாயம்.

1-வது சுலோகம்:—ஜென்ம லக்கினத்தைச் சந்திரன் பார்க்காவிட்டால் குழந்தை பிறக்கும்போது தகப்பன் அருகில் இல்லை. ஜென்மலக்கினத்தைச் சந்திரன் பார்க்காமலிருந்து சூரியன் 8-ல் 9-இல் இருந்து (a) இந்த சூரியனிருக்கும் வீடு சரராசியானால் அன்னிய தேசத்திலும், ஸ்திரராசியானால் தன் ஊரிலும், உபயராசியாயிருந்தால் வெளியூரிலிருந்து தன் ஊருக்குத் திரும்பி வரும் வழியிலும், குழந்தை பிறக்கும்போது தகப்பன் இருப்பான் என்பதாம்.

(a) சூரியன் 8, 9, 11, 12-ல் இருந்தால் என்று சிலர் சொல்லுகிறார்கள்.

2-வது சுலோகம்:—ஜென்ம லக்கினத்தில் சனி இருந்தாலும் அல்லது அஸ்தமன ராசியாகிய 7-ல் செவ்வாயிருந்தாலும் அல்லது சந்திரன் புதனுக்கும் சுக்கிரனுக்கும் மத்தியில் (a) இருந்தாலும், குழந்தை பிறக்குங் காலத்தில் தகப்பன் அருகில் இல்லை என்பதாம்.

(a) புதனும் சுக்கிரனும் எப்போதும் சூரியனைவிட்டு அதிகமாகப் பிரிகிறதில்லை ஆதலால் புதனுக்குஞ் சுக்கிரனுக்கும் மத்தியில் சந்திரன் அமாவாசைக்கு நெருங்கிய முந்தி பிந்தி காலங்களில்வரும். மத்தியில் என்பது சந்திரனும், புதனும், சுக்கிரனும் ஒரேராசியிலிருந்தாலும், புதனுக்கும் சுக்கிரனுக்கும் மத்தியில் சந்திரன் இருத்தலுக்குக்கூடப் பொருந்தும் என்பதாம். அதாவது ஒரேராசியில் ஸ்புடரீதியாய்ச் சந்திரன் மத்தியிலிருத்தலுக்கும் பொருந்தும் என்பதாம்

3-வது சுலோகம்:—ஜெனனகாலத்தில் செவ்வாயின் திரேகா தில் (a) சந்திரனிருந்து, ஜென்மலக்கினத்திற்கு 2, 11-ல், சுபர்க தால் சர்ப்பம் பிறக்கும். பாபர்களின் ராசி ஜென்மலக்கினமாயி செவ்வாயின் திரேகாணம் திரேகாண லக்கினமாயிருந்து, சுபர்கள் னத்திற்கு 2, 11-ல் இருந்தால் சர்ப்பம் சுத்தப்பட்டுக் குழந்தை பிற என்பதாம். (b)

(a) செவ்வாயின் திரேகாணம் என்பது மேஷ விருச்சிகத் தி ணங்கள் ஆகும். அதாவது கடைசியில் கொடுத்துள்ள வாக்கியத் (Table) பார்க்க, மேஷத்தில் முதல் திரேகாணத்திலும், கடக 2-வது திரேகாணத்திலும், சிம்மத்தில் 3-வது திரேகாணத்திலும், வி சிகத்தில் முதல் திரேகாணத்திலும், தனுசில் 2-வது திரேகாணத்தி மீனத்தில் 3-வது திரேகாணத்திலும் சந்திரன் இருக்கவேண்டும் எ ஏற்படும். (b) பாபர்கள் ராசி என்பது சூரியனுடைய ராசியாகிய சி மும், செவ்வாயின் ராசியாகிய மேஷ விருச்சிகமும், சனியின் இரா கிய மகர கும்பமும், (சந்திரன் மிகவும் தேய்ந்திருக்கும்போது) ச னுடைய ராசியாகிய கடகமும் என்பதாம். இவைகளில் மகர கும்பக் க்குச் செவ்வாயின் திரேகாணங்கள் நேரிடாததலால் இந்த இர இராசிகளும் நீங்க மற்றராசிகளாகிய மேஷத்தில் 1-வது திரேகாண கடகத்தில் 2-வது திரேகாணமும், சிம்மத்தில் 3-வது திரேகாண விருச்சிகத்தில் 1-வது திரேகாணமும், ஜென்மலக்கினமா யிருக்கவே டும் என்பதும் அப்போதுதான் 2, 11-ல் சுபர்களிருந்தால் சர்ப்பம் றிப்பிறக்கும் என்பதும் யூகிக்கவேண்டும். (சர்ப்பம் என்பது உந்திக் டியானது சர்ப்பத்தைப்போலக் குழந்தையைச் சுற்றிப் பிறப்பத பெரும்பாலும் பொருந்தும் என்பதாம்.)

5-வது சுலோகம்:—ஜென்மலக்கினம் மேஷம், ரிஷபம், சிம்ம ருந்து, லக்கினத்தில் செவ்வாய் அல்லது சனி இருந்தால், குழந் குக் கொடிசுற்றிப் பிறக்கும். திரேகாண லக்கினராசி, உடலின் எந்த த்தைக்குறிக்குமோ அந்தபாகத்தில்கொடி சுற்றிப்பிறக்குமென்பதாம்.

(a) உதாரணமாக மேஷத்தின் முதல் திரேகாணமானால் மேஷத் குறிப சிரசிலும் 2-வது திரேகாணமானால் சிம்மத்திற்குறிய வயிற்றி 3-வது திரேகாணமானால் தனுசிற்குறிப இரண்டுதொடைகளிலும் உ கொடிச் சுற்றியிருக்கும் என்பதாம். 1-வது அத்தியாயம் 4-வது ச கத்தைப்பார்க்கவும்.

6-வது சுலோகம்:—ஜெனன காலத்தில் ஜென்ம லக்கினத்தையும், ரந்திரனையும் குரு பார்க்காமலிருந்தாலும் அல்லது சூரியனுடன் சம்பந் தமாயுள்ள சந்திரனைக் குரு பார்க்காமலிருந்தாலும், அல்லது சந்திர னும் சூரியனும் இன்னம் ஒருபாபக் கிரகமும் (a) சம்மந்தப்பட்டிருந் தாலும், ஜெனனமான குழந்தை பரஜாதகம் என்பதாம். (b)

(a) ஒரு பாபக்கிரகம் என்பது செவ்வாய், சனி இவர்களில் ஒரு வர்.

(b) பர ஜாதகமென்பது தாயைக்கலியாணஞ் செய்த, சொந்த புருஷனுக்குப் பிறந்த குழந்தை அல்ல வென்பதாம்.

7-வது சுலோகம்:—ஜெனனகாலத்தில் பாபக்கிரகங்களாகிய செவ் வாயும் சனியும் பாபர்களுடைய ராசியில் (a) ஒன்றாய்க் கூடிச் சூரிய னுக்கு 5, 7, 9-ல் இருந்தால் குழந்தை பிறக்கும்போது தகப்பன் சிறை யிலிருப்பான். சூரியனிருக்கும் ராசி சரராசியானல் வெளியூரிலும்,ஸ்திர ராசியானல் உள்ளூரிலும், உபய ராசியானல் வெளியூரிலிருந்து தன் ஊருக்கு வரும் வழியிலும் சிறையில் அடைபட்டிருப்பான் என்பதாம்.

(a) பாபர் இராசி என்பது பாபர்களுடையவீடு என்பதாம். அதா வது மேஷம், விருச்சிகம், சிம்மம், மகரம், கும்பம், சந்திரன் தேய்பிறையா யிருக்கும்போது கடகமும், புதன் பாபருடன் சம்மந்தப் பட்டிருக்கும் போது மிதுன கன்னியும் பாபர் இராசி என்பதாம் 2-வது அத்தியா யம் 5-வது சுலோகத்தைப் பார்க்கவும், 1-வது அத்தியாயம் 11-வது சுலோகத்தில் சொல்லிய பிரகாரம் அல்லவென்றறியவும்.

8-வது சுலோகம்:—(1) சந்திரன் பூர்ண சந்திரனுய்த் தன் இராசி யாகிய கடகத்திலிருந்து, லக்கினத்தில் புதனும் 4-ல் குருவும் இருந்தால் குழந்தை படகில் பிறக்கும் என்பதாம். (2) ஜென்ம லக்கினம் ஜலராசி யாயிருந்து (a) 7-ல் சந்திரனிருந்தால் குழந்தை படகில் பிறக்கும் என் பதாம்

(a) ஜலராசி என்பது கடகம், மகரம் பின்னரை, மீனம் ஆகும். 1-வது அத்தியாயம் 17-வது சுலோகத்தைப் பார்க்கவும். இரண்டா வது யோகத்திற்குச் சந்திரன் பூர்ண சந்திரனுயிருக்கவேண்டு மென்பது அவசியமில்லை.

9-வது சுலோகம்:—ஜலராசி லக்கினமாயிருந்து, சந்திரன் ஜலரா சியிலிருந்தால் ஜலத்திற்குச் சமீபத்தில் குழந்தை பிறக்கும். லக்கினம் ஜலராசியாயிருந்து, சந்திரன் பூரணசந்திரனுயிருந்தாலும், அல்லது

சந்திரன் லக்கினம், 7, 10-ல் இருந்தாலுங்கூட குழந்தை ஜலத்திற் சமீபமான விடத்தில் பிறக்கும் என்பதாம்

10-வது சுலோகம்:—லக்கினத்தில் சந்திரன் இருந்து, 12-ல் ச இருந்து இந்தச் சனியைப் பாபர் பார்க்கில் சிறைச்சாலையில் குழந் பிறக்கும். சடகம், விருச்சிகம் லக்கினமாகி அதில் சனி இருந்து சந் னால் பார்க்கப்பட்டால் குழந்தை ஜலம்தங்கக்கூடிய பள்ளத்தாக் ளிலே பிரசவம் நேரிடும் என்பதாம்.

11-வது சுலோகம்:—லக்கினம் ஜலராசியாயிருக்க அதில் ச ருந்து சூரியனால் பார்க்கப்பட்டால் தேவாலயத்திலும், சந்திரனால்ப கப்பட்டால் கரம்புபூமியிலும் புதனால் பார்க்கப்பட்டால் ஸ்ரீ புருஷர் கூடிக் காமக்கிரீடை லீலைகள் முதலியவைகள் செய்யும்படியான ப அறையிலும் பிரசவம் நேரிடும் என்பதாம்.

12-வது சுலோகம்:—லக்கினம் இருகால் ராசியாகிய மானிட யாய் (a) இருந்து அதில் சனி இருந்து இந்தச்சனியைச் செவ்வாய் த்தால் மசானபூமியிலும், சந்திரன் சுக்கிரன் பார்த்தால் ...னே உள் மாயும் அழகாயுமுள்ள மாடமாளிகைகளிலும், குருபார்த்தால் யாக செய்யப்பட்ட அக்கினிசாலையிலும், சூரியன்பார்த்தால் அரண் தேவாலயம், பசுக்களிருக்கும்படியான தொழுவங்களிலும், புதன் ப தால் பதுமைகளாலும், சித்திரங்களாலும், அலங்கரிக்கப்பட்ட விசி சித்திரசாலையிலும் பிரசவம் நேரிடும் என்பதாம். (a) மிதுனம், கன் துலாம், தனுசு முன்னரை, கும்பம், இவைகள் இருகால் ராசிய மானிடராசிகள். 1-வது அத்தியாயம் 17-வது சுலோகத்தைப்பார்க்க

13-வது சுலோகம்:—லக்கினம், நவாம்ச லக்கினம் இவைகளி டில் எது வலிவுள்ளதாயிருக்கின்றதோ அந்த ராசிக்குரியவிடத்தில் பிரசவம் நேரிடும். அந்த வலிவுள்ள ராசி சரராசியானால் வழியிலும் ஸ்திரராசியானால் வீட்டிலும் பிரசவம் நேரிடும். நவாம்சலக்கினராசி, கினராசியாக விருந்தால் கெற்பிணியின் சொந்தவீட்டிலும் பிர நேரிடும் என்பதாம் (c)

(a) 12 இராசிகளுக்குரிய விடங்கள் 1-வது அத்தியாயம், 5- சுலோகத்தில் சொல்லியபடி ஆகும்.

(b) வழி என்பது இராசியின் ஜெந்துக்கள் சஞ்சரிமிடத்தி போக்குவழிகள் என்பதாம்.

(c) வலிவுள்ள ராசி உபயராசியானல் வழி தெருவு முதலியவிடத் ...ற்கும் வீட்டிற்கும் இடையிலுள்ள விடங்களாகிய தெரு, சாக்கடை, ...காரடு, திண்ணை முதலியவிடங்களில் பிரசவம் நேரிடும் என்பதாம்.

14-வது சுலோகம்:—ஜெனன காலத்தில் செவ்வாயும் சனியும் கூடி ...ரே இராசியிலிருந்து, இவர்களுக்கு 5, 9-ல் (a) சூரியன் அல்லது சந் ...ரனிருந்தால் ஜெனனமான சிசுவைத் தாய் விலக்கிவிடுவாள். இந்தச் ...சூரியனை அல்லது சந்திரனைக் குரு பார்த்தால் தாயால்விலக்கி விடப்பட் ...டக் குழந்தையை பிறத்தியாரால் எடுத்து வளர்க்கப்பட்டு நீண்ட ஆயுளு ...டனும் சுகத்துடனும் ஜீவித்திருக்கும் என்பதாம்.

(a) சிலர் 5, 7, 9, என்பர்

16-வது சுலோகம்:—தகப்பன் வழியைச்சார்ந்த கிரகம் வலிவாயி ...ருந்தால் தகப்பன் வழியைச்சார்ந்தவர்கள் வீட்டிலும், தாயைச்சார்ந்த ...கிரகம் வலிவாயிருந்தால் தாயைச்சார்ந்தவர்கள் வீட்டிலும் பிரசவம் ...நேரிடும் (a) மூன்று சுபக்கிரகங்கள் நீச்சமாயிருந்தால் மரங்களின் அடி...யிலும், சுவர்களின் அடியிலும், ஆற்றோரங்களிலும் பிரசவம் நேரிடும். ...லக்கினத்திலிருக்கும் சந்திரனை, ஒரே ராசியிலிருக்கும் மூன்று சுபக்கிர...கங்கள் பார்க்காவிட்டால் பிரசவம் காட்டில் நேரிடும் என்பதாம்.

(a) தகப்பன் வழியைச் சார்ந்த கிரகம், தாய்வழியைச்சார்ந்த கிர...கம் என்பது 4-வது அத்தியாயம் 5-வது சுலோகத்தில் சொல்லியபடி ...யென்றறியவும்.

17-வது சுலோகம்:—சனியின் நவாம்சையில் சந்திரன் இருந்தா...லும், அல்லது லக்கினத்திற்கு 4-ல் சந்திரன் இருந்தாலும், அல்லது சந்...திரன் சனியால் பார்க்கப்பட்டாலும் அல்லது ஜலராசியிலிருந்தாலும், ...அல்லது சந்திரன் சனியுடன் கூடினாலும் பிரசவம் இருளடைந்தவிட...மாகும். மூன்று அல்லது மூன்றிற்கு மேற்பட்ட கிரகங்கள் நீச்சமாயி...ருந்தால் வெறுந்தரையில் பிரசவம் நேரிடும். லக்கினராசி எவ்விதமாகப் ...பூமியின்கீழிருந்து உதயமாகுமோ அவ்விதமே குழந்தையும் பிரசவமா...கும் (a) சந்திரனுக்கு 4-ல், அல்லது 7-ல் பாபர்களிருந்தால் பிரசவம் ...மிகவும் கஷ்டத்துடன் நேரிடும் என்பதாம். (b)

(a) லக்கினராசி, சிரோதயராசியானல் சிரசு முன்னே உதிக்கும்படி...யாயும், பிரஷ்டோதய ராசியானல் கால்கள் முன்னே உதிக்கும்படியாயும் ...உ. பிரஷ்டோதய ராசியானல் கைகள் முன்னே உதிக்கும்படியாயும்,

குழந்தை ஜெனனமாகும் என்பதாம். 1-வது அத்தியாயம், 10-
சுலோகத்தைப் பார்க்கவும்.

(b) சந்திரனுடன் பாபர்களிருந்தால் பிரசவம் கஷ்டத்துடன்
ரிடும் என்பர் சிலர்.

18-வது சுலோகம்:—பிரசவ வீட்டில் பிரசலகாலத்தில் இருக்
விளக்கிலுள்ள எண்ணெய்யைச் சந்திரனைக் கொண்டும் (a) வற்றிய
அளவை லக்கினத்தைக் கொண்டும், (b) விளக்கின நிலையைச்சூரியனி
கும் ராசியைக் கொண்டும் (c) பிரசவ வீட்டின் வாசற்காலிருக்குந்திக்
கேந்திரத்திலிருக்கும் கிரகங்களைக் கொண்டும் அல்லது மிகவும்
வுள்ள கிரகத்தைக் கொண்டும் (d) அறியவேண்டும் என்பதாம்.

(a) எண்ணெயின் அளவு சந்திரன் தானிருக்கும் ராசியில் எவ்
ளவுபாகம் இன்னஞ் செல்ல வேண்டியதோ அவ்வளவுபாகம் எண்ணெ
இருக்கும். சந்திரன்தான் இருக்கும் ராசியில் கால்பாகம் இன்னஞ்செ
லவேண்டியதானுல் விளக்கில் உளற்றின எண்ணெயில் கால்பாகந்தா
எண்ணெய் இருக்கும் என்பதாம். ஒரு ராசிக்குரிய 30 பாகையில்
டரீதிபாய் 20 பாகைச்சந்திரன் சென்று இன்னம் மீதி 10 பாகைசெ
வேண்டியதானுல் விளக்கில் உளற்றின எண்ணெயில் 30 பாகத்தில்
பாகந்தான் இன்னம் இருக்கின்றதென்றறியவும்.

(b) வற்றியின் அளவு லக்கினத்தில் எவ்வளவு பாகம் இன்ன
உதயமாகவேண்டுமோ அவ்வளவு பாகந்தான் முதலில் உபயோகப்ப
தினவற்றியில் இன்னம் எரியவேண்டியதாக இருக்கும். லக்கினத்தி
வீசம் பாகந்தான்உதையமாக வேண்டியதானுல் வற்றி முதலிலிரு
நிகளத்தில் வீசம் பாகந்தான் நிகளமிருக்கும். முன் சொல்லியது போ
லக்கின ஸ்புடத்தைக் கொண்டும் துல்லியமாக அறியலாம்.

(c) விளக்கின் நிலைமை சூரியனிருக்கும் இராசி சர ராசியானு
விளக்குக்கையில் வைத்துக் கொண்டிருக்கப்படும், ஸ்திர ராசியானு
ஓரேவிடத்தில் நிலையாய் அசையாமலிருக்கும்படியாய் வைக்கப்பட்டி
கும். உபய ராசியானுல் அசையுந் தன்மையையும் நிலையாயிருக்குந் த
மையையும் உடையதாய் ஒருவிடத்தில் தொங்கவிட்டிருக்கப்படும் எ
பதாம்.

(d) பிரசவ வீட்டின் வாசற்கால் நோக்கியிருக்கும் திக்கு கே
ரஸ்தானங்களாகிய 1, 4, 7, 10-ல் இருக்கும் கிரகத்தின் திக்கைநோ

இருக்கும் பல கிரகங்கள் கேந்திரத்தில் இருந்தால் மிகவும் வலிதான கிரகத்தின் திக்கு என்றறிபவும். கேந்திரத்தில் எந்தகிரகமும் இல்லாம லிருந்தால் கேந்திரஸ்தானங்களில் மிகவும் வலிவாயுள்ள ஸ்தானத்தின் திக்கு என்றறிபவும். கிரகங்களின் திக்கு 2-வது அத்தியாயம் 5-வது சுலோகத்திலும், இராசிகளின் திக்கு 1-வது அத்தியாயம் 11-வது சுலோகத்திலும் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

19-வது சுலோகம்:—சனி வலிவாயிருந்தால் பிரசவ வீடு, பழைய வீட்டைப் பிரித்துப்புதியதாய்க்கட்டப்பட்ட வீடு. செவ்வாய் வலிவாயி ருந்தால் தீயினுல் பற்றி எரிபப்பட்டவீடு. சந்திரன் வலிவாயிருந்தால் புதியதாய்க் கட்டப்பட்டவீடு. சூரியன் வலிவாயிருந்தால் மரங்கள் அதிகமாய் இருக்கும்படியாய்க் கட்டப்பட்டு வலிவில்லாமல் இருக்கும் வீடு. புதன் வலிவாயிருந்தால் அனேக சிற்பிகள் ஒன்ருய்ச்சேர்ந்து கட் டப்பட்ட சிற்ப வீடாகும். சுக்கிரன் வலிவாயிருந்தால் புதியதாயும் அழகாயும் கட்டப்பட்டு சித்திரங்களாலும் பதுமைகளாலும் அலங்கரிக் கப்பட்ட வீடு. குரு வலிவாயிருந்தால் மிகவும் வலிதுள்ளதாயும் வெகு காலம் இருக்கக்கூடியவீடாயும் இருக்கும். பிரசவ வீட்டின் 4 பக்கங் களிலும் உள்ள வீடுகளை ராசிச் சக்கரத்திலுள்ள கிரகங்களைக்கொண்டு அறியவும். (a)

(a) வலிவுள்ள கிரகம் இருக்கும் வீட்டிலிருந்து 1, 2, 3-ஆம் வீட்டில் கிரகம் இருந்தால், பிரசவ வீட்டின் கிழக்கில் வீடு உண்டு 4, 5, 6-ல் கிரகம் இருந்தால் தெற்கில் வீடு உண்டு. 7, 8, 9-ல் கிரகம் இருந் தால் மேற்கில் வீடு உண்டு. 10, 11, 12-ல் கிரகம் இருந்தால் வடக்கில் வீடு உண்டு நான்கு திக்குகளிலும் இருக்கும் வீடுகளின் ஸ்திதியை இக் தச் சுலோகத்தில் சொல்லியபிரகாரம் கிரகங்களைக்கொண்டு அறியவும். அதாவது கிரகம் சனியாயிருந்தால் பழையவீட்டைப் பிரித்துப் புதிய தாய்க் கட்டப்பட்டவீடு என்பதாம்.

20-வது சுலோகம்:—வீட்டின் எந்தபாகத்தில் பிரசவ அறை இருக்கும் என்பதை லக்கினத்தை அல்லது நவாம்ச லக்கினத்தைக்கொ ண்டு அடியிற்கண்டபடி அறியவும்

1 மேஷம்—கிழக்கு	7 துலாம்—கிழக்கு
2 ரிஷபம்—மேற்கு	8 விருச்சிகம்—கிழக்கு
3 மிதுனம்—வடக்கு	9 தனுசு—வடக்கு
4 கடகம்—கிழக்கு	10 மகரம்—தெற்கு
5 சிம்மம்—தெற்கு	11 கும்பம்—கிழக்கு
6 கன்னி—வடக்கு	12 மீனம்-வடக்கு என்பதாம்.

21-வது சுலோகம்:—கெற்பிணி சயனித்திருக்கும் படுக்கை பி... காலத்தில் பிரசவ அறையின் எந்த பாகத்தில் இருக்கும் என்பதை ... யிற்கண்டபடி லக்கினத்தைக் கொண்டு அறியவும்.

1 மேஷம்—கிழக்கு	7 துலாம்—மேற்கு
2 ரிஷபம்—கிழக்கு	8 விருச்சிகம்—மேற்கு
3 மிதுனம்—தென்கிழக்கு	9 தனுசு—வடமேற்கு
4 கடகம்—தெற்கு	10 மகரம்—வடக்கு
5 சிம்மம்—தெற்கு	11 கும்பம்—வடக்கு
6 கன்னி—தென்மேற்கு	12 மீனம்—வடகிழக்கு

பிரசவ காலத்தில் கெற்பணி படுக்கையின்பேரில் எந்த தி... படுத்திருப்பாள் என்பதை லக்கினத்தைக்கொண்டு அடியிற்கண்ட... அறியவும்.

1 மேஷம்—கிழக்கு	7 துலாம்—மேற்கு
2 ரிஷபம்—கிழக்கு	8 விருச்சிகம்—மேற்கு
3 மிதுனம்—தென்கிழக்கு	9 தனுசு—வடமேற்கு
4 கடகம்—தெற்கு	10 மகரம்—வடக்கு
5 சிம்மம்—தெற்கு	11 கும்பம்—வடக்கு
6 கன்னி—தென்மேற்கு	12 மீனம்—வடகிழக்கு

என்பதாம்.

கெற்பிணி படுத்திருக்கும் கட்டிலின் இரண்டு முன்னங் கால்... லக்கினத்திற்கு 3, 12-ஆம் வீட்டிற்குரிய திக்குகளிலும், இரண்டு பி... னங் கால்கள் லக்கினத்திற்கு 6, 9 ஆம் வீட்டிற்குரிய திக்குகளி... இருக்கும் என்பதாம் (b)

(a) படுக்கையில் கெற்பிணி சயனித்திருக்கும் திசையும் அ... யில் படுக்கை இருக்குந் திசையும் ஒன்றுப் இருப்பதைக் கவனிக்கவு...

(b) அடியிற்கண்டபடி 12 இராசிகளும் கட்டிலின் பாகங்க... குறிக்கும்.

1 லக்கினம் 2-ஆம் வீடு	தலையிருக்குமிடம்	7-ஆம் வீடு 8-ஆம் வீடு	கெற்பிணியின் கால்கள்
3-ஆம் வீடு	வலதுமுன்னங்கால்	9-ஆம் வீடு	இடது முன்னங்கா...
4-ஆம் வீடு 5-ஆம் வீடு	வலது பக்கம்.	10-ஆம் வீடு 11-ஆம் வீடு	இடது பக்கம்.
6-ஆம் வீடு	வலதுமுன்னங்கால்	12-ஆம் வீடு	இடது முன்னங்...

22-வது சுலோகம்:—லக்கினத்திற்கும் சந்திரனுக்கும் இடையில் த்தனை கிரகங்களிருக்கின்றனவோ அத்தனை ஸ்திரீகள் பிரசவ காலத்தில் கர்ப்பிணிக்கு அருகில் இருப்பார்கள் இவர்களில், ஆகாயத்தில் (a) த்தனை கிரகங்கள் இருக்கின்றனவோ அத்தனை பேர் பிரசவஅறைக்கு வெளியில் இருப்பார்கள். பாதாளத்தில் எத்தனை கிரகங்களிருக்கின்றன வா அத்தனை பேர் பிரசவ அறைக்குள் இருப்பவர்கள் (b) இப்படி ருக்க பாதாளத்தில் எத்தனை கிரகங்களிருக்கின்றனவோ அத்தனை பர் வெளியே இருப்பார்களென்றும், ஆகாசத்தில் எத்தனை கிரகங்க ருக்கின்றனவோ அத்தனை பேர் உள்ளே இருப்பார்களென்றும் சிலர் சால்லுகிறார்கள், (c)

(a) ஆகாயம் என்பது 7-ஆம் இடம் முதல் லக்கினம் வரையி ம் உள்ள வீடுகள் (b) பாதாளம் என்பது லக்கினம் முதல் 7-ஆம் டு வரையிலு முள்ளவீடுகள்,

(c) சிலர் சொல்லுவது வராஹமிகிராச்சாரியாருக்குச் சம்மதம் ல்லை என்று யூகிக்கவும்.

23-வது சுலோகம்—தேகத்தின் உருவம், அவயவங்களின் ளவு ம் முதலியவைகளை நவாம்சலக்கின ராசியாதிபதியைக்கொண்டும் அல் து எல்லாக்கிரகங்களைவிட மிகவும் வலிவாயுள்ள கிரகத்தைக் கொண் ம் அறியவேண்டும் (a) தேகத்தின் நிறம் சந்திரன் இருக்கும் நவாம்ச சி அதிபதியின் நிறமாகும், (b) லக்கினம் சிரசையும், மற்ற ராசிகள் ற்ற அவயவங்களையும் குறிக்கும். இந்த அவயவங்களின் அளவு அவை ளைக்குறிக்கும் ராசிகளின் அளவு ஆகும். (c)

(a) இரண்டாவது அத்தியாயம், 8, 9, 10, 11-வது சுலோகங்க ளில் சொல்லியபடி அறியவும்.

(b) 2-வது அத்தியாயம், 4-வது சுலோகத்தில் கண்டபடி என்று யவும். ஆப்பிரிக்கா கண்டத்தில் "நீக்ரோ" என்று சொல்லப்பட்ட தியார் எல்லோரும் நிறத்தில் "கருங்குருமா" என்று சொல்லப்பட்டக க்குருவின் நிறமுடையவர்களாயிருக்கின்றார்கள். இங்கிலாந்து தேசத் லே பிறக்கும் எல்லா ஜாதியாரும் ஆங்கிலரைப் போல சிகப்பாகவும் வண்மை நிறமாகவும் இருக்கின்றார்கள். சந்திரன் சுமார் 27½ நாளுந் ாருதரம் இராசிமண்டலத்தைச் சுற்றி வருவதால் எல்லா கிரகங்க ன் நவாம்சைராசியில் வரும். அப்படியிருந்தும் "நீக்ரோ" ஜாதியா கறுப்புநிறம் தவிர வேறெந்த நிறமுமில்லாததாலும், ஆங்கில ஜாதி

யாரில் சிகப்பும் வெண்மையும் தவிற வேறெந்த நிறமும் இல்லாததா சந்திரனிருக்கும் நவாம்சை ராசிபாதிபநிலைக் கொண்டே தேகத் நிறம் சொல்லுவது வெகு சுலபத்தில் பிசகிப்போகும் என்பதற்குச் சந்தேகமேயில்லை. தேகத்தின் நிறம் முக்கியமாக குழந்தை பிறக்கும் சத்தின் ரிதோஷண ஸ்திதியின் நிலைமையை அனுசரித்திருப்பதால் திடர்கள் தேகத்தின் நிறத்தைச்சொல்லும்போது ரிதோஷண ஸ்தி யும் முக்கியமாக்க் கவனிக்கவேண்டும் என்பர் சிலர்.

(c) கால புருஷனுக்கு சிரசு முதலுள்ள அவயவங்கள் மே முதலாகிய 12-இராசிகளுக்கு உரியன வென்று 1-வது அத்தியாம் 4- சுலோகத்தில் சொல்லிய பிறகாரம், ஜாதகனுக்குச் சிரசு முதலு அவயவங்கள் லக்கினம் முதலுள்ள 12-இராசிகளுக்கும் அடியிற் க படி வரிசைக் கிரமமாக உரியனவாம்.

1 லக்கினம்—சிரசு
2-ஆம் வீடு—முகம்
3-ஆம் வீடு—மார்பு
4-ஆம் வீடு—இருதயம்
5-ஆம் வீடு—வயிறு
6-ஆம் வீடு—தொப்புள்
7-ஆம் வீடு—அடிவயிறு
8-ஆம் வீடு—சிசுனம்(டை
9-ஆம் வீடு—இரண்டு தொ
10-ஆம் வீடு-இரண்டு முழ [கால்
11-ஆம் வீடு—இரண்டு கணுக்கால்
12—ஆம் வீடு—இரண்டு பாதங்

இராசிகள் நீண்டதென்றும், சமமானதென்றும், குறுகிய தெ றும், 1-வது அத்தியாயம், 19-வது சுலோகத்தில் சொல்லிய “ மான என்பதிலிருந்து அடியிற்கண்டபடி அறியவும்.

இராசி	மானம்	அளவு	இராசி	மானம்	அ
1 மேஷம்	20	குட்டை	7 துலாம்	40	நீக
2 ரிஷபம்	24	குட்டை	8 விருச்சிகம்	36	நீக
3 மிதுனம்	28	சமம்	9 தனுசு	32	ச
4 கடகம்	32	சமம்	10 மகரம்	28	ச
5 சிம்மம்	36	நிகளம்	11 கும்பம்	24	குட்
6 கன்னி	40	நிகளம்	12 மீனம்	20	குட்

நீண்ட ராசிக்குரிய அவயவம் நீண்டும், சமராசிக்குரிய அவய சமமாயும், குட்டை ராசிக்குரிய அவயவம் குட்டையாயுமிருக்கும்.

24-வது சுலோகம்:—லக்கினத்தின் முதல் திரேகாணம், 2- திரேகாணம், 3-வது திரேகாணம் என்று சொல்லப்பட்ட இந்த மூ

திரேகாணங்களுக்குத் தகுந்தபடி, 12 ராசிகளும் அடியிற்கண்டபடி அவ யவங்களைக் குறிக்கும்.

(1) லக்கினத்தில், 1-வது திரேகாணத்தில் ஜெனனம் நேரிட்டால்,

1 லக்கினம் சிரசு	7 ஆம் வீடு வாய்
2 ஆம் வீடு வலக்கண்	8 ஆம் வீடு இடது தாடை
3 ஆம் வீடு வலது காது	9 ஆம் வீடு இடது கன்னம்
4 ஆம் வீடு வலது நாசி	10 ஆம் வீடு இடது நாசி
5 ஆம் வீடு வலது கன்னம்	11 ஆம் வீடு இடது காது
6 ஆம் வீடு வலது தாடை	12 ஆம் வீடு இடக்கண் என்பதாம்

(2) லக்கினத்தில் 2-வது திரேகாணத்தில் ஜெனனம் நேரிட்டால்,

1 லக்கினம் கழுத்து	7 ஆம் வீடு தொப்புள், நாபி
2 ஆம் வீடு வலது புஜம்	8 ஆம் வீடு இடது வபறு
3 ஆம் வீடு வலது கை	9 ஆம் வீடு இடது மார்பு
4 ஆம் வீடு வலது பக்கம்	10 ஆம் வீடு இடது பக்கம்
5 ஆம் வீடு வலது மார்பு	11 ஆம் வீடு இடதுகை
6 ஆம் வீடு வலது வபறு	12 ஆம் வீடு இடதுபுஜம் என்பதாம்.

(3) லக்கினத்தில். 3-வது திரேகாணத்தில் ஜெனனம் நேரிட்டால்,

லக்கினம் அடிவயறு	7 ஆம் வீடு பாதங்கள்
ஆம் வீடு சிசுனம்	8 ஆம் வீடு இடது கணுக்கால்
ஆம் வீடு வலது விரை	9 ஆம் வீடு இடது முழங்கால்
ஆம் வீடு வலது தொடை	10 ஆம் வீடு இடது தொடை
ஆம் வீடு வலது முழங்கால்	11 ஆம் வீடு இடது விரை
ஆம் வீடு வலது கணுக்கால்	12 ஆம் வீடு சிசுனம் என்பதாம்.

(இவைகளின் உபயோகம் பிந்திவருகின்ற 25-வது சுலோகத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது என்று அறிபவும்.)

25-வது சுலோகம்:—பாபக்கிரகங்கள் இருக்கும்படியான ராசிக ளுக்குரிய அவயவங்களில் காயம், தழும்பு இவைகளுண்டாகும், பாபக்

கிரகங்களுடன் சுபக்கிரகங்களுமிருந்தால் மச்சம் மருவு வடிவு உண்டாகும். இந்தப் பாபர்கள் அல்லது பாபர்களும் சுபர்களும், சுவக்ஷேத்திரங்களுடைய நவாம்சம் அல்லது சராராசிகள் சராராசி நவாம்சம் இவைகளிருந்தால் காயம், தழும்பு, மச்சம், மருவு வடிவு முதலியவைகள் பிறக்கும்போதே இருக்கும் என்பதாம். மேற்சொல்லிய கிரகங்கள் மற்ற ராசிகளிலே இருந்தால் மேற்சொல்லிய காயம் மச்சம் முதலியவைகள் ஜெனனத்திற்குப் பிந்தி கிரகங்களுக்குரிய திசாபுக்தி காலங்களிலே உண்டாகும். மேலே சொல்லப்பட்ட பாபக்கிரகம் சூரியனானால் மரத்தாலும் அல்லது நாற்கால் பிராணிகளாலும், தேய்பிறை சந்திரனானால் ஜலத்தில்வாழும் ஜந்துகளாலும் கொம்புள்ள மிருகங்களாலும், செவ்வாயானால் ஆயுதத்தாலும், பாஷாணத்தாலும், நெருப்பினாலும் பாபியுடன் சம்மந்தப்பட்ட புதனானால் பூமியின்மேல் விழுதலாலும். மண்கட்டியாலும், சனியானால் காற்றினாலும், கற்களாலும் மேற்சொல்லிய காயம் தழும்பு வடிவு முதலியவைகள் உண்டாகும் என்பதாம். சுபக்கிரகங்கள் மாத்திரம் இருக்கும் ராசிகளுக்குரிய அவயவங்களில் காயம் மச்சம் முதலியவைகள் இல்லை என்பதாம். (a)

(a) இந்த சுலோகத்தில் சொல்லிய ராசிகளுக்குரிய அவயவங்கள் மேலே 24-வது சுலோகத்தில் சொல்லியபடி ராசி அவயவங்கள் என்பதை மிகவும் கவனிக்கவேண்டியது. இந்த 25-வது சுலோகம் பிறகாரம் பலன் சொல்லுவதற்கு முந்தி 24-வது சுலோகத்தில் சொல்லியபடி லக்கினத்தில் 1-வது, 2-வது, 3-வது திரேகாணமா என்பதை முதலில் கவனித்து அதன் பிறகு அந்தந்த திரேகாணங்களுக்குச் சொல்லியபடி அவயவங்களைக் குறிக்கவேண்டியது அவசியம் என்பதாம்.

26-வது சுலோகம்:—புதன் மூன்று கிரகங்களுடன் சம்மந்தப்பட்டு (மொத்தம் 4 கிரகங்களாகி) ஒரே ராசியிலிருந்தால் அந்த ராசிக்குரிய (a) அவயவத்தில் காயம், தழும்பு மச்சம், வடிவு முதலியவைகள் தவராமல் உண்டாகும். (b) லக்கினத்திற்கு 6-ல் பாபக்கிரகமிருந்தால் அந்த ராசிக்குரிய அவயவத்தில் காயம் உண்டாகும். (c) இந்த பாபகிரகத்தைச் சுபக்கிரகம் பார்த்தால் வடிவுண்டாகும் (d) சுபர்கள் 6-ல் இருந்தால் அவ்வயவத்தில் உரோமம் அதிகமாகமுளைக்கும் என்பதாம்.

(a) இங்கே இராசிக்குரிய அவயவம் என்பது இந்த அத்தியாயம் 24-வது சுலோகத்தில் சொல்லியபடி என்று அறியவும்.

(b) இங்கே அங்கராசிக்குரிய அவயவம் என்பது 1-வது அத்தியாயம் 4-வது சுலோகத்தில் சொல்லியபடி இராசிகளுக்குரிய அவயவம் என்றறியவும். சிலர் 5-வது அத்தியாயம் 23-வது சுலோகத்தில் சொல்லியபடி 6-ஆம் ராசிக்குரிய தொப்புள் என்கிறார்கள். ஆனால் சுலோகத்தில் தொப்புள் என்று சொல்லாமல் பொதுவாய்ச் சொல்லி இருப்பதால் 1-வது அத்தியாயம் 4-வது சுலோகத்தில் சொல்லியதுதான் பொருத்தமானது என்றுயூகிக்க வேண்டியது என்பர் சிலர்.

(c) 6-ல் பாபரும் சுபரும் இருந்தால் அதிர்ஷ்டத்தைக் குறிக்கும் வடிவு அவ்வயவத்தில் இருக்கும் என்றறியவும்.

(d) பாபர்கள் இருந்தால் காயம் தழும்பும், சுபர்கள் கூடி இருந்தால் வடிவு மச்சம் முதலியவைகள் உண்டாகும் என்பதாம். அந்தந்த கிரகத்திற்குரிய திசாபுக்தி காலங்களில் காயம் முதலானவைகள் உண்டாகும் என்பதாம். பலகிரகங்களிலிருந்தால் வலிவான கிரகத்தின் திசாபுக்தி காலங்களில் உண்டாகும். அந்தந்தகிரகம் 25-வது சுலோகத்தில் சொல்லியபடி சுவக்ஷேத்திரம், சுபநவாம்சை, சர ராசி சரராசி நவாம்சையிலிருந்தால் பிறந்தது முதல் காயம் முதலியவைகள் இருக்கும் என்றுயூகிக்க வேண்டியது.

இந்த அத்தியாயத்தில் சொல்லியவைகளில் ஜென்ம காலத்திற்குப் பொருந்தக்கூடியவைகள் ஜென்மக்காலத்திற்கும் பிரஷ்ண காலத்திற்கு பொருந்தக்கூடியவைகள் பிரஷ்ணகாலத்திற்கும் இரண்டிற்கும் பொருந்தக் கூடியவைகள் இரண்டிற்கும் பொருந்தும் என்றறியவும்.

6-வது அத்தியாயம்.

1-வது சுலோகம்:—சந்திகாலங்களில் (a) லக்கினம் சந்திர ஓரையிலிருக்கப் பாபக் கிரகங்கள் தாங்களிருக்கும் ராசிகளின் கடைசி நவாம்சைகளிலிருக்கும்போது பிறந்த குழந்தை உடனே இறந்துவிடும். ஜெனன காலத்தில் சந்திரனும் 3 பாபக்கிரகங்களும் வரிசையாகக் கேந்திரஸ்தானங்களாகிய 4 வீட்டிலும் இடைவிடாமலிருந்தால் குழந்தை மரணமாகும்.

(a) சந்திகாலம்:—சூரியன் உதையத்திற்கு முந்தியும் அஸ்தமனத்திற்குப் பிந்தியும் சூரிய வெளிச்சம் பூமியின்பேரில் படுகின்ற காலத்திற்

குச் சந்திகாலம் என்று பெயர். சூரிய உதயத்திற்கு முந்தி சுமார் 3 நாழிகையும் அஸ்தமனத்திற்கும் பிந்தி சுமார் 3 நாழிகையும் சந்திகாலம் என்பதாம். சூரியன் உதய வேளையில் உதயத்திற்கு பூமிக்குக் கீழே சுமார் 18 பாகையிலிருக்கும்போது சந்திகால ஆரம்பம் என்றும் அஸ்தமன வேளையில் அஸ்தமனத்திற்குப் பிந்தி பூமிக்குக் கீழே சுமார் 18 பாகையிலிருக்கும்போது சந்திகாலம் முடிவு என்றும் சொல்லப்படும்.

2-வது சுலோகம்:—கடகம் அல்லது விருச்சிகம் லக்கினமாயிருந்து இராசி மண்டலத்தின் கிழக்கு பாகத்திலுள்ள ராசிகளில் பாபர்களிருந்து, இராசி மண்டலத்தின் மேற்கு பாகத்திலுள்ள ராசிகளில் சுபர்களிருந்தால் சிசு பிறந்தவுடனே மரணமாகும். லக்கினத்திற்கு 12-ல் பாபர்களிருந்தாலும் அல்லது 6, 8-ல் பாபர்களிருந்தாலும் மரணம் என்பதாம்.

(a) லக்கினத்தில் (உதாரணமாக) 5-வது பாகையில் குழந்தை ஜெனனமானால், லக்கின ராசியில் உதையமாகவேண்டிய 25 பாகையும் 2 ஆம் வீட்டின் 30 பாகையும் 3-ஆம் வீட்டின் 30 பாகையும், 4-ஆம் வீட்டில் முன் 5 பாகையும் ஆக 90 பாகையும், பாதாளத்தில் கிழக்கேயுள்ள ராசிகளாகும் லக்கினத்தில் உதயமாயிருக்கும் பாகமாகிய 5 பாகையும், 12-ஆம் வீட்டின் 30 பாகையும், 11-ஆம் வீட்டின் 30 பாகையும், 10-ஆம் வீட்டின் கடைசி 25 பாகையும் ஆக 90 பாகையும் ஆகாயத்தில் கிழக்கே உள்ளராசிகளாகும். 10 ஆம் வீட்டில் முதல் 5 பாகையும் 9-ஆம் வீட்டின் 30 பாகையும் 8-ஆம் வீட்டின் 30 பாகையும் 7-ஆம் வீட்டின் கடைசி 25 பாகையும் ஆக 90 பாகையும் ஆகாயத்தில் மேற்கேயுள்ளராசிகளாகும். 7-ஆம் வீட்டின் முதல் 5 பாகையும் 6-ஆம் வீட்டின் 30 பாகையும், 5-ஆம் வீட்டின் 30 பாகையும் 4-ஆம் வீட்டின் கடைசி 25 பாகையும் ஆக 90-பாகையும் மேற்கே பாதாளத்தில் உள்ள ராசிகளாகும் என்பதாம். (90 பாகை என்பது சுமாராக கொஞ்சம் ஏறக்குறைய 90 பாகை என்றறியவும்) ஆனால் கிழக்கு பாதாள பாகமும் ஆகாச பாகமும் சேர்த்து சரியாய் 180 பாகை இருக்கவேண்டும் (இப்படியே மேற்கு ஆகாசபாகமும் பாதாளபாகமும் சேர்த்து சரியாய் 180 பாகை இருக்கவேண்டும்.) கிழக்கு ஆகாசபாகமும் கிழக்கு பாதாள பாகமும் சேர்த்து உள்ள 6 ராசிகள் இராசி மண்டலத்தின் கிழக்கு பாகமாகும். மேற்கு ஆகாச பாகமும், மேற்கு பாதாளபாகமும் சேர்த்து உள்ள 6 இராசிகள் இராசி மண்டலத்தின் மேற்கு பாகம் என்பதாம்.

3-வது சுலோகம்:—சந்திரலக்கினம், (a) ஜென்மலக்கினம், அஸ்
மன லக்கினமாகிய 7-ஆம் வீடு ஆகிய இந்த மூன்று வீட்டிலும் பா
ர்களிருந்து சந்திரனைச்சுபர்கள் பார்க்காவிட்டால் சிசுபிறந்ததும் மரண
ாகும்.

(a) சந்திரலக்கினம் என்பது சந்திரனிருக்கும் வீடு என்பதாம்.

4-வது சுலோகம்:—தேய்பிறை சந்திரன் (a) லக்கினத்திற்கு
2-ல் இருந்து, லக்கினத்திலும் 8-லும் பாபர்களிருந்து, சுபர்கள் கேந்
திரஸ்தானங்களாகிய 1, 4, 7, 10 என்ற வீடுகளிலில்லாமலிருந்தால்
சிசு பிறந்ததும் மரணமாகும்.

5-வது சுலோகம்:—சந்திரன் லக்கினத்திற்கு 6, 8 லிருந்து பாப
ால் பார்க்கப்பட்டால் சிசுபிறந்ததும் மரணமாகும். 6, 8 லுள்ள சந்திர
னைச் சுபர் மாத்திரம்பார்த்தால் குழந்தை 8-வது வயதில் மரணமாகும்,
6, 8 லுள்ளச் சந்திரனைச் சுபரும் பாபரும் கலந்து பார்த்தால் சிசு 4-
வது வயதில் மரண மாகும். (a) சுபர்கள் 6, 8-லிருந்து வலிவாயுள்ள
பாபரால் பார்க்கப்பட்டாலும் அல்லது லக்கினாதிபதி 7-லிருந்து பாப
ரால் யுத்தத்தில் தோல்வியடைக்கப்பட்டாலும் (b) சிசு பிறந்த ஓரா
வது மாதத்திலிறக்கும் என்பதாம்.

(a) 6, 8 ல் சந்திரனிருந்து, இவரை ஒருவரும் பார்க்காவிட்
டால் குழந்தை ஜீவித்திருக்கும் என்று யூகிக்கவும். சந்திரன் 6, 8 லி
ருந்து சுபராலும் பாபராலும் பார்க்கப்பட்டாலும், வளர்பிறையில் இர
விலும் தேய் பிறையில் பகலிலும் ஜெனனமானால் குழந்தைக்கு மரணம்
நேரிடாது என்பர் சிலர். சந்திரன் 6, 8-ல் சுபருடைய வீட்டிலிருந்தா
லும் அல்லது சந்திரன் சுபருடன் கூடி 6, 8 ல் பாபருடைய வீட்டிலி
ருந்தாலும் குழந்தைக்கு மரணம் நேரிடாது என்பர் சிலர்.

(b) கிரக யுத்தம்

7-வது சுலோகம்:—தேய்பிறை சந்திரன் லக்கினத்திலிருந்து, 8-
லும் கேந்திரங்களிலும் பாபர்களிருந்தாலும் அல்லது லக்கினத்திற்கு
1, 7, 8 ல் சந்திரன் பாபர்கள் மத்தியிலிருந்தாலும் குழந்தை மரணமா
கும். சந்திரன் லக்கினத்திலிருந்து பாபர்கள் மத்தியிலிருக்க 7, 8-ல் பா
பர்களிருந்து வலிவுள்ள சுபர்கள் சந்திரனைப் பார்க்காமலிருக்க, தாயும்
குழந்தையு மரண மாவார்கள் (a)

(a) வலிவுள்ள சுபர்கள் பார்த்தால் தாயும் குழந்தையும் ஜீ-
திருப்பார்கள் என்று யூகிக்கவும். சிலர் தாய் ஜீவித்திருப்பாள் கு
தை மாத்திரம் இருக்கும் என்பர்.

8-வது சுலோகம்:—ஜெனன காலத்தில் சந்திரன் தானிருந்
ராசியின் கடைசி நவாம்சத்திலிருந்து சுபரால் பார்க்கப்படாமலிரு
பாபர்கள் 5, 9-லிருந்தாலும், அல்லது லக்கினத்தில் சந்திரனிருந்து
பாபர்களிருந்தாலும், சிசு பிறந்ததும் இறக்கும் என்பதாம்.

9-வது சுலோகம்:—ஜெனன காலத்தில் கிரஹணத்தால் பீ
கப்பட்டச் சந்திரன் லக்கினத்தில் பாபியுடன் (a) கூடி இருந்து, செ
வாய் 8-ல் இருந்தால் தாயும் சிசுவும் மரண மாகும். ஜெனன காலத்
கிர்ஹணத்தால் பீடிக்கப்பட்ட சூரியன் லக்கினத்தில் பாபியுட
கூடியிருந்து, செவ்வாய் 8-ல் இருந்தால் தாயும் குழந்தையும் ஆயு
தால் மரண மடைவார்கள் வலிவுள்ள சுபர்களுடன் கூடாத அல்
வலிவுள்ள சுபர்களால் பார்க்கப்படாத சூரியன் அல்லது சந்திரன் ல
னத்திலிருந்துபாபர்கள் 5, 8, 9 லிருந்தால் குழந்தை மரணமாகும்.

(a) கிரஹணகாலத்தில் பெரும்பாலும் இராகு அல்லது கே
சூரியனுடனாவது அல்லது சந்திரனுடனாவது இருக்குமாதலாலும், -
ஹத்ஜாதகத்தில் இராகுகேது இவர்களைப்பெரும்பாலும் கணக்கிடா
ருப்பதாலும்.சந்திரனுடனாவது,அல்லது சூரியனுடனாவது,லக்கினத்
கூடி இருக்கக்கூடிய கிரகம் இங்கு சனிதான் என்று யூகிக்கவேண்டி
இந்த யோகம் இங்கிலீஷ் 1876ஹு ஜூலை 11-ந்தேதி நேர்ந்தெ
றாம், மறுபடியும் சம்பவிப்பது அநேக நூற்றாண்டுகள் செல்லவே
டும் என்றும் சொல்லுகிறார்கள். 11-வது அத்தியாயம் 4-வது சுலோ
தின் கீழ்சொல்லியதைப் பார்க்கவும்.

10-வது சுலோகம்:—ஜெனனகாலத்தில் சூரியன் 9-லும் சந்தி
லக்கினத்திலும், செவ்வாய் 8-லும், சனி 12-லும் இருந்து வலிவு
குரு இவர்களைப் பார்க்காவிட்டால் சிசு பிறந்ததும் மரணமாகும்.

11-வது சுலோகம்:—ஜெனனகாலத்தில் சந்திரன் (a) பாபருட
கூடி 1, 5, 7, 8, 9, 12-ல் இருந்து வலிவுள்ள சுபர்களுடன் கூட
லும் அல்லது இவர்களால் பார்க்கப்படாமலுமிருந்தால் சிசு பிறந்த
இறக்கும் என்பதாம்.

(a) தேய்பிறையாயிருக்கவேண்டும் என்பர் சிலர்,

12-வது சுலோகம்:—மரணத்தை உண்டுபண்ணக்கூடிய கிரகங்களில் வலிதுள்ள கிரகமிருக்கும் ராசியிலாவது, அல்லது ஜெனன காலத்தில் சந்திரனிருக்கும் ராசியிலாவது அல்லது ஜென்மலக்கின ராசியிலாவது சந்திரன் வரும்போது சந்திரன் வலிவாயிருந்து வலிவுள்ள பாபர்களாலே பார்க்கப்படும் காலத்தில் குழந்தைக்கு மரணம் நேரிடும் என்று முனி புங்கவர்கள் சொல்லினுர்கள் என்பதாம். (a)

(a) இதைக் கோட்சாரத்தினுலே அறியவேண்டியது என்பதாம்.

உலகினில் ஜெனிப்பவர்களுக்கு ஆயுள் முக்கியமானசாலும், ஜோதிடர்கள் முதலில் ஆயுளை நிர்ணயஞ் செய்துகொண்டுதான் பிறகு மற்ற யோகங்களையும் பலன்களையும் சொல்லத் துணியவேண்டியதாலும், ஆயுள் நிர்ணயத்தைப்பற்றித் தனியாக ஒரு அத்தியாயம் இப்புத்தகத்தின் கடைசியில் கொடுக்கப்பட்டிருக்கின்றது.

7-வது அத்தியாயம்.

1-வது சுலோகம்:—பிண்டாயுர்தாயம். மயன், யவனுச்சாரி, மணித்தவர், பராசர் முதலியர் சொல்லிய பிறகாரம் கிரகங்கள் தங்களுடைய உச்சஸ்தானங்களில் பரம உச்சபாகையில் (a) இருக்கும்போது அடியிற் கண்டபடி தங்களுக்குரிய பரம வருஷங்களைக் கொடுப்பர்.

(பரம உச்சபாகையில் இருக்கும்போது)

1 சூரியன் 19ஷு	5 குரு 15ஷு
2 சந்திரன் 25ஷு	6 சுக்கிரன் 21ஷு
3 செவ்வாய் 15ஷு	7 சனி 20ஷு
4 புதன் 12ஷு	என்பதாம்

(a) கிரகங்களின் உச்சராசியும், பரம உச்சபாகையும் 1-வது அத்தியாயம் 13-வது சுலோகத்தில் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

2-வது சுலோகம்:—கிரகங்கள் தங்களுக்குரிய நீச்சராசிகளில் பரம நீச்சபாகையில் இருக்கும்போது மேற்சொல்லிய வருஷங்களில் பாதியைக் கொடுப்பர் (a) பரம உச்சபாகைக்கும் பரம நீச்ச பாகைக்கும் இடையிலுள்ள இதர விடங்களிலிருந்தால் அவர்களுக்குரிய வருஷங்களைத் "திரைராசிகம்" என்ற கணிதப்பிறகாரம் கணிக்கவேண்டியது. (b) லக்கினத்தில் எத்தனை நவாம்சை உதயமாகி இருக்கின்றதோ அத்தனை

வருஷங்களை லக்கினம் கொடுக்கும் என்றறியவும். (c) ஆனல் மேஷம் முதல் லக்கினம் வரையில் எத்தனை ராசிகளிருக்கின்றன அத்தனை வருஷங்களை லக்கினம் கொடுக்கும் என்பர். (d)

பகைராசியிலிருந்த கிரகம் கொடுத்த வருஷத்தில் மூன்றிலொ பங்கைத் தள்ளிவிடவேண்டியது. (e) அஸ்தமனத்திலிருந்த (f) கிர கொடுத்த வருஷத்தில் பாதி தள்ளிவிடவேண்டியது.

(g) பகைராசியிலிருக்கும் கிரகம் வக்கிரமாயிருந்தாலும், அ பண்மர்யிருக்கப்பட்ட கிரகங்கள் சுக்கிரனும் சனியுமானாலும் இவர் கொடுக்கும் வருஷங்களில் ஒன்றையும் தள்ளவேண்டியதில்லை என்பதாம்.

வியாக்கியானம்:— கிரகங்கள் கொடுக்கும் வருஷங்களில் ப நீச்சம், அஸ்தமனம் முதலியவைகளுக்காகத் தள்ளுகடை செய்யப்பட கிரிகைகளுக்கு "அரணம்" என்று பெயர்.

(a) கிரகங்கள் பரம நீச்ச பாகைகளில் இருக்கும்போது அடி கண்ட வருஷங்களைக் கொடுப்பர்.

1 சூரியன் $9\frac{1}{2}$ வரு
2 சந்திரன் $12\frac{1}{2}$ வரு
3 செவ்வாய் $7\frac{1}{2}$ வரு
4 புதன் 6 வரு
5 குரு $7\frac{1}{2}$ வரு
6 சுக்கிரன் $10\frac{1}{2}$ வரு
7 சனி 10 வரு என்பதாம்

(b) உதாரணமாக சூரியன் 84-பாகை 15-கலையில் மிதுனராசி இருந்தால், சூரியன் கொடுக்கும் வருஷத்தைக் கணிப்போம். சூரி உச்சராசியாகிய மேஷத்திற்கும், நீச்சராசியாகிய துலாத்திற்கும் இ யில் மிதுனத்திலிருப்பதால் திரைராசிகம் பிறகாரம் கணிக்கவேண்டி

கணிதம் சுலபமாகச் செய்வதற்காகக் கிரகங்களின் ஸ்புடத் "கலை"களாகமாற்றிக்கொள்ளவேண்டியது. அப்படியேகிரகங்களின் ப உச்சராசி,பரம நீச்சராசி பாகைகளையும் "கலை" களாக மாற்றிக்கொ வேண்டியது. இப்படி உச்ச நீச்சங்களைக் கலைகளாக மாற்ற அடியிற் டபடி கலைகள்வரும் என்றறியவும் இந்த "கலைகளை" "பரமஉச்சஸ் கலை" என்றும் "பரம நீச்சஸ்புடகலை" என்றும் சொல்லுவோம்.

கிரகங்களின் பரம உச்சம், பரம நீச்சம்.

பரம உச்ச ஸ்புடகலை	பரம உச்ச பாகை	உச்ச ராசி	கிரகம்	நீச்ச ராசி	பரம நீச்ச பாகை	பரம நீச்ச ஸ்புடகலை
600	10	மேஷம்	சூரியன்	துலாம்	10	11400
1980	3	ரிஷபம்	சந்திரன்	விருச்சிகம்	3	12780
17880	28	மகரம்	செவ்வாய்	கடகம்	28	7080
9900	15	கன்னி	புதன்	மீனம்	15	20700
5700	5	கடகம்	குரு	மகரம்	5	16500
21420	27	மீனம்	சுக்கிரன்	கன்னி	27	10620
12000	20	துலாம்	சனி	மேஷம்	20	1200

(1-வது அத்தியாயம் 13-வது சுலோகம் பார்க்கவும்)

ஒரு கிரகத்தின் ஸ்புடம் (கலைபாகமாற்றின பிறகு) தனக்குரிய உச்சஸ்புடகலைக்கும் நீச்சஸ்புடகலைக்கும் இடையிலிருந்தால் அந்த கிரகத்தின் ஸ்புடத்திலிருந்து பரம உச்சஸ்புடகலையைக் கழிக்கவேண்டியது. ஒரு கிரகத்தின் ஸ்புடம் (கலைபாக மாற்றின பிறகு) தனக்குரியபரம நீச்சஸ்புடகலைக்கும் பரம உச்சஸ்புடகலைக்கும் இடையிலிருந்தால் பரம உச்சஸ்புடகலையிலிருந்து அந்தக் கிரகத்தின் ஸ்புடத்தைக்கழிக்கவேண்டியது. (கழிக்கப்படும் கலையின் எண் கழிக்கின்ற கலையின் எண்ணைவிட அதிகமாகயிருந்தால் ஒரு ராசிமண்டலத்திற்குரிய கலைகளாகிய 21600 கலைகளைக்கழிக்கின்ற கலை எண்ணுடன் முதலில் கூட்டி பிறகு கழிக்கப்படும் கலையின் எண்ணைக் கழிக்கவேண்டியது) பிறகு கழித்து வரும் எண்ணை அந்த கிரகம் பரம உச்சத்திலிருக்கும்போது கொடுத்துள்ள பூரண வருஷ எண்ணால் பெருக்கி 21600 ஆல்வகுக்கவரும் ஈவு வருஷமாகும். மீதத்தை 12-ஆல் பெருக்கி 21600 ஆல் வகுக்கவரும் ஈவு மாதமாகும். மீதத்தை 30 ஆல் பெருக்கி 21600 ஆல் வகுக்க வரும் ஈவு நாளாகும். (மீதம் 10800-க்குக் குறைந்திருந்தால் அதை தள்ளிவிடவேண்டியது. மீதம் 10800ம் அதற்கு அதிகமாகவுமிருந்தால் வந்த நாளுடன் ஒரு நாள் கூட்டிக்கொள்ளவேண்டியது. இதற்கு அர்த்தாதிகம் என்று பெயர். அதாவது அரையும் அரைக்கு மேற்பட்டுமிருந்தால் ஒன்றாக்கிக் கொள்ளவேண்டியது. அரைக்குக் குறைந்தால் தள்ளிவிடவும்) இப்படியாகக் கணித்து வந்த வருஷம், மாதம், நாளை அந்த கிரகத்திற்குரிய, பரம உச்சத்திலிருக்கும்போது கொடுத்துள்ள பூரண வருஷத்திலிருந்து, கழிக்கவரும் வருஷம், மாதம், நாள் தான் அந்த கிரகத்திற்கு "திரை ராசிகம்" பிறகாரம் கணித்துவந்த வருஷம், மாதம், நாள் ஆகும் என்றறியவும்.

உதாரணமாக, நாம் எடுத்துக்கொண்ட உதாரணத்தில் சூரிய ஸ்புடம் 84பாகை 15 கலை ஆகும். இதைக் "கலையாக" மாற்ற 50 கலைகள் வரும். இந்த 5055 கலை சூரியனுக்குப் பரம உச்சஸ்புடகலையாகிய 600-க்கும், பரம நீச்சஸ்புடகலையாகிய 11400-க்கும் இடையில் இருப்பதால் மேற்சொல்லியபடி 5055-லிருந்து 600-யைக் கழிக்க மீதி 4455 வரும். இதைச் சூரியன் பரம உச்சத்திலிருக்கும்போது கொடுத்துள்ள பூரண வருஷமான 19-ஆல் பெருக்க 84615 வரும். இதை 21,600 ஆல்வகுக்க ஈவு 3-ம், மிச்சம் 19845-ம் வரும். ஆகையால் வருஷம் 3 ஆகும் மிச்சமாகிய 19845 யை 12-ஆல்பெருக்கி 21600 ஆல் வகுக்க ஈவு 11-ம், மிச்சம் 540-ம் வரும். ஆகையால் மாதம் 11 ஆகும். மிச்சமாகிய 540 யை 30-ஆல் பெருக்கி, 21600 ஆல் வகுக்க ஈவு 0-ம், மிச்சம் 16200 வரும். ஆகையால் நாள் 0 ஆகும். மிச்சமாகிய 16200, 108 க்குமேல் இருப்பதால் மேலே சொல்லியபடி வந்த 0 நாளுடன் ஒரு நாள் கூட்டிக்கொள்ள வேண்டியது. ஆகையால் மொத்த நாள் 1 ஆகும். இப்படியாகக் கணித்துவந்த 3 வருஷம், 11 மாதம், 1 நாளை சூரியன் சூரிய பரம உச்சத்திலிருக்கும்போது கொடுத்துள்ள பூரண வருஷமாகிய 19 வருஷத்திலிருந்து கழிக்கவருகின்ற 15 வருஷம், 0 மாதம் 29 நாள் தான் சூரியனுக்குத் " திரை ராசிகம் பிறகாரம் கணித்துவந்த வருஷம், மாதம், நாள் என்றறியவும் இந்தவழியிற்குப் பிண்டாயுர்தாயம் என்று பெயர். 15 ஆறு 0 மாதம் 29 நாளைச்சூரியனுடைய பிண்டாயுர் தாய வருஷம் என்று பெயர். (c) லக்கினம் கொடுக்கும் வருஷம் கணிக்க ஒரு ராசிக்கு 30 பாகை அல்லது 1800 கலை ஆகும். ஒருநவாம்சைக்கு 3 பாகை 20 கலை அல்லது 200 கலை ஆகும். ஆகையால் ஒரு ராசிக்கு 9 நவாம்சம் ஆகும். லக்கினத்தில் எத்தனை நவாம்சம் உதயமாகி இருக்கின்றதோ அத்தனை வருஷம் தான் லக்கினம் கொடுக்கும் என்றது. லக்கினம் கொடுக்கக்கூடிய மொத்த வருஷம் 9 என்று யூகிக்கவேண்டியது. லக்கினத்தில் செல்லான கலையை 200 - ஆல் வகுக்க வரும் ஈவு வருஷம் ஆகும். மீதியை முன்போல 12-ஆல் பெருக்கி 200-ஆல் வகுக்க வரும் ஈவு மாதமும், மீதியை 30-ஆல் பெருக்கி 200-ஆல் வகுக்க வரும் ஈவு நாளும் ஆகும். மீதம் 100-க்கு குறைந்திருந்தால் அதைத் தள்ளி விடவேண்டியது. மீதம் 100-ம் அதற்கு மேற்பட்டும் இருந்தால் வந்த நாளுடன் ஒரு நாள் சேர்த்துக்கொள்ளவேண்டியது. இப்படி கணித்துவந்த வருஷம், மாதம், நாள், தான் லக்கினம் கொடுக்கும் வருஷம், மாதம், நாள், என்றறியவும். இப்படிக் கணிக்க லக்கின

கொடுக்கும் வருஷத்திற்கு லக்கினயுர் தாயம் என்று பெயர். உதாரணமாக லக்கின ஸ்புடம் 238 பாகை 20 கலை அதாவது 7 இராசி 28 பாகை 20 கலையாய் இருந்தால் வருஷம் முதலியவைகளைக் கணிப்போம். விருச்சிகராசியில் 28 பாகை 20 கலை அதாவது 1700 கலை செல்லாயிருக்கின்றது. இந்த 1700 யை 200 ஆல் வகுக்க ஈவு 8-ம் மீதம் 100-ம்வரும் ஆகையால் வருஷம் 8 ஆகும். மீதமாகிய 100-யை 12-ஆல் பெருக்கி 200-ஆல் வகுக்க ஈவு 6-ம் மீதம் 0 மும் வரும். ஆகையால் மாதம் 6 ஆகும். மீதம் பூஜ்ஜியமாயிருப்பதால் நாள்பூஜ்ஜியமென்றறியவும். ஆகையால் வருஷம் 8 மாதம் 6 நாள் 0 தான் லக்கினம் கொடுத்த வருஷம் மாதம் நாள் என்றறியவும். (இந்த கணிதத்தில் சென்றுபோன முழு ராசியைத் தள்ளிவிடவேண்டிய தென்றறியவும்) இதற்கு லக்கினயுர் தாயம் என்று பெயர்.

(d) "சிலர் மேஷம் முதல் லக்கினம் வரையில் எத்தனை ராசிகளிருக்கின்றனவோ அத்தனை வருஷங்களை லக்கினம் கொடுக்கும்" என்று சிலர் சொல்லிய பிரகாரம் லக்கினம் கொடுக்கும் வருஷம் கணிக்க:-ஒரு லக்கினத்திற்கு 30 பாகை அல்லது 1800 கலை என்றறியவும். மேஷம் முதல்லக்கினம் வரையிலும் சென்றுபோன முழு ராசிகள் எத்தனையோ அத்தனை வருஷம் என்று முதலில் வைத்துக்கொள்ள வேண்டியது இதுதான் வருஷமாகும். பிறகு லக்கினத்தில் செல்லான பாகைகலையை கலையாக மாற்றிக்கொண்டு வரும் கலையை 1800-ஆல்வகுக்க ஈவு பூஜ்ஜியம் வரும். மீதத்தை 12-ஆல் பெருக்கி 1800 ஆல் வகுக்க வரும் ஈவு மாதமாகும். மீதியை 30-ஆல் பெருக்கி 1800-ஆல் வகுக்க வரும் ஈவு நாளாகும். மீதம் 900-க்குக் குறைந்திருந்தால் அதைத்தள்ளிவிடவேண்டியது. 900-மும் இதற்கு மேற்பட்டுமிருந்தால் வந்தநாளுடன் ஒரு நாள் சேர்த்துக் கொள்ளவும். இப்படிக்கணித்து வந்த வருஷம், மாதம், நாள் தான் லக்கினம் கொடுத்த வருஷம், மாதம், நாள் என்றறியவும். இதற்கும் லக்கினயுர் தாயம் என்று பெயர்.

உதாரணமாக லக்கினஸ்புடம் 238 பாகை, 20 கலை அதாவது 7 இராசி 28பாகை, 20 கலையாயிருந்தால் வருஷம் முதலியவைகளைக்கணிப்போம். மேஷமுதல் 7 ராசி பூர்த்தியாய்ச் செல்லாயிருப்பதால் வருஷம் 7 ஆகும். விருச்சிகத்தில் 28 பாகை 20 கலை அல்லது 1700 கலை செல்லாயிருப்பதால் இந்த 1700-யை 1800 ஆல் வகுக்க ஈவு பூஜ்ஜியமும் மிச்சம் 1700-மும் வரும். இந்த 1700-யை 12-ல் பெருக்கி 1800-ஆல்

வருக்க ஈவு 11-ம் மிச்சம் 600-ம் வரும். ஆகையால் மாதம் 11 அ மீதமாகிய 600-யை, 30-ஆல் பெருக்கி, 1800-ஆல் வகுக்க ஈவு 1 மீதம் பூஜ்ஜியமும் வரும் ஆகையால் நாள் 10 ஆகும். இப்படிக்கணி வந்த வருஷம் 7, மாதம், 11, நாள் 10 தான் லக்கினம் கொடுத்த ஷம், மாதம், நாள் என்றறியவும்.

இவ்விதமாக லக்கினம் கொடுக்கும் வருஷத்தைக்கணிக்கவே மென்று மணித்தர் வகையருக்கள் சொல்லுகிறார்கள். இதற்கும் ணுயுர் தாயம் என்று பெயர். இவ்வழியைத்தான் ஜோதிட வல்லவர் அனுஷ்டிப்பார்கள் என்று சொல்லப்பட்டிருக்கின்றது (e) கிரகம் ப ராசியிலிருந்தால் தனக்கு வந்த பிண்டாயுர்தாய வருஷத்தில் மூன் ஒரு பங்கைத்தள்ளிவிட்டு மீதி 2-பங்கை வைத்துக்கொள்ள வே யது. நாம் எடுத்துக் கொண்ட உதாரணத்தில் சூரியனுக்கு வருஷம் மாதம் 0 நாள் 29 வந்தது. சூரியன் மிதுன ராசியில் புதனுடைய டிலிருப்பதாலும், 2-வது அத்தியாயம் 15-வது சுலோகத்தில் சொ படிச் சூரியனுக்கு புதன் சமக்கிரக மானபடியாலும், புதனுடைய வீ கிய மிதுனத்தில் சூரியனிருப்பதாலும் சூரியனுக்கு மிதுனம் பகை டாயில்லாமல் (சமம் வீடாய் இருப்பதால்) மேலே வந்த வருஷம் மாதம் 0 நாள் 29-லிருந்து ஒன்றும் கழிக்கவேண்டியதில்லை. ஆ சூரியன் ஸ்புடம் 295 பாகை 45 கலையாக (அதாவது சூரியன்மகரத் இருந்தால் முன்போலத்திரை ராசிகம் பிறகாரம் கணிதம் செய்ய (ஸ்புடம் 84 பாகை 15 கலைபாக யிருந்தபோது வந்த வருடமாகிய) ஹூ 0 மீ 29 நாள் தான் வரும். சூரியனுக்கு மகரம் பகை ராசி தால் ஹூ 15 மீ 0 நாள் 29-ல் மூன்றில் ஒரு பங்காகிய ஹூ 5 மீ நாள் 10 (சுமார்) கழிக்க மீதி வரும் ஹூ 10 மீ 0 நாள் 19 சூரியன் கொடுத்தது என்று அறியவும். இப்படி அரணஞ் செய்வத சத்துரு க்ஷேத்திர அரணம் என்று பெயர்.

(f) கிரகங்கள் அஸ்தமனம்:—கிரகங்கள் சூரியனை நெறுங்கி காலத்தில்சூரியனுடைய வெளிச்சத்தினால் சாதாரணபார்வையையுடைய வெறுங்கண்களுக்கு அக்கிரகங்கள் தெரியாமலிருக்கும்போது கி கள் அஸ்தமனம் அடைந்திருக்கின்றன என்று சொல்லப்படும். போது கிரகங்கள் அஸ்தங்கத தோஷம் அடைந்திருக்கின்றன எ சொல்லப்படும். கிரகங்களின் அஸ்தமனத்தைப் பற்றி சூரிய சித் தம் 9-வது அத்தியாயம்,6, 7, 8, வது சுலோகங்களிலும், 10-

அத்தியாயம் 1-வது சுலோகத்திலும் சொல்லப்பட்டிருக்கின்றது. அதன் பிறகாரம் சந்திரன் சூரியனுக்கு 12-பாகைக்குள்ளும், செவ்வாய் சூரியனுக்கு 17 பாகைக்குள்ளும், புதன் வக்கிரமில்லாமலிருக்கும்போது சூரியனுக்கு 14 பாகைக்குள்ளும், வக்கிரமாயிருக்கும்போது சூரியனுக்கு 12 பாகைக்குள்ளும், குரு சூரியனுக்கு 11 பாகைக்குள்ளும்; சுக்கிரன் வக்கிரமில்லாமலிருக்கும்போது சூரியனுக்கு 10 பாகைக்குள்ளும், வக்கிரமாயிருக்கும்போது சூரியனுக்கு 8 பாகைக்குள்ளும், சனி சூரியனுக்கு 15 பாகைக்குள்ளும் இருக்கும்போது கிரகங்கள் அஸ்தமனம் அடைகின்றன. கிரகங்கள் சூரியனை எவ்வளவு நெருங்கி இருக்கின்றனவோ அவ்வளவு தோஷம் மேற்சொல்லிய அஸ்தமன காலத்தில் அடைகின்றன என்பதாம். அஸ்தமனத்திற்காகச் செய்யும் கிரிகைக்கு அஸ்தங்கத அரணம் என்று பெயர். அஸ்தமனமாயுள்ள கிரகத்திற்கு வந்த பிண்டாயுர்தாய வருஷத்தில் பாதி தள்ளிவிடவேண்டியது. சுலோகத்தில் "வக்கிரா" என்று சொல்லி இருக்கின்றது. இதைச்சிலர் கிரகங்கள் வக்கிரமாயிருக்கும்போது என்றும், சிலர் செவ்வாயிற்கு "வக்கிரன்" என்று பெயரொன்றிருப்பதால் செவ்வாயைத்தான் சொல்லியிருக்கின்றதென்றும் சொல்லுகிறார்கள். ஆனால் "வக்கிரா" என்பது வக்கிரமாயிருக்கும் கிரகங்களைத்தான் குறிக்கும் என்று வராஹ மிகிராச்சாரி முதலிய அனேகருடைய அபிப்பிராயம்.

குறிப்பு:—ஒரே கிரகத்திற்கு சத்துருக்ஷேத்திர அரணமும் அஸ்தங்கத அரணமும் செய்யவேண்டியதாய் இருந்தால் எந்த அரணத்தால் அதிகமாய் வருஷம் கழிக்கவேண்டியதாய் வருகின்றதோ அந்த அரணந்தான் செய்ய வேண்டும். அதாவது அஸ்தங்கத அரணம் மாத்திரம் செய்யவேண்டியது என்பதாம்.

3-வது சுலோகம்:—லக்கினத்திற்கு 7, 8, 9, 10, 11, 12-ல் சுபர்கள் அல்லது பாபர்கள் இருந்தால் அடியிற் கண்டபடி சக்கிர பாத அரணம் செய்யவேண்டியது. (a)

இராசி	சுபர்களுக்குப் பிண்டாயுர் தாய வருஷத்தில் குறைக்கும் அளவு.	பாபர்களுக்குப் பிண்டாயுர் தாய வருஷத்தில் குறைக்கும் அளவு,
7-ஆம் வீடு	பன்னிரண்டிலொன்று	ஆறிலொன்று
8 ,, ,,	பத்திலொன்று	ஐந்திலொன்று
9 ,, ,,	எட்டிலொன்று	கால்பாகம்
10 ,, ,,	ஆறிலொன்று	மூன்றிலொன்று
11 ,, ,,	கால்பாகம்	அரைபாகம்
12 ,, ,,	அரைபாகம்	முழுதும்

பல கிரகங்கள் ஒரு ராசியிலிருந்தால் ஒவ்வொருவருக்கும் இச் சக்கிரபாத அரணஞ் செய்யாமல் அவர்களில் மிகவும் வலிவாயுள்ள கத்திற்கு மாத்திரம் மேற் சொல்லியபடி அவ்வீட்டிற்குரிய அளவு காரம் சக்கிரபாத அரணம் செய்யவேண்டியது என்பதாம். இது ச யாச்சாரி கொள்கை என்பதாம்.

(a) சக்கிரபாத அரணம் எப்போதும் தனியாய் உள்ள கிரக ளுக்கு செய்யவேண்டியது. கூட்டமாயுள்ள கிரகங்களில் மிகவும் வுள்ள கிரகத்திற்கு மாத்திரம் செய்துவிட்டு மற்ற கிரகங்களுக்குச் செ யவேண்டியது அவசியமில்லை.

குறிப்பு:—ஒவ்வொரு அரணத்திற்கும் பிண்டாயுர்தாய வருஷத் திருந்து தான் குறைக்கவேண்டும். சத்துரு க்ஷேத்திர அரணம் அல்ல அஸ்தங்கத அரணம் செய்த பிற்பாடு வருகின்ற வருஷத்திற்குச் சக் பாத அரணஞ் செய்யாமல், பிண்டாயுர்தாய வருஷத்திற்குதான் சக் பாத அரணம் செய்யவேண்டியது.

4-வது சுலோகம்:—பாபக் கிரகம் (a) லக்கினத்திலிருக்தா முந்திவந்த மொத்த (b) வருஷத்திலிருந்து மேஷம் முதல் லக்கின தின் நவாம்சை வரையிலுமுள்ள நவாம்சை எண்ணால் பெருக்கி 1 ஆல் வகுக்க வரும் வருஷத்தை (c) முந்தி வந்த மொத்த வருஷத்தி ருந்து கழிக்க வேண்டியது. லக்கினத்திலிருந்த பாபக் கிரகத்தை சுபக்கிரகம் பார்த்தால் மேலே சொன்ன கழிக்கவேண்டிய வருஷத்தி பேர் பாதி வருஷந்தான் கழிக்க வேண்டியது.

(a) பாபக்கிரகம் என்பது சூரியன், செவ்வாய், சனி என்ற யவும்.

(b) முந்திவந்த மொத்த வருஷம் என்பது, ஒவ்வொரு கிரகத் ற்கும் (லக்கினபுர்தாய வருஷம் நீங்கலாக) வந்த பிண்டாயுர் தாய வ ஷத்திலிருந்து, சத்துரு க்ஷேத்திர அரணம், அஸ்தங்கத அரணம், ச கிரபாத அரணம், இவைகளுக்காகக் கழிக்க வேண்டிய வருஷத்தை கழித்து வந்த வருஷங்களை எல்லாம் கூட்டி வந்த மொத்த வருஷ ஆகும்.

(c) மேஷ முதல் லக்கின நவாம்சை வரையிலும் உள்ள எ களால் பெருக்கி108 ஆல் வகுக்க வரும் வருஷமே, மேஷம் முதல் லக் னம் வரையிலும் உள்ள கலையால் (அதாவது லக்கினஸ்புடத்தால்) ருக்கி இராசி மண்டலத்திற்குரிய மொத்தகலையாகிய 21,600 ஆல்வகு

வருகின்ற வருஷமாகும். லக்கினஸ்புடத்திலுள்ள கலைபால் பெருக்கி 21,600 ஆல் வகுப்பது சுலபமான வழி. ஆகைபால் இந்த வழியை அனுசரிக்கவேண்டியது. உதாரணமாக லக்கினஸ்புடம் 238 பாகை 20 கலை அதாவது 14,300 கலைபானால், மொத்த வருஷத்தை 14,300-ஆல் பெருக்கி 21,600 ஆல் வகுக்க வரும் வருஷம், மாதம், நாளைக் கழிக்க வேண்டியது. ஒவ்வொரு கிரகத்திற்கும், சத்துருக்ஷேத்திர அரணம், அஸ்தங்கத அரணம், சக்கிரபாத அரணம் இவைகளைச் செய்தபிறகு வந்த வருஷத்தை (லக்கினத்திற்கு வந்த லக்கினபுர்தாய வருஷத்தை நீக்கி) தனித்தனியாய் மேலே சொல்லிய 14,300 ஆல் பெருக்கி 21,600 ஆல் வகுக்க வரும் வருஷங்களைக் கூட்டினாலும் அல்லது ஒவ்வொரு கிரகத்திற்கும் சத்துருக்ஷேத்திர அரணம், அஸ்தங்கத அரணம், சக்கிரபாத அரணம் ஆகிய இவைகளைச் செய்தபிறகு வந்த வருஷங்களை முதலில் ஒன்றாய்க்கூட்டி வந்த வருஷத்தை 14,300 ஆல் பெருக்கி, 21,600 ஆல் வகுத்தாலும் ஒரே வருஷம், மாதம், நாள், தான் வரும். ஆகையால் பின் சொல்லியபடி எல்லாக் கிரகத்திற்கும் லக்கினத்திற்கும் வரும் வருஷங்களை முதலில் ஒன்றாய்க்கூட்டிப் பிறகு 14,300 ஆல் பெருக்கி 21,600 ஆல் வகுப்பது மிகவும் சுலபமான வழியாகும்.

இந்த சுலோகத்தில் மேஷம் முதல் ஜென்ம லக்கினம் வரையிலு முள்ள நவாம்சைகளின் எண்ணால் மொத்த வருஷத்தைப் பெருக்கி 108 ஆல் வகுக்கவேண்டும் என்று சொல்லியிருக்கின்றது. ஆனால் சிலர் அப்படிச் செய்யக்கூடாதென்றும் லக்கினத்தில் செல்லான நவாம்சையின் எண்ணால் மொத்த வருஷத்தைப் பெருக்கி, 108 ஆல் வகுக்க வேண்டும் என்று சொல்லுகிறார்கள். சுலோகத்தில் சொல்லியது சரியான தாக விருப்பதாக வைத்துக் கொண்டால், உதாரணமாக மீன ராசியில் முதலாவது நவாம்ச ஆரம்பத்தில் லக்கினம் நேரிட்டால் மேஷம் முதல், மீனம் முதலாவது நவாம்சை ஆரம்பம் வரையில் 99 நவாம்சைகள் பூர்த்தியாய் இருப்பதால் மொத்தவருஷத்தை 99-ஆல் பெருக்கி 108 ஆல் வகுக்க வரும் வருஷம், மொத்த வருஷத்திற்குக் கூடிய மட்டிலுங் கொஞ்சங்குறைய சரியாய் இருக்கும். இதை மொத்த வருஷத்திலிருந்து கழிப்போமானால் மீதி வருஷம் மிகவும் கொஞ்சமாக இருக்கும். அதாவது மீன லக்கினத்தில் பிறந்தவருக்கு லக்கினத்தில் பாபரிருந்தால் ஆயுசு மிகவும் கொஞ்சமாக விருக்கும் என்று ஏற்படும், ஆனால் நம் அநுபோகத்தில் மீன லக்கினமாயிருந்து அதில் பாபரிருந்தும் அதிக ஆயுசுள்ள ஜாதகங்கள் அநேகம் இருப்பதாகத் தெரிந்திருப்பதால் சுலோகத்தில் சொல்லிய அர்த்தம் பொருந்தாது என்று ஏற்படும்.

லக்கினத்தில் பாபக்கிரகம் இருப்பதால் அரணஞ் செய்வதற்கு குருரோதய அரணம் என்று பெயர்.

குறிப்பு:—(1) சத்துரு க்ஷேத்திர அரணம், (2) அஸ்தங்கத அரணம், (3) சக்கிரபாத அரணம் (4) குரூரோதய அரணம் முதலிய அரணங்களில் (லக்கினயுர்தாய வருஷம் நீங்கலாக) ஒவ்வொரு கிரகத்திற்கும் வந்த பிண்டாயுர்தாய வருஷத்திற்குச் செய்ய வேண்டிய அரணத்தைச் செய்து வந்தகிரகங்களின் வருஷத்தைக் கூட்டி வைத்துக்கொள்ள வேண்டியது. இத்துடன் லக்கினயுர்தாய வருஷத்தைக் கூட்ட வந்த வருஷந்தான் ஜாதகரின் பரம ஆயுள் என்று அறிய வேண்டியது. இப்படி ஆயுளைக் கணிக்கும் வழியிற்கு பிண்டாயுர்தாய ஆயுற் கணிதம் என்று பெயர்.

5-வது சுலோகம்:—அடியிற்கண்ட ஜீவன்களுக்கு பரம ஆயுள் அடியிற்கண்டபடி ஆகும்.

	வ	மீ	நாள்
(1) மானிட ஜென்மத்திற்கும் யானைக்கும்	120	0	5
(2) குதிரைக்கு	32	0	0
(3) ஒட்டைக்கும் கழுதைக்கும்	25	0	0
(4) எருதுக்கும் எருமைக்கும்	24	0	0
(5) நாயிற்கு	12	0	0
(6) ஆட்டிற்கு	16	0	0

6-வது சுலோகம்:—மீனராசியில் கடைசி நவாம்சை லக்கினமாயிருந்து புதன் ரிஷப ராசியில் 25 பாகை செல்லாயிருந்து, மீதி கிரகங்களெல்லாம் தங்களுக்குரிய உச்சராசிகளில் பரம உச்சபாகையிலிருந்தபடி பிறந்த ஜாதகனுக்கு மானிடஜென்மத்திற்குரிய பரம ஆயுளாகிய 120 வ 0 மீ 5 நாளும் ஆயுசு என்றறியவும். (a)

(a) இந்த வ 120 மீ 0 நாள் 5 ம் மேற்சொல்லிய பிண்டாயுர்தாய வழி பிறகாரம் அரணங்கள் செய்த பிறகு வந்த மொத்த ஆயுள் என்றறியவும்.

7-வதுசுலோகம்:—இந்தபிண்டாயுர்தாய ஆயுள் கணித வழி விஷ்ணு குப்தர், சித்தசேனர், தேவசுவாமி, என்பவர்களால் அனுஷ்டிக்கப்பட்டது. இந்த ஆயுர் தாயவழியில் 20 வருஷத்திற்குக் குறைந்த ஆயுள் எப்பொழுதும் வருவதில்லை (a) பாலாரிட்ட வயதாகிய 8வயதையும் அ

ம் குறைந்த வயதையும் (b) தள்ளிவிட்டால், மீதி வயதுகள் இக்கணி
த்தில் வருவதில்லை. ஆகையால் இந்த பிண்டாயுர்தாய கணிதத்தில்
துதான் ஒரு பிசகு. (c)

(a) (b) (c) பாலாரிஷ்டவயதாகிய 8 வயதிற்கும் அதற்குக் குறைந்த வயதிற்கும் இந்த பிண்டாயுர்தாய ஆயுள் கணிதம் சரியாய் ஆகாது என்பதாம். அதாவது 8—வயதிற்குள் இறந்து போகும். ஜாதகங்களுக்கு எந்த ஆயுர்தாய கணிதமும் தவறிப் போகும் என்பதாம். வயதிற்கு மேற்பட்டு 20 வயதிற்குள்பட்ட ஜாதகர்களுக்கு இந்த பிண்டாயுர்தாய வழியினுல் ஆயுசு கணிக்க முடியாது. ஆதலால் இந்த ஒரு குற்றந்தான் இந்த பிண்டாயுர்தாய வழியில் இருக்கின்றது என்று சொல்ல வேண்டியது என்றுர் சிலர். கும்ப லக்கினத்தில் முதல் நவாம்சையில் லக்கினமாயிருந்து சூரியன் பரம உச்சபாகையிலும், சந்திரன் பரம உச்சபாகையிலும், செவ்வாய் கும்பத்தில் 28 பாகையிலும், புதன் பரம நீச்ச பாகையிலும், குரு பரம நீச்ச பாகையிலும், சுக்கிரன் பரம உச்சபாகையிலும், சனி பரம நீச்ச பாகையிலும் இருக்கப் பிறந்த ஜாதகத்திற்கு பிண்டாயுர்தாய ஆயுள் கணித வழி பிறகாரம் ஆயுள் 8 வருஷத்திற்கு மேற்பட்டு 20 வருஷத்திற்குள்பட்ட ஆயுளாகிய 16 ௵ 5 ௴ வருகின்றது. ஆகையால் இந்த சுலோகத்தை வராஹ மிகிராச்சாரியார் எழுதி இருக்க மாட்டார் என்றும் பின்னுல் யாரோ எழுதி இருக்க வேண்டும் என்றும் சிலர் அபிப்பிராயப் படுகின்றுர்கள்.

8-வது சுலோகம்:—மானிட ஜென்மத்திற்குப் பரம ஆயுளைக்கொடுக்கும் என்று சொல்லப்பட்டயோகமே (a) இராஜாக்கள் அனுபவிக்கும் போகமாகிய இராஜ யோகத்தைக் கொடுக்கும் யோகம் என்பர் (b) இதில் பிரத்தியக்ஷமான பிழை ஒன்றிருக்கின்றது. இராஜ யோகத்திற் குரிய கிரக யோகத்தில் பிறந்தவர்கள் நீண்ட ஆயுளுள்ள ஏழைகளாக இருக்கின்றுர்கள். இதுவும் மற்றொரு பிசகு என்பதாம். (c)

(a) அரசர்கள் நீண்ட ஆயுளுள்ளவர்களாயும், அற்பாயுசுள்ளவர்களாயும் இருப்பது பிரத்தியக்ஷமாயிருப்பதால் அரசயோகமே நீண்ட ஆயுளுக்கு யோகமென்று சொல்லுவது பிசகாகும் என்றனர்.

(b) நீண்ட ஆயுளுள்ள ஏழைகளுக்கு உண்மையிலே இராஜயோகம் இருக்கின்றதா என்று பார்த்த பிறகு தான் இந்த சுலோகத்தில் சொல்லியது சரியா, பிசகா என்று அறிய வேண்டியது.

இந்தச் சுலோகத்தைக்கூட வாராஹ மிகிராச்சாரியார் எழுதி கமாட்டாரென்றும் பின்னால் யாரோ எழுதி இருக்கவேண்டும் என் சிலர் அபிப்பிராயப் படுகின்றார்கள்.

9-வது சுலோகம்:—எல்லாகிரகங்களும் தங்களுக்குரிய பரம பாகையிலிருக்கும்போது (தாங்களெல்லோரும், சேர்ந்து மொத்தம கொடுக்கக்கூடிய பரம ஆயுளாகிய ஸ்ரீ 120 மீ 0 நாள் 5-ல், 7-ல் பங்காகிய ஸ்ரீ 17 மீ 1 நாள் 22 நாழிகை 8, விநாடி 34 விதற் 17-ம் ஒவ்வொரு கிரகமும் தனித்தனியாய்க் கொடுப்பர், (a) ஜீவசர்மா மதம். மற்றவர்கள் யாரும்இதை அங்கீகரிக்கவில்லை. சத்தி சாரி மதம் பிறகாரம் ஒவ்வொரு கிரகமும் மேஷம் முதல் தான் செ ருக்கும் நவாம்சை எத்தனையோ (b) அத்தனை வருஷத்தைக் கெ கும், இது அனேகருக்குச் சம்மதமானது என்பதாம்.

(a) 7-வது அத்தியாயம் 1-வது சுலோகத்தில் சூரியன் மு யுள்ள கிரகங்களுக்குமுறையே ஸ்ரீ 19, 25, 15, 12, 15, 21, 20-யை ப ஆயுளாகக்கொடுக்கப்பட்டிருக்கின்றது. இதற்குப் பதிலாக ஜீவச ஒவ்வொருகிரகமும் கொடுக்கக் கூடிய பரம ஆயுள் ஸ்ரீ 17 மீ 1 22 நாழிகை 8 விநாடி 34 விதற்பரை 17 தான் என்றும், 7 கிரகங்க ஒன்றாய்ச்சேர்ந்து பரம ஆயுளாகிய ஸ்ரீ 120 மீ 0 நாள் 5-யைக் டுக்கும் என்று சொல்லுகிறார். ஒவ்வொரு கிரகமும் கொடுக்கக்கூ பரம ஆயுளை ஸ்ரீ 17 மீ 1 நாள் 22 நாழிகை 8 விநாடி 34 விதற் 17 என்று வைத்துக் கொண்டு பிண்டாயுர்தாயத்திற்குச் சொல்லிய காரம் செய்ய வேண்டிய அரணங்களைச் செய்து ஜாதகருடைய ஆ நிர்ணயிக்க வேண்டும் என்றறியவும்.

(b) உதாரணமாக ஒரு கிரகம் தனுசுராசியில் 2-வது நவா ஆரம்பத்தில் இருந்தால், மேஷம் முதல் விருச்சிகம் கடைசி வரையி 8 இராசிகள் இருக்கின்றன. ஒவ்வொரு ராசிக்கும் 9 நவாம்சங்கள படியால் 8 ராசிக்கு மொத்த நவாம்சை 72 ஆகும். இத்துடன் தனு முதல் நவாம்சமாகிய ஒரு நவாம்சத்தைக்கூட்ட 73 வரும். இந்த தான் மேஷம் முதல் தனுசு ராசி 2-வது நவாம்சம்வரையிலும்செல்ல நவாம்சங்கள், இந்த 73 பன்னிரெண்டுக்கு மேற்பட்டிருப்பதால் 12- வகுக்கவரும் மிச்சமாகிய 1 தான் இந்தக் கிரகங்கொடுத்த வருஷமா அதாவது இந்தக் கிரகம் 1 வருஷத்தைக் கொடுத்தது என்று அர்த் (பின்னால் வரும் 10-வது சுலோகத்தையும் பார்க்கவும்) இந்த சத்தி

சாரியின் வழி பிறகாரம் ஒவ்வொரு கிரகமும் 12 வருஷத்திற்கு மேற்பட்டு ஆயுளைக்கொடுக்காது என்றும் 7-வது அத்தியாயம் 1-வது சுலோகத்தில் கிரகங்களுக்குச் சொல்லியுள்ள பரம ஆயுளை எடுத்துக் கொள்ளக்கூடாதென்றும் யூகிக்கவும்.

10-வது சுலோகம்:—சத்தியாச்சாரி மதம் பிறகாரம் ஒவ்வொரு கிரகத்தின் ஸ்புடத்தையும் கலைகளாக மாற்றிக்கொண்டு (ஒரு நவாம்சத்திற்குரிய) 200 கலைபால் வகுக்க வந்த ஈவை 12 ஆல் வகுத்து வந்த மீதம் மேஷம் முதல் உள்ள நவாம்சங்களின் எண் ஆகும். இந்த எண் தான் அந்தந்த கிரகம் கொடுத்த ஆயுளாகும். (a)

(a) உதாரணமாகச் சூரியன் ஸ்புடம் 84 பாகை 15 கலை என்று வைத்துக்கொண்டு சூரியன் கொடுக்கும் வருஷத்தைக் கணிப்போம். 84 பாகை 15 கலையை, கலைகளாக மாற்ற 5,055 கலைகள் வரும். இந்த 5,055யை, 200 ஆல் வகுக்க ஈவு 25 மீதம் 55-ம் வரும். ஈவாகிய 25 பன்னிரண்டிற்கு மேற்பட்டிருப்பதால் 12 ஆல் வகுக்க வரும் மீதமாகிய 1 தான் சூரியன் கொடுத்த வருஷம் 1 ஆகும். (12-க்குள்ளிருந்தால் அதையே சூரியன் கொடுத்த வருஷமாக வைத்துக் கொள்ளவும்) பிறகு முந்திவந்த மீதமாகிய 55 யை 12 ஆல் பெருக்கி 200 ஆல் வகுக்க ஈவு 3-ம், மிச்சம் 60-ம் வரும். ஈவாகிய 3 தான் சூரியன் கொடுத்த 3 மாதமாகும். மிச்சமாகிய 60 யை 30 ஆல் பெருக்கி 200 ஆல் வகுக்க ஈவு 9-ம் மிச்சம் 0 வரும். ஈவாகிய 9 தான் சூரியன் கொடுத்த நாளாகும். ஆகையால் சூரியன் கொடுத்த வருஷம், 1 வரு 3 மீ 9 நாள் என்றறியவும்.

இந்த ஆயுர்தாய வருஷத்திற்கு "அம்சாயுர் தாய வருஷம்" என்று பெயர். இப்படிக் கணிப்பதற்கு அம்சாயுர் தாய ஆயுள் கணிதம் என்று பெயர்,

11-வது சுலோகம்:—உச்சம் அல்லது வக்கிரமாயிருந்த கிரகத்திற்கு வந்த அம்சாயுர் தாய வருஷத்தை மூன்றால் பெருக்க வேண்டியது. வர்க்கோர்த்தமம் அடைந்த கிரகம் தன்னுடைய சுவக்ஷேத்திரத்திலுள்ள கிரகம், தன்னுடைய நவாம்சையிலுள்ள கிரகம், தன்னுடைய திரேகாணத்திலுள்ள கிரகம், இவைகளுக்கு வந்த அம்சாயுர்தாய வருஷத்தை இரண்டால் பெருக்க வேண்டியது. இவைகள் தான் சத்தியாச்சாரியார் சொல்லிய அம்சாயுர்தாய ஆயுள் கணித வழிக்கும், பிண்டாயுர்தாய ஆயுள் கணித வழிக்கும் வித்தியாசங்கள் (a) மற்ற விதங்களிலே இரண்டு வழிக்கும் ஒற்றுமையுண்டு (b) என்பதாம். (a) பிண்டாயுர்தாய ஆயுள் கணித வழியில் 3 அல்லது 2 ஆல் பெருக்க வேண்டியதவ

சியமில்லை. மறுபடியும் அம்சாயுர்தாய ஆயுள் கணித வழியில் செ
குருோதய அரணமும் சத்யாச்சாரியாருடைய அம்சாயுர்தாய
கணித வழியில் செய்யவேண்டியதில்லை என்பது பின்னால்வரும் 12
8. சந்திரனும் புதனும்:—ஜெனன காலத்தில் எந்த வீட்டிலாவ சந்திரனும் புதனும் இருக்கப் பிறந்தவன் வித்தையிற் தேர்ச்சியடைந் வியாக்கியானஞ் சொல்லுந் திறமையுள்ளவனுயும், புகழும் பேரும் கீர் தியும் நயமான பேச்சும் உடையவனுய் இருப்பான்.

9. சந்திரனும் குருவும்.—ஜெனன காலத்தில் எந்த வீட்டிலாவ சந்திரனும் குருவும் இருக்கப் பிறந்தவன் மிகவும் தனமுடையவன்,கு சிரேஷ்டன், எதிரிகளை வெல்லுபவனுயும் பற்பல விதமான அபிப்பி யமுடையவனுயும் இருப்பான்.

10. சந்திரனும் சுக்கிரனும்.—ஜெனன காலத்தில் எந்த வீட்டி வது சந்திரனும் சுக்கிரனும் இருக்கப் பிறந்தவன் ஆடை வஸ்திரங்க செய்வதில் வல்லவனு யிருப்பான்.

11. சந்திரனும் சனியும்—ஜெனன காலத்தில் எந்த வீட்டி வது சந்திரனும் சனியும் இருக்கப் பிறந்தவன் விவாகஞ் செய்த பு ஷனை விட்டு நீங்கி பர புருஷனிட மிருக்கும் விபசாரிக்குப் பிறந்தவ வான்.

3-வது சுலோகம்.

12. செவ்வாயும் புதனும்:—ஜெனன காலத்தில் எந்த வீட்டிலா வது செவ்வாயும் புதனும் ஒன்ருய் இருக்கப் பிறந்தவன் கனிவகைகள், கிழங்கு வகைகள், புஷ்ப வகைகள், நெய் எண்ணெய் முதலிய ரசவகை கள், விசித்திர வேலையுள்ள சாமான்கள் ஆகிய இவைகளில் வியாபாரஞ் செய்பவனும், மல் யுத்தத்திற் சாமர்த்தியமுடையவனுயு மிருப்பான்.

13. செவ்வாயும் குருவும்:—ஜெனன காலத்தில் எந்த வீட்டிலா கிலும், செவ்வாயும் குருவும் இருக்கப் பிறந்தவன் தனமுடையவன், சிர்ம்ம வித்தை யுடையவன், ஒரு பட்டணத்திற்கு அதிகாரியாகவும் அல்லது அரசனுக்குச் சமானமானவனுகவும் இருப்பான்.

14. செவ்வாயும் சுக்கிரனும்:—ஜெனன காலத்தில் எந்த வீட்டி லாவது செவ்வாயும் சுக்கிரனும் இருக்கப்பிறந்தவன் பரஸ்திரீலோலனும், சூதாடுபவனும், மல் யுத்தஞ் செய்வதில் சாமர்த்தியமுள்ளவனும், சரிபங்களில் வல்லவனும், பசுக்களை வைத்து ரட்சிக்கும் பசுநாயகனு கவும் இருப்பான்.

15. செவ்வாயும் சனியும்:—ஜெனன காலத்தில் எந்த வீட்டிலா வது செவ்வாயும் சனியும் இருக்கப் பிறந்தவன் பிறரால் இகழப்பட்ட வனும், பொய் பேசுபவனும் துக்கமுடையவனும் இருப்பான்.

4-வது சுலோகம்.

16. புதனும் குருவும்:—ஜெனன காலத்தில் எந்தவீட்டிலாகிலும் புதனும் குருவும் கூடி இருக்கப் பிறந்தவன் மல் யுத்தத்தில் சாமர்த்திய முடையவனும் சங்கீதப் பிரியனும், ஆடல்பாடல்களில் வல்லவனும் இருப்பான்.

17. புதனும் சுக்கிரனும்:—ஜெனன காலத்தில் எந்த வீட்டிலா வது புதனும் சுக்கிரனும் இருக்கப் பிறந்தவன், அனேக தேசங்களையும், பல ஜனங்களுடைய சபைகளையும் அடக்கி ஆளுந் தன்மையுடையவனு யும் நயமாயும் மதுரமாயும் சாமர்த்தியமாயுமுள்ள வாக்குடையவனும் இருப்பான்.

18. புதனும் சனியும்:—ஜெனன காலத்தில் எந்த வீட்டிலாவது புதனும் சனியும் இருக்கப் பிறந்தவன் குரு, ஆச்சாரி இவர்களுடைய புத்திமதியிற்கு மாருக நடப்பவனும் பிறரைத் தன்னுடைய சாமர்த்தி யத்தினுல் மயக்கி ஏமாற்றுந் திறமை யுடையவனும் இருப்பான்.

19. குருவும் சுக்கிரனும்:—ஜெனன காலத்தில் எந்த வீட்டி வது குருவும் சுக்கிரனும்கூடி இருக்கப் பிறந்தவன் அனேகநற்குண ளுடையவனும், தனமுடையவனும், நல்ல களத்திர முடையவனு பலராலும் புகழப்பட்ட உத்தமமான உன்னத சாஸ்திர வித்தையுடை வனும் இருப்பான்.

20. குருவும் சனியும்:—ஜெனன காலத்தில் எந்த வீட்டிலா குருவும் சனியும் இருக்கப் பிறந்தவன் சமையற்காரனாகவும், குய வும், நாவிதனாகவும் இருப்பான்.

5-வது சுலோகம்:—

21. சுக்கிரனும் சனியும்:—ஜெனன காலத்தில் எந்த வீட்டி வது சுக்கிரனும் சனியும் கூடி இருக்கப் பிறந்தவன் அற்பபார்வையு யவனும், இளம்பருவமுள்ள ஸ்ரீகளின் சினேகத்தால் தனம் தேடி னும், சித்திரங்களும் புஸ்தகங்களும் எழுத திறமையுள்ளவனும் இ ப்பான்.

கிரகங்களின் இதர சேர்க்கை யோகங்களுக்கு மேற்சொல்லிய யோ கங்களிலிருந்து யூகித்துப் பலாபலன்களைச் சொல்ல வேண்டியது என் பதாம். (a)

(a) கிரகங்களின் இதரசேர்க்கை அல்லது கூட்டக்கிரகயோகங் கிரகங்கள் எல்லாம் மும்மூன்றாகக் கூடி யிருந்தாலும், நான்கு நான் கக் கூடி யிருந்தாலும், ஐந்து ஐந்தாகக் கூடி இருந்தாலும், ஆறு ஆ கக் கூடி இருந்தாலும், ஏழாகக் கூடி இருந்தாலும், இந்த கூட்டகிர களை இரண்டு இரண்டாகப் பிரித்து மேற்சொல்லிய இரண்டு கூட் கிரக யோக பலன்களை அறிந்து யூகித்து பலன் சொல்லவேண்டிய உதாரணமாக ஒரு வீட்டில் மூன்று கிரகங்களாகிய புதன், குரு, சு ரன் இருப்பதாக வைத்துக்கொள்ளுவோம். இவைகளை இரண்டு ண்டாகப் பிரிக்க (1) புதன் குரு, (2) புதன் சுக்கிரன், (3) குரு, சு ரன், என்ற மூன்று வித இரட்டைக் கிரக யோகம் வரும். ஆகைய இந்த 3-வித இரட்டைக் கிரக யோகத்திற்கு மேலே சொல்லிய ப களை எல்லாம் ஆராய்ந்து யூகித்து பலன் மொத்தமாகச் சொல்லவே டியது என்பதாம்.

குறிப்பு:—இந்த அத்தியாயத்தில் சொல்லிய கிரக சேர்க்கை லது கிரகக் கூட்ட யோக பலன்களைப் பாவச் சக்கிரம் ரீதியாய்ச் செ லவேண்டுமே தவிர, இராசிச் சக்கிர ரீதியாய்ச் சொல்லக்கூடாதென்

றியவேண்டியது. இராசிச் சக்கிரத்தின் 12-சமபாகங்களுக்கு இராசி என்றும், பாவச் சக்கிரத்தின் 12-பாகங்களுக்கு வீடு என்றும், வித்தி யாசப்படும்படியாய் இந்த அத்தியாயத்திலும், இதர விடங்களிலும் இராசி என்ற பதமும் வீடு என்ற பதமும் உபயோகப்படுத்தப்பட்டிருக் கின்றன. இராசி என்பது மேஷம், ரிஷபம், மிதுனம் முதல் மீனம் வரையிலுமுள்ளவைகள் அடங்கியுள்ள இராசிச் சக்கிரத்தின் 12-சம பாகங்களாகிய மேஷம் ரிஷபம் மிதுனம் முதல் மீனம் வரையிலுமுள்ள வைகளில் ஒன்றைக் குறிக்கும். வீடு என்பது லக்கினம் முதல் 12-பாகங்கள் அடங்கிய (அதாவது துவாதச பாவங்கள் அடங்கிய) பாவச் சக்கிரத்தின் பாகங்களாகிய துவாதச பாவத்தில் ஒன்றைக் குறிக் கும். உதாரணமாக 7-ஆம் வீடு என்றால் ஏழாம் பாவம்என்றறியவும். வீடு என்றாலும் பாவம் என்றாலும் ஓரே அர்த்தமாகும். பாவச்சக்கிரம் போட்டு அதில் கிரகங்களை அடைப்பது கொஞ்சம் கஷ்டமானதால் சாதாரண ஜோதிடர்கள் பாவச் சக்கிரம் போடாமல் இராசிச்சக்கிரத்தி லிருக்கும் கிரக நிலையைக்கொண்டே பலன் பெரும்பாலும் சொல்லிவிடு கிறார்கள். இப்படிச் சொல்லுவது மிகவும் துல்லிபமாயும் சரியாயும் இராமலிருந்தாலும், கூடியமட்டிலும் கொஞ்சம் வித்தியாசத்துடன் சரியாய் இருக்கும். ஏனென்றால் இராசிச் சக்கிரத்திற்கும் பாவச் சக்கி ரத்திற்கும் வித்தியாசம் பெரும்பாலும் மிகவும் அதிகமாக விராது. ஆனால் வித்தியாசம் அதிகமாயிருக்கும்போது இராசிச் சக்கிரத்தின் ரீதி யாய் பலன் சொன்னால் சொல்லிய பலன்களெல்லாம் தவறிப் போகும் என்பது திண்ணம்.

உதாரணமாக லக்கினத்திற்கு 6-வது ராசியில் சனி இராசிச் சக்கிரத்தில் இருப்பதாக வைத்துக் கொள்ளலாம். பாவச் சக்கிரத் தில் இந்த சனி 5-அல்லது, 6 அல்லது 7-ஆம் வீட்டிலும் இருக்கக் கூடும். அப்போது லக்கினத்திற்கு 5-ஆம் இராசியில் எந்த பாபிகளும் இல்லாமலிருக்கவும், 5-ஆம் ராசியாதிபதி பலமுடனும், பாபிகளால் பார்க்கப்படாமலிருக்கும் போதும், உண்மையில் அனுபோகத்தில் ஜாத கனுக்குப் புத்திர தோஷம் உண்டாவதற்குக் காரணம் என்னவென்று சாதாரண ஜோதிடர்கள் தேடித் திகைப்பர். பாவச் சக்கிரம் போட்டுப் பார்க்கும்போது சனி புத்திரஸ்தானம் அல்லது புத்திர பாவமாகிய 5-வது வீட்டில் இருப்பதாக ஏற்படும். இவ்விதமாகவே சனி களத்திர ஸ்தானம் அல்லது களத்திர பாவமாகிய 7-வது வீட்டில் இருந்தால், இராசிச் சக்கிர ரீதியாய் களத்திர தோஷ மில்லாவிட்டாலும் உண்மை யில் களத்திர தோஷம் சனியினால் உண்டாகும் என்பதாம், (இந்த புத்

திரதோஷம் விளைவிப்பதற்குச் சனிபுத்திரஸ்தானாதிபதியாயும், களத்தி தோஷம் விளைவிப்பதற்குச் சனி களத்திர ஸ்தானாதிபதியாயும் இரு லிருப்பது அவசியம்.)

இரண்டிற்கு மேற்பட்ட கூட்டக் கிரககங்களில் பலன்.

இந்த அத்தியாயத்தில் வராஹமிகிரர் இரண்டு கிரகச் சேர்க்கை காகப் பலன்களைத் தனித்தனியாய்ச் சொல்லி இருக்கின்றார். ம சேர்க்கை யோகங்களுக்குப் பலன்களைச் சொல்லவில்லை. ஆனால் ஜா பாரிஜாதத்தில், 3-கிரகம், 4-கிரகம், 5-கிரகம், 6-கிரகம், 7-கிரகம், ரூய்க் கூடி இருப்பதற்குப் பலன்கள் தனித்தனியாய்ச் சொல்லப்பட் ருக்கின்றன. அவைகளை எடுத்து இந்த புஸ்தகத்தின் கடைசியி விவரமாகக் கொடுத்திருப்பதை வாசிக்கவும்.

15-வது அத்தியாயம்.

1-வது சுலோகம்:—நான்கு அல்லது நான்கிற்கு மேற்பட்ட கி கங்கள் வலிவாய் (a) ஒரே ராசியி லிருக்கப் பிறந்தவன் சன்னியா யாவான். சன்னியாசியின் வகுப்புகள் அடியிற் கண்டபடி ஆகும்.

1. சூரியன் எல்லாகிரகங்களைவிட வலிவாயிருந்தாலவன் யாசனவகுப்
2. சந்திரன் „ „ விருத்தாஸ்ரவக „
3. செவ்வாய் „ „ சாக்கிய „
4. புதன் „ „ ஆஜீவக „
5. குரு „ „ பிக்ஸுக „
6. சுக்கிரன் „ „ சக்ர „
7. சனி „ „ நிர்கிரந்த வகுப் ஆகும். (

இப்படிப்பட்ட கூட்ட கிரகங்களில் மிகவும் வலிவுள்ள கிரகம், கிரக தத்தில் தோல்வி யடைந்த கிரகமானால், சன்னியாசி, கொஞ்சகால பொருத்து தான் முந்தியிருந்தவாழ்க்கைக்கு மறுபடியும் திரும்பிவந் சேருவான். (b)

(a) 4, 5, 6, 7 கிரகங்கள் கூட்டமாய் இருக்கும்போது அவை ளில் ஒரு கிரகங்கூட வலிவில்லாம லிருந்தால் சன்னியாசி யோக என்று சொல்லப்பட்ட பிரவிரஜ்பா யோகம் கிடையாது. கூட்டக்கி கங்களில் பல கிரகங்கள் வலிவாய் இருந்தால், மிகவும் வலிவுள்ள கி கத்தின் தெசையில் சன்னியாசி வேடந் தரிப்பான். அந்த கிரகத்தி

குரிய வகுப்பைச் சார்ந்த சன்னியாசியாவான். பிறகு அடுத்த வலிவுள்ள கிரகத்தின் தெசை, அந்தர் தெசை காலங்களில் அந்த கிரகத்திற்குரிய வகுப்பைச் சார்ந்த சன்னியாசியாக மாறுவான்.

1. சாக்கிய வகுப்பு என்பது சிகப்பு வஸ்திரந் தரித்த பௌத்த மத சன்னியாசி.

2. அஜீவக வகுப்பு என்பது சமண மதத்தை அல்லது வைஷ்ணவ மதத்தைச் சார்ந்த சன்னியாசி.

3. பிக்ஷுக வகுப்பு என்பது பிராம்மண சன்னியாசி.

4. விருந்தாஸ்ரவ்க வகுப்பு என்பது சிவயோகி.

5. சக்ர வகுப்பு என்பது சக்கிரந் தரித்த சன்னியாசி.

6. நிர்கிரந்த வகுப்பு என்பது நிர்வாணமாயுள்ள சன்னியாசி.

7. வன்யாசன வகுப்பு காட்டிலுள்ள கனி கிழங்குகளைப்புசித்து யாக நிலையிலிருக்கும் சன்னியாசி ஆகும்.

(b) மறுபடியும் கிரகஸ்தனுவான்.

2-வது சுலோகம்:—மிகவும் வலிவுள்ள கிரகம் அஸ்தங்கத மடைந்திருந்தால் யோகியாகாமல் யோகிகளுடன் சினேகஞ் செய்பவனுயிருப்பான். மிகவும் வலிவுள்ள கிரகம் கிரக யுத்தத்தில் தோல்வி யடைந்தபோது மற்ற கிரகங்களால் பார்க்கப்பட்டால் யோகியாகமாட்டான்.

3-வது சுலோகம்:—சந்திரனிருக்கும் இராசியாதிபதி சனியைப் பார்த்தும், இதர கிரகங்களால் பார்க்கப்படாமலு மிருந்தால் அல்லது சந்திரனிருக்கும் ராசியாதிபதி பலமில்லாம லிருந்து சனியால் பார்க்கப்பட்டாலும் சன்னியாசி ஆவான், (a) சந்திரன், சனித்திரேகாணத்திலிருந்து, செவ்வாயின் நவாம்சை அல்லது சனியின் நவாம்சை யிருந்து சனியால் பார்க்கப்பட்டால் சன்னியாசி ஆவான். (b)

(a) சனி வலிவா யிருந்தால் சனிக்குரிய சன்னியாசமும், சந்திரனிருக்கும் இராசியாதிபதி வலிவா யிருந்தால் அந்த இராசியாதிபதிக்குரிய சன்னியாசமும் பெறுவான். (b) சனியிற்குரிய சன்னியாசம் பெறுவான்.

4-வது சுலோகம்:—லக்கினம், சந்திரன், குரு, இவர்களைச் சனி பார்த்தும், 9-ஆம் வீட்டிலிருந்த குருவைச் சனி பார்த்தும், இராஜயோகங்களில் ஒன்று அமையும்படியாய்ப் பிறந்தவன் சாஸ்திரங்களைக் கண்டு பிடித்து கிரந்தங்களை எழுதும் கிரந்த கர்த்தராவார். (a) லக்கி

னத்திற்கு 9-ஆம் வீட்டில் சனியிருந்து, இந்த சனியை மற்றக் கிரக
கள் பார்க்காமலிருந்து இராஜ யோகம் அமையப் பிறந்தவன் ராஜ
ராஜனாகவும் சன்னியாசியாகவும் இருப்பான். (b)

(a) இராஜ யோகமும் சன்னியாசி யோகமும் சரியாய் இருந்தா
சாஸ்திரங்களை எழுதும் யோகியாவான்.

(b) இராஜ யோகமும் சன்னியாசி யோகமும்கலந்திருந்து, இரா
யோகம் சன்னியாசி யோகத்தைவிட அதிகமாக விருந்தால் முதலில் ச
கிரவர்த்தியா யிருந்து பின்பு சன்னியாசி யாவான்.

16-வது அத்தியாயம்.

அஸ்வனி முதல் ரேவதி வரையிலுமுள்ள நட்சத்திரங்களில் ச
திரன் இருக்கப் பிறந்தவர்களுக்குப் பலன் அடியிற் கண்டபடி ஆகு
14-வது சுலோகத்தின் கீழ் உள்ள குறிப்பை முதலில் படிக்கவும்.

1-வது சுலோகம்.

(1) அஸ்வனி:—இதிற் சந்திரன் ஜெனன காலத்தில் இருக்க
பிறந்தவன், அழகுள்ளவன், ஆபரணங்களின்மேல் ஆசை யுள்ளவ
புத்தி கூர்மையுள்ளவன், காரிய சமர்த்தன், சகல ஜனப் பிரியன். (a)

(a) தனமுடையவன், அடக்கமுடையவன், கீர்த்தி யுடையவ
சுகமாய் வாழ்பவன்.

(2) பரணி:—இதிற் சந்திரனிருக்கப் பிறந்தவன், உண்மையை
பேசுபவன், நோயற்றவன், துக்கமற்றவன், காரியங்களைப் பூர்த்திபா
செய்து முடிப்பவன். (a)

(a) அங்கவீனன், தனமுடையவன், நன்றிஇல்லாதவன், கெட்
வன், பிறருடைய மனைவியின்மேல் காத லுடையவன்.

2-வது சுலோகம்.

(3) கிருத்திகை:—இதிற் சந்திர னிருக்கப் பிறந்தவன் நாடெ
கும் புகழுடையவன், அழகுள்ளவன், ஆகாரம் அதிகமாய்ப்புசிக்க வி
ப்பமுள்ளவன், பிறருடைய மனைவியின்மேல் காதலுடையவன். (a)

(a) வலிவுள்ளவன், புத்தி கூர்மை யுள்ளவன், கம்பீரமா யிரு
வன், மிகவும் உபயோகமுள்ள வித்தை அறிந்தவன்.

(4) ரோகணி:—இதிற் சந்திர னிருக்கப் பிறந்தவன் அழகுள்
வன், சீலமா யிருப்பவன், உண்மையைப் பேசுபவன், நயமான பே

டையவன், பிறருடைய சொத்தி லாசையில்லாதவன், நிலையான அபிப்பி ராய முடையவன். (a)

(a) புத்தி யுள்ளவன், பிறருடைய குற்றங்களையும் குறைகளையும் அறிந்தவன், மெலிந்த தேகமுடையவன், பர ஸ்திரீகளிடத்தில் விசுவாச முள்ளவன்.

3-வது சுலோகம்.

(5) மிருக சீரிஷம்:—இதில் சந்திரனிருக்கப் பிறந்தவன், சுறுசுறு ப்பும், சாமர்த்தியமும், பயமும், தனமும் உடையவன், காமக் கிரீடை யில் இச்சை யுள்ளவன். (a)

(a) இள மனதுடையவன், தேச சஞ்சாரி, கருட பார்வை யுடைய வன்.

(6) திருவாதிரை:—இதில் சந்திர னிருக்கப் பிறந்தவன், கோபி, செய்த நன்றியை மறப்பவன், இம்சையையும் பாபத்தையும் விளைவிக்கக் கூடிய கெட்ட காரியங்களைச் செய்ப விருப்ப முடையவன். (a)

(a) தரித்திரன், பலசாலி, இழிவான காரியங்களில் ஈடுபடுபவன்.

4-வது சுலோகம்.

(7) புனர்பூசம்:—இதிற் சந்திர னிருக்கப் பிறந்தவன் சுகமும், தெய்வ பக்தியும், சாந்தமான குணமும், நல்ல சுபாவமும் உள்ளவன், ரோயாளி, அல்ப வஸ்துக்களாலே திருப்தி யடையக் கூடியவன். (a)

(a) தனவந்தன், கீர்த்தியும் வித்தையு முள்ளவன், காமம் அதிக மாயுடையவன்.

5-வது சுலோகம்.

(8) பூசம்:—இதில் சந்திர னிருக்கப் பிறந்தவன், தனவந்தன், தானதருமம் செய்பவன், சாஸ்திர ஆராய்ச்சி யுள்ளவன், எல்லோரா லும் விரும்பப்பட்டவன், தன்னுடைய பஞ்சேந்திரியங்களை அடக்கி யாள்பவன். (a)

(a) தெய்வங்களின் பேரிலும், பிராம்மணர்களின் பேரிலும் அன் புடையவன், தனமும், புத்தி கூர்மையும் உள்ளவன், பந்துக்கள் அதிக மாயுள்ளவன், அரசர்களுடைய அபிமான முடையவன்.

(9) ஆயில்யம்:—இதில் சந்திரனிருக்கப் பிறந்தவன் பிறருடைய காரியத்தைக் கவனிக்க மாட்டான், சர்வபட்சணி, பாபி, செய்நன்றிமற ப்பவன், பிறரை ஏமாற்றி மோசஞ் செய்வதில் வல்லவன். (a)

(a) முன் கோபி, கெட்ட நடவடிக்கை யுள்ளவன்.

6-வது சுலோகம்.

(10) மகம்:—இதில் சந்திரனிருக்கப் பிறந்தவன் தனவந்தனுய்
சுகவானும், தேவர்களையும் பிதுர்களையும் தொழுபவனும் இரு
பான். அனேக சேவகர்களை யுடையவன். (a)

(a) கெம்பீரமாயும், சத்காரியங்களில் ஆசை யுடையவனும், தன்
மனைவி யிடத்தில் இரக்கமுடையவனும் இருப்பான்.

(11) பூரம்:—இதில் சந்திரன் இருக்கப்பிறந்தவன் அழகுள்ளவ
யும், அரசர்களிடத்தில் உத்தியோகஞ் செய்பவனும், தான தரும
செய்வதில் தயாளமுள்ளவனும், நயமான வார்த்தை யுள்ளவனு
தேச சஞ்சாரியாயும் இருப்பான்.

(a) வலிவுள்ளவன், ஸ்ரீகளின்பேரில் அதிக ஆசை யுள்ளவன்.

7-வது சுலோகம்.

(12) உத்திரம்:—இதில் சந்திரன் இருக்கப் பிறந்தவன் தன்னு
டைய வித்தையினால் தனந் தேடுபவனும், சுகமாய்ஜீவிப்பவனும் இரு
ப்பான். எல்லோராலும் விரும்பக் கூடியவன். (a)

(a) கெம்பீரமாயும், செய்நன்றி பாராட்டுபவனும், புத்தி கூர்மை
யுள்ளவனும், அதிக இன்ப சுகங்களை அனுபவிக்க, ஆசையுள்ளவனு
யும் இருப்பான்.

(13) அஸ்தம்:—இதில் சந்திரன் இருக்கப் பிறந்தவன் சுறுசுறு
பாயும், தந்திரவாதியாயும், ஜீவகாருண்யமில்லாதவனும், திருடனும்
கள் முதலிய மதுபானங்களைக் குடிப்பவனும், மானத்தைக் கவனிப
தவனும் இருப்பான். (a) தனவந்தனும் ஞானிகளின் சினேகத்தை
விரும்புபவனும் இருப்பான்.

8-வது சுலோகம்.

(14) சித்திரை:—இதில் சந்திர னிருக்கப் பிறந்தவன் அழகான
கண்களும் அவயவங்களும் உள்ளவன், அனேகவிதமான நிறமுடை
ஆடைகளையும் புஷ்பங்களையும் அணிந்து கொள்வான். (a)

(a) ஜாக்கிரதையாயும், நல்ல சுபாவமுடையவனும், பிறருடை
மனைவியின்மேல் இச்சை யுடையவனு யிருந்தபோதிலும் மிகவும்பெரு
தன்மை யுடையவனுயு மிருப்பான்.

(15) சுவாதி:—இதில் சந்திர னிருக்கப் பிறந்தவன் சாந்தமான
ாவமுடையவன், தான தருமஞ் செய்ய எண்ணமுள்ளவன், இரக்க
ம் கமான வார்த்தையு முடையவன், வியாபாரத்தில் வல்லவன், பஞ்
ேந்திரியங்களை அடக்கி ஆள்பவன். (a)

(a) தெய்வங்களையும் பிராம்மணர்களையும் திருப்தி செய்யக்கூடிய
ன், அதிக தனமும் கொஞ்சம் புத்தியையும் உடையவன், சுக போகங்
ள் அடைய விரும்புபவன்.

9-வது சுலோகம்.

(16) விசாகம்:—இதில் சந்திர னிருக்கப் பிறந்தவன் அழகான
ங்கமுள்ளவன், தெளிவாக பேசுவான், உலோபி, பிறருடைய ஐஸ்வரி
யத்தைக் கண்டு பொறாமை யடைபவன், கலகப் பிரியன். (a)

(a) முன்கோபி, எதிரிகளை வெல்லுந் திறமையுள்ளவன், மனைவி
டத்தில் அளவு கடந்த அதிக ஆசையுள்ளவன்.

(17) அனுஷம்:—இதில் சந்திரன் இருக்கப் பிறந்தவன் தனவந்
ன், அன்னிய தேசத்தில் வசிப்பான், தேச சஞ்சாரி, பசியைபொறுக்க
டியாதவன். (a)

(a) பராக்கிரமம், கீர்த்தி, புகழ், மதுரவாக்கு, தனம், இவைகளை
டையவன், சுகத்தைத் தேடுபவன்.

10-வது சுலோகம்.

(18) கேட்டை:—இதில் சந்திரன் இருக்கப் பிறந்தவன், முன்
கோபி, சந்தோஷமாகவும் நற்குணங்களுடையவனும் இருப்பான், கொ
ஞ்சம் சினேகிதர்களுடையவன். (a)

(a) நியாயஸ்தனும், பெருந் தன்மை யுடையவனும், பிறரு
டைய ஸ்ரீகளிடத்தில் ஆசையுள்ளவனும் இருப்பான்.

(19) மூலம்:—இதில் சந்திர னிருக்கப் பிறந்தவன், தனவந்தன்,
போகங்களை அனுபவிப்பவன், கர்வமுள்ளவன், பிறருக்குத் தீங்கு
செய்யாதவன், நிலையான புத்தி யுள்ளவன். (a)

(a) விரைவாகப் பேச வல்லவன்.

11-வது சுலோகம்.

(20) பூராடம்:—இதில் சந்திரன் இருக்கப் பிறந்தவன் சினேகித
த்தில் பிரியமுள்ளவன், மனதிற்குத் தகுந்த நல்ல மனைவியுள்ள
ன், கர்வமுள்ளவன். (a)

(a) பொறுமையும் சாந்தமும் உடையவன், நல்ல நடவடிக்கையுள்ளவன், சுகவான், தன் மானத்தின்மேல் அதிக நோக்கமுள்ளவன்.

(21) உத்திராடம்:—இதில் சந்திரன் இருக்கப் பிறந்தவன் நற்குணங்களும் சன்மார்க்கமும் உள்ளவன், நன்றி பாராட்டுபவன், அநேக சிநேகிதருடையவன், எல்லாராலும் விரும்பப்பட்டவன். (a)

(a) சாந்தமான குணமுடையவன், சந்தோஷமுடையவன், ஞானமும் வித்தையு முடையவன்.

12-வது சுலோகம்.

(22) திருவோணம்:—இதில் சந்திரன் இருக்கப் பிறந்தவன் ஞானமும், புகழும்உள்ளவன், தயாளமும் தானதர்ம சிந்தையுமுள்ள மனைவியை உடையவன், எப்போதும் விருத்தி யடைபவன். (a)

(a) தேசத்தை அரசாளும் வம்சத்தைச் சார்ந்தவன், தெய்வங்களையும் பிராம்மணர்களையுந் தொழுபவன், தெய்வபக்தி யுள்ளவன்.

(23) அவிட்டம்:—இதில் சந்திர னிருக்கப் பிறந்தவன், தைரியமுள்ளவன், பராக்கிரமமுள்ளவன், சங்கீதப் பிரியன், தனத்தை வெகு ஜாக்கிரதையாகச் சேர்ப்பவனு யிருந்தபோதிலும் தானதருமஞ் செய்பவன். (a)

(a) துடைகளும் கழுத்தும், பருமனுயிருக்குந் தேகமுடையவனும் சந்தோஷமாயும் சீக்கிரத்தில் எதையும் நம்பக்கூடியவனும் இருப்பான்.

13-வது சுலோகம்.

(24) சதையம்:—இதில் சந்திரன் இருக்கப் பிறந்தவன் கடினமான வார்த்தை யுடையவன், யாரையும் மதியான், எதிரிகளை வெல்வான், தீர்க்கமாய் யோசியாமல் காரியங்களைச் செய்வான், துக்கமுடையவன், மெய் பேசுபவன். (a)

(a) ஜோதிட வித்தை தெரிந்தவன், தைரியவான், மிதமாகப் பேசுபவன், சாந்தமான குணமுடையவன்.

(25) பூரட்டாதி:—இதில் சந்திர னிருக்கப் பிறந்தவன் தெளிவான வார்த்தை யுடையவன், தான்தேடுந் தனத்தைத் தன் மனைவியிடம் கொடுப்பவன், துக்கமுடையவன். (a)

(a) மெலிந்த தேகமுடையவன், தைரியமாய்ப் பேசுவான், பிரியன்.

14-வது சுலோகம்.

(26) உத்திரட்டாதி:—இதில் சந்திரன் இருக்கப் பிறந்தவன் நற்குணங்களுடையவன், சுகமுள்ளவன், எதிரிகளை வெல்வன், திறமையாய்ப் பேச வல்லவன், புத்திர பௌத்திர சம்பத்துள்ளவன். (a)

(a) தனமும் வித்தையும் உடையவன், தயாள குண முள்ளவன், சாந்தமான சுபாவ முள்ளவன்.

(27) ரேவதி:—இதில் ஜெனன காலத்தில் சந்திரன் இருக்கப் பிறந்தவன் தனவந்தன், பராக்கிரமமுள்ளவன், பிறருடைய சொத்தில் இச்சையில்லாதவன், எல்லோராலும் விரும்பப்பட்டவன், அங்கவீனமில்லாதவன். (a)

(a) எப்போதும் சுகபோகங்களை அனுபவிப்பான், சூட்சுமமான புத்தி யுடையவன், காமம் அதிகமாயுடையவன், சிநேகிதர்களும் புத்திரர்களும் உடையவன், தேகத்தில் ஒரு அகலமான தழும்பு உடையவன்.

குறிப்பு:—மேற்சொல்லிய நட்சத்திர பலன்களெல்லாம் சந்திரனை மாத்திரம் அனுசரித்துச் சொல்லி இருப்பதால், சந்திரன் வலிவாயிருந்தால் தான் இப்பலன்களெல்லாம் நடக்கும் என்று யூகிக்கவும். மேலும் மற்றக் கிரகங்களினுடைய பலன்களையுஞ் சேர்த்து யூகித்துச் சொல்லவும்.

17-வது அத்தியாயம்.

மேஷம் முதல் மீனம் வரையிலுமுள்ள இராசிகளில் ஜெனனகாலத்தில் சந்திரன் இருக்கப் பிறந்தவர்களுக்குப் பலன் அடியிற் கண்டபடியாகும். 13-வது சுலோகத்தை வாசித்த பிறகு தான் மற்ற சுலோகங்களை வாசிக்க வேண்டும்.

1. மேஷம்:—இதில் ஜெனன காலத்தில் சந்திர னிருக்கப் பிறந்தவன் உருண்ட, சிகப்பு கண்களை யுடையவன், காய்கறிகளையும் சூடான ஆகாரத்தையும் மிதமாகப் புசிப்பவன், காமத்தில் இச்சையும் சஞ்சாரஞ் செய்ய ஆசையும் உள்ளவன், தனமில்லாதவன், முழங்கால் பலவீனமாயுள்ளவனும், சண்டை செய்யப் பிரியனும், ஸ்திரீகளின்பேரில் ஆசையுள்ளவனும் இருப்பான். சிரசு காயமுடையதாயும், நகங்கள் கெட்டுப் போனதாயும் இருக்கும். பிறரிடத்தில் பணி செய்வதில் திறமை யுள்ளவன், கர்வியாடம், மூத்தோருள்ளவனுயும் இருப்பான். ஜலத்தைக்கண்

டால் பயப்படுபவனும், பயங்காளியாயும், உள்ளங்கையில் சத்தி ரே
யுடையவனும் இருப்பான்.

2-வது சுலோகம்.

2. ரிஷபம்:—இதில் சந்திரன் இருக்கப் பிறந்தவன் அழகான
கமும், விசாலமான முகமும், பருத்த தொடைகளும், அழகான நடை
உள்ளவன், முதுகு, அல்லது முகம், அல்லது பக்கங்களில் வடிவு
யவன், கெடுதியைச் சலியாமல் அனுபவிக்கக் கூடியவன், அதிக அ
ரமும், பராக்கிரமமும், தயாளகுணமுமுள்ளவன், பெண் குழந்தைக
ளவன், பிள்ளைகளையும் பந்துக்களையும் தனத்தையும் விட்டு நீங்கி
ந்திருப்பவன், சாந்தமான குணமுடையவனும் எல்லோராலும் வி
பக்கூடியவனும் இருப்பான். யவ்வனத்திலும் விருத்தாப்பியத்தி
சுகமுடையவனும், ஸ்திரீகள்மேல் ஆசையுள்ளவனும், சிநேகித ரி
தில் பிரியமுள்ளவனும் இருப்பான். (a)

(a) நல்ல நடவடிக்கையும், புகழும், புத்திரர்களும், பெண்க
உடையவன்.

3-வது சுலோகம்.

3. மிதுனம்:—இதில் சந்திரனிருக்கப் பிறந்தவன் ஸ்திரீலோலனு
அலிகளிடத்திலுங்கூட சம்போகமுடையவனும், காமக்கிரீடை, வி
கள் முதலியவற்றைச் செய்யும் விதத்தைச் சொல்லும் காமநூலில் செ
ல்லியபடி லீலைகள் செய்வதில் மிகவும் வல்லவனு மிருப்பான். வே
சாஸ்திரங்களை அறிந்தவனும், மிகவும் கூர்மையான புத்தி யுடைய
னும், பிறருடைய நோக்கங்களையும் எண்ணங்களையும் கண்டறி
கூடியவனும் புத்தி சாதுர்யமுள்ளவனும் இருப்பான். அழகா
உயர்ந்த மூக்குடையவனும் சிவந்த கண்களையுடையவனும், சுருண்
தலைமயிருடையவனும் நயமான பேச்சுடையவனும் இருப்பான்,
கீதப் பிரியனும் ஆடல் பாடல் வேடிக்கைகளில் வல்லவனு மி
பான். (a)

(a) நீண்ட ஆயுளுள்ளவனும் எப்போதும் சந்தோஷமாயும், க
ளிப்பு உல்லாசமுடையவனு மிருப்பான்.

4-வது சுலோகம்.

4. கடகம்:—இதில் சந்திர னிருக்கப் பிறந்தவன் குள்ளமா
தடிப்பான கழுத்துடையவனும், உயர்ந்த இடுப்பு உடையவனு

உடம்பை வளைத்துக்கொண்டு வேகமாய் நடப்பவனுயுமிருப்பான், சோதிட சாஸ்திரம் தெரிந்தவன், ஸ்திரீகளுக்கு அடங்கி நடப்பவன், அனேக வீடுகளையும் சந்திரனைப்போல சிலகாலம் வளரும்படியானசெல்வத்தையும் சிலகாலம் குறையும்படியான செல்வத்தையும் உடையவன், நல்ல சிநேகிதர்களுடையவனுயும், சிநேகிதர்களிடத்தில் விசுவாசமுடையவனுயும் ஜலத்தையும், காட்டையும் கண்டால் மிகவும் சந்தோஷப்படகூடியவனுயும், நயப்பான வார்த்தைகளால் மயங்கி விடுபவனுயும் இருப்பான், (a)

(a) தேச சஞ்சாரியாயும், விரைவாகப் பேசக்கூடியவனுயும் இருப்பான்.

5-வது சுலோகம்.

5. சிம்மம்:—இதில் சந்திரன் இருக்கப் பிறந்தவன், விசாலமான முகமும், பெரிய கன்னங்களும், பழுப்பு நிறமான கண்களும், கோப சுபாவமும்உள்ளவன். கர்வியாயும், சண்டைசெய்வதில் சாமர்த்தியனுயும், கோபான குணங்களுடையவனுயும், தானதருமஞ் செய்வதில் தாராளமாயும், தாயிடத்தில் அன்புடையவனுயும் இருப்பான், ஸ்திரீகளின்மேல் வெறுப்புள்ளவன், அற்ப புத்திரர்களை யுடையவன், சிறிய விஷயங்களில் அதிக கோபத்தைக் காட்டுவான். மலைகளையும் காடுகளையும் கண்டால் சந்தோஷமடைபவனுயும், மாமிசாதிகளைப் புசிக்க ஆசையுள்ளவனுயும் இருப்பான். பல்நோய், வயிற்றுநோய், பசி, தாகம் இவைகளால் துன்பப்படுவான்.

6-வது சுலோகம்.

6. கன்னி:—இதில் சந்திரன் இருக்கப் பிறந்தவன் சுந்தரமான கண்களையும் குறுகிய புஜங்களையும் கைகளையும், மிருதுவான தேகத்தையும் உடையவன். அடக்கத்தினுல் மிகவும் மெதுவாக நடப்பவன், சுகமாக வாழ்பவன், உண்மையைப் பேசுவான், நயமாகப் பேசுவான், வேதசாஸ்திரங்களிலும், சங்கீதம் ஆடல் பாடல்களிலும், சிற்பசாஸ்திரத்திலும் வல்லவன், சன்மார்க்கமும் புத்தி கூர்மையும் உடையவன், ஸ்திரீலோலன் அன்னிய தேசத்தில் வசிப்பான், பிறருடைய சொத்தை அனுபவிப்பவன், பெண்களையும் அற்ப புத்திரர்களையும் உடையவன்.

7-வது சுலோகம்.

7, துலாம்:—இதில் சந்திர னிருக்கப் பிறந்தவன் உயரமாயும், மெலிந்த தேகமுடையவனுயும், உயரமான மூக்குடையவனுயும் அங்க

ஹீனமாயும் இருப்பான். வேத சாஸ்திரங்களை அறிந்தவனும், தேவ பிராம்மணர், யோகிகள் இவரிடத்தில் அன்பும் மரியாதையு முள்ளவனு யும், புத்தி கூர்மையுள்ளவனும் இருப்பான். அனேக ஞானிகளா சேர்ந்து கொடுக்கப்பட்ட பட்டப் பெயருடையவன், வர்த்தகனும், னவந்தனும், பிறருடைய சொத்தில் ஆசையில்லாதவனும், குடும்ப தாரை ரட்சிப்பவனும், நோயாளியாயும், தன்னுடைய பந்து ஜனங் ளால் அவமதிக்கப்பட்டு விலக்கப்பட்டவனாகவும் இருப்பான்.

8-வது சுலோகம்.

8. விருச்சிகம்:—இதில் சந்திர னிருக்கப் பிறந்தவன் பரந்த க களும், அகன்ற மார்பும், திரண்டு உருண்ட தொடைகளும், முழங்கா களும், கால்களும் கொஞ்சம் சிகப்பு நிறமுடைய தேகமுடையவனு இருப்பான். கள்ளங் கபடான சுபாவமுள்ளவன், வாலிபத்தில் நோ ளி, தாய் தகப்பனையும், குருவையும் விட்டு பிரிந்திருப்பன், 'அரசவம் தாரால் மதிக்கப்பட்டவன், உள்ளங் கைகளிலும் பாதங்களிலும் ம ரேகை, அல்லது பக்ஷிரேகை, வஜ்ஜிராயுத ரேகை யுடையவன், தா செய்த பாவமான காரியங்களை மறைத்து வைப்பவன். (a)

(a) அஜாக்கிரதையாயும், பேராசையுடையவனும், தேசசஞ்சா யாயும் இருப்பான்.

9-வது சுலோகம்.

9. தனுசு:—இதில் சந்திரனிருக்கப் பிறந்தவன் நீண்ட முகமு நீண்ட கழுத்தும், பருத்த தந்தங்களும், பெருத்த உதடும், காது ம், நாசியும் நீண்ட கைகளும், கெட்டுப்போன நகங்களும், குறுகிய ங்களும் உடையவன், மிகவும் சூட்சமமான புத்தியும், சாமர்த்தியம பேசுந் திறமையும், எல்லாவற்றையும் சுலபத்தில் அறிந்து கொள் தன்மையும் உடையவன், தானதருமஞ் செய்வதில் தயாளகுண மு வன், சகல காரியங்களையுஞ் செய்பவன், கிரந்த கர்த்தாவா யிருப்ப சங்கீதம், சித்திரம் முதலியவற்றில் வல்லவன், பிதுர் சொத்துள்ள பந்துக்களை வெறுத்தவன், நயப்பான வார்த்தைகளால் உபாயமாக படுவானே தவிர பயத்தாலும் கடினமான வார்த்தையாலும் வசப்ப ட்டான், (a)

(a) குல சிரேஷ்டனாக விருப்பான், அழகுள்ளவன், பிரகாச கண்களை யுடையவன்.

10-வது சுலோகம்.

10. மகரம்:—இதில் சந்திரன் இருக்கப் பிறந்தவன் நல்லகண்களை யும், மெலிந்த இடுப்பையும், மெலிந்த கால்களையும் உடையவன், இரக்க மில்லாதவன், மானமில்லாதவன், கவர்த்தைக்காக நற்காரியங்களைச் செ ய்பவன், லோபி, சௌரியமுள்ளவன், மனைவி மக்களிடத்தில் பிரியமா யிருப்பான், எல்லோராலும் விரும்பக் கூடியவன், குளிர், சீதளம், பொ றுக்காதவன், எப்போதுந் திரிந்துகொண்டிருப்பான், பிறர் சொல்வ தைச் சீக்கிரத்தில் அறிந்துகொள்ளுஞ் சக்தி யுடையவன், வயதுசென்ற தாழ்ந்த குலத்து ஸ்ரீகளிடம் சினேகஞ் செய்பவன், புஸ்தகங்களை எழு துவான். (a)

(a) சங்கீதம் அறிந்தவன், பெருத்த தலையுடையவன்.

11-வது சுலோகம்.

கும்பம்:—இதில் சந்திரன் இருக்கப்பிறந்தவன், உயரமாயும், நீண் டமுகமும், கழுத்தும், அடிவயறும், புட்டமும், துடைகளும், பாதங்க ளும் உடையவனும், உடம்பில் நரம்புச் சதைகள் அதிகமாயும், உரோ மம் அதிகமாயும் உள்ள தேகமுடையவனும் இருப்பான். செவிடன், பிறருடைய மனைகளின்பேரிலும், சொத்துக்களிலும் ஆசையுள்ள வன், வாசனை திரவியங்களிலும், புஷ்பங்களிலும் ஆசையுள்ளவன், பாவ காரியங்களைச் செய்பவன், சினேகித ரிடத்தில் பிரியமுள்ளவன், களியாமல் நடப்பவன், சிலகாலம் தனமுடையவனும், சிலகாலம் தன மில்லாதவனும் இருப்பான். (a)

(a) ஞானமுடையவனுகிக் கல்விமான்களிடத்தில் விரோதமுடை யவன்.

12-வது சுலோகம்.

12. மீனம்:—இதில் ஜெனனகாலத்தில் சந்திரனிருக்கப் பிறந்தவ ன் பெருத்த தலையும், நீண்ட மூக்கும், அழகான கண்களும் உடைய வன், அழகுள்ளவனும், அங்கவீனமில்லாதவனும் இருப்பான். தன வந்தனும், கல்விவானும் இருப்பான். ஜலத்தி லுண்டாகும்படியான வஸ்துக்களாகிய உப்பு, சங்கு, பவழம், சிப்பி, முத்து, மச்சம் முத லியவைகளில் வியாபாரஞ் செய்வான், நல்ல வஸ்திரங்களைத் தரிக்கப் பிரியமுள்ளவன், தன் மனைவியிடத்தில் ஆசையுள்ளவன், ஸ்ரீகளிடத் தில் அடங்கி யிருப்பான், புதையல் கண்டு எடுப்பான், எதிரிகளை அவ மானப்படுத்துவான். (a) பல மனைவிக ளுடையவன்.

13-வது சுலோகம்.

ஜெனன காலத்தில் சந்திரனும், சந்திரனிருக்கின்ற ராசியும், ராசி யாதியும் ஆகிய இவை எல்லாம் வலிவாயிருக்கும்போது தான் மேலே சொல்லிய பலன்களெல்லாம் பூரணமாய் நடக்கும் (a) இவ்விதமே சந்திரன் நீங்கலாயுள்ள மற்ற கிரகங்களின் பலத்தை அறிந்து அவர்களுக்குச் சொல்லிய பலாபலன்களைச் சொல்லவும். (b)

(a) பூரண வலிவாய் இருந்தால் பலன்கள் பூரணமாயும், மத்திம வலிவா யிருந்தால் பலன்கள் மத்திமமாயும், அற்ப வலிவா யிருந்தால் பலன்கள் அற்புதமாயும் நடக்கும்.

(b) இனிமேல் 18-வது அத்தியாயத்திற் சொல்லப்போகின்ற கிரக பலன்களைப்பற்றி இங்கு வராஹமிகிரர் சொல்லுகிருர்.

18-வது அத்தியாயம்.

சூரியன்.

சூரியன் மேஷம் முதல் மீனம் வரையிலுமுள்ள ராசிகளில் ஜெனன காலத்தில் இருந்தால் அடியிற் கண்ட பலன்கள் நடக்கும். முதலில் 17-வது அத்தியாயத்தில் 13-வது சுலோகத்தின் பின் பாகத்தையும் அதன் கீழ் கொடுத்துள்ள வியாக்கியானத்தையும் படித்துவிட்டுப் பிறகு இந்த அத்தியாயத்தைப் படிக்க வேண்டியது.

1-வது சுலோகம்.

1. மேஷ சூரியன்:—ஜெனன காலத்தில் சூரியன் மேஷத்தில் பரம உச்ச பாகத்தி லில்லாமல் மற்ற பாகத்தில் (a) இருக்கப்பிறந்தவன் கொஞ்சம் தனமுடையவனுகவும், அதிக புகழுடையவனுகவும், சதா அலைச்சலுடையவனுகவும், ஆயுதங்களை தன்னுடன் வைத்துக்கொண்டிருப்பவனுகவும் இருப்பான்.

(a) பரம உச்ச பாகையில் இருந்தால் மேற்சொல்லிய பலன்களில் கெட்ட பலன்களில்லாமலும், நல்ல பலன்கள் அதிகமாகவும் இருக்கும்.

2. ரிஷப-சூரியன்:—சூரியன் ரிஷபத்தி லிருக்கப் பிறந்தவன் வஸ்திரம், வாசனைத் திரவியங்கள் முதலியவைகளில் வர்த்தகஞ் செய்பவன், சங்கீதம், வாத்தியம் இவைகளில் வல்லவன்.

2-வது சுலோகம்.

3. மிதுன சூரியன்:—சூரியன் மிதுனத்தி லிருக்கப் பிறந்தவன் னவான், சோதிடம், வியாகர்ணம், இலக்கணம் இவைகளை அறிந்த ன். (a)

(a) தனம், ஞானம், இவைகளை அடைவதற்காக எப்பொழுதும் லையுள்ளவனாக விருப்பான்.

4. கடக சூரியன்:—சூரியன் கடகத்தி லிருக்கப் பிறந்தவன், தரி திரன், பயங்கரமாயும், யாருக்கும் அடங்காதவனுயும், பிறருக்காக வேலையைச் செய்பவனுயும், வழி நடந்தால் இளைப்படைபவனுயும் இரு பான். (a)

(a) புத்தி யில்லாதவன்.

5. சிம்ம சூரியன்:—சிம்மத்தில் சூரியனிருக்கப் பிறந்தவன் பரா க்ரமமுள்ளவன், மடையன், மலைகளிலும், காடுகளிலும், பசுத்தொழு வ்களிலும் வசிக்கப் பிரியமுள்ளவன். (a)

(a) ஜாதகப் பாரிஜாதத்தில் புத்தியுள்ளவ னென்றும் பலவிதகலை யானங்களில் வல்லவன் என்றுஞ் சொல்லப்பட்டிருக்கின்றது.

6. கன்னியா சூரியன்:—சூரியன் கன்னியி லிருக்கப் பிறந்தவன் கம், ஸ்ரீயின் தேகத்தைப்போல விருக்கும், கணித வித்தையிலும், வியிலும், சித்திரம் எழுதுவதிலும், உலக அனுபோகத்திலும் வல்ல ு யிருப்பான். (a)

(a) தனந் தேடுவதில் ஆசை யுள்ளவனு யிருப்பான்.

3-வது சுலோகம்.

7. துலா சூரியன்:—சூரியன் துலாத்திலிருக்கப் பிறந்தவன் பாவக் ரியங்களைச் செய்வான், அலைந்தபடியாக விருப்பான், மதுபானங்க ள்மேல் ஆசை யுள்ளவனுயும், மதுபான வியாபாரம் செய்பவனுயும் ருப்பான், தாழ்ந்த உலோகங்களை உயர்ந்த உலோகங்களாக மாற்றும் ாயன சாஸ்திரவாதியா யிருப்பான். (a)

(a) தைரியவான்.

விருச்சிக சூரியன்:—சூரியன் விருச்சிகத்தி லிருக்கப் பிறந்தவன், க்கன், கெட்ட சுபாவமுடையவன், ஆலோசனையில்லாமல் காரியங் ச் செய்வான், தான்தேடுந்தனம் தனக்கு உதவாது. ஆயுதங்களை பிரயோகஞ் செய்வதில் மிகவும் வல்லவனாக விருப்பான்.

9. தனுசு சூரியன்:—சூரியன் தனுசிலிருக்கப் பிறந்தவன் தன
தன், யோகிகளாலுங் கூட நன்கு மதிக்கப்பட்டவன். சிற்பம், வைத்
யம் முதலிய சாஸ்திரங்களை வாசித்தவன், (a)

(a) சிறிய வர்த்தகன்.

10. மகர சூரியன்:—சூரியன் மகரத்தி லிருக்கப் பிறந்தவ
கொஞ்ச தனமுடையவன், புத்தி யில்லாதவன், தன் அந்தஸ்திற்கு
தாழ்ந்த காரியங்களைச் செய்வான், பேராசை யுடையவனும், பிறர்
த்துக்களை அனுபவிப்பவனும் இருப்பான்.

4-வது சுலோகம்.

11. கும்ப சூரியன்:—சூரியன் கும்பத்தி லிருக்கப் பிறந்தவன்
த்திரன், சொத்தில்லாதவன், பிள்ளைகளில்லாதவன், தன் குலத்திற்கு
தகாத காரியங்களைச் செய்வான். (a)

(a) புத்திர பௌத்திர சுகமில்லாதவன்.

12. மீன சூரியன்:—சூரியன் மீனத்தி லிருக்கப்பிறந்தவன் ஜ
தில் அல்லது வடிவு உண்டாகக்கூடிய வஸ்துக்களாகிய உப்பு, மச்ச
முத்து, சிப்பி, பவழம், சங்குமுதலிய ஜல வஸ்துக்களில் வியாபா
செய்து தனம் தேடுவான். (a)

(a) பயிர்த் தொழிலுஞ் செய்வான்.

சூரியன் அல்லது சந்திரன் இருக்கப்பட்ட ராசியிற்குரிய அ
வத்தில் மருவு, அல்லது மச்சம், அல்லது வடிவு தோன்றும். (b)

(b) 1-வது அத்தியாயம் 4-வது சுலோகத்தைப் பார்க்கவும்.

சேவ்வாய்.

5-வது சுலோகம்.

1. மேஷ விருச்சிக சேவ்வாய்:—மேஷத்தில் அல்லது விரு
கத்தில் செவ்வாய் இருக்கப் பிறந்தவன் தனவந்தன், சுக போகங்
அனுபவிப்பான். தேகத்தில் காயம்பட்ட வடிவுகளுண்டு, வர்த்தக
அல்லது சேனாதிபதியாயும் இருப்பான், அலைச்சல் திரிச்சல் உள்ள
அரசரால் நன்கு மதிக்கப்பட்டவன். (a)

(a) அரசனிடத்தி லிருந்தும், பயிர்த்தொழில் மூலமாயும் த
தேடுவான்.

2. ரிஷப துலா செவ்வாய்:—ரிஷப துலாத்தில் செவ்வாய் இருக்ப் பிறந்தவன் கடினமான தேகமுடையவன், ஸ்திரீகளுக்கு அடங்கி நடபவன், பிறருடைய மனைவியின்மேல் இச்சையுள்ளவன், மந்திரதந்திரதி, பயங்காளி, சிநேகிதர்களுடைய பேச்சைக் கேட்கமாட்டான்.

6-வது சுலோகம்.

3. மிதுன கன்னி செவ்வாய்:—செவ்வாய் மிதுனம்கன்னி இவைளி லிருக்கப் பிறந்தவன் அழகுள்ளவன், பயமில்லாதவன், சங்கீதத்திலும் யுத்தத்திலும் வல்லவன், லோபி, பிறருக்கு உதவி செய்வான், புத்ரர்களுடையவன், சிநேகித ரில்லாதவன், யாவரையும் கெஞ்சிகேட்ந் தன்மை யுள்ளவன்.

4. கடக செவ்வாய்:—கடகத்தில் செவ்வாய் இருக்கப் பிறந்தன் அங்கவீனன், தனவந்தன், பாபி, புத்தி கூர்மையுள்ளவன், கடலைக்டந்து திரவியந் தேடுவான். (a)

(a) அரசனுக்குப் பிராண சிநேகிதனுவான்.

7-வது சுலோகம்.

சிம்ம செவ்வாய்:—செவ்வாய் சிம்மத்தி லிருக்கப் பிறந்தவன் தரித்திரன், தீரமுடையவன், இம்சையைச் சகிக்கக் கூடியவன், காடுகளில் சஞ்சாரஞ் செய்பவன், மனைவி மக்கள் அற்பமா யுள்ளவன்.

6. தனுசு மீன செவ்வாய்:—செவ்வாய் தனுசு மீனத்திலிருக்கப் பிறந்தவன் அதிக புகழுடையவன், தீரன், மந்திரியா யிருப்பான், அநேகவிரோதிக ளுடையவன், அற்ப புத்திர னுடையவன். (a)

(a) சுக போகங்களை அனுபவிப்பவன், விரோதிகளை ஜெயிப்பன்.

7. மகர செவ்வாய்:—செவ்வாய் மகரத்தி லிருக்கப் பிறந்தவன் அகவும் தனவந்தன், அரசன் அல்லது அரசனுக்குச் சமானமானவன், அநேக புத்திர ருள்ளவன்.

8. கும்ப செவ்வாய்:—செவ்வாய் கும்பத்தி லிருக்கப் பிறந்தவன் தரித்திரன், பொய்யன், பாபி, தேச சஞ்சாரி, துக்கமுடையவன்.

புதன்.

8-வது சுலோகம்.

1. மேஷ விருச்சிக புதன்:—புதன் ஜனன காலத்தில் மேஷம் விருச்சிக ராசியில் இருக்கப் பிறந்தவன் தரித்திரன், வேத சாஸ்திர வி

ரோதி, தெய்வமில்லை என்று சொல்லிவாதிக்கும் நாஸ்திகன், திருட கள்ளங் கபடு உள்ளவன், பொய் பேசுவான், சன்மார்க்க வழியைவிட் நடப்பவன், சூதாடுபவன், மதுபானஞ் செய்பவன், கடனில் மூழ் னவன்.

2. ரிஷப துலா புதன்:—புதன் ரிஷப துலாத்திலிருக்கப் பிற வன் எப்பொழுதும் திரவியந்தேட முயலுபவன், தான தருமஞ் செ தில் தயாளகுணமுடையவன், உபதேசஞ் செய்பவனும், குரு மா பிதா இவர்களிடத்தில் பக்தி விசுவாசமுடையவனும் இருப்பான்.

9-வது சுலோகம்.

3. மிதுன புதன்:—மிதுனத்தில் புதன் இருக்கப்பிறந்தவன் சா திரங்கள், கலைக்கியானங்கள், சங்கீதம், நிர்தனம், சித்திரம் எழுது இவைகளில் வல்லவன், நயமாகப் பேசுவான், சுகமாக வாழ்வான்.

4. கடக புதன்:—கடகத்தில் புதனிருக்கப் பிறந்தவன், ஜல மந்தமான வஸ்துக்களால் தனந் தேடுவான், பந்துக்களால் வெறு பட்டவன்.

10-வது சுலோகம்.

5. சிம்ம புதன்:—சிம்மத்தில் புதனிருக்கப் பிறந்தவன் தரித் ரன், மூடன், தேச சஞ்சாரி, சுகமும், புத்திரரும் இல்லாதவன், ஸ்தி ளின்மேல் ஆசையுள்ளவன், ஆனால் ஸ்திரீகள் அவனை விரும்ப மாட்ட கள் (a)

(a) மனைவி யிடத்தில் பயந்து அடங்கி நடுங்கி இருப்பான்.

6. கன்னி புதன்:—கன்னியில் புதன் இருக்கப் பிறந்தவன் முள்ளவன், புத்தி கூர்மை யுள்ளவன் எல்லாவித சற்குணங்களுமுடை யவன், சாந்தமா யிருப்பான், கல்விமான், தானதருமஞ் செய்ய தயா குணமுடையவன், சுக போகங்களை அனுபவிப்பான்.

11-வது சுலோகம்.

7. தனுசு புதன்:—புதன் தனுசி லிருக்கப் பிறந்தவன் பல சாஸ்திரங்களிலும், நீதி சாஸ்திரத்திலும் வல்லவனாகி அரசர்களால் ன்மை படுத்தப்பட்டவனாக விருப்பான், (a)

(a) அரசனுக்குப் பிராண சிநேகிதனா யிருப்பான்.

8. மகர கும்ப புதன்:—புதன் மகர கும்பத்தி லிருக்கப் பிற வன் தரித்திரன், கடன் வாங்குபவன், சிற்ப வேலை செய்பவன், பிற க்கு வீணாக வேலை செய்பவன். (a)

(a) கைத்தொழில் வேலை செய்பவன், பிறருடைய வேலைக்காரன்.

9. மீனம் புதன்:—புதன் மீனத்தி லிருக்கப் பிறந்தவன் பிறரிட த்தில் சினேகஞ் செய்துகொண்டு அவருடைய அபிப்பிராயங்களைத் தெ ரிந்து நடப்பவன். மிருகங்களின் தோல்களைக் கொண்டு கைத்தொழில் வியாபாரஞ் செய்பவன்.

குரு.

12-வது சுலோகம்.

1. மேஷ விருச்சிக குரு:—ஜெனன காலத்தில் குரு மேஷ விரு ச்சிக ராசியி லிருக்கப் பிறந்தவன் அழகுள்ளவன், மிகவும் தனவந்தன், புத்தகுணமுள்ளவன், தானதருமஞ் செய்வதில் தயாள குணமுடைய வன், அதிக புகழுடையவன், வேலையாட்க ளுடையவன், அனேக மனை விகளும் புத்திரர்களு முடையவன், தன் மனைவிகளுடன் சந்தோஷ மாய் வாழ்பவன், சேனாதிபதியாய் இருப்பான்.

2. ரிஷப துலா குரு:—குரு ரிஷப துலாத்தி லிருக்கப்பிறந்தவன் நோயற்றவன், தனவந்தன், சுகமாக வாழ்பவன், தானதருமஞ் செய்வ தில் தயாளகுணமுள்ளவன், சர்வ ஜனங்களால் விரும்பப்பட்டவன், புத்திரர் சினேகிதர்க ளுடையவன். (a)

(a) வலிவுள்ளவன்.

3. மிதுன கன்னி குரு:—குரு மிதுன கன்னியி லிருக்கப் பிறந்த வன் சுகமாக வாழ்பவன், அனேக வீடுகளையும் ஆடைகளையு முடைய வன், அனேக புத்திரர் சினேகிதர், வேலையாட்கள்; உடையவன், மந்தி ரியாக விருப்பான்.

13-வது சுலோகம்.

4. கடக குரு:—குரு கடகத்தி லிருக்கப் பிறந்தவன் நவரத்தினங் களும் தனமும், சுகமும், புத்தி கூர்மையும், மனைவிகளும், புத்திரர்க ளும் உடையவன்,

5. சிம்ம குரு:—குரு சிம்மத்தி லிருக்கப் பிறந்தவன் சேனாதிபதி யாயிருப்பான், நவரத்தினங்களும், தனமும், சுகமும், புத்திகூர்மையும், மனைவிகளும், புத்தி கூர்மையும் உடையவன். (a)

(a) புகழும் கீர்த்தியு முடையவன்.

6. தனுசு மீன குரு:—குரு தனுசு, மீனத்தி லிருக்கப்பிறந்தவன்,

மிகவும் தனவந்தன், ஒரு தேசத்திற்கு அரசனும், அல்லது மந்தி யாயும் அல்லது சேனதிபதியாயும் இருப்பான்.

7. மகர குரு:—குரு மகரத்தி லிருக்கப் பிறந்தவன் அற்பகுண டையவன், துக்க முடையவன், தன் அந்தஸ்திற்குத் தகாத காரியங் ளைச் செய்பவன். (a)

(a) தேச சஞ்சாரி, கவலை யுள்ளவன்.

8. கும்ப குரு:—குரு கும்பத்தி லிருக்கப் பிறந்தவன் அனேக களையும் சந்திரனைப்போல சிலகாலம் வளரும் செல்வமும், சிலகா குறையுஞ் செல்வமுமுடையவன், நல்ல சினேகிதர்க ளுடையவன், பான வார்த்தைகளால் மயங்கி விடுவான். (a)

(a) அனேக சுப போகங்களை அனுபவிப்பான்.

சுக்கிரன்.

14-வது சுலோகம்.

1. மேஷ துலா சுக்கிரன்:—ஜெனன காலத்தில் சுக்கிரன் மே துலாத்தி லிருக்கப் பிறந்தவன் பிறருடைய மனைவிகளின்பேரில் ஆ யுடையவனு யிருந்து அவர்களால் தன் சொத்தை யெல்லாம் இழந் விடுவான். தன்னுடைய குடும்பத்திற்குக் கெட்ட பெயரை விளை பான்.

2. ரிஷப துலா சுக்கிரன்:—சுக்கிரன் ரிஷப துலாத்தி லிருக் பிறந்தவன், தானே தன் கஷ்டத்தினல் தனந் தேடுவான், புத்தி யுள் வன், பந்துக்களில் சிரேஷ்டனுகவும், அரசருக்குப் பிரியமுள்ளவ யும் இருப்பான், தீரமாயும், புகழுடையவனுயும் இருப்பான். (a)

(a) பந்துக்களும், சினேகிதர்களும், தனமும் அதிகமாக விரு மிகவும் சாய்க்காலுடையவனுகவும், அரசனுக்குப் பிராண சினேகித வும் இருப்பான்.

15-வது சுலோகம்.

3. மிதுன சுக்கிரன்:—சுக்கிரன் மிதுனத்தி லிருக்கப் பிறந்த தனவந்தனுயும், அரசனுடைய வேலையைச் செய்பவனுயும் சங்கீதத் தேர்ச்சி யடைந்தவனுயும் இருப்பான். (a)

(a) புத்தி நுட்ப முடையவன்.

4. கன்னி சுக்கிரன்:—சுக்கிரன் கன்னியி லிருக்கப் பிறந்த கஷ்டப்பட்டு வேலை செய்பவன். (a)

(a) தாழ்ந்த வருணத்தாருக்கு ஏற்படுத்தப்பட்ட காரியத்தைச் சய்பவன்.

5. மகர கும்ப சுக்கிரன்:—சர்வ ஜனப் பிரியன், ஸ்ரீகளுக்கு அட கி நடப்பான், தாழ்ந்த குணமுள்ள ஸ்ரீகளின்மேல் ஆசையுள்ளவன்.

16-வது சுலோகம்.

6. கடக சுக்கிரன்:—சுக்கிரன் கடகத்தி லிருக்கப் பிறந்தவன் தரி திரன், கர்வியாயும், பயங்காளியாயும் இரண்டு மனைவிக ளுடையவனு ம் துக்கியாயும் இருப்பான்,

7. சிம்ம சுக்கிரன்:—சுக்கிரன் சிம்மத்தி லிருக்கப் பிறந்தவன் ரீகள் மூலியமாய்த் தனந் தேடுவான், நற்குணங்கள் பொருந்திய நல்ல னைவியும் அற்ப புத்திரனும் உடையவன். (a)

(a) மூடப் பிள்ளைகளை உடையவன்.

8. தனுசு சுக்கிரன்:—சுக்கிரன் தனுசி லிருக்கப் பிறந்தவன் தன ந்தனும், நற்குணங்கள் பொருந்தியவனும் இருப்பான். (a)

(a) ஜனங்களுக்கு அதிகாரியா யிருப்பான்.

9. மீன சுக்கிரன்:—சுக்கிரன் மீனத்தி லிருக்கப் பிறந்தவன் தன ந்தன், சாஸ்திரங்களை வாசித்தவன், சர்வ ஜனப் பிரியன், அரசரால் ன்மையாகப் பாராட்டப்பட்டவன்.

சனி.

17-வது சுலோகம்.

1. மேஷ சனி:—ஜெனன காலத்தில் சனி மேஷத்தில் இருக்கப் ந்தவன் மடையன், சிநேகித ரில்லாதவன், தேச சஞ்சாரி.

2. விருச்சிக சனி:—சனி விருச்சிகத்தி லிருக்கப் பிறந்தவன் இர மில்லாதவன், காரியத்தில் ஊக்கமில்லாதவன், சண்டையில் அடிபட் கொள்பவன், சிறையி லிருப்பான்.

3. மிதுன கன்னி சனி:—சனி மிதுனம், கன்னியி லிருக்கப் பிறந் வன் தரித்திரன், மானமில்லாதவனும் துக்க முடையவனும் இருப் ன், காவலாளியாயும் பிரதானஉத்தியோகஸ்தனும், திரையில்லாத த்திர மெழுதுபவனும், புஸ்தகங்கள் எழுதுபவனும் இருப்பான், த்திர சம்பத்தில்லாதவன். (a)

(a) மிதுனத்தி லிருந்தால் புத்தி கூர்மை, புத்திரர், தனம் இவைக

ளில்லாதவன், கன்னியி லிருந்தால் அற்ப தனமும், அற்ப புத்திரனு உடையவன்.

18-வது சுலோகம்.

4. ரிஷப சனி:—சனி ரிஷபத்தி லிருக்கப் பிறந்தவன் அற்பதன மும்,அனேக மனைவிகளும், தாழ்ந்த குல ஸ்திரீகளின்மேல் ஆசையுள்ள னுகவும் இருப்பான்.

5. துலா சனி:—சனி துலாத்திலிருக்கப் பிறந்தவன் தனவந்தன் ஒரு பட்டிணத்திற்கு அல்லது கிராமத்திற்குப் பிரதானமான மனித கவும், சேனைக்குத் தலை கர்த்தனுகவும் இருப்பான், அதிக புகழுடை வனுக விருப்பான்.

6. கடக சனி:—சனி கடகத்தி லிருக்கப் பிறந்தவனுக்கு பற்க அதிகமாகவிராது. தரித்திரன், மூடன், தாயைவிட்டுப் பிரிந்திருப்பான் புத்திர ரில்லாதவன்.

7. சிம்ம சனி:—சனி சிம்மத்தி லிருக்கப்பிறந்தவன் துக்கமுடை யவன், புத்திர ரில்லாதவன், மூட்டைகளைச் சுமந்து செல்பவன், அ தஸ்தில்லாதவன்.

19-வது சுலோகம்.

8. தனுசு மீன சனி:—சனி தனுசு மீனத்தி லிருக்கப் பிறந்தவ அதிக தனமுடையவன், நற்குணமுடைய மனைவியும், நற்குணமுள் நல்ல புத்திரரும் உடையவன், ஒரு பட்டிணம் அல்லது கிராமம், அ லது சேனை இவைகளுக்குப் பிரதானமானவன், அரசனுடைய அர மனையில் அரசனிடத்தில் நன்றி பாராட்டும்படியான உத்தியோகஸ் னுக விருப்பான், எல்லோரும் நல்ல மரணம் என்று சொல்லத்தக்க ம ணத்தை அடைவான். (a)

(a) சனி மீனத்தி லிருந்தால் தீரமுள்ளவன், அரசனிட மிருக் வேண்டிய நற்குணங்களை உடையவன்.

9. மகர கும்ப சனி:—சனி மகர கும்பத்தி லிருக்கப் பிறந்தவ பலவீனமான பார்வை யுடையவன், நிலையான செல்வமுடையவன், ப டிணம் அல்லது கிராமம், அல்லது சேனை இவைகளுக்கு அதிகாரியா விருப்பான், பிறருடைய மனைவியையுஞ் சொத்துக்களையும் அனுபவி பவன், அசுத்தமாக விருப்பான், தான் சம்பாதிக்கும் பொருளைத் த னே அனுபவிப்பான். (a)

(a) மகரத்தில் சனி இருந்தால் அரசருடைய அபிமானம் உடை யவன்.

குறிப்பு:—இந்த அத்தியாயத்தின் ஆரம்பத்திலும், 17-வது அத்
யாயத்தின் 13-வது சுலோகத்தையும், அதின் கீழ் உள்ள வியாக்கியா
த்திற் சொல்லியதையும் வாசிக்க வேண்டியது. அதாவது மேற்சொ
ிய ஒவ்வொரு கிரகமும், இந்த கிரகம் இருக்கும் ராசியும், இந்த
ம் இருக்கும் ராசியாதியும் பூரண வலிவா யிருந்தால் பூரண பல
், மத்திமமா யிருந்தால் மத்திம பலனும், பலவீனமா யிருந்தால்
ய பலனும் நடக்கும் என்பதாம்.

20-வது சுலோகம்.

சந்திரன் ஒவ்வொரு ராசியிலும் இருக்கும்போதும், சந்திரன்இதர
ங்களால் பார்க்கப்பட்டபோதும் சொல்லியுள்ள பலாபலன்களைப்
லவே ஒவ்வொரு ராசியிலும் பிறந்தவருக்கு ராசிப் பலன் சொல்லப்
ிருக்கின்றது.

(a) ஆனால் லக்கின ராசிப் பலனைவிட, துவாதச பாவங்களால்
டாகும் பலன்கள் விசேஷமானவை. இந்த துவாதச பாவங்களும்
ாதிபதிகளும் வலியாய் இருந்தால் அந்தந்த பாவத்திற்குச் சொல்
பலன்கள் (b) விருத்தியாகும். பலவீனமா யிருந்தால் பலன்கள்
றந்துவிடும் என்பதாம்.

(a) ராசிகளுக்கும் பலன் சொல்லப்பட்டிருந்த போதிலும், இந்த
ந்தத்தில் சொல்லவில்லை யென்றும், ஏனென்றால் பாவ பலன் விசேஷ
படியாலும், பாவபலன் இந்த கிரந்தத்தில் சொல்லப்பட்டிருப்பதா
இராசி பலனைப் பிரத்தியேகமாகக் கொடுப்பது அனுவசியமானது
று சந்திரனுக்குச் சொல்லியதே பொருந்தும் என்றும், வராஹமிகிர
டய அபிப்பிராயம் என்று கருதவேண்டும்.

(b) 1-வது அத்தியாயம் 15-வது சுலோகம் பார்க்கவும்.

வராஹ மிகிராச்சாரியார் இராசிப் பலன்களை இந்தகிரந்தத்தில்சொ
ல்லை. ஆனால் இப்பலன்கள் ஜாதக பாரிஜாதத்தி லிருந்து எடுத்து
சொல்லப்பட்டிருக்கின்றன.

லக்கின ராசிப் பலன்கள்.

1. மேஷ லக்கினம்:—மேஷம் லக்கினமா யிருக்கப் பிறந்தவன்
ங்களுக்கு விரோதியாக விருப்பான், மெலிந்த தேக முடையவன்,
், கலகப் பிரியன், தீரமுள்ளவன், நிலையான செல்வ மில்லாதவன்,
திரிந்துகொண்டே இருப்பான், முழங்கால் பலவீனமாயிருக்கும்.

2. ரிஷப லக்கினம்:—ரிஷபம் லக்கினமா யிருக்கப் பிறந்தவ சாந்தமாயும், தர்க்கஞ் செய்யப் பிரியனும், திரிந்து கொண்டே யிரு பவனும் இருப்பான், அற்ப புத்திர ருடையவன், பெரியோர்க ளுக்கும் பிராம்மணர்களுக்கும் வணங்கி மரியாதை செய்பவன், அனேக ப க்களுடையவன்.

3. மிதுன லக்கினம்:—மிதுனம் லக்கினமா யிருக்கப் பிறந்தவ அழகுள்ளவன், நோயாளி, இரக்கமுள்ளவன், யோசனையி லாழ்ந்து நி பன், உலக அனுபோக முடையவன், சுக போகங்களை அனுபவிப்ப ன், பந்துக்களின்பேரில் விசுவாச முள்ளவன், எப்போதும் விருத்தி டைந்துகொண்டே இருப்பான், நற்குணமுடையவர்களுக்குப் பிரிய விருப்பான்.

4. கடக லக்கினம்:—கடகம் லக்கினமா யிருக்கப் பிறந்தவ பெருத்த தேகமும் நற்குணங்களும் உடையவன், நயமான வாக்குடை யவன், வயிறார ஆகாரம் சாப்பிடுபவன், ஆடை ஆபரணங்க ளுடை யவன்.

5. சிம்ம லக்கினம்:—சிம்ம லக்கினமா யிருக்கப் பிறந்தவன் ரியமுள்ளவன், எதிரிகளை வெல்லுபவன், அரசர்களுக்குப் பிரியனுக ருப்பான், அன்னிய தேசம் செல்லுவான், ஸ்ரீ லோலன், அற்பபுத்தி ருள்ளவன்.

6. கன்னியா லக்கினம்:—கன்னி லக்கினமா யிருக்கப் பிற வன் தனவந்தன், சாமர்த்திய முள்ளவன், அனேக வித வேலை செய் தில் வல்லவன், அழகான பெண்களிடத்தில் மிகவும் பிரியமா யிரு பான், பந்து ஜன பிரியன், சரியாக ஆலோசனை செய்ய வல்லவன்.

7. துலா லக்கினம்:—துலாம் லக்கினமா யிருக்கப் பிறந்தவ அழகான முகமும், அழகான கண்களையு முடையவன், சாந்தகுண ள்ளவனும், பயங்காளியாயும், தனமும், பூமியும், ஸ்ரீகளும் உடை வன், காமப் பிரியமுள்ளவன், ராஜ பூஜிதன், சாஸ்திரங்களை வாசித்த ந்தவன்.

8. விருச்சிக லக்கினம்:—விருச்சிகம் லக்கினமா யிருக்கப் பிற வன் பயங்கரமான பார்வை யுடையவன், விசனகரமான முகக் குறிப் டையவன், தனவந்தன், கல்விமான், நல்லவர்களிடத்தில் விரோதமா ருப்பான், தீர்க்கஜீவி, கர்வி, பயங்காளி.

9. தனுசு லக்கினம்:—தனுசு லக்கினமா யிருக்கப் பிறந்தவன் னவந்தனாகவும், குல சிரேஷ்டனாகவும், கீர்த்தியும் புகழுடையவனாக வும் இருப்பான்.

10. மகர லக்கினம்:—மகரம் லக்கினமாக விருக்கப் பிறந்தவன் செய் நன்றி மறப்பவன், ஸ்ரீலோலன், மிகவும் மெதுவாகப் பேசுவான்.

11. கும்ப லக்கினம்:—கும்பம் லக்கினமாக இருக்கப் பிறந்தவன் அதிக தனவந்தன், லோபி, தந்திரவாதி, பிறருடைய ஸ்ரீகளிடத்தில் பிரியமுள்ளவன்,

12. மீன லக்கினம்:—மீனம் லக்கினமா யிருக்கப் பிறந்தவன் னம் தான்யம் அதிகமாக வுடையவன், பலசாலி, தீரமுள்ளவன், னேகித ரிடத்தில் பிரியமா யுள்ளவன், வித்தை யுடையவன், மித மான சுக போக முடையவன்.

19-வது அத்தியாயம்.

இந்த அத்தியாயத்தில் மேஷ முதல் மீனம் வரையிலுமுள்ள ராசி யில் ஏதாகிலும் ஒரு ராசியில் இருக்கப்பட்ட சந்திரனைச் சூரியன் முதலாயுள்ள மற்ற ஆறு கிரகங்களாகிய சூரியன், செவ்வாய், புதன், குரு, சுக்கிரன், சனி இவர்கள் பார்ப்பதால் உண்டாகும் பலாபலன்களை ராஹ மிஹிராச்சாரியார் சொல்லுகிறார்.

1-வது சுலோகம்

மேஷ சந்திரன் (அல்லது லக்கினம்)

1. ஜெனன காலத்தில் மேஷத்தி லிருக்கும் சந்திரனை, (அல்லது லக்கினத்தை) க் கிரகங்கள் பார்த்தால் பலன் அடியிற் கண்டபடி ஆகும்.

1. சூரியன் பார்த்தால் தரித்திரன்,
2. செவ்வாய் ,, அரசன்,
3. புதன் ,, கல்விமான்,
4. குரு பார்த்தால் அரசனைப்போன்றவன்
5. சுக்கிரன் ,, சற்குணன், வர்த்தகன்
6. சனி ,, திருடன்

ரிஷப சந்திரன் (அல்லது லக்கினம்)

2. ஜெனனகாலத்தில் ரிஷபத்திலிருக்கும் சந்திரனை (அல்லது லக்கினத்தை) கிரகங்கள் பார்த்தால் பலன்கள் அடியிற்கண்டபடி ஆகும்:—

1. சூரியன் பார்த்தால் சேவகன் 4. குரு பார்த்தால் அரசன்,
2. செவ்வாய் ,, தரித்திரன் ஜன பிரி
3. புதன் ,, திருடன் 5. சுக்கிரன் ,, அர
6. சனி ,, தனவ

மிதுன சந்திரன் (அல்லது லக்கினத்தை

1. சூரியன் பார்த்தால் தரித்திரன் 4. குரு பார்த்தால கல்வி
2. செவ்வாய் ,, ஆயுதவியாபாரி 5. சுக்கிரன் ,, தைரிய
3. புதன் ,, அரசன் 6. சனி ,, நெசவுதொழில

கடக சந்திரன் (அல்லது லக்கினத்தை

1. சூரியன் பார்த்தால் கண்ணோ 4. குரு பார்த்தால் கல்வி
யாளி 5. சுக்கிரன் ,, அர
2. செவ்வாய் ,, சூரன் 6. சனி ,, ஆயுதவியாப
3. புதன் ,, கிரந்த கர்த்தா

2-வது சுலோகம்.

சிம்ம சந்திரன் (அல்லது லக்கினத்தை

1. சூரியன் பார்த்தால் அரசன் 4. குரு பார்த்தால் தனவ
2. செவ்வாய் ,, அரசன் 5. சுக்கிரன் ,, அர
3. புதன் ,, ஜோதிடன் 6. சனி ,, நாவி

கன்னியா சந்திரன் (அல்லது லக்கினத்தை

1. சூரியன் பார்த்தால் ஸ்ரீகளிடத் 4. குரு பார்த்தால் சேனாதி
தில் வேலையாள் 5. சுக்கிரன் ,, சுறுசுறுப்புள்ள
2. செவ்வாய் ,, ,, 6. சனி ,, ஸ்ரீகளிடத்தில்
3. புதன் ,, அரசன் லைய

துலா சந்திரன் (அல்லது லக்கினத்தை

1. சூரியன் பார்த்தால் திருடன் 4. குரு பார்த்தால் பொன் வே
2. செவ்வாய் ,, ,, செய்ப
3. புதன் ,, அரசன் 5. சுக்கிரன் ,, வர்த்த
6. சனி ,, திருட

விருச்சிக சந்திரன் (அல்லது லக்கினத்தை

1. சூரியன் பார்த்தால் தரித்திரன் 4. குரு பார்த்தால் அடங்கி ந
2. செவ்வாய் ,, அரசன் ப
3. புதன் ,, இரட்டைப் பிள் 5. சுக்கிரன் ,, வண்ண
ளை பெறுவன் 6. சனி ,, அங்கவீன

3-வது சுலோகம்.

தனுசு சந்திரன் (அல்லது லக்கினத்தைச்)

1. சூரியன் பார்த்தால் டம்பன்,பிறருக்கு உதவி செய்யான்
2. செவ்வாய் ,, ,,
3. புதன் ,, பந்துக்களை ரட்சிப்பவன்
4. குரு பார்த்தால் அரசன்
5. சுக்கிரன் ,, அனேகரை ரட்சிப்பவன்
6. சனி ,, டம்பன், பிறருக்கு உதவிசெய்யான்

மகர சந்திரன் (அல்லது லக்கினத்தைச்)

1. சூரியன் பார்த்தால் தரித்திரன்
2. செவ்வாய் ,, அரசன்
3. புதன் ,, சக்கிரவர்த்தி
4. குரு பார்த்தால் அரசன்
5. சுக்கிரன் ,, கல்விமான்
6. சனி ,, தனவான்

கும்ப சந்திரன் (அல்லது லக்கினத்தைச்)

1. சூரியன் பார்த்தால் பரஸ்திரீமோகன்
2. செவ்வாய் ,, ,,
3. புதன் ,, அரசன்
4. குரு பார்த்தால் அரசனைப்போன்றவன்
5. சுக்கிரன் ,, பரஸ்திரீமோகன்
6. சனி ,, பரஸ்திரீமோகன்

மீன சந்திரன் (அல்லது லக்கினத்தைச்)

1. சூரியன் பார்த்தால் பாபி
2. செவ்வாய் ,, ,,
3. புதன் ,, விகடன்
4. குரு பார்த்தால் அரசன்
5. சுக்கிரன் ,, கல்விமான்
6. சனி ,, பாபி

4-வது சுலோகம்:—

ஜெனன காலத்தில் சந்திரன் சூரிய ஓரையிலிருந்து, சூரிய ஓரையிலிருக்கப்பட்ட கிரகங்களால் பார்க்கப்பட்டால் சந்திரன் நல்ல பலனைக் கொடுப்பர். சந்திரன் ஜெனன காலத்தில் சந்திர ஓரையி லிருந்து சந்திர ஓரையி லிருக்கும் கிரகங்களால் பார்க்கப்பட்டால் சந்திரன் நல்ல பலனைக் கொடுப்பார். (a) சந்திரன் இருக்கும் திரேகாணாதிபதியால் அல்லது மித்துரு க்ஷேத்திரத்தி லிருக்கப்பட்ட கிரகங்களிருக்கும் ராசியாதிபதியால், பார்க்கப்பட்ட சந்திரன் நல்ல பலனைக் கொடுப்பார். மேஷம் முதல் மீனம் வரையிலுமுள்ள துவாதசாம்சங்களில் ஒன்றில் சந்திரன் இருந்து கிரகங்களால் பார்க்கப்பட்டால் அதற்குப் பலன் மேஷம் முதல் மீனம் வரையிலுமுள்ள ராசிகளில் ஒன்றில் சந்திர னிருந்து கிரகங்களால் பார்க்கப்பட்டால் எந்த பலன் சொல்லி இருக்கின்றதோ அந்த பலனேயாகும். (b) மேஷம்முதல் மீனம் வரையிலுமுள்ள நவாம்

சைகளில் ஒன்றில் சந்திரன் இருந்து கிரகங்களால் பார்க்கப்பட்டா பலன் பின் வருமாறு என்பதாம்.

(a) சந்திர ஓரையிலுள்ள சந்திரனைச் சூரிய ஓரையி லுள்ள கி கங்களும், சூரிய ஓரையிலுள்ள சந்திரனைச் சந்திர ஓரையிலுள்ள கி கங்களும் பார்த்தால் சந்திரன் அசுப பலனைக் கொடுப்பர்.

லக்கின ஓரை:—இவ்விதமாகவே லக்கினம் ஒற்றை ராசியாய் இரு ந்து லக்கின ஓரை, சூரிய ஓரையானால் ஜாதகன் தனவந்தனாகவு கெட்டவனாகவும், அரசர்களால் மதிக்கப்பட்டவனும் இருப்பான் லக்கினம் ஒற்றை ராசியாய் இருந்து லக்கின ஓரை, சந்திர ஓரையானா ஜாதகன் அழகுள்ளவன், இரக்கம் உள்ளவன், தயாளகுண முள்ளவன் விரைவாகப் பேசுவான், கெட்ட மனைவியை யுடையவன், லக்கின இரட்டை ராசியாகி, லக்கின ஓரை, சூரியஓரையானால் ஜாதகன் மிகவு பயங்காளி, செய்நன்றி மறந்நாதவன், புத்தி நுட்ப முள்ளவன், லக்கி னம் இரட்டை ராசியாகி லக்கின ஓரை, சந்திர ஓரையானால் ஜாதகன் தீரமாகப் பேசுவான், சோம்பலுள்ளவன், சற்குணமான மனையிடத் தில் பிரியமுள்ளவன்.

(b) இந்த அத்தியாயத்தில் 1, 2, 3-வது சுலோகங்களில் சந்தி ரன் மேஷ முதலாயுள்ள ராசிகளி லிருந்து கிரகங்களால் பார்க்கப் படுவ தற்குப் பலன்கள் சொல்லப்பட்டு இருக்கின்றன. உதாரணமாகச் சந் திரன் மேஷ துவாதசாம்சத்தில் இருந்து செவ்வாயால் பார்க்கப்பட் டால், சந்திரன் மேஷ ராசியி லிருந்து செவ்வாயால் பார்க்கப்பட்டத ற்கு 1-வது சுலோகத்தில் சொல்லிய பலன்களைச் சொல்லவேண்டு என்பதாம்.

5-வது சுலோகம்.

இனிமேல் மேஷம் முதல் மீனம் வரையிலுமுள்ள நவாம்சைகளி ஏதாகிலும் ஒரு நவாம்சையில் இருக்கப்பட்ட சந்திரனைச் சூரியன்மு லாயுள்ள மற்ற ஆறு கிரகங்களும் பார்ப்பதால் உண்டாகும் பலாபல கள் சொல்லப்படும்.

மேஷ விருச்சிக நவாம்ச சந்திரனை (அல்லது மேஷ விருச்சி நவாம்சலக்கினத்தைச்)

1. சூரியன் பார்த்தால் பட்டினத் திற்கு அதிபதி
4. குரு பார்த்தால் அரச

3. செவ்வாய் ,, இம்சைசெய்யப் பிரியன் 5. சுக்கிரன் பார்த்தால் தனவான்
3. புதன் ,, மல் யுத்தஞ்செய்ய வல்லவன் 6. சனி ,, கலகப்பிரியன்

ரிஷப துலா நவாம்ச சந்திரனை (அல்லது ரிஷப துலா நவாம்ச லக்னத்தைச்)

1. சூரியன் பார்த்தால் மூடன் 4. குரு பார்த்தால் கிரந்தகர்த்தா
2. செவ்வாய் ,, பரஸ்ரீபிரியன் 5. சுக்கிரன் ,, சுகப்பிரியன்
3. புதன் ,, கவிகட்டும் புலவன் 6. சனி ,, பரஸ்ரீகமனன்

6-வது சுலோகம்.

மிதுன கன்னி நவாம்ச சந்திரனை (அல்லது மிதுன கன்னி நவாம்ச லக்கினத்தைச்)

1. சூரியன் பார்த்தால் மல்யுத்தஞ் செய்பவன் 4. குரு பார்த்தால் மந்திரி
2. செவ்வாய் ,, திருடன் 5. சுக்கிரன் ,, சங்கீதவல்லவன்
3. புதன் ,, கவிகட்டும் புலவன் 6. சனி ,, கைத்தொழில்சமர்த்தன்

கடக நவாம்ச சந்திரனை (அல்லது கடக நவாம்ச லக்கினத்தைச்)

1. சூரியன் பார்த்தால் சிறிய தேகமுடையவன் 4. குரு பார்த்தால் தலைவன்
2. செவ்வாய் ,, லோபி, அற்பதன முடையவன் 5. சுக்கிரன் ,, ஸ்ரீகளால் விருத்தியடைபவன்
3. புதன் ,, யோகி 6. சனி ,, காரியங்களைச் செய்யப் பிரியன்

7-வது சுலோகம்.

சிம்ம நவாம்ச சந்திரனை (அல்லது சிம்ம நவாம்ச லக்கினத்தைச்)

1. சூரியன் பார்த்தால் கோபி 4. குரு பார்த்தால் சாய்க்காலுள்ளவன்
2. செவ்வாய் ,, அரசனுக்குப் பிரியன் 5. சுக்கிரன் ,, புத்திரரில்லாதவன்
3. புதன் ,, புதையல்எடுப்பான் 6. சனி ,, துன்மார்க்கன்

தனுசு மீன நவாம்ச சந்திரனை (அல்லது தனுசு மீன நவாம்ச லக்கினத்தைச்)

1. சூரியன் பார்த்தால்		கீர்த்தி யுள்ள அதிகாரி	4 குரு பார்த்தால்		மந்தி
2, செவ்வாய்	,,	யுத்தத்தில் வல்லவன்	5. சுக்கிரன்	,,	அ
			6. சனி	,,	தருமசிந்தை டையவ
3. புதன்	,,	விகடன்			

8-வது சுலோகம்.

மகர கும்ப நவாம்ச சந்திரனை (அல்லது மகர கும்ப நவாம் லக்கினத்தைச்)

1. சூரியன் பார்த்தால்		அற்ப புத்திரனுள்ளவன்	4. குரு பார்த்தால்		அந்தஸ்திற் த் தகுந்தபடி நடப்பா
2. செவ்வாய்	,,	சுகமில்லாதவன்	5. சுக்கிரன்	,,	ஸ்ரீலோலன்
3. புதன்	,,	கர்வி	6. சனி	,,	லோப

மேலே சந்திரன் நவாம்சை ராசிகளிலிருந்து கிரகங்களால் பார் கப்பட்டதற்குச் சொல்லிய பலன்களெல்லாம், சூரியன் மேற்சொல் நவாம்சை ராசிகளி லிருந்து கிரகங்களால் பார்க்கப்பட்டதற்குப் பொரு ந்தும். (a) ஆனால் சந்திரனுக்குச் சொல்லிய பலன்களில் சூரியனால்பா க்கப்பட்டால் உண்டாகும் பலனை, சூரியனுடைய பலன்களில் சந்தி னால் பார்க்கப்பட்டால் சொல்லவேண்டியது. (b)

(a) உதாரணமாகச் சந்திரன் மேஷ துலா நவாம்சையி லிருந் செவ்வாயால் பார்க்கப்பட்டதற்குச் சொல்லிய பலனையே சூரியன் மே துலா நவாம்சையி லிருந்து செவ்வாயால் பார்க்கப்பட்டதற்குச்சொல் வேண்டியது என்பதாம்.

(b) உதாரணமாகச் சந்திரன் மேஷ நவாம்சையி லிருந்து சூரி னால் பார்க்கப்பட்டதற்குச் சொல்லிய பலனையே சூரியன் மேஷ நவா சையிலிருந்து சந்திரனால் பார்க்கப்பட்டதற்குச் சொல்ல வேண்டியது என்பதாம்.

9-வது சுலோகம்.

சந்திரன் மேற்சொல்லிய நவாம்சைகளில் இருந்து (a) கிரகங் ளால் பார்க்கப்பட்டதற்குச் சொல்லிய நல்ல பலன்கள், சந்திர வர்க்கோ த்தமத்தி லிருந்தால் பூரணமாகவும், சந்திரன் சுய நவாம்சையி லிரு தால் மத்திமமாகவும், இதர நவாம்சையி லிருந்தால் கொஞ்சமாகவு நடக்கும். சந்திரன் மேற்சொல்லிய நவாம்சைகளி லிருந்து (a) கிரக களால் பார்க்கப்பட்டதற்குச் சொல்லிய கெட்ட பலன்கள், சந்திர

ர்கோத்தமத்தி லிருந்தால் மிகவும் கொஞ்சமாகவும், சுப நவாம்சையி ருந்தால் மத்திமமாகவும், இதர நவாம்சையி லிருந்தால் பூரணமாக நடக்கும். சந்திரன் இருக்கும் நவாம்சாதிபதி பலமா யிருந்தால், திரன் நவாம்சைகளி லிருந்து (b) கிரகங்களால் பார்க்கப்பட்டதற் ச் சொல்லிய பலன்கள் நடக்குமே யல்லாமல், சந்திரன் மேஷாதிமுத ராசிகளி லிருந்து (c) கிரகங்களால் பார்க்கப்பட்டதற்குச் சொல் பலன்கள் நடவாவாம்.

(a) இவ்விதமாகவே நவாம்ச லக்கினத்திற்கும், சூரியனுக்கும் ால்லவேண்டியது.

(b) நவாம்ச லக்கினத்திற்கும், சூரியனுக்கும் இவ்விதமாகவே க்க வேண்டியது.

(c) ஓரைகளிலும், திரேகாணங்களிலும், துவாதசாம்சகளிலும் திரன் இருந்த கிரகங்களால் பார்க்கப்பட்டதற்குச் சொல்லிய பலன் ச் சொல்லக்கூடாது.

இந்த அத்தியாயத்தில் சூரியாதி முதலிய கிரகங்கள் துவாதசபாவ ளில் இருக்கும் பலன்களை வராஹ மிகிராச்சாரியார் சொல்லுகிறார்.

சூரியன்.

1-வது சுலோகம்

1. லக்கினத்தில் சூரியன்:—ஜெனன காலத்தில் சூரியன் லக்கினத் இருக்கப் பிறந்தவன் அற்ப பார்வை யுள்ளவன், சண்டை செய்யப் பன், இரக்கமில்லாதவன் (a)

6-வது சுலோகம்:—ஜெனன காலத்தில் சந்திரன் லக்கினத்தி 10-லும், சுக்கிரன் 7-லும், பாபக்கிரகங்கள் 4-லும், இருக்கப் பிறந் னுடைய குடும்பம் க்ஷீணித்துப் போகும்.

ஜெனன காலத்தில் சனி கேந்திரத்திலிருந்து புதனிருக்கும் திரே
ணாதிபதியின் ராசியைப் பார்த்தால் ஜாதகன் சித்திரம் எழுதுபவனு
ன்.

ஜெனன காலத்தில் சுக்கிரன் லக்கினத்திற்கு 12-ல் இருந்து சனி
யின் நவாம்சம் ஏறி இருந்தால் ஜாதகன் பணிவிடைகள் செய்யும் வேலை
காரிக்குப் பிறந்தவன்.

ஜெனன காலத்தில் சூரியனும் சந்திரனும் 7-ல் இருந்து சனியால்
பார்க்கப்பட்டால் ஜாதகன் தன் அந்தஸ்த்திற்குத் தகாத காரியங்க
ளைச் செய்வான்.

7-வது சுலோகம்.—ஜெனன காலத்தில் செவ்வாயும் சுக்கிரனும்,
லக்கினத்திற்கு 7-ல்இருந்து பாபக்கிரகங்களால் பார்க்கப்பட்டால் ஜாத
கன் தேகத்தில் வீக்கத்தை உண்டாக்கக்கூடிய நோயால் துன்பப்படு
வான்.

ஜெனன காலத்தில் சந்திரன் கடக நவாம்சையில் அல்லது விருச்
சிக நவாம்சையில் பாபக் கிரகத்துடன் இருந்தால் ஜாதகன் மர்மஸ்தா
னத்தில் நோயுள்ளவன்.

ஜெனன காலத்தில் லக்கினத்தில் சந்திரனும், 7-ல் சூரியனும், 2,
12-ல் செவ்வாயும் சனியும் இருந்தால் ஜாதகன் வெண்குஷ்டத்தினுல்
தேகத்திற்குத் துன்பமுண்டாகி இருப்பான்.

ஜெனன காலத்தில் லக்கினத்திற்கு 10-ல் சந்திரனும், 7-ல் செவ்
வாயும், சூரியனுக்கு இரண்டில் சனியும் இருந்தால் ஜாதகன் அங்கவீன
னாயிருப்பான்.

8-வது சுலோகம்.—ஜெனன காலத்தில் செவ்வாயிற்கும் சனியிற்
கும் மத்தியில் சந்திரனிருந்து சூரியன் மகரத்தில் இருக்கப் பிறந்தவன்
ரத்தபித்தம், க்ஷயம், குன்மம், ஜுரக்கட்டி முதலிய ரோகங்கள் உடைய
வன்.

ஜெனன காலத்தில் சந்திரனுடைய ராசியில் அல்லது நவாம்சை
யில் சூரியனும், அல்லது சூரியனுடைய ராசியில் அல்லது நவாம்சை
யில் சந்திரனும் இருந்தால் ஜாதகன் சுவாசகாசம் உடையவன்.

ஜெனன காலத்தில் சூரியனும் சந்திரனும் ஒன்றாய்க் கடகம் அல்
லது சிம்மத்திலிருந்தால் ஜாதகன் நோயினுல் எலும்புகளெல்லாம் தெரி
யும்படி இளைத்து இருப்பான்.

9-வது சுலோகம்.—ஜெனன காலத்தில் தனுசு ராசியின் 5-வது நவாம்சையி (a) லிருக்கும்போதும், அல்லது மேஷம், கடகம், மகரம், மீனம் ஆகிய இவைகளின் நவாம்சையிலிருக்கும்போதும், செவ்வாய், சனி இவர்கள் சந்திரனுடன் இருந்தாலும் அல்லது சந்திரனைப் பார்த்தாலும் ஜாதகன் குஷ்டரோகம் உடையவன்.

ரிஷபம், கடகம், விருச்சிகம், மகரம் ஆகிய இந்த ராசிகள் லக்கினத்திற்கு 5, 9-ஆம் வீடுகளாக இருந்து அவைகளில் செவ்வாயும் சனியும் இருந்தாலும் அல்லது அவைகளைச் செவ்வாயும் சனியும் பார்த்தாலும் ஜாதகன் குஷ்டரோகி ஆவான்.

(a) தனுசின் 5-வது நவாம்சம் சிம்மம் ஆகும்.

10-வது சுலோகம்.—ஜெனன காலத்தில் சூரியன், சந்திரன், செவ்வாய், சனி இவர்கள் லக்கினத்திற்கு 2, 6, 8, 12 ஆகிய இந்த வீடுகளில் எவ்வித வரிசைக் கிரமமாகவாகிலும் இருந்தால், இந்த நான்கு கிரகங்களில் மிகவும் வலிவுள்ள கிரகத்திற்குரிய காரணத்தால் (a) ஜாதகன் குருடனுவான்.

(a) சூரியன் பலவானுனல் பித்தச் சூட்டினுலும், சந்திரன் பலவானுனல் சீதளத்தாலும், செவ்வாய் பலவானுனல் பித்தத்திலும், சனி பலவானுனல் வாயுவினுலும் குருடனுவான் என்று 2-வது அத்தியாயம் 8, 9, 11-வது சுலோகங்களி லிருந்து யூகிக்க வேண்டியது.

11-வது சுலோகம்.—ஜெனன காலத்தில் லக்கினத்திற்கு 3,5,9, 11-ல் பாபர்கள் இருந்து சுபர்களால் பார்க்கப்படாவிட்டால் இந்தபாபர்களில் எது மிகவும் வலிவுள்ள கிரகமோ அந்த கிரகத்திற்குரிய (a) காரணத்தால் ஜாதகன் செவிடனுவான்.

ஜெனன காலத்தில் லக்கினத்திற்கு 7-ல் பாபர்கள் இருந்து சுபர்களால் பார்க்கப்படாவிட்டால் ஜாதகன் பல்லுநோயுடையவன்.

(a) மேலே 10-வது சுலோகத்தின் கீழ் சொல்லிய காரணம் என்று அறியவும். இங்கு பாபக் கிரகங்கள் என்பது சூரியன், செவ்வாய், சனி ஆகும்.

12-வது சுலோகம்:—ஜெனன காலத்தில் சந்திரன் கிரகணத்தால் பீடிக்கப்பட்டு லக்கினத்தில் இருந்து செவ்வாயும், சனியும் 5, 9-ல் இருந்தால் ஜாதகன் பேய், பிசாசு முதலியவைகளால் பிடிக்கப்பட்டுத் துன்புப்படுவான்.

ஜெனன காலத்தில் சூரியன் கிரகணத்தால் பீடிக்கப்பட்டு லக்கின த்தில் இருந்து செவ்வாயும் சனியும் 5, 9-ல் இருந்தால் ஜாதகன் குரு டனுவான்.

13-வது சுலோகம்.—ஜெனன காலத்தில் லக்கினத்தில் குருவிரு ந்து, 7-ல் சனி இருக்கப் பிறந்தவன் வாத நோயால் துன்பப்படுவான்.

ஜெனன காலத்தில் லக்கினத்தில் குருவிருந்து 7-ல் செவ்வாய் இருக்கப் பிறந்தவன் பைத்தியக்காரனுகவும், அல்லது மடையனுகவும் இருப்பான்.

ஜெனன காலத்தில் லக்கினத்தில் சனியிருந்து 5, 7, 9-ல் செவ் வாய் இருந்தால் ஜாதகன் பைத்தியக்காரனுகவும் அல்லது மடையனுக வும் இருப்பான்.

ஜெனன காலத்தில் லக்கினத்திற்கு 12-ல் தேய்பிறை சந்திரனும் சனியும் கூடி இருக்கப் பிறந்தவன் பைத்தியக்காரனுகவும் அல்லது மடையனுகவும் இருப்பான்.

14-வது சுலோகம்:—ஜெனனகாலத்தில் சூரியன், சந்திரன், குரு, சந்திரனிருக்கும் நவாம்சாதிபதி ஆகிய இந்நால்வரில் எவராகிலும் ஒரு வர் தன்னுடைய நீச்சஸ்தானுதிபதியின் (a) நவாம்சையில் அல்லது பகை நவாம்சையிலாவது (b) இருக்கப் பிறந்தவன் பிறரிடத்தில் வேலை செய்து ஜீவிப்பவனுகும். இந்நான்கு கிரகங்களில் எவராகிலும் இருவர் மேற்சொல்லிய நவாம்சையில் இருந்தால் அடிமையாளாக இருப்பான். இந்நான்கு கிரகங்களில் எவராகிலும் மூவர் அல்லது எல்லா கிரகங்க ளும் மேற்சொல்லிய நவாம்சையில் இருக்கப் பிறந்தவனுடைய தகப் பன் அடிமையாளாக விருப்பான்.

(a) நவாம்சை சக்கிரத்தில் சூரியன் துலாத்திலும், சந்திரன் விரு ச்சிகத்திலும், குரு மகரத்திலும் இருப்பது என்பதாம். அதாவது சுக் கிரனுடைய நவாம்சையில் சூரியனும், செவ்வாயினுடைய நவாம் சையில் சந்திரனும், சனியினுடைய நவாம்சையில் குருவும் இருத்தல் என்பதாம்.

(b) பகை நவாம்சை என்பது பகை கிரகங்களின் நவாம்சை ஆகும்.

15-வது சுலோகம்:—ஜெனன காலத்தில் மேஷம், ரிஷபம், தனுசு இவைகளில் ஒன்று லக்கினமாகவிருந்து அதைப் பாபர்கள் பார்க்கப்பிற ந்தவன் பற்கள் அழகில்லாமலிருக்கும்.

ஜெனன காலத்தில் பாபக்கிரகங்களின் இராசியும் (a) ரிஷபமும் தனுசும் ஆகிய இந்த ராசிகளில் ஏதாகிலும் ஒன்று லக்கினமாயிருந்து பாபக் கிரகங்கள் அதைப் பார்க்கப் பிறந்தவன் தலையில் மயிர் இல்லாமல் வழுக்கும்படியான தலையை யுடையவன்.

ஜெனன காலத்தில் லக்கினத்திற்கு 5, 9-ல் சூரியன் இருந்து பாபர்களால் பார்க்கப்பட்டால் ஜாதகனுக்குப் பார்வை குறைந்து இருக்கும்.

ஜெனன காலத்தில் லக்கினத்திற்கு 5, 9-ல் சனி இருந்து பாபர்களால் பார்க்கப்பட்டால் ஜாதகனுக்குப் பலவித ரோகங்களுண்டு.

ஜெனன காலத்தில் லக்கினத்திற்கு 5, 9-ல் செவ்வாய் இருந்து பாபர்களால் பார்க்கப்பட்டால் ஜாதகன் அங்கவீனனாக இருப்பான்.

(a) பாபக் கிரகங்களின் ராசி என்பது சூரியனுடைய ராசியாகிய சிம்மமும், செவ்வாயினுடைய ராசியாகிய மேஷமும் விருச்சிகமும், சனியினுடைய ராசியாகிய மகர கும்பமும் என்பதாம்.

இந்த சுலோகத்தில் பாபக் கிரகங்கள் என்று சொல்லப்பட்டவை சூரியன், செவ்வாய், சனி என்று அறியவும்.

16-வது சுலோகம்:—ஜெனனகாலத்தில் பாபர்கள் லக்கினத்திற்கு 2, 5, 9, 12-ல் இருந்தால் ஜாதகன் சிறைபடுவான். சிறையிலிருக்கும் போது தான் அனுபவிக்குந் தண்டனையின் விபரத்தை லக்கினத்தி லிருந்து அறியவேண்டியது. (a)

ஜெனன காலத்தில் திரேகாண லக்கினம் சர்ப்பத் (b) திரேகாணம் அல்லது பாசத்திரேகாணமாகி, அந்த திரேகாண ராசியாதிபதி வலிவாயிருந்து பாபர்களால் பார்க்கப்பட்டால் சிறைபடுவான். சிறையிலிருக்கும்போது அவன் அனுபவிக்கும் தண்டனையின் விபரத்தை லக்கினத்திலிருந்து அறியவேண்டியது.

(a) அதாவது லக்கினம்,

1. மேஷம், ரிஷபம், தனுசாகில் கயிற்றால் கட்டப்படுவான்.
2. மிதுனம், கன்னி, துலாம், கும்பமாகில் விலங்குமாட்டப்படுவான்.
3. கடகம், மகரம் மீனமாகில் சரீர பந்தனமில்லாமல் உயர்ந்த வீட்டிலுள்ள சிறையிலிருப்பான்.
4. விருச்சிகமாகில் பூமிக்குள் அறையிலிருப்பான்.

5. சிம்மத்திற்கு பலன் சொல்லப்படவில்லை. அதாவது சிம்மமாகில் தண்டனை இல்லை யென்று அறியவும்.

(b) சர்பத்திரேகாணம் அல்லது புஜகத்திரேகாணம்:—21-வது அத்தியாயம் 6-வது சுலோகத்தின்கீழ் கொடுத்துள்ள வியாளத்திரேகாணம் என்ற சர்பத் திரேகாணத்தைப் பார்க்கவும்.

17-வது சுலோகம்:—ஜெனன காலத்தில் சனியுடன் சந்திரன் கூடி இருந்தால் கடினமான வார்த்தை யுடையவனும், சந்திரனை செவ்வாய் பார்த்தால் மூர்ச்சை வியாதி என்ற திடீரென்று கீழே விழுந்து ஸ்வர்ணையில்லாமல் இருக்கும்படியான ரோகமுடையவனும், சந்திரனைப் பரிவேடம் சுற்றி இருந்தால் க்ஷயரோகமுடையவனும், ஜாதகன் இருப்பான்.

ஜெனன காலத்தில் லக்கினத்திற்கு 10-ல் சூரியன், செவ்வாய், சனி இவர்களில் ஒருவரிருந்து சுபர்களால் பார்க்கப்படாவிட்டால் உத்தமமான அந்தஸ்துள்ள வேலைக்காரனாகவும், இருவரிருந்து சுபர்களால் பார்க்கப்படாவிட்டால் மத்திமமான அந்தஸ்துள்ள வேலைக்காரனாகவும், மூவர் இருந்து சுபர்களால் பார்க்கப்படாவிட்டால் அதமான தாழ்ந்த அந்தஸ்துள்ள வேலைக்காரனாகவும் இருப்பான்.

24-வது அத்தியாயம்.

1-வது சுலோகம்:—ஆண் பிள்ளைகளுக்குச் சொல்லியவைகள் எல்லாம் பெண் பிள்ளைகளுக்கும் பொருந்தும். ஆனால் பெண்களுக்குப் பொருந்தக்கூடிய பலன்கள் மாத்திரம் பெண்கள் அனுபவிப்பார்கள். மற்ற பலன்களை அவர்களுடைய புருஷர்கள் அனுபவிப்பார்கள். ஸ்திரீகளின் ஜெனன ஜாதகத்தில் அவர்களுடைய புருஷர்களின் மரணத்தை 8-ஆம் வீட்டினால் அறியவேண்டியது. ஸ்ரீகளினுடைய தேகவிசேஷங்களை ஜென்ம லக்கினத்தாலும் சந்திரன் இருக்கின்ற ராசியாலும் அறியவேண்டியது. ஸ்ரீகளுடைய யோக பலன்களையும் அவர்களுடைய புருஷர்களைப்பற்றியும் லக்கினத்திற்கு 7-ஆம் வீட்டால் அறியவேண்டியது.

வியாக்கியானம்:—புருஷர்களுக்குச் சொல்லியதுபோலவே ஸ்ரீகளுக்கும் சட்வர்க்கப்பலன், அஷ்டவர்க்கப்பலன், கோட்சார பலன், யோகபலன், பாவ பலன் இவைகளை எல்லாம் அறிந்து பலன் சொல்லவேண்டியது அவசியம். ஸ்ரீகளுக்கு நல்ல பலனையும் கெட்ட பலனை

யும், லக்கினம் சந்திரன் இவ்விரண்டில் லக்கினம் வலிவா யிருந்தால் லக்கினத்தைக்கொண்டும், சந்திரன் வலிவா யிருந்தால் சந்திரனைக் கொண்டும் சொல்லவேண்டியது. புருஷனுடைய மரணத்தை லக்கினம் அல்லது சந்திரனுக்கு 8-ஆம் வீட்டால் அறியவேண்டியது. ஸ்ரீகளுடைய புருஷர்களின் போக்கியதா அம்சங்களை லக்கினம் அல்லது சந்திரலக்கினம் இவைகளின் 7-ஆம் வீட்டால் அறியவேண்டியது. சந்திர லக்கினம் என்பது சந்திரன் இருக்கும் ராசியாகும். உதாரணமாக லக்கினம் மேஷமாகிச் சந்திரன் ரிஷபத்தில் இருந்தால் லக்கினம் மேஷம் என்றும், சந்திரலக்கினம் ரிஷபம் என்று சொல்லவேண்டியது. சந்திரன் மீனத்தில் இருந்தால் சந்திரா லக்கினம் மீனம் என்று சொல்லவேண்டும்.

ஸ்திரீகளுக்கு லக்கினம் சந்திரா லக்கினம் இவ்விரண்டில் லக்கினம் வலிவாயிருந்தால் லக்கினத்தைக்கொண்டும், சந்திரன் வலிவாயிருந்தால் சந்திரா லக்கினத்தைக் கொண்டும் அழகு, ரூபம், பலம், அதிர்ஷ்டம் இவைகளை அறியவேண்டும்.

லக்கினம் அல்லது சந்திரா லக்கினம் இவைகளுக்கு 9-ஆம் வீட்டால் ஸ்திரீகளின் புத்திர சம்பத்து, செல்வம் இவைகளை அறியவேண்டியது.

லக்கினம் அல்லது சந்திரலக்கினம் இவைகளின் 7-ஆம் வீட்டால் ஸ்திரீகளின் புருஷர்களின் யோகத்தை அறியவேண்டியது.

லக்கினம் அல்லது சந்திரா லக்கினம் இவைகளின் 8-ஆம் வீட்டால் புருஷனுடன் கூடி வாழ்தல் முதலியவற்றால் உண்டாகும் சுக துக்கங்களை அறியவேண்டியது.

புருஷனுடைய சுக துக்கங்களை 9-ஆம் வீட்டால் அறியவேண்டியதென்று சில ஜோதிடர்கள் சொல்லுகிறார்கள்.

ஸ்திரீகள் விதவைகளாவதை 8-ஆம் வீட்டாலும், ஸ்திரீகளின் அழகு, கீர்த்தி, புகழ் இவைகளை லக்கினத்தாலும், புத்திர சம்பத்தை 5-ஆம் வீட்டாலும், புருஷனுடன் கூடி வாழும் வாழ்க்கையை 7-ஆம் வீட்டாலும், ஸ்திரீகள் சந்நியாசத்துவம் அடைவதும் அவர்களின் சுகங்களையும் 9-ஆம் வீட்டாலும் அறியவேண்டும் என்று சில ஜோதிடர்கள் சொல்லுகிறார்கள்.

மேலும் ஆண் ஜாதகத்திற்குச் சொல்லிய பலன்களில் பெண்களுக்குப் பொருந்தக்கூடிய பலன்களைப் பெண்களும், பெண்களுக்கு

பொருந்தாத பலன்களை அவர்களின் புருஷர்களும் அனுபவிப்பார்கள். ஆண் பெண் இருவர்களுக்கும் பொதுவாய் உள்ள பலன்களை புருஷனும் மனைவியும் சேர்ந்து அனுபவிப்பார்கள்.

2-வது சுலோகம்:—ஜென்ம லக்கினமும் சந்திர லக்கினமும் இரட்டை ராசியாகில் ஜாதகி ஸ்ரீகளுக்குரிய அம்சங்களால் எல்லாம் பொருந்தி ஸ்ரீ சுபாவம் உள்ளவளாகவிருப்பாள். இந்த ராசிகள் சுபக்கிரகங்களால் பார்க்கப்பட்டால் ஜாதகி எல்லா நற்குணங்களும் அமைபப்பொருந்தி அடக்கமும் ஆபரணமும் உள்ளவளாக இருப்பாள்.

ஜென்ம லக்கினமும் சந்திரா லக்கினமும் ஒற்றை ராசிபாக விருக்கப் பிறந்தவள் ஆண் சொரூபமும், ஆண் சுபாபவமும் உடையவளாகவிருப்பாள். இந்த இராசிகள் ஒற்றை ராசிகளாகி பாபர்களால் பார்க்கப்பட்டாலும், அல்லது இந்த ஒற்றை ராசிகளில் பாபர்கள் இருந்தாலும் ஜாதகி நற்குணமில்லாதவளாயும், துன்மார்க்கிபாயும் இருப்பாள். (a)

(a) ஜென்ம லக்கினம், சந்திரா லக்கினம் இவைகளிரெண்டில் ஒன்று ஒற்றை ராசியாகவும், மற்றொன்று இரட்டை ராசிபாகவும் இருந்தாலும், அல்லது இந்த ராசிகளைப் பாபர்களும் சுபர்களும் கலந்து பார்த்தாலும், ஆண் பெண்களுக்குள்ள சொரூபமும் சுபாவமும், கலந்துள்ள சொரூபமும் சுபாவமும் உடையவளாகவிருப்பாள்.

ஜென்ம லக்கினமும் சந்திரா லக்கினமும் ஒற்றைராசிகளாகி இவைகளில் சுபர்கள் இருக்கப் பிறந்தவளுக்கும், அல்லது இவைகளைச் சுபர்கள் பார்க்கப் பிறந்தவளுக்கும் ரூபம், பார்வை, குணம், நடையொபாவனை, புத்திகூர்மை ஆகிய இவைகள் ஆண்களுக்குரியனவாகவும், பெண்களுக்குரியனவாகவும் கலந்து இருக்கும்.

ஜென்ம லக்கினமும் சந்திரா லக்கினமும் இரட்டை ராசியாகி இவைகளில் பாபர்களிருக்கப் பிறந்தவளுக்கும், அல்லது இவைகளைப் பாபர்கள் பார்க்கப் படிந்தவளுக்கும் இந்த இரட்டை ராசியின் அதிபதியுடன் சம்பந்தப்பட்ட அல்லது இரட்டை ராசியின் அதிபதியைப் பார்த்த பாபக் கிரகங்களின் குணுதிசயங்கள் உண்டு.

3-வது சுலோகம்:—இனிமேல் வராஹ மிகிரர் ஜென்ம லக்கின ராசிப் பலன், சந்திர லக்கின ராசிப்பலன் இவைகளைச் சொல்லுகிறார்:—

1. மேஷம் விருச்சிகம்:—மேஷம், விருச்சிகம், ஜென்ம லக்கின ராசி அல்லது சந்திர லக்கின ராசியாகி லக்கினத் திரிம்சாம்சம் அல்லது சந்திரனுடைய திரிம்சாம்சம்.

1. செவ்வாயினுடைய திரிம்சாம்சமானால் ஜாதகி விவாகம் நடப்பதற்கு முன்னமே விபசாரி யாவாள். (a)

(a) கெட்ட நடவடிக்கை யுள்ளவள்.

2. புதனுடைய திரிம்சாம்சையானால் ஏமாற்றுதல் முதலியகெட்ட எண்ணங்களுடையவள்.

3. குருவினுடைய திரிம்சாம்சையானால் பதிவிரதையாக விருப்பாள்.

4. சுக்கிரனுடைய திரிம்சாம்சையானால் கெட்ட குணம் கெட்ட நடவடிக்கை இவைகளை யுடையவளாகவும் விபசாரியாகவும் இருப்பாள்.

5. சனியினுடைய திரிம்சாம்சமானால் வேலைக்காரியாக விருப்பாள். (a)

(a) அடிமையாளாக விருப்பாள்.

குறிப்பு:—ஜென்ம லக்கினம் வலிவாய் இருந்தால் லக்கினத் திரிம்சாம்சையைக் கொண்டும், சந்திர லக்கினம் வலிவாய் இருந்தால் சந்திரனுடைய திரிம்சாம்சையைக் கொண்டும் மேலேசொல்லிவந்த திரிம்சாம்ச பலன்களைச் சொல்லவேண்டியது என்று அறியவும். கீழே வருகின்ற 6-வது சுலோகத்தைப் பார்க்கவும்.

4-வது சுலோகம்.

2. ரிஷபம், துலாம்:—ரிஷபம் துலாம் ஜென்ம லக்கினராசி அல்லது சந்திர லக்கின ராசியாகி லக்கினத்திரிம்சாம்சம் அல்லது சந்திரனுடைய திரிம்சாம்சம்.

1. செவ்வாயினுடைய திரிம்சாம்சமானால் ஜாதகி கெட்ட நடவடிக்கை யுள்ளவள். (a)

(a) துர்க்குணமுடையவள், கலகப்பிரியமுள்ளவள்.

2. புதனுடைய திரிம்சாம்சமானால் ஜாதகி சங்கீதம் நாட்டியம் நிர்த்தனம் முதலியவற்றில் வல்லவள். (a)

(a) சங்கீதம் பாடுதல், வீணை, தம்புரு முதலிய கருவிகளைக்கொண்டு வாசிப்பது இவைகளில் பிரியமுள்ளவள்.

3. குருவினுடைய திரிம்சாம்சமானால் ஜாதகி எல்லா நற்குணங்களுமுடையவள். (a)

(a) பதிவிரதையாக விருப்பாள்.

4. சுக்கிரனுடைய திரிம்சாம்சையானால் ஜாதகி எல்லா நற்குணங்களும் பொருந்தி புகழும் கீர்த்தியுமுடையவள். (a)

(a) புருஷனிடத்தில் அன்பும் பக்தியுமுடைய மனைவி, புத்திமான்களிட சிநேகம் விரும்புபவள், சர்வ ஜனப்பிரியள்.

5. சனியினுடைய திரிம்சாம்சையானால் ஜாதகி முதல் புருஷனைவிட்டு நீங்கி மறுபடியும் வேறு புருஷனை விவாகஞ் செய்துகொள்வாள்.

3 மிதுனம், கன்னி:—மிதுனம் கன்னி ஜென்ம லக்கின ராசி அல்லது சந்திர லக்கின ராசியாகி லக்கினத் திரிம்சாம்சம் அல்லது சந்திரனுடைய திரிம்சாம்சம்.

1. செவ்வாயினுடைய திரிம்சாம்சமானால் ஜாதகி ஏமாற்றுதல், கபடம் முதலிய நற்குணங்களுள்ளவள். (a)

(a) புத்திர சம்பத்துள்ளவள்.

2. புதனுடைய திரிம்சாம்சமானால் ஜாதகி அனேக நற்குணங்களுடையவள். (a)

(a) அழகுள்ளவள், புகழுடையவள், புத்திரரைப் பெறுந் தன்மையுடையவள்.

3. குருவினுடைய திரிம்சாம்சமானால் ஜாதகி பதிவிரதையாக விருப்பாள். (a)

(a) புருஷனிடத்தில் மிகவும் அன்புள்ளவளாக விருப்பாள்.

4. சுக்கிரனுடைய திரிம்சாம்சமானால் ஜாதகி காமாக்கினி யுடையவளாகி விபசாரஞ் செய்வாள். (a)

(a) தனம், ஆடு மாடுகள், அழகிய ஆடை ஆபரணங்கள் உடையவளென்று சொல்லப்பட்டவள்.

5. சனியினுடைய திரிம்சாம்சமானால் ஜாதகி அலியைப்போல விருப்பாள். (a)

(a) விதவையாவாள், அவளுக்குப் பிள்ளைகள் செத்துப் பிறக்கும் அல்லது அலி குழந்தைகள் பிறக்கும்.

5-வது சுலோகம்.

4. கடகம்:—கடகம் ஜென்ம லக்கின ராசியாகி அல்லது சந்திர லக்கின ராசியாகி லக்கினத் திரிம்சாம்சம் அல்லது சந்திரனுடைய திரிம்சாம்சம்.

1. செவ்வாயினுடைய திரிம்சாம்சமானல் ஜாதகி யாருக்கு அடங்காதவளாகவும், தைரியசாலியாகவும் இருப்பாள். (a)

(a) அதிக தேக பலமுள்ளவள், சந்திரனைப் பாபர்கள் பார்த்தால் தன்னுடைய கள்ளப் புருஷர்களைச் சந்தோஷப்படுத்திக்கேளிக்கையான காரியங்களைச் செய்யப் பிரியமுள்ளவள்.

2. புதனுடைய திரிம்சாம்சமானல் ஜாதகி சிற்பம், சித்திரம் எழுதுதல் முதலிய அருமையான சாஸ்திரங்களில் வல்லவளாகவிருப்பாள்.

3. குருவினுடைய திரிம்சாம்சமானல் ஜாதகி அனேக நற்குணங்களுடையவள். (a)

(a) அற்பாயுசுள்ளவள், அற்ப புத்திரருள்ளவள்.

4. சுக்கிரனுடைய திரிம்சாம்சமானல் ஜாதகி கெட்ட குணமும் கெட்ட நடவடிக்கையும் உள்ளவள். (a)

(a) காமம் அதிகமாகவுடையவள்.

5. சனியினுடைய திரிம்சாம்சமானல் ஜாதகி தன்னுடைய புருஷனைக் கொல்வாள். (a)

(a) விதவை யாவாள்,

5. சிம்மம்:—சிம்மம் ஜென்ம லக்கின ராசியாகி அல்லது சந்திர லக்கின ராசியாகி லக்கினத் திரிம்சாம்சம் அல்லது சந்திரனுடைய திரிம்சாம்சம்.

1. செவ்வாயினுடைய திரிம்சாம்சமானல் ஜாதகி புருஷ சொரூபமும் சுபாவமும் உடையவள். (a)

(a) விபசாரியாகவிருப்பாள்.

2. புதனுடைய திரிம்சாம்சமானல் ஜாதகி புருஷ சொரூபமும் சுபாவமும் உடையவள். (a)

(a) கெட்ட குணமுடையவள்.

3. குருவினுடைய திரிம்சமானல் ஜாதகி இராணியாவள். (a)

(a) நற்குணங்களுடையவள், இராஜ வம்சத்தைச் சார்ந்த புருஷ க்குப்பாரியாவள்.

4. சுக்கிரனுடைய திரிம்சாம்சமானல் ஜாதகி தாழ்ந்த குலத்து னிதர்களிடத்தில் விபசாரஞ் செய்வாள். (a)

(a) ரோயுள்ளவள், தனக்குத்தகாத மனிதனிடத்தில் பிரியமுடன் சித்து இருப்பவள்.

5. சனியினுடைய திரிம்சாம்சமானல் ஜாதகி விபசாரிஆவாள். (a)

(a) சந்தோஷமும் சுகமும் இல்லாதவளாயும் துக்கமுடையவளா ம் இருப்பாள்.

6. தனுசு மீனம்:—தனுசு, மீனம், ஜென்ம லக்கின ராசியாகி அல் து சந்திர லக்கின ராசியாகி லக்கினத் திரிம்சாம்சம் அல்லது சந்திர டைய திரிம்சாம்சம்.

1. செவ்வாயினுடைய திரிப்சாம்சமானல் ஜாதகி அனேக நற்குண களுடையவள். (a)

(a) புகழும் கீர்த்தியும் உடையவள், தன்னுடன் அனேகம் பேர் ் சூழ்ந்து கொண்டிருப்பார்கள்.

2. புதனுடைய திரிம்சாம்சமானல் ஜாதகி கல்வி, வித்தை இவை ளை உடையவள். (a)

(a) நற்குணங்கள் உடையவள், எல்லோராலும் நன்றுப் மதிக்கப் டும் பெருந் தன்மையுடையவள்.

3. குருவினுடைய திரிம்சாம்சமானல் ஜாதகன் அனேக நற்குண ்களுடையவள். (a)

(a) தனம், ஆடை, ஆபரணங்கள் இவைகளை ஏராளமாக உடை யவள்.

4. சுக்கிரனுடைய திரிம்சாம்சமானல் ஜாதகி விபசாரஞ் செய் வாள். (a)

(a) நல்ல ஆடை ஆபரணங்கள் உடையவள், புத்திர சம்பத்துள் ளவள்.

5. சனியினுடைய திரிம்சாம்சமானல் ஜாதகி காமம் கொஞ்சமா ச் சம்போகம் அதிகமாய்ச் செப்ய விருப்பமில்லாதவள். (a)

(a) தனமில்லாதவள்,

7. மகரம் கும்பம்:—மகரம் கும்பம், ஜென்ம லக்கின ராசியாகி அ லது சந்திர லக்கின ராசியாகி, லக்கினத் திரிம்சாம்சம் அல்லது சந் ரன் திரிம்சாம்சம்.

1. செவ்வாயினுடைய திரிம்சாம்சமானுல் ஜாதகி அடிமையாள வாழ்நாளைக் கழிப்பாள். (a)

(a) துன்பமும் துக்கமும் உடையவள்.

2. புதனுடைய திரிம்சாம்சமானல் துன்மார்க்கி ஆவாள், (a)

(a) எல்லாம் அறிந்து விபசாரியாவாள்.

3. குருவினுடைய திரிம்சாம்சமானுல் ஜாதகி தன்னுடைய புரு னிடத்தில் விசுவாசமும் பக்தியும் உடையவள். (a)

(a) தன்னுடைய குடும்பத்தில் வழக்கம்போல் செய்பவைகளை கைவிடாமல் அனுசரிப்பவள்.

4. சுக்கிரனுடைய திரிம்சாம்சமானுல் ஜாதகி மலடி ஆவாள். (a)

(a) விபசாரியாகவும், மலடாகவும் இருப்பாள்.

5. சனியினுடைய திரிம்சாம்சமானுல் ஜாதகி தன் குலத்திற்கு தாழ்ந்த குலத்து மனிதனிடம் விபசாரஞ் செய்வாள். (a)

(a) தன்னுடைய புருஷனுல் வெறுக்கப்பட்டவள்.

6-வது சுலோகம்:—ஜென்ம லக்கினம், சந்திரா லக்கினம் இவை ளிரண்டில் சந்திரா லக்கினத்தைவிட ஜென்ம லக்கினம் வலிவா யிரு தால் லக்கினத் திரிம்சாம்சத்திற்குச் சொல்லிய பலன்களும், ஜென்ம கினத்தைவிடச் சந்திரா லக்கினம் வலிவாயிருந்தால் சந்திர லக்கின திரிம்சாம்சத்திற்குச் சொல்லிய பலன்களும் நடக்கும்.

7-வது சுலோகம்:—ஜெனன காலத்தில் சனியினுடைய நவாம்ச யில் சுக்கிரனும், சுக்கிரனுடைய நவாம்சையில் சனியும் இருந்து இ கள் ஒருவரை யொருவர் பார்த்துக்கொண்டாலும், அல்லது ஜென லக்கினம் ரிஷப துலாமாகி நவாம்ச லக்கினம் கும்பமானுலும்; ஜா அகோரமான காமாக்கினி மீறிட்டுத் தணிக்கப்படாமல் இருப்பதால் ஒருரு ஸ்ரீயை புருஷனாக நடிக்கும்படி ஏற்பாடு செய்து இந்த பே மனிதனுடன் காமக்கிரீடைகள் செய்வாள்.

8-வது சுலோகம்:—ஜெனன காலத்தில் ஜென்ம லக்கினத்திற்க லும், அல்லது சந்திரா லக்கினத்திற்காகிலும், 7-ல் கிரகமில்லாம

இந்த 7-ஆம்வீடு பலவீனமாகி சுபர்களால் பார்க்கப்படாவிட்டால் ...தகியின் புருஷன் துஷ்மார்க்கன்.

இந்த 7-ஆம் வீட்டில் இருக்கப்பட்ட கிரகம்:—

1 சூரியனுனல் ஜாதகியை புருஷன் விலக்கி விடுவான்.

2. செவ்வாயாகி இந்த 7-ஆம் வீட்டைப் பாபர்கள் பார்த்தால் ...தகி இளம்பிராயத்திலேயே விதவையாவாள்.

3. புதனுனல் ஜாதகியின் புருஷன் அலியாவான்.

4. சனியானுல் ஜாதகியின் புருஷன் அலியாவான்.

5. சனியாகி, இந்த 7-ஆம் வீடு பாபர்களால் பார்க்கப்பட்டால் ...தகி வயது சென்றும் விவாகமில்லாதவளாக இருப்பாள்.

இந்த 7-ஆம் வீடு சர ராசியானுல் ஜாதகியின் புருஷன் அன்னிய ...சத்தில் சஞ்சாரஞ் செய்வான். (a)

(a) ஸ்திர ராசியானுல் உள்ளூரிலும், உபய ராசியானுல் உள்ளூரி...ம் வெளியூரிலும் வசிப்பவன் என்று சர, ஸ்திர, உபயராசிகளின் ...ங்களைக் கொண்டு யூகித்தறிய வேண்டியது.

9-வது சுலோகம்:—ஜெனன காலத்தில் ஜென்ம லக்கினத்திற்கா...லும், அல்லது சந்திரா லக்கினத்திற்காகிலும் 7-ல் பல பாபர்கள் இரு...ப் பிறந்தவள் விதவையாவள்.

இந்த 7-ஆம் வீட்டில் சுபர்களும் பாபர்களும் கலந்து இருந்தால் ...ன்னுடைய முதல் புருஷனை விட்டு ஓடிப்போய் வேறொரு மனிதனை ...வாகஞ் செய்து கொள்வாள்.

இந்த 7-ஆம் வீடு பலவீனமாகி இதில் ஒரு பாபக் கிரக மிருந்து ...தை ஒரு சுபக்கிரகம் பார்த்தால் ஜாதகியைத் தன்னுடைய புருஷன் ...லக்கி விடுவான்.

சுக்கிரனுடைய நவாம்சையில் செவ்வாயும், செவ்வாயினுடைய ...வாம்சையில் சுக்கிரனும் இருக்கப் பிறந்தவள் விபசாரியாவாள்.

ஜென்ம லக்கினத்திற்கு 7-ல் சந்திரன், செவ்வாய், சுக்கிரன் இவர் ...ள் கூடிஇருந்தால் ஜாதகி தன்னுடைய புருஷனுடைய சம்மதத்துடன் ...பசாரஞ் செய்வாள்.

10-வது சுலோகம்:—ஜெனன காலத்தில் ஜென்ம லக்கினம் செவ்...யின் ராசி அல்லது சனியின் ராசியாகி அதில் சந்திரனும் சுக்கிரனும்

இருந்து பாபக் கிரகங்களால் பார்க்கப்பட்டால் ஜாதகியும் அவளுடைய தாயும் விபசாரஞ் செய்வார்கள்.

அஸ்தமன நவாம்சம் குஜனுடைய நவாம்சமாகி அஸ்தமன ராசியைச் சனி பார்க்கப் பிறந்த ஜாதகி நோயுள்ள யோனி உடையவளாகு

அஸ்தமன நவாம்சம் சுபருடைய நவாம்சமானல் ஜாதகி அழகுள்ள யோனியை உடையவளாகி புருஷனுக்குத் தகுந்த மனைவியாக இருப்பாள்.

வியாக்கியானம்:—ஜென்ம லக்கினத்திற்கு உதைய லக்கினம் என்று சொல்லுவது வழக்கம். இராசிகள் கிழக்கே உதையமாகி மேற்கே அஸ்தமனமாவதால், ஜென்ம காலத்தில் கிழக்கே உதையமாகும் ராசியை ஜென்ம லக்கினம் அல்லது உதைய லக்கினம் அல்லது லக்கினம் என்று சொல்லுவது வழக்கம். மேற்கே அஸ்தமனமாகும் ராசியை அஸ்தமன லக்கினம் என்று சொல்லுவது வழக்கம். இந்த அஸ்தமன லக்கினம் ஜென்ம லக்கினம் அல்லது உதைய லக்கினம் அல்லது லக்கினம் இருக்கும் ராசிக்கு 7-ஆவது ராசியாகும். ஆகையால் அஸ்தமன லக்கினம் என்பது 7-ஆவது ராசியாகும். ஜெனன காலத்தில் உச்சியில் இருக்கும் ராசியை மத்திய லக்கினம் என்று சொல்லுவது வழக்கம்.

ஜென்ம லக்கின ராசியின் நவாம்சையைக் கண்டு பிடிப்பதுபோலவே அஸ்தமன லக்கினத்தின் நவாம்சையைக் கணிக்க வேண்டியது. ஜென்ம லக்கின நவாம்சையை லக்கின நவாம்சை அல்லது நவாம்ச லக்கினம் என்றும் அஸ்தமன லக்கின நவாம்சையை அஸ்தமன நவாம்சை என்றும் சொல்லுவது வழக்கம்.

11, 12-வது சுலோகங்கள்.

ஜெனன காலத்தில் அஸ்தமன லக்கினம் அல்லது அஸ்தமன நவாம்சை,

1. சூரியனுடைய ராசியாகிய சிம்ம ராசியானல் ஜாதகியின் புருஷன் சாந்தமான சுபாவமுள்ளவனுகவும், அனேகவித வேலைகளை செய்பவனுகவும் இருப்பான்.

2. சந்திரனுடைய ராசியாகிய கடக ராசியானல் ஜாதகியின் புருஷன் சாந்தமான சுபாவமுடையவனுகவும் அதிக காமமுடையவனுகவும் இருப்பான்.

3. செவ்வாயினுடைய ராசியாகிய மேஷம் விருச்சிக ராசிகளானால் ஜாதகியின் புருஷன் கோபமுடையவனாகவும், தன் மனைவியுடன் பிரிய முள்ளவனாகவும் இருப்பான்.

4. புதனுடைய ராசிகளாகிய மிதுனம், கன்னி ராசிகளானால் ஜாதகியின் புருஷன் புத்தி நுட்பமுள்ளவனாகவும் சாஸ்திரங்கள் வாசித்தவனாகவும் இருப்பான்.

5. குருவினுடைய ராசிகளாகிய தனுசு, மீனம் ராசிகளானால் ஜாதகியின் புருஷன் எல்லா நற்குணங்களுடையவனாகி தன்னுடைய பஞ்சேந்திரியங்களையும் சரிவர அடக்கி ஆள்பவன்.

6. சுக்கிரனுடைய ராசிகளாகிய ரிஷபம் துலாம் ராசியானால் ஜாதகியினுடைய புருஷன் அழகுள்ளவனாகவும் மனைவியிடத்தில் அதிகப் பிரியமுள்ளவனாகவும் இருப்பான் என்பதாம்.

7. சனியினுடைய ராசிகளாகிய மகரம், கும்பம் ராசியானால் ஜாதகியினுடைய புருஷன் கிழவனாகவும் புத்தி யில்லாதவனாகவும் இருப்பான்.

13-வது சுலோகம்:—(1) ஜெனனகாலத்தில் லக்கினத்தில் சந்திரனும் புதனும் இருக்கப் பிறந்தவள் அனேக நற்குணங்களுடையவள், சுக போகங்களை அனுபவிப்பவள், சங்கீதம், சிற்பம், சித்திரம் முதலிய வைகளில் வல்லவளாக விருப்பாள்.

2 ஜெனன காலத்தில் ஜென்மலக்கினத்தில் சந்திரனும் சுக்கிரனும் இருக்கப் பிறந்தவள் தன்னுடைய சுக போகங்களையே கவனிப்பவளாவாள், பிறருடைய செல்வாக்கில் பொறாமை யுடையவளாக விருப்பாள்.

3. ஜெனன காலத்தில் லக்கினத்தில் புதனும் சுக்கிரனும் இருக்கப் பிறந்தவள் அழகுள்ளவள், புருஷனுக்குப் பிரியமுள்ளவளாயிருப்பாள், சங்கீதம், வீணை முதலிய வாத்தியங்களில் வல்லவளாகவிருப்பாள்.

4. ஜெனன காலத்தில் லக்கினத்தில் சந்திரன், புதன், சுக்கிரன் இம்மூவர்களும், அல்லது புதன், குரு, சுக்கிரன் இம்மூவர்களும் இருக்கப் பிறந்தவள் அதிக தனமுள்ளவளாகவும், நற்குணங்களுள்ளவளாகவும், சுக போகங்களை அனுபவிப்பவளாகவும் இருப்பாள்.

14-வது சுலோகம்:—ஜெனன காலத்தில் லக்கினத்திற்கு 8-ஆம் வீட்டில் பாபர் இருந்தால் ஜாதகி விதவையாவாள். 8-ஆம் வீட்டிற்கு

டையவன் இருக்கின்ற நவாம்சாதிபதியினுடைய தெசை அல்லது அ
தர் தெசை காலங்களில் விதவையாவாள்.

லக்கினத்திற்கு 8-ஆம் வீட்டில் பாபரிருந்து 2-ஆம் வீட்டில் சுப
இருந்தால் ஜாதகி தன்னுடைய புருஷனுக்கு முந்தி இறப்பாள்.

ஜெனன காலத்தில் சந்திரன், ரிஷபம், சிம்மம், கன்னி, விருச்
கம் இவைகளிலிருந்தால் ஜாதகி அற்ப புத்திரருள்ளவள்.

15-வது சுலோகம்:—ஜெனன காலத்தில் லக்கினம் ஒற்றை ரா
யாகி, சூரியன், செவ்வாய், குரு இவர்கள் பலவந்தர்களாகவும், சந்திரன்
புதன், சுக்கிரன் இவர்கள் பலவீனமாகி, சனி சம பலத்துடன் இரு
கப் பிறந்தவள் ஆண் சுபாவமுடையவளாகி இருப்பாள்.

ஜெனனகாலத்தில் லக்கினம் இரட்டைராசியாகி செவ்வாய், புதன்
குரு, சுக்கிரன் இவர்கள் பலமுள்ளவர்களாகவிருந்தால் ஜாதகி அனே
வேதசாஸ்திரங்களைப் படித்து பிரம்மக்கியானம் உடையவளாகி அதி
புகழ் பெற்றிருப்பாள் என்பதாம்.

16-வது சுலோகம்:—ஜெனன காலத்தில் லக்கினத்திற்கு 7-
பாபரிருந்து 9-ல் எவராகிலும் இருக்கப் பிறந்தவள் 9-ல் இருக்கின்
கிரகத்திற்குரிய சந்நியாசித்துவத்தை (a) நிச்சயமாக அடைவாள்.

இந்த அத்தியாயத்திற் சொல்லிய ஸ்ரீ ஜாதகப் பலன்களை எல்லாம்
கன்னிகாதான நிச்சய காலம், கன்னிகாதான காலம் விவாக முகூர்த்
காலம், பிரஷ்ணை காலம் ஆகிய இந்தக் காலங்களில் கிரகங்கள் இருக்கு
நிலையைக் கொண்டு பலன்களைச் சொல்லுவதற்குக்கூட பொருந்துமென
பதாம்.

(a) சன்னியாசிகளின் வகுப்புகள் 15-வது அத்தியாயம், 1-வ
சுலோகத்திற் சொல்லப்பட்டிருக்கின்றன.

குறிப்பு:—ஸ்ரீ ஜாதக விஷயமாக, வேறு நூல்களிலிருந்து எடு
துக் கடைசியில் கொடுத்திருப்பதைப் பார்க்கவும்.

25-வது அத்தியாயம்.

1-வது சுலோகம்:—ஜெனன காலத்தில் லக்கினத்திற்கு 8-ல் எந்
கிரகமும் இல்லாமலிருந்து, இந்த 8-ஆம் இடத்தை வலிவுள்ள கிரக
பார்த்தால் அந்த வலிவுள்ள கிரகத்திற்குரிய (a) வாதபித்த சிலேஷ்ம
என்று சொல்லப்பட்ட தாதுக்களில் ஒன்று அதிகமாகி அதனுல் வியா

ண்டாகி ஜாதகன் மரணமாவான். கால புருஷனுடைய தேக அவய வங்களில் 8-ஆம் இடத்திற்குரிய அவயவத்தில் (b) நோயுண்டாகும். இந்த 8-ஆம் இடத்தைப் பல கிரகங்கள் பார்த்தால் அந்தந்த கிரகங்க ளுக்குரிய தாதுக்களால் நோயுண்டாகி மரணம் சம்பவிக்கும். (c)

ஜெனன காலத்தில் லக்கினத்திற்கு 8-ஆம் வீட்டில்:—

1. சூரியனிருந்தால் அக்கினியால் மரணமும்,
2. சந்திரனிருந்தால் ஜலத்தால் மரணமும்,
3. செவ்வாயிருந்தால் ஆயுதத்தால் மரணமும்,
4. புதனிருந்தால் சுரத்தால் மரணமும்,
5. குருவிருந்தால் கண்டறிய முடியாத நோயால் மரணமும்,
6. சுக்கிரனிருந்தால் தாகவிடாயால் மரணமும்,
7. சனியிருந்தால் பசியால் மரணமும் நேரிடும் என்பதாம்.

லக்கினத்திற்கு 8-ஆம் வீடு சர ராசியானல் அன்னிய தேசத்தி லும், ஸ்திர ராசியானல் உள்ளூரிலும், உபய ராசியானல் அன்னிய தேசத்திலிருந்து உள்ளூருக்கு வரும் வழியிலும், மரணம் நேரிடும்.

(a) சூரியனாகில் பித்தத்தினாலும், சந்திரனாகில் வாய்வு, சிலேஷ்மத் தினாலும், செவ்வாயாகில் பித்தத்தினாலும், புதனாகில் வாய்வு, பித்தம், சிலேஷ்மத்தினாலும், குருவாகில் சிலேஷ்மத்தினாலும், சுக்கிரனாகில் வாய்வு சிலேஷ்மத்தினாலும், சனியாகில் வாய்வினாலும் நோயுண்டாகும். 2-வது அத்தியாயம், 8, 9, 10, 11-வது சுலோகங்களைப் பார்க்கவும். (b) 5-வது அத்தியாயம், 23-வது சுலோகத்தையும், 1-வது அத்தியா யம் 4-வது சுலோகத்தையும் பார்த்து அவயவம் இன்னதென்று அறி யவும்.

2-வது சுலோகம்:—ஜெனன காலத்தில் சூரியனும் செவ்வாயும் கூடி 4-ல் அல்லது 10-ல் இருந்தால் ஜாதகன் கற்களால் (a) காயம்பட்டு இறப்பான்.

ஜெனன காலத்தில் சந்திரன் 7-லும், செவ்வாய் 10-லும், சனி 4-லும் இருந்தால் ஜாதகன் கிணற்றில் விழுந்து இறப்பான்.

ஜெனன காலத்தில் சூரியனும், சந்திரனும் கூடி கன்னியிலிருந்து பாபர்களால் பார்க்கப்பட்டால் ஜாதகன் தன்னுடைய பந்துக்களால் இறப்பான்.

ஜெனன காலத்தில் ஜெனன லக்கினம் உபயராசியாகி அதில் சூரிய னும் சந்திரனும் கூடி இருந்தால் ஜாதகன் ஜலத்தில் விழுந்து இறப் பான்.

(a) மலையின்மேலிருந்து கீழே விழுதல், மலையிலுள்ள பாறைகள் மேலே விழுதல், கல்லால் அடிபடுதல் முதலிய காரணங்களால் இறத் தல்.

3-வது சுலோகம்:—ஜெனன காலத்தில் சந்திரன் மகரத்திலும், சனி கடகத்திலும் இருந்தால் ஜாதகன் மகோதரம் முதலிய ஜல சம் மந்தமான நோயால் இறப்பான்.

ஜெனன காலத்தில் சந்திரன் மேஷத்தில் அல்லது விருச்சிகத்தி லிருந்து பாபக் கிரகங்களுக்கு மத்தியில் (a) இருந்தால் ஆயுதத்தாலும் அல்லது அக்கினியாலும் ஜாதகன் இறப்பான்.

ஜெனன காலத்தில் சந்திரன் கன்னியிலிருந்து, பாபக் கிரகங்களு க்கு மத்தியில் (b) இருந்தால் ஜாதகன் உடம்பில் இரத்தம் இல்லாமை யாலும் அல்லது கெட்டுப்போவதாலும் இறப்பான்.

ஜெனன காலத்தில் சந்திரன் மகரம் அல்லது கும்பத்திலிருந்து பாபக்கிரகங்களுக்கு மத்தியில் (c) இருந்தால் ஜாதகன் அக்கினியா லும், அல்லது தூக்கு போட்டுக் கொள்ளுவதாலும், அல்லது கயிற்று லும், அல்லது உயரமான விடத்திலிருந்து கீழே விழுவதாலும் இறப் பான்.

(a) (b) (c) பாபக் கிரகங்களுக்கு மத்தியில் சந்திரன் இருத்தல் என்றால், பாபர்களும் சந்திரனும் ஒரே ராசியில் இருந்தபோதுங்கூட சந்திரன் பாபர்களுக்கு மத்தியில் இருத்தல் என்றும், அல்லது பாபர்க ளும் சந்திரனும் வெவ்வேறு இராசியில் இருக்கும்போதும் சந்திரனுக்கு 12-ல் பாபரும், 2-ல் பாபரும் இருத்தல் என்றும் அர்த்தமாகும். சூ க்கமாகச் சொல்லும்போது சந்திரன் ஸ்புட ரீதியாய்ப் பாபர்களுக்கு மத்தியில் இருத்தல் என்பதாம்.

4-வது சுலோகம்:—ஜெனனகாலத்தில் இரண்டு பாபர்கள் 5-லும் அல்லது 9-லும் இருந்து சுபர்களால் பார்க்கப் படாவிட்டால் சிறைச்சா லையில் அல்லது ஓரிடத்தில் அடைக்கப்பட்டு இறப்பான்.

ஜெனன காலத்தில் 8-ஆம் வீட்டின் திரேகாணம் சர்ப்பம் அல் லது பசம் அல்லது நிகலத் திரேகாணமானால் (a) ஜாதகன் சிறைச்சா லையில் அல்லது ஓரிடத்தில் அடைக்கப்பட்டு இறப்பான்,

ஜெனன காலத்தில் லக்கினத்தில் சூரியனும், 7-ஆம் வீடு கன்னி ாகி அதில் சந்திரன் ஒரு பாபருடன் கூடி இருந்து சுக்கிரன் மேஷத் திலிருந்தால், ஜாதகன் தன்னுடைய வீட்டில் ஒரு ஸ்திரீயின் காரணத் ால் இறப்பான்.

(a) சர்பத்திரேகாணம் அல்லது பாசத் திரேகாணம் என்பது கட த்தில் 2-வது திரேகாணமும், விருச்சிகத்தில் முதல் திரேகாணமும், னத்தில் 3-வது திரேகாணமும் ஆகும். நிகலத் திரேகாணம் என்பது கரத்தின் 1-வது திரேகாணமாகும்.

5-வது சுலோகம்:—ஜெனன காலத்தில் லக்கினத்திற்கு 4-ல் சூரி ன் அல்லது செவ்வாய்இருந்து 10-ல் சனி யிருக்கப்பிறந்தவன் சூலம், ட்டி முதலியவைகளால் குத்தப்பட்டும் கழுமரத்தில் ஏற்றப்பட்டும் றப்பான்.

ஜெனன காலத்தில் சூரியனும், தேய்பிறை சந்திரனும், செவ்வா ம், சனியும் லக்கினத்தில் அல்லது 5-ல், அல்லது 9-ல் கூடி இருந் ால்ஜாதகன் சூலம், ஈட்டி முதலியவைகளால் குத்தப்பட்டும், அல்லது ழுமரத்தில் ஏற்றப்பட்டும் இறப்பான்.

ஜெனன காலத்தில் லக்கினத்திற்கு 4-ல் சூரியன் இருந்து செவ் ாய் தேய்பிறை சந்திரனுல் இந்த செவ்வாய் பார்க்கப்பட்டால் ஜாத ன் சூலம், ஈட்டி முதலியவைகளால் குத்தப்பட்டும், அல்லது கழு ரத்தில் ஏற்றப்பட்டும் இறப்பான்.

ஜெனன காலத்தில் லக்கினத்திற்கு 4-ல் சூரியனிருந்து 10-ல் செவ்வாயிருந்து இந்த செவ்வாயைச் சனி பார்த்தால், ஜாதகன் மரத் ண்டினுல் தாக்கப்பட்டு இறப்பான்.

6-வது சுலோகம்:—ஜெனன காலத்தில் சூரியன் லக்கினத்திற்கு -லும், தேய்பிறை சந்திரன் 8-லும், செவ்வாய் 10-லும், சனி லக்கின ்திலும் இருக்கப் பிறந்தவன் தடி, கொம்பு, கழி, கோல் இவைகளால் அடிக்கப்பட்டு இறப்பான்.

ஜெனன காலத்தில் சூரியன் லக்கினத்திற்கு 5-லும், தேய்பிறை ந்திரன் 10-லும், செவ்வாய் 9-லும், சனி லக்கினத்திலும் இருக்கப் பிறந்தவன், புகையாலும், அக்கினியாலும், சிறைச்சாலையி லிருப்பதா லும், அல்லது ஓரிடத்தில் அடைக்கப்பட்டிருப்பதாலும், நன்ருய் அடி க்கப்படுவதாலும் இறப்பான்.

7-வது சுலோகம்:—ஜெனன காலத்தில் சூரியன் லக்கினத்திற்கு -லும், செவ்வாய் 4-லும், சனி 10-லும், இருக்கப் பிறந்தவன் அக்கி னியாலும், ஆயுதத்தாலும், இராஜ தண்டனையாலும் இறப்பான்.

ஜெனன காலத்தில் சந்திரன் லக்கினத்திற்கு 4-லும், செவ்வாய் 10-லும், சனி 2-லும் இருக்கப் பிறந்தவன் தேகத்தில் புண், இரணம் முதலியவை உண்டாகி பூச்சி, புழுக்கள் முதலியவை பிடிக்கப்பட்டு இறப்பான்.

8-வது சுலோகம்:—ஜெனன காலத்தில் லக்கினத்திற்கு 10-ல் சூரியனும், 4-ல் செவ்வாயும், இருக்கப் பிறந்தவன் வண்டி, வாகனம் முதலியவைகளிலிருந்து கீழே விழுந்து அதனால் இறப்பான்.

ஜெனன காலத்தில் சூரியன், சந்திரன், சனி கூடி லக்கினத்திலும், செவ்வாய் 7-லும், இருக்கப் பிறந்தவன் யந்திரங்களில் அகப்பட்டு அதனால் இறப்பான்.

ஜெனன காலத்தில் சந்திரன் மகரத்திலாகிலும் அல்லது கும்பத்திலாகிலும் இருந்து, செவ்வாய் துலாத்திலும், சனி மேஷத்திலும் இருக்கப் பிறந்தவன் மலக்குப்பையில் அகப்பட்டுக்கொண்டு இறப்பான்.

ஜெனன காலத்தில் சூரியன் லக்கினத்திற்கு 7-லும், தேய்பிறை சந்திரன் 10-லும், செவ்வாய் 4-லும், இருக்கப் பிறந்தவன் மலக்குப்பையில் அகப்பட்டுக் கொண்டு இறப்பான்.

9-வது சுலோகம்:—ஜெனன காலத்தில் வலிவுள்ள செவ்வாய் தேய்பிறைச் சந்திரனைப் பார்த்தும், சனி லக்கினத்திற்கு 8-லும், இருக்கப் பிறந்தவன் ஆசனத்தில் மூலம், பௌத்திரம் முதலியவைகள் புறப்பட்டு அதில் புழுக்கள் பிடிப்பதாலும், அல்லது மூலம், பௌத்திரம் இவைகளைப் பாஷாணத்தால் அல்லது அக்கினியினால் சுடுவதாலும், அல்லது ஆசனத்தில் ஆயுதங்களால் அறுப்பதாலும் ஜாதகன் இறப்பான்.

10-வது சுலோகம்:—ஜெனன காலத்தில் சூரியனும், செவ்வாயும் கூடி லக்கினத்திற்கு 7-லும், தேய்பிறைச் சந்திரன் 4-லும், சனி 8-லும், இருக்கப் பிறந்தவன் பட்சிகளால் இறப்பான்.

ஜெனன காலத்தில் சூரியன் லக்கினத்திலும், சந்திரன் 9-லும், செவ்வாய் 5-லும், சனி 8-லும் இருக்கப் பிறந்தவன் மலையிலிருந்து விழுவதாலும், சுவர் விழுவதாலும், மின்னலினாலும், இறப்பான்.

11-வது சுலோகம்:—மரணம் உண்டாகும் காரணத்தைத் தெரிவிக்கும் கிரக யோகங்கள் இந்த அத்தியாயத்தில் சொல்லிபபடி ஜெனன காலத்தில் நேராவிட்டால், லக்கினத்திற்கு 22-வது திரேகாணத்தால் (உ) மரணத்தை விளைவிக்கும் காரணத்தை அறியவேண்டியது. இந்

22-வது திரேகாணாதிபதி அல்லது இந்த 22-வது திரேகாணம் எந்த ராசியின் திரேகாணமாக (b) நேரிடுகின்றதோ அந்த ராசிபாதிபதி ஆகிய இவ்விருவரில் எவர் வலிவுள்ளவரோ அவருக்குச் சொல்லியுள்ள காரணத்தாலும் (c) அல்லது அக்கினி, ஜலம் முதலியவைகளாலும் (d) மரணம் நேரிடும் என்பதாம்.

(a) லக்கினத்திலிருந்து 22-வது திரேகாணத்திற்கு கரதிரேகாணம் என்று பெயர். ஒரு ராசியில் 3-திரேகாணங்கள் இருப்பதால், 22-திரேகாணத்திற்கு 7-ராசி சென்று 8-வது ராசி ஆகும். ஆகையால் 22-வது திரேகாணம் என்பது 8-வது ராசியைச் சார்ந்தது. லக்கினத்தில் முதல் திரேகாணம் ஜெனனமானால் 22-வது திரேகாணம் என்பது 8-ஆம் ராசியின் முதல் திரேகாணமாகும். ஜென்ம லக்கினம் இரண்டாவது திரேகாணமானால், 22-வது திரேகாணம் 8-ஆம் ராசியின் 2-வது திரேகாணமாகும். ஜென்ம லக்கினம் மூன்றாவது திரேகாணமானால் 22-வது திரேகாணம், 8-ஆம் ராசியின் 3-வது திரேகாணமாகும்.

(b) உதாரணமாக தனுசில் முதல் திரேகாணத்தில் லக்கினம் உதையமானால் இதற்கு 22-வது திரேகாணம் கடகத்தின் முதல் திரேகாணமாகும். இந்த கடகத் திரேகாணம், கடகம், விருச்சிகம், மீனம் ஆகிய இம்மூன்று ராசிகளின் திரேகாணமாக நேரிடுவதால், இம்மூன்று ராசிகளுக்குரிய அதிபதிகளாகிய சந்திரன், செவ்வாய், குரு இவர்களில் எவர் மிகவும் வலிவுள்ளவரென்று அறியவேண்டியது.

(c) பிறகு இந்த வலிவுள்ளவருக்கு, வாத பித்த சிலேஷ்மம்என்ற தாதுக்களில் எந்த தாது உரியதோ அந்த காரணத்தால் மரணம் நேரிடும். (2-வது அத்தியாயம், 8, 9, 10, 11-வது சுலோகங்களைப் பார்க்கவும்.) மேலும்,

(d) அக்கினி, ஜலம் என்று சொல்லப்பட்ட காரணங்கள், இந்த அத்தியாயம் 1-வது சுலோகத்தில் சொல்லியபடி சூரியனாகில் அக்கினியாலும், சந்திரனாகில் ஜலத்தாலும் ஆகிய இவ்வித காரணங்களாலும் மரணம் நேரிடும் என்பதாம்.

12-வது சுலோகம்:—ஜெனன காலத்தில் ஜென்ம லக்கின நவாம்சாதிபதி இருக்கின்ற ராசிக்குறியவிடத்தில் (a) ஜாதகனுடைய (கிரியாம் என்று சொல்லப்பட்ட) மரணம் சம்பவிக்கும்.

அல்லது ஜென்ம லக்கின நவாம்சாதிபதி இருக்கின்ற ராசியிலுள்ள கிரகத்திற்குரிய ராசியினுடைய இடத்தில் ஜாதகனுடைய மரணம் நேரிடும்.

அல்லது ஜென்ம லக்கின நவாம்சாதிபைப் பார்க்கின்ற கிரகத்தின் ராசிக்குரிய விடத்தில் ஜாதகனுக்கு மரணம் நேரிடும்.

அல்லது ஜென்ம லக்கின நவாம்சாதிபதி இருக்கின்ற நவாம்சாதிபதியின் ராசியினுடைய இடத்தில் ஜாதகனுக்கு மரணம் நேரிடும். (b) உண்மையில் ஜாதகனுக்கு மரணம் சம்பவிக்கும் இடத்தை இங்குசொல்லியவைகளை யெல்லாம் நன்றாக ஆராய்ந்து யோசித்து தீர்மானிக்க வேண்டியதவசியம்.

ஜென்ம லக்கின ராசியில் உதயமான பாகம் (அதாவது செல்லான நாழிகை விநாடி) போக இன்னம் உதயமாக வேண்டிய பாகம் (அதாவது லக்கினத்தில் இன்னம் செல்லாக வேண்டிய நாழிகை விநாடி) உதையமாக எவ்வளவு நேரம் செல்லுமோ அவ்வளவு நேரம் மரணத்திற்கு முந்தி ஸ்மரணையின்றி இருப்பான்.

ஜென்ம லக்கின ராசியில் உதயமான பாகம் (அதாவது லக்கினத்தில் செல்லான நாழிகை விநாடி) போக இன்னம் உதையமாக வேண்டிய பாகம் உதையமாக எவ்வளவு நேரம் செல்லுமோ அவ்வளவு நேரம் (அதாவது லக்கினத்தில் இன்னம் செல்லாக வேண்டிய நாழிகை விநாடியளவு) மரணத்திற்கு முந்தி ஜாதகன் ஸ்மரணையின்றி இருப்பான். ஜென்ம லக்கினத்தை லக்கினாதிபதி பார்த்தால் மேற்சொல்லிய கால அளவை இரண்டு மடங்காகவும், சுபர்கள் பார்த்தால் மூன்று மடங்காகவும் அதிகரிக்கவேண்டியது. (b)

(a) (b) ராசிகளுக்குரிய விடங்கள் 1-வது அத்தியாயம், 5-வது சுலோகத்தின்கீழ் இராசிகளின் வாசஸ்தானம் என்று சொல்லி கொடுத்திருப்பதைப் பார்க்கவும். பெரும்பான்மையோர்களுக்கும் வீட்டிலும், சிறு பான்மையோர்களுக்கும் வீட்டிற்கு வெளியேயுள்ள விடங்களிலும் மரணம் நேரிடுவது பிரத்தியட்சமாகவிருப்பதால், 2-வது அத்தியாயம் 13-வது சுலோகத்தில் சொல்லியபடி மரணம் நேரிடும் இடத்தை நிர்ணயிக்க வேண்டும் என்பர் சிலர்.

(c) 12 இராசிகளும் சுமார் 60 நாழிகையில் ஒரு தடவை உதயமாவதால், ஒரு ராசி உதையமாகச் சுமார் 5 நாழிகை தோராயமாகக் குணக்கிட ஆகும். ஜென்ம லக்கினத்தில் செல்லாக வேண்டியது சுமா

ாழிகை என்று வைத்துக்கொண்டாலுங்கூட சுமார் 15 நாழிகைக்கு மற்பட்டு ஒரு ஜாதகன் ஸ்மரணை தப்பி இருக்க முடியாது என்று ந்த சுலோகத்தால் ஏற்படும். ஆனல் பிரத்திபட்சத்தில் ஒரு கிரா த்திலாகிலும், ஒரு பட்டிணத்திலாகிலும் மரணத்திற்கு முந்தி, ரைநாள், அல்லது ஒருநாள் அல்லது 2 நாள் இப்படியாக மரணை தப்பி, ஸ்மரணை தப்பி இருப்பது சகஜமானபடியால், நக்கும்படியான காலத்தை எவ்வளவு அதிகப்படுத்தக் கூடு மா அவ்வளவு அதிகப்படும்படியாக இந்த சுலோகத்திற்கு ர்த்தஞ் செய்ய வேண்டியது. அதாவது லக்கினதிபதி பார்த் ால் இரண்டு மடங்கு என்றும், சுபர்கள் பார்த்தால் 3 மட ு என்றும் சொல்லி இருப்பதால், லக்கினதிபதியும் சுபரும் ் காலத்தில் பார்த்தால் லக்கினதிபதிக்காக 2 மடங்கும், சுபருக்காக மடங்கும் ஆக மொத்தம் 5 மடங்காகும். சந்திரனும் புதனும் சுப ் ஒரு ஜாதகத்தில் இருப்பதாக வைத்துக் கொண்டாலுங்கூட அப் பாது சந்திரன், புதன், குரு, சுக்கிரன் ஆக 4 சுபர்களும் லக்கினதி தியும் லக்கினத்தைப் பார்ப்பார்களானல் ஒவ்வொரு சுபருக்காக மூன் மடங்கும், லக்கினதிபதிக்காக இரண்டு மடங்கும். ஆக மொத்தத் ் 14 மடங்கிற்கு மேற்பட்டு வாரா. ஆனல் கூட்டுவதற்குப் பதிலாக ன்கு மூன்றுகளையும் ஒரு இரண்டையும் பெருக்குவோமானல் 162 டங்கு வரும் இந்த சுமார் 5 நாழிகையை 162 ஆல் பெருக்க சுமார் 10 நாழிகை அல்லது சுமார் 14 நாள்கள் வரும். மரணத்திற்கு முந்தி மார் 14 நாள்கள் வரும். மரணத்திற்கு முந்தி சுமார் 14 நாள்கள் ரையிலும் மூர்ச்சையாகி ஸ்மரணை இல்லாமல் விழுந்து கிடப்பது சாத்தியமானதல்லவென்று ஏற்படக்கூடும்.

13-வது சுலோகம்:—ஜெனன காலத்தில் லக்கினத்திற்கு 22 து திரேக்காணம்:—

அக்கினித் திரேகாண மானல் (a) ஜாதகனுடைய தேகம் நெருப் னல் தகனஞ் செய்யப்பட்டு சாம்பலாகும்.

ஜலத்திரேகாண மானல், (b) ஜாதகனுடைய தேகம் ஜலத்திலே போடப்பட்டு அழுகிப் போகும்.

மிஸ்ர திரேகாண மானல் (c) ஜாதகனுடைய தேகம் அக்கினியி ல் தகனஞ் செய்யப்படாமலும், ஜலத்தில் போடப்படாமலும் அழுகி லர்ந்துபோகும்.

சர்பத் திரேகாண மானால் (d) ஜாதகனுடைய தேகம், நாய் நரி கள், காகம், கழுகு, அலகை முதலிய மிருகங்களாலும் பட்சிகளாலும் புசிக்கப்படும்.

ஜாதகன் இறந்த பிற்பாடு அவனுடைய தேகத்திற்கு நேரிடும் மாறு பாடுகள் இவ்விதமாகச் சொல்லப்பட்டன. ஜாதகனுடைய முன் பின் ஜென்மங்களைப்பற்றி அறியவேண்டியதானால் இவைகளைப் பற்றிச்சொ ல்லுகின்ற பெரிய கிரந்தங்களைப் படித்து அறியவேண்டியது.

(a) அக்கினித் திரேகாணம் என்பது பாபருடைய திரேகாணம்.

(b) ஜலத் திரேகாணம் என்பது சுபருடைய திரேகாணம்.

(c) மிஸ்ர திரேகாணம் என்பது சுபருடைய திரேகாணமாகி அதில் பாபரும், பாபருடைய திரேகாணமாகி அதில் சுபரும்இருப்பது என்பதாம்.

(d) சர்பத் திரேகாணம் என்பது கடகத்தில் இரண்டாவது திரே காணமும், விருச்சிகத்தில் முதல் திரேகாணமும், மீனத்தில் மூன்று வது திரேகாணமும் ஆகும்.

14-வது சுலோகம்:—ஜெனன காலத்தில் சூரியன் அல்லது சந்திரன் இருக்கின்ற திரேகாணாதிபதிகளில் வலிவானவர்:—

1. சூரியனாகில் பூலோகத்திலிருந்தும்,

2. சந்திரனாகில் பிதுர் லோகத்திலிருந்தும்,

3. செவ்வாயாகில் பூலோகத்திலிருந்தும்,

4. புதனாகில் நரகத்திலிருந்தும்,

5. குருவாகில் தெய்வலோகத்திலிருந்தும்,

6. சுக்கிரனாகில் பிதுர் லோகத்திலிருந்தும்,

7. சனியாகில் நரகத்திலிருந்தும், ஜாதகன் வந்து பிறந்தவன் என்பதாம்.

ஜெனன காலத்தில் சூரியன் அல்லது சந்திரன் இருக்கின்ற திரே காணாதிபதிகளில் வலிவானவர்:—

1. உச்சமானால் முன் ஜென்மத்தில் உன்னத அந்தஸ்திலும்,

2. நீச்சமானால் முன் ஜென்மத்தில் தாழ்ந்த அந்தஸ்திலும்,

3. உச்சமும் நீச்சமுமில்லாமலிருந்தால் மத்திம அந்தஸ்திலும், இருந்தவன் ஜாதகன் என்று அறியவேண்டியது.

15-வது சுலோகம்:—ஜெனன காலத்தில் லக்கினத்திற்கு 6, 8-ஆம் ஒருவருமில்லாமலிருந்து, லக்கினத்திற்கு 6, 8-ஆம் ராசிகளுக்குரிய திரேகாணாதிபதிகளில் (a) எவர் வலிவுள்ளவரோ அந்த கிரகத்திற்குச் சொல்லிய (b) லோகத்திற்கு ஜாதகன் இறந்தபிறகு செல்வான்.

லக்கினத்திற்கு 6-அல்லது 7-அல்லது 8-ஆம் ராசியிலிருக்கின்ற கிரகத்திற்குரிய லோகத்திற்கு (c) ஜாதகன் இறந்தபிறகு செல்வான்.

ஜென்ம லக்கினத்திற்கு 6-ல் அல்லது கேந்திரத்தில் அல்லது 8-ல் குரு இருந்து உச்சமாகவிருந்தாலும், அல்லது ஜென்ம லக்கினம் மீனமாகி அதில் குரு இருந்து, குரு சுபருடைய நவாம்சையிலும், மற்ற கிரகங்கள் பலவீனமாகவும் இருந்தால் ஜாதகன் மரணத்திற்குப் பிந்தி மோட்சத்தை அடைவான் என்பதாம். (d)

(a) 6, 8-ஆம் ராசிகளுக்குரிய திரேகாணாதிபதிகள் என்றால் லக்கினத் திரேகாணத்திற்கு 16-வது திரேகாணாதிபதி என்றும், லக்கினத் திரேகாணத்திற்கு 22-வது திரேகாணாதிபதி என்றும் அறியவும்.

(b) கிரகங்களுக்குரிய லோகங்கள் இந்த அத்தியாயம் 14-வது சுலோகத்தில் சொல்லிய பிரகாரம் ஆகும்.

(c) ஜாதகன் இறந்து மறு ஜெனனத்தில் அடையும் லோகத்தை, ஜெனன காலத்திலிருக்கும் கிரக யோகங்களுக்குச் சொல்லியதுபோலவே, மரண காலத்திலிருக்கும் கிரக யோகங்களைக் கொண்டு அறியலாம்.

(d) 6, 7, 8, இந்த ராசிகளில் ஒன்றுக்கு மேற்பட்ட கிரகங்களிருந்தால் மிகவும் வலிவுள்ள கிரகத்திற்குரிய லோகம் என்று அறியவும்.

26-வது அத்தியாயம்.

இந்த அத்தியாயம் நஷ்ட ஜாதக அத்தியாயம் என்று சொல்லப்படும். இறந்த காலம், நிகழ் காலம், எதிர் காலம் என்று சொல்லப்பட்ட முக்கால சம்பவங்களை அறிவதற்குப் பல வழிகள் இருக்கின்றன. அவற்றுள் ஜெனன ஜாதகத்தைக் கொண்டு அறிவது ஒன்றாகும். ஜெனன ஜாதகத்தை அறிவதற்கு ஜெனனமான வருஷம், மாதம்,

தேதி, நாழிகை, இடம் இவைகள் தெரியவேண்டியது அவசியம். இவை
கள் தெரிந்தால் தான் ஜாதகம் கணிக்க முடியும் இவைகளில் (இட
தவிர) மற்ற அம்சங்களில் ஏதாகிலும் ஒன்று தெரியாவிட்டால் ஜா
கம் கணிக்கவே முடியாது. (இடம் தெரியாமலிருந்து மற்ற அம்சங்
ளெல்லாம் தெரிந்திருந்தால் ஜாதகம் தோராயமாகக் கணிக்கக்கூடு
ஒருவன் பிறந்த வருஷம் மாதம், தேதி, நாழிகை, இவைகளைக்குறித்
வைக்காததாலும், அல்லது குறித்து வைத்திருக்கும் குறிப்பு கைசே
ர்ந்து தவறிப்போனதாலும், அல்லது எழுதி வைத்திருந்த ஜாதக
கைசோர்ந்து போனதாலும், ஜாதகம் திண்ணமாகக் கணிப்பது அசா
தியமாகவாகி விடுகின்றது. ஆகையால் அவனுடைய ஜாதகத்தை வே
வழிகளில் கணிக்கும் விதத்தை இந்த அத்தியாயத்தில் ஜாதகம் கணிப்
தற்கு "நஷ்ட ஜாதக கணிதம்" என்று வராஹமிகிரர் சொல்லு
கிறார்.

இப்படி எங்கும் நிறைந்துள்ள ஒரு தெய்வம் மனிதன் செய்யு
காரியங்களுக்கெல்லாம் ஏதுவாக இருக்கின்றார். ஆதலால் ஒருவ
தன்னுடைய ஜாதகத்தைக் கணித்துக் கொடுக்க வேண்டும் என்று செ
ல்லி, பிரஷ்ணை கேட்கும் காலத்தில் நடக்கும் சம்பவங்களெல்லா
அந்த தெய்வத்தால் நடக்கின்றனவென்றும், அந்த தெய்வம், ஜாதக
கணிப்பதற்கு வேண்டிய உதவிகளைச் செய்கின்றார் என்றும் கருதி இ
மாதிரியாக ஜாதகம் கணிக்கும் வழிகள் சொல்லப்பட்டிருக்கின்றன என்
பதாம்.

ஒருவன் பிறந்த வருஷம் மாதம், தேதி, நாழிகை, இடம் இவை
கள் தெரிந்தால் ஜாதகம் கணிக்கக்கூடும் என்று முன்னமே சொல்லி
தால் இவைகளைத் தெய்வ பலத்தால் பிரஷ்ணை கால வேளையிலிருந்
அறியவேண்டும். இந்த அத்தியாயம் 1-வது சுலோகம் முதல் 4-வது
சுலோகம் வரையிலுமுள்ள சுலோகங்களால் பிரஷ்ணை கேட்பவனுடை
ஜெனன வருஷம் மாதம் தேதி நாழிகை அறியக்கூடும். இவைகளை
அறிந்தபிறகு ஜெனன வருஷத்திய பஞ்சாங்கம் வைத்துக்கொண்டு ஜாத
கம் கணிப்பதே யுக்தமாகும். இப்படிச் செய்யாமல் இந்த அத்தியா
த்தில் 4-வது சுலோகத்திற்கு மேற்பட்ட சுலோகங்களில் சொல்லி
பிரகாரம் கணிக்க முயலுவோமானால் ஜாதகங்களிலுள்ள அம்சங்களா
கிய நட்சத்திரம், பட்சம், திதி, லக்கினம் ஆகிய இவைகள் ஒன்றுக்கொ
ன்று ஒற்றுமையாயிராமல் மாறுபாடாக வரக்கூடும். அப்போது நஷ்ட
ஜாதகம் கணிக்கும் ... தெரியாம

திகைத்து நிற்க வேண்டியதாகவிருக்கும். ஆகையால் 1, 2, 3, 4-வது சுலோகங்களில் சொல்லியபடி ஜெனனவருஷம், மாதம், தேதி, நாழிகை இவைகளை அறிந்துகொண்டு ஜாதகம் கணிப்பதே விசேஷமாகும்.

இந்த அத்தியாயத்தில் நஷ்ட ஜாதகம் கணித்துக் கொடுக்கவேண்டுமென்று வந்து பிரஷ்ணை கேட்பவனை "நஷ்ட ஜாதகன்" என்றும் நஷ்ட ஜாதகனை "ஜாதகன்" என்றும் அர்த்தம் ஆகும்படி "நஷ்ட ஜாதகன்" "ஜாதகன்" என்ற பதங்கள் உபயோகப்படுத்தப்பட்டிருக்கின்றன. அதாவது "நஷ்ட ஜாதகன்" என்றால் பிரஷ்ணை கேட்பவன், ஜாதகன் என்றால் நஷ்ட ஜாதகன் அல்லது பிரஷ்ணை கேட்பவன் என்பதாம்.

1-வது சுலோகம்:—ஒருவனுடைய ஜெனன காலம் அல்லது கெர்ப்பாதானக் காலம் தெரியாமலிருந்தால் அவனுடைய ஜெனனகாலத்தை பிரஷ்ணை காலத்திலிருந்து நிர்ணயஞ் செய்யலாம். பிரஷ்ணை காலத்தில் உதயமாகும் லக்கினத்தில் முதல் அரைபாகத்திற்குள் உதயமாகியிருந்தால் ஜாதகனுடைய ஜெனனகாலம் "உத்தராயனம்" என்றும், முதல் அரை பாகத்திற்குமேல் உதயமாகி இருந்தால் "தக்ஷணாயனம்" என்றும் அறியவும்.

வியாக்கியானம்:—தைமீ முதல் ஆனிமீ முடியும் வரையிலும் "உத்திராயனம்" என்றும், ஆடி முதல் மார்கழி முடியும்வரையும் "தக்ஷணாயனம்" என்றுஞ் சொல்லுகிறார்கள். இது சுமார் 1400–வருடங்களுக்கு முந்தி சரியாகவிருந்தது. தற்காலத்தில் இரண்டாவது அத்தியாயம் 12-வது சுலோகத்தின்கீழ் சொல்லியதுதான் சரியென்று ஒப்புக்கொள்ள வேண்டியதாக இருக்கின்றது. தற்காலத்திற்குப் பொருத்தமாயுள்ள சரியான காலத்தின் பிரகாரம் சொல்வது தான் இந்த சுலோகத்திற்குப் பொருந்தும் என்றறியவும். பிரஷ்ணை காலம் என்பது கேள்வி கேட்கும் காலம் ஆகும்.

2-வது சுலோகம்:—பிரஷ்ணை லக்கினத்தில் முதல் திரேகாணம் உதையமானால், பிரஷ்ணை லக்கின ராசியிலேயே தான் குரு, ஜாதகனுடைய ஜெனன காலத்தில் இருக்கவேண்டும்.

பிரஷ்ணை லக்கினத்தில் இரண்டாவது திரேகாணம் உதையமானால் பிரஷ்ணை லக்கின ராசியின் 5-வது ராசியே தான், ஜாதகனுடைய ஜெனன காலத்தில் குரு இருக்கும் ராசியாகும்.

பிரஷ்ணை லக்கினத்தில் மூன்றுவது திரேகாணம் உதையமானால், பிரஷ்ணை லக்கின ராசியின் 9-வது ராசியே தான், ஜாதகனுடைய ஜெனன காலத்தில் குரு இருக்கும் ராசியாகும். (a) பிறகு ஜாதகனு

டைய வயதை அவனுடைய முகத்தைப் பார்த்து யோசித்து யூகிக்க வேண்டியது, (b)

பிரஷ்ணை காலத்தில் சூரியன் பிரஷ்ணை லக்கினத்திலிருந்தாலும், அல்லது சூரியனுடைய திரேகாணம் உதையமானாலும், ஜாதகனுடைய ஜெனனம் கிரீஷ்மரிதுவில் சேர்ந்தது என்றறியவும்.

பிரஷ்ணை காலத்தில் சந்திரன் பிரஷ்ணை லக்கினத்திலிருந்தாலும் அல்லது சந்திரனுடைய திரேகாணம் உதையமானாலும் ஜாதகனுடைய ஜெனனம் வர்ஷரிதுவாகும்.

பிரஷ்ணை காலத்தில் செவ்வாய் பிரஷ்ணை லக்கினத்திலிருந்தாலும் அல்லது செவ்வாயினுடைய திரேகாணம் உதையமானாலும் ஜாதகனுடைய ஜெனனம் கிரீஷ்ம ரிதுவாகும்.

பிரஷ்ணை காலத்தில் புதன் பிரஷ்ணை லக்கினத்திலிருந்தாலும் அல்லது புதனுடைய திரேகாணம் உதையமானாலும் ஜாதகனுடைய ஜெனனம் சரத்ரிதுவாகும்.

பிரஷ்ணை காலத்தில் குரு பிரஷ்ணை லக்கினத்திலிருந்தாலும் அல்லது குருவினுடைய திரேகாணம் உதையமானாலும் ஜாதகனுடைய ஜெனனம் ஹேமந்தரிதுவாகும்.

பிரஷ்ணை காலத்தில் சுக்கிரன் பிரஷ்ணை லக்கினத்திலிருந்தாலும் அல்லது சுக்கிரனுடைய திரேகாணம் உதையமானாலும் ஜாதகனுடைய ஜெனனம் வசந்த ரிதுவாகும்.

பிரஷ்ணை காலத்தில் சனி பிரஷ்ணை லக்கினத்திலிருந்தாலும் அல்லது சனியினுடைய திரேகாணம் உதையமானாலும் ஜாதகனுடைய ஜெனனம் சசிரிதுவாகும். (c)

இவ்விதமாக நிர்ணயஞ் செய்யப்பட்ட ரிது முந்தி நிர்ணயிக்கப்பட்ட அயனத்திற்கு ஒற்றுமையாகவில்லாமல் மாறுபாடாக விருந்தால் (d) ரிதுவைப் பின்வரும் சுலோகத்தில் சொல்லிய பிரகாரம் நிர்ணயஞ் செய்யவும்.

(a) இங்கு வராஹமிகிரர் நஷ்ட ஜாதகம் கணிப்பதற்காக முதல் முதல் பிறந்த வருஷத்தை நிர்ணயிக்கும் வழியைப்பற்றி இந்த சுலோகத்தில் சொல்லுகிறார். பிரஷ்ணை லக்கினத் திரேகாணம் முதல் திரேகாணமானால் பிரஷ்ணை லக்கினத்தில் குருவும், 2-வது திரேகாணமானால் பிரஷ்ணை லக்கினத்திற்கு 5-ல் குருவும், 3-வது திரேகாணமானால் பிரஷ்

ன லக்கினத்திற்கு 9-ல் குருவும், ஜெனன காலத்தில் இருந்தார் என்று சொல்லுகிறார்.

இவ்விதமாகக் குரு இருக்கும் ராசியைத் தீர்மானஞ் செய்யலாம். மறுபடியும் பிரஷ்ண லக்கினத்தைத் துவாதசமாக ஆக்கி பிரஷ்ண லக்கினத்தில் 1-வது துவாதசாம்சமானால், குரு பிரஷ்ண லக்கினத்திலும், 2-வது துவாதசாம்சமானால் குரு பிரஷ்ண லக்கினத்திற்கு 2-லும், 3-வது துவாதசாம்சமானால் குரு பிரஷ்ண லக்கினத்திற்கு 3-லும், 4-வது துவாதசாம்சமானால் குரு பிரஷ்ண லக்கினத்திற்கு 4-லும், இவ்விதமாக 11-வது துவாதசாம்சமானால், குரு பிரஷ்ண லக்கினத்திற்கு 11-லும், 12-வது துவாதசாம்சமானால் பிரஷ்ண லக்கினத்திற்கு 12-லும், ஜாதகனுடைய ஜெனனகாலத்தில் இருக்கவேண்டும். இந்தவிதமாகவும் குரு ஜெனன காலத்திலிருக்கும் ராசியை நிர்ணயஞ் செய்யலாம் என்பர் சிலர்.

(b) இவ்விதமாக குரு ஜெனன காலத்திலிருக்கும் ராசியை நிர்ணயஞ் செய்தபிறகு, குரு அந்த நிர்ணயித்த ராசியிலிருக்கும் வருஷத்தை நிர்ணயிக்க வேண்டும். மானிட ஜென்மத்திற்குப் பூர்ணாயுசு வருஷம் 120-நாள் 5-என்று இந்த கிரந்தத்தில் சொல்லியிருப்பதாலும், குரு 12-ராசிகளையுடைய இராசி மண்டலத்தை சுமார் 12-வருடங்களுக்கு ஒருமுறை சுற்றி வருவதாலும், பூரணாயுசுள்ள ஜாதகனுக்கு ஜெனன முதல் மரணத்திற்குள் குரு சுமார் 10, 11-தடவை இராசிமண்டலத்தைச் சுற்றி வரக்கூடும். ஆகையால் ஜாதகம் பிறந்த முதல் நஷ்ட ஜாதகம் கணிக்கும் காலம் வரையிலுமுள்ள வருடங்களில் குரு எத்தனை தடவை, ஜாதகன் ஜெனன காலத்தில்தான் இருந்த ராசியிற்குச் சுற்றி வந்திருப்பாரென்று அறியவேண்டியது. இந்த ஜாதகனுடைய முகத்தைப் பார்த்துத் தோராயமாக யூகிக்க வேண்டியது. அதாவது ஜாதகனுக்கு வயது தோராயமாக எத்தனை இருக்கும் என்று முகத்தைப் பார்த்தும் அல்லது வேறெந்த முகாந்தரத்திலாகிலும் நிர்ணயிக்க வேண்டும். உதாரணமாக குரோதன வருஷத்தில் நஷ்ட ஜாதகனாகிய "வினயகன்" என்பவன் சென்ற தாதுவருட கருப்பில் எனக்கு வயது சுமார் 10 என்று சொன்னால் இதிலிருந்து அவனுடைய வயது குரோதனவருஷத்தில் சுமார் 65 என்று தோராயமாக யூகிக்கலாம். அல்லது நஷ்ட ஜாதகனாகிய இராமன் என்பவன், 'மீனாட்சியம்மை" என்றவள் தன்னுடையபிள்ளையும் என்னுடைய மைத்துனருமாகிய ஆறுமுகத்தைத் தன்னுடைய வயற்றில் வைத்துக்கொண்டு 9-மாத கெற்பவதியாக இருக்கும்

போது என் தாயாகிய கௌசல்யா தேவி என்பவள் என்னைத் தன்னுடைய வயிற்றில் வைத்துக்கொண்டு 6-மாத கெற்பவதியாக விருந்தாள், ஆறுமுகத்திற்கு வயது இப்போது 65-ஆகின்றது. என்று சொன்னால் இராமனுக்கும் வயது சுமார் 65-தான் இருக்கவேண்டும் என்று யூகிக்கலாம். இவ்விதமாகிலும் அல்லது முகத்தைப் பார்த்தாகிலும் நஷ்ட ஜாதகனுடைய வயதைத் தோராயமாக நிர்ணயிக்கலாம்.

உதாரணமாக நஷ்ட ஜாதக பிரஷ்ணகாலத்தில் குருதனுசில் இருப்பதாகவும், மேலே சொல்லிய நஷ்ட ஜாதக கணித பிரகாரம் ஜெனன காலத்தில் குரு சிம்மத்தில் இருப்பதாகவும் ஏற்பட்டால் சிம்ம முதல் தனுசுவரையில் ராசி இருப்பதால் இந்த 5-ராசிகள் செல்ல குருவிற்குச் சுமார் 5 வருஷமாகும். ஆகையால் குரு சுமார் 5, 7 வருடத்திற்கு முந்தி சிம்மத்திலிருந்திருக்க வேண்டும் அல்லது ஒரு சுற்றிற்குரிய 12 வருஷமும் 5 வருஷமும் ஆக மொத்தம் 17 வருடத்திற்கு முந்தி மிதுனத்திலிருக்க வேண்டும். அல்லது 17-உடன் 12-கூட்ட வருகின்ற 29-வருடத்திற்கு முந்தி மிதுனத்திலிருகக வேண்டும். இவ்விதமாகவே 41-வருஷத்திற்கு முந்தியும், அல்லது 53-வருஷத்திற்கு முந்தியும், அல்லது 65-வருஷத்திற்கு முந்தியும், அல்லது 77-வருஷத்திற்கு முந்தியும், அல்லது 89-வருஷத்திற்கு முந்தியும், அல்லது 101-வருஷத்திற்கு முந்தியும், அல்லது 113-வருஷத்திற்கு முந்தியும் குரு மிதுனத்திலிருந்து இருக்கவேண்டும். இங்கு சொல்லிய வருடங்களாகிய 5, 17, 29, 41, 53, 65, 77, 89, 101, 113 இவைகளில், ஜாதகனுடைய தோராய வயதாகிய 65-என்பதற்கு மிகவும் நெருங்கியுள்ள வருடஎண் 65 என்று ஏற்படுகின்றது. ஆகையால் இந்த 65-தான் ஜாதகனுடைய வயது என்று கொஞ்சம் துல்லியமாக ஏற்படும். பிறகு கிரகங்களின் நிலைமைக்கொடுத்திருக்கின்ற பழைய பஞ்சாங்கம் அல்லது தகுந்த புஸ்தகங்களைக் கொண்டு குரோதன வருஷத்திலிருந்து சுமார் 65-வருடத்திற்கு முந்தி குரு சிம்மத்திலிருந்தாராஎன்று பார்த்து அப்படி இருந்தால் குரு சிம்மத்தில் இருந்தகாலத்தைக் குறித்து வைத்துக் கொள்ள வேண்டியது. காலஞ்சென்ற ஸ்ரீமான் எல். டி சுவாமிக்கண்ணுபிள்ளை எழுதி வைத்த கிரகஸ்புட புத்தகம் பிரகாரம் (Indian chronology by the late Dewan Bahadur L. D. Swamikannu Pillai, page 214 of 1911 Edition) கலியுகஹு 4953-ல் துன்மதிஹு ஆனிமீ முதல் அவ்வருஷம் ஐப்பசிமுடியவும், அவ்வருஷம் பங்குனி முதல் துந்துபிஹு ஆனி முடியவும். குரு சிம்ம ராசியில் இருக்கின்றார் என்று

ற்படும், இந்த காலங்களில் ஜாதகன் பிறந்திருக்க வேண்டும் என்று
ிக்க வேண்டியது. பிறகு மாதம், தேதி இவைகளைப் பின் வரு
ாறு நிர்ணயிக்க வேண்டியது.

மேலும் ஜாதகனுடைய வயதைத் தோராயமாகக்கூட அறிவது
ஷ்டமானல், ஜாதகன் பிறந்தது முதல் பிரஷ்ணை காலம் வரையில் எத்
ன தடவை (அல்லது வட்டம்) இராசி மண்டலத்தைச் சுற்றி குரு
ந்திருக்கிறார் என்பதை அறிவது கஷ்டமாகும். அப்போது நஷ்ட
ாதகன் வந்து பிரஷ்ணை கேட்கும்போது அவன் தன்னுடைய தேகத்
ில் எந்த அவயவங்களை தொடுகிறானோ அந்த அவயவங்களிலிருந்து
ுருவினுடைய வட்டத்தை (அல்லது இராசி மண்டலத்தைச் சுற்றி
ந்திருக்கும் சுற்றை) அறியலாம். நஷ்டஜாதகன் பிரஷ்ணை காலத்தில்
ன்னுடைய தேகத்தின்:—

1. பாதம் கணுக்கால் இவைகளைத் தொட்டால்		1-வது	வட்டம்
2. காலையும் முழங்காலையும்	தொட்டால்	2	,,
3. தொடையையும், சிசுனத்தையும்	,,	3	,,
4. தொப்புள் பிரதேசத்தைத்	,,	4	,,
5. வயிற்றைத்	,,	5	,,
6. மார்பைத்	,,	6	,,
7. புஜத்தைத்	,,	7	,,
8. கழுத்து, உதடு இவைகளைத்	,,	8	,,
9. புருவம், கண் இவைகளைத்	,,	9	,,
10. சிரசு, நெற்றி இவைகளைத்	,,	10	,,

என்று அறியவும். (குரு இராசி மண்டலத்தைச் சுற்றிவர சுமார்
12 வருஷமாகும். ஆகையால் ஒரு வட்டத்திற்குச் சுமார் 12 வருஷ
மாகும். இவ்விதமாக 5 வட்டத்திற்கு 60 வருடமாகும். விசேஷமாக
இந்த 60 வருஷமுள்ள காலத்திற்குப் "பிரஹஸ்பதிச் சக்கிரம்" என்று
பெயர். இந்தச் சக்கிரம் பிரபவ வருஷ முதல் ஆரம்பித்து அக்ஷய வரு
ஷத்துடன் முடியும்.)

(b) ரிதுக்களின் மாதங்கள் விஷயமாக 2-வது அத்தியாயம் 12-
வது சுலோகத்தின் கீழ் சொல்லியுள்ள தற்காலத்துச் சரியான மாதங்க
ளைத்தான் எடுத்துக் கொள்ள வேண்டியது.

(c) அயனத்திற்கும் ரிதுவிற்கும் ஒற்றுமை யில்லாமல் மாறுபா
டாக விருத்தல் என்றால் கணிதம் பிரகாரம் ஒரு அயனமும், ரிது பிர

காரம் மற்றொரு அயனமும் வருதல் என்பதாம். உதாரணமாக மேலே சொல்லிய அயன கணித பிரகாரம் உத்தராயனமும், ரிது கணித பிரகாரம் சர ரிதுவும் வந்தால், சர ரிது தக்ஷணாயனத்தைச் சார்ந்ததாதலால் இங்கு அயனத்திற்கும் ரிதுவிற்கும் ஒற்றுமை யில்லாமல் மாறுபாடு இருக்கின்றது. இப்படி நேர்ந்தால் இந்த அத்தியாயம் 4-வது சுலோகத்தில் சொல்லிய பிரகாரம் ரிதுவைக் கணிக்க வேண்டியது என்பதாம்.

3-வது சுலோகம்:—மேலே சொல்லிய சுலோகங்கள் பிரகாரம் அயனத்தையும் ரிதுவையும் கணிக்கும்போது அயனத்திற்கும், ரிதுவிற்கும் ஒற்றுமையில்லாமல் மாறுபாடாக (a) இருந்தால், ரிது எந்த கிரகத்திற்குரியதோ அந்த கிரகத்தின் பரிவர்த்தனை கிரகத்திற்குரிய ரிதுவை எடுத்துக் கொள்ள வேண்டியது. சந்திரனுக்குச் சுக்கிரனும், செவ்வாயிற்குப் புதனும், குருவிற்குச் சனியும் பரிவர்த்தனை கிரகங்கள் ஆகும். (b) லக்கினத் திரேகாணத்தில் முதல் அரைபாகம் உதயமானால் (c) ரிதுக்களுக்குரிய இரண்டு மாதங்களில் முதல் மாதத்திலும், இரண்டாவது அரைபாகம் உதயமானால் இரண்டாவது மாதத்திலும் ஜாதகன் பிறந்தான் என்று அறியவும். உதயத்திரேகாணத்தின் அரைபாகத்தில் எவ்வளவு உதயமாகி இருக்கின்றதோ அவ்வளவு தேதி (d) அந்த மாதத்தில் செல்லாகி இருக்கின்றதென்று அறிந்து ஜெனன தேதியை நிர்ணயிக்க வேண்டியது.

(a) இந்த அத்தியாயம் 2-வது சுலோகத்தின்கீழ் வியாக்கியானத்தில் (b) என்ற வகுப்பில் சொல்லியதைப் பார்க்கவும்,

(b) உதாரணமாகச் சந்திரனுக்குரிய ரிதுவாகிய வருஷ ரிது, அயனத்துடன் பொருந்தாவிட்டால் அதற்குப் பரிவர்த்தனை கிரகமாகிய சுக்கிரனுக்குரிய ரிதுவாகிய வசந்த ரிதுவை எடுத்துக்கொள்ள வேண்டியது.

(c) (d) இனிமேல் ஜெனன மாதத்தையும், தேதியையும் நிர்ணயிக்கும் விதத்தைச் சொல்லுகிறார். பிரஷ்ணை லக்கின ராசியில் மூன்று திரேகாணங்கள் இருக்கின்றனவென்றும், ஒரு ராசியிற்கு 30-பாகைகள் என்றும், ஆகையால் ஒரு திரேகாணத்திற்கு 10-பாகைகள் என்றும் நாம் முன்னமே அறிந்திருக்கின்றோம். பிரஷ்ணை காலத்தில் உதயத் திரேகாணத்திற்குரிய 10-பாகையில் முதல் 5-பாகைக்குள் உதயமாகி இருந்தால் ஒரு ரிதுவிற்குரிய இரண்டு மாதங்களில் முதல் மாதத்தில் ஜாதகன் ஜெனனமானான் என்று அறியவும். இந்த திரேகாணத்

தில் 5-பாகைக்கு மேற்பட்டு உதயமாகி இருந்தால் ரிதுவிற்குரிய 2-வது மாதத்தில் ஜாதகன் ஜெனனமானான் என்றும் அறியவும். இவ்வித மாக ஜாதகன் பிறந்த மாதத்தை அறியவேண்டியது.

பிறகு ஒரு திரேகாணமாகிய 10-பாகைகள் ஒரு ரிதுவாகிய இரண்டு மாதத்திற்கு உரியதாகையால், ஒரு மாதத்திற்கு 5-பாகை ஆகும். ஜெனன காலத்தில் குரு இருக்கும் ராசியும், ஜெனன கால ரிதுவும், ஜெனன கால மாதமும் ஆகிய இவைகள் தெரிந்தபடியால் இவைகளிலிருந்து பெரும்பாலும் ஜெனன வருஷமும் மாதமும் அறியலாம். பிறகு அவ்வருஷத்திய பழைய பஞ்சாங்கத்திலிருந்து அந்த மாதத்திற்குரிய மொத்த நாள் நாழிகை, விநாடிபை பஞ்சாங்கத்திலிருந்து அறியலாம். உதாரணமாகச் சித்திரை மாதம் ஜெனன மாதமென்று கணிதத்தில் ஏற்பட்டால் சித்திரை மாதத்திற்கு மாதப் பிரமாணம் அல்லது மாத அளவு 30-நாள் 55-நாழிகை 32-விநாடி என்று வைத்துக்கொள்வோம். பிரஷ்ண லக்கினம் மிதுனமாகி அதில் 18-பாகை உதையமானதாக வைத்துக் கொள்ளுவோம். ஒரு திரேகாணத்திற்கு 10-பாகை யான படியால் மிதுன லக்கினத்தில் 2-வது திரேகாணம் உதையமாகும். மேலும் இந்த 2-வது திரேகாணத்தில் முதல் அரைபாகத்திற்குரிய 5-பாகை, 15-வது பாகை உதயமானதும் கடந்துவிட்டது. 18-பாகை உதையமாகி இருப்பதால் 2-வது அரைபாகத்தில் 3-பாகை செல்லாகி இன்னம் 2-பாகை செல்லவேண்டியதாக இருக்கின்றது. இந்த 5-பாகைக்கு சித்திரை மாதப் பிரமாணமாகிய 30-நாள் 55-நாழிகை 32-நாடி ஆகும். இந்த பிரமாணத்தை 5-ஆல் வகுக்கப் பாகை 1-க்கு நாள் 6-11 நாழிகை 6-விநாடி 24-தற்பரை வரும். ஆகையால் செல்லான 3-பாகைக்கு நாள் 18-நாழிகை 33-விநாடி. 19-தற்பரை 12-வரும். ஆகையால் ஜாதகன் ஜெனன காலத்தில் 18-நாள் 33-நாழிகை 19-விநாடி 12 தற்பரை அந்தமாதத்தில் செல்லாகிஇருக்கவேண்டும். மாதம் பிறந்த நேரம் தெரிந்தால் அத்துடன் இந்த 18-நாள் 33-நாழிகை 19-விநாடி 12-தற்பரையைக் கூட்ட வரும் தேதி தான் ஜாதகன் பிறந்த தேதியாகும். உதாரணமாக சித்திரை மாதம் பிறப்பு சித்திரை மாதம் 1-ந் தேதி 25-நாழிகை 48-விநாடியில் நேர்ந்தால் இத்துடன்மேற்கண்ட 18-நாள் 33-நாழிகை 19-விநாடி 12-தற்பரை கூட்ட மொத்தம் 19-நாள் 59-நாழிகை 7-விநாடி 12-தற்பரை வரும், ஆகையால் ஜாதகன் சித்திரை மாதம் 19-ந் தேதி பிறந்தான் என்று அறிய வேண்டியது,

(மேலும் தேதியை இவ்விதமாகக் கணித ரீதியாய்க் கணிக்கும் போது இந்த கணிதத்தாலேயே ஜாதகன் சித்திரை மாதம் 19-ந் தேதி 59-நாழிகை 7-விநாடி 12-தர்பரைக்கு ஜெனனமானுன் என்று சொல்லக்கூடும் என்பர் சிலர். இவ்விதமாக ஜெனன வருஷம், மாதம், தேதி, நாழிகை விநாடி தெரிந்துவிட்டால், ஜாதகம் கணிப்பதற்கு வேண்டிய அம்சங்களில் ஒன்று தான் இன்னம் தெரியவேண்டியது. அது என்னவென்ருல் ஜாதகன் பிறந்த இடம். இதை ஜாதகனிடத்திலிருந்தே கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். இதுவும் தெரிந்துவிட்டால் ஜாதகம்கணிப்பதற்கு வேண்டிய எல்லா அம்சங்களும் தெரிந்துவிட்டபடியால் அவ்வருஷத்திய பஞ்சாங்கத்தை வைத்துக்கொண்டு ஜாதகம் கணித்துவிடலாம் என்பர் சிலர்.)

மேலே சொன்னபடி மாதப் பிரமாணம் கண்டறிந்து தேதி கணிப்பதற்குப் பதிலாக ஒவ்வொரு மாதத்திலும் 30-நாள் தான் இருப்பதாக வைத்துக்கொண்டு 5-பாகைக்கு 30-நாளாக எண்ணிக்கொண்டு உதயத்திரேகாணத்தின் பின் பாகத்தில் செல்லான 3-பாகைக்கு வரும் நாளே தேதியாக வைத்துக் கொள்ளுகிறூர்கள். அதாவது 5-பாகைக்கு 30-நாள் என்ருல் ஒரு பாகைக்கு 6-நாள் ஆகும். ஆகையால் செல்லான 3-பாகைக்கு 18-நாள் வரும். ஆகையால் ஜாதகன் 18-ந் தேதி பிறந்தான் என்பர். இது தோராயமானதென்று அறியவேண்டியது என்பர் சிலர்.

ஆனுல் தேதியை மாத்திரம் மேற்சொல்லியபடி கணித்துக்கொண்டு பிறகு ஜெனன நாழிகை விநாடியை இனிமேல் சொல்லப்போகின்ற சுலோகங்களில் சொல்லிய பிரகாரம் கணிக்க வேண்டும் என்று வராஹமிகிருருடைய அபிப்பிராயம் என்று ஏற்படுகின்றது.

4-வது சுலோகம்:—பிரஷ்ணே லக்கின ராசி பகல் ராசியானுல் இரவிலும், ராத்திரி ராசியானுல் பகலிலும், ஜாதகன் ஜெனித்தான் என்று அறியவும்.

(a) பிரஷ்ணே காலத்தில் பிரஷ்ணே லக்கினத்தில் உதயமாகி இருக்கும் பாகத்திலிருந்து ஜெனன நாழிகை அறியவும். (b) சூரியன் எந்த ராசியிலாகிலும் எவ்வளவு பாகை சென்று இருக்கின்ருரோ அவ்வளவு திதி வளர்பிறை ஆரம்பத்திலிருந்து செல்லாகி இருக்கின்றது என்று அறிந்து ஜெனன காலத் திதியை நிர்ணயிக்க வேண்டும் என்று ஜோதிடநூல் வல்லவர் சொல்லுகிருர்கள். (c)

(a) பகல் ராசிகள் என்பவை சிம்மம், கன்னி, துலாம், விருச்சிகம், கும்பம், மீனம் ஆகும். ராத்திரி ராசிகள் என்பவை மேஷம், ரிஷபம், மிதுனம், கடகம், தனுசு, மகரம் ஆகும். 1-வது அத்தியாயம் 10-வது சுலோகம் பார்க்கவும்,

(b) ஜெனன நாழிகை அறியும் விதம்:—உதாரணமாக பிரஷ்ணை லக்கினம் மிதுனமாகி அதில் 18-பாகை உதையமாகி இருந்தால், மிதுனம் ராத்திரி ராசியானபடியால் ஜெனனம் பகலில் என்று ஏற்படும். பிறகு ஜெனன மாதமும் தேதியும் நாம் முந்திசெய்த கணிதத்திலிருந்து தெரிந்திருப்பதால் அந்த தேதியில் "பகல் மானம்" என்று சொல்லப்பட்ட பகற் பொழுதை இத்தனை நாழிகை விநாடி என்று அறியவேண்டியது பிறகு இந்த பகல் மானத்தை 30-பாகைக்கு உரியது என்று எண்ணி 30-ஆல் பங்கிட ஒரு பாகைக்குரிய நாழிகை விநாடி வரும். இதை ராசியில் செல்லான 18-பாகையால் பெருக்க வருகின்ற நாழிகை விநாடி தான், சூரிய உதையத்திலிருந்து ஜெனனமான நாழிகை விநாடி என்று அறியவும்.

உதாரணமாக ஜெனனவிடத்திற்கு ஜெனன தேதியில் பகல்மானம் என்று சொல்லப்பட்ட பகல்பொழுது என்று அகசு நாழிகை 31-விநாடி 10-என்று வைத்துக் கொள்வோம். மிதுனத்திற்குரிய 30-பாகைக்கு 31-நாழிகை 10-விநாடியானால் 1-பாகைக்கு 1-நாழிகை 2-விநாடி 20-தற்பரை ஆகும். இதை சென்றுபோன 18-பாகையால் பெருக்க நாழிகை 18-விநாடி 42-தற்பரை 0 வரும். ஆகையால் சூரிய உதையத்திலிருந்து 18-நாழிகை 42-விநாடியில் ஜாதகன் பிறந்தானென்று அறியவும். இவ்விதமே பிரஷ்ணை லக்கினம் பகல் ராசியானால் இரவில் ஜெனனம் என்று ஏற்படுவதால் பகல்பொழுதிற்குப் பதிலாக இராத்திரி பொழுதை எடுத்துக்கொண்டு மேற்சொல்லியபடி கணித்து ஜெனன நாழிகை சூரிய அஸ்தமனத்திலிருந்து இத்தனை நாழிகை விநாடி என்று அறியவும். (60-நாழிகையிலிருந்து அகசைக் கழிக்க ராத்திரி பொழுது வரும். சூரிய அஸ்தமனத்திலிருந்து வருகின்ற நாழிகை விநாடியுடன் அகசைக் கூட்ட சூரிய உதையத்திலிருந்து ஜெனன நாழிகை விநாடி ஏற்படும்.)

(c) திதிஅறியும் விதம்:—ஜெனனமாதம், தேதி, நாழிகை, விநாடி தெரிந்தபிறகு பஞ்சாங்கத்திலிருந்து ஜெனனகாலத் திதியை அறியலாம். ஆனால் கணிதத்திலிருந்து அறியும் வழி சொல்லுகின்றார். பிரஷ்ணை காலத்தில் சூரியன் தானிருக்கும் ராசியில் எத்தனை பாகை சென்றிருக்

கின்ருரோ அத்தனை எண்ணுள்ள திதி வளர்பிறை பிரதமையிலிருந்து செல்லானதென்று அறியவும்.

உதாரணமாக பிரஷ்ணை காலத்தில் சூரியன் தானிருக்கும் ராசியில் 27-பாகையில் இருந்தால் வளர்பிறை பிரதமையில் இருந்து 27-வது திதி நடக்கின்றது. அதாவது-வளர்பிறைக்குரிய 15-திதிகள் போகத் தேய்பிறையில் 12-வது திதி நடக்கின்றது. அதாவது தேய்பிறையில் துவாதசி திதி நடக்கின்றது என்று அறியவேண்டியது. ஆகையால் ஜாதகன் தேய்பிறையில் துவாதசி திதியில் ஜெனித்தான் என்று அறியவும்.

5-வது சுலோகம்:—பிரஷ்ணை காலத்தில் சந்திரனிருக்கின்ற நவாம்சையிலிருந்து (a) ஜாதகனுடைய ஜெனன காலத்திற்குரிய சாந்திரமான மாதத்தை அறியலாம் என்பர் சிலர். பிரஷ்ணை காலத்தில் பிரஷ்ணை லக்கினமும் இந்த பிரஷ்ணை லக்கினத்திற்கு 5, 9-ஆம் ராசிகள் ஆகிய இம்மூன்று ராசிகளில் எந்த ராசி மிகவும் வலிபதோ அந்த ராசியில் தான் சந்திரன் ஜெனன காலத்தில் இருந்தார் என்று அறியவும். இந்த மூன்று ராசிகளிலும் எது வலிவுள்ள ராசி என்று தீர்மானஞ் செய்வது கஷ்டமானல் பிரஷ்ணை கேட்கும் காலத்தில் ஜாதகன் தன்னுடைய தேகத்தில் எந்த அவயவத்தைத் தொடுகின்ருனே அந்த அவயவம் கால புருஷனுடைய தேகத்தின் அவயவங்களுக்குச் சொல்லிய ராசியில் எந்த ராசியிற்குரியதோ அந்த ராசியில் சந்திரன் ஜெனன காலத்தில் இருந்தார் என்று அறியவும். (b) மேலும் பிரஷ்ணை காலத்தில் நிகழும் சம்பவங்களை அறிந்து அச்சம்பவங்களுக்குரிய ராசியில் ஜெனன காலத்தில் சந்திரன் இருந்தார் என்று அறியவும். (c)

(a) பிரஷ்ணை காலத்தில் சந்திரன் இருக்கும் நவாம்சையானது,

1. கன்னியில் 8-வது நவாம்சை முதல் துலாத்தில் 6-வது நவாம்சைக்குள்ளானல் சைத்திர மாதம்.

2. துலாத்தில் 7-வது நவாம்சை முதல் விருச்சிகத்தில் 5-வது நவாம்சைக்குள்ளானல் வைசாக மாதம்.

3. விருச்சிகத்தில் 6-வது நவாம்சை முதல் தனுசில் 4-வது நவாம்சைக்குள்ளானல் ஜேஷ்ட மாதம்.

4. தனுசில் 5-வது நவாம்சை முதல் மகரத்தில் 3-வது நவாம்சைக்குள்ளானல் ஆஷாட மாதம்,

5. மகரத்தில் 4-வது நவாம்சை முதல் கும்பத்தில் 2-வது நவாம் சக்குள்ளானல் சிராவண மாதம்.

6. கும்பத்தில் 3-வது நவாம்சை முதல் மீனத்தில் 5-வது நவாம் சக்குள்ளானல் பாத்திரபத மாதம்.

7. மீனத்தில் 6-வது நவாம்சை முதல் மேஷத்தில் 8-வது நவாம் சக்குள்ளானல் ஆஸ்வீஜ மாதம்.

8. மேஷத்தில் 9-வது நவாம்சை முதல் ரிஷபத்தில் 7-வது நவாம் சக்குள்ளானல் கார்த்திய மாதம்.

9. ரிஷபத்தில் 8-வது நவாம்சை முதல் மிதுனத்தில் 6-வது நவா ம்சைக்குள்ளானல் மார்கசிர மாதம்.

10 மிதுனம் 7-வது நவாம்சை முதல் கடகம் 5-வது நவாம்சைக்கு ள்ளானல் புஷ்ப மாதம்.

11. கடகம் 6-வது நவாம்சை முதல் சிம்மம் 4-வது நவாம்சைக் குள்ளானல் மாக மாதம்.

12. சிம்மம் 5-வது நவாம்சை முதல் கன்னி 7-வது நவாம்சைக்குள் ளானல் பால் குணம் மாதம் என்று அறியவும்.

உதாரணமாக பிரஷ்ணே காலத்தில் சந்திரன் கன்னியா ராசியில் -வது நவாம்சத்திலிருந்தால் ஜாதகனுடைய ஜெனனம் சாந்திரமான மாதமாகிய சைத்திர மாதத்தில் நேர்ந்திருக்க வேண்டும். என்றறியவும், (b) கால புருஷனுடைய தேக அவயவங்களுக்குரிய ராசிகள், 1-வது அத்தியாயம் 4-வது சுலோகத்தில் கொடுக்கப்பட்டிருக்கின்றன. பிரஷ் ணே காலத்தில் ஜாதகன் தன்னுடைய தலையைத் தொட்டானகில் தலை க்கு உரிய ராசியாகிய மேஷ ராசியில் சந்திரன் ஜெனன காலத்தில் இருந்தான் என்று அறியவும். (c) பிரஷ்ணே காலத்தில் நேரிடும் சம் பவங்கள் என்பது பிரஷ்ணே காலத்தில் எந்த ஜந்து கண்ணில் தோற்று கின்றதோ அல்லது எந்த ஜந்துவின் சப்தம் கேட்கின்றதோ அந்த ஜந்துக்குரிய ராசியில் சந்திரன் ஜெனன காலத்தில் இருந்திருக்க வேண் டும் என்று அறியவும்.

6-வது சுலோகம்:—பிரஷ்ணே காலத்தில் சந்திரன் பிரஷ்ணே லக்கி னத்திற்கு எத்தனையாவது இராசியிலிருக்கின்றாரோ அத்தனை ராசி பிர ஷ்ணே காலத்தில் சந்திரனிருக்கும் ராசியிலிருந்து எண்ண வரும் ராசி யில் சந்திரன் ஜெனன காலத்தில் இருப்பார். பிரஷ்ணே லக்கினம் மீன

மானல், சந்திரன் ஜெனன காலத்தில் மீனத்தில் இருப்பார். இவ்வித மாகச் சந்திரனிருக்கும் ராசியை நிர்ணயிப்பதில் சந்தேகம் நேரிடும் பட்சத்தில் பிரஷ்ணை காலத்தில் ஜாதகன் கொண்டு வந்திருக்கும் ஆகாரவஸ்துக்கள் ஏதேனுமிருந்தால் அந்த வஸ்துவிற்குரிய ராசியிலும், அல்லது பிரஷ்ணை காலத்தில் எந்த ஜந்துவின் சப்தம் கேட்கின்றதோ அந்த ஜந்துவின் ராசியிலும், சந்திரன் ஜெனனகாலத்தில் இருந்தார் என்று அறியவும்.

7-வது சுலோகம்:—பிரஷ்ணை காலத்தில் எந்த நவாம்ச ராசி உதயமாகிறதோ (a) அந்த ராசியே ஜெனன காலத்தில் ஜென்ம லக்கினம் என்பதாம். பிரஷ்ணை காலத்தில் சூரியனிருக்கும் திரேகாணம் பிரஷ்ணை லக்கினத் திரேகாணத்திலிருந்து எண்ண எத்தனையாவது திரேகாணமாகுமோ அத்தனை ராசி பிரஷ்ணை லக்கின ராசியிலிருந்து எண்ணவரும் ராசியே ஜெனன காலத்தில் ஜென்மராசி என்பதாம் (b)

(a) "நவாம்சராசி உதயமாகின்றதோ" என்பது பிரஷ்ணை நவாம்சை லக்கினமாகும். பிரஷ்ணை நவாம்ச லக்கினம் மேஷமானல் மேஷமே ஜென்ம லக்கினமாகும்.

(b) பிரஷ்ணை காலத்தில் மேஷத்தில் 1-வது திரேகாணம் உதயமாகி, அப்போது சூரியன் மீனத்தில் 1-வது திரேகாணத்தில் இருப்பதாக வைத்துக் கொள்வோம். மேஷத்தில் 1-வது திரேகாண முதல் மீனத்தில் 1-வது திரேகாணம் வரையிலும் இருக்கும் திரேகாணங்களை எண்ண 34-திரேகாணங்கள் வரும். அது எப்படி என்றால் மேஷத்தில் 1-வது திரேகாணமுதல் எண்ண மேஷத்தில் 3 திரேகாணமும், ரிஷபத்தில் 3-ம், மிதுனத்தில் 3-ம், கடகத்தில் 3-ம், சிம்மத்தில் 3-ம், கன்னியில் 3-ம், துலாத்தில் 3-ம், விருச்சிகத்தில் 3-ம், தனுசில் 3-ம், மகரத்தில் 3-ம், கும்பத்தில் 3-ம், மீனத்தில் 1-வது திரேகாணமானதாம். 1-ம் ஆக மொத்தம் 34-ஆகும். ஆகையால் மேஷ ராசி பிரஷ்ணை லக்கினமானதால் மேஷத்திலிருந்து 34-ராசி எண்ணிவர மகர ராசி வரும். (இங்கு 34-என்பது இராசி மண்டலத்திற்குரிய 12-ராசியிற்கு மேற்பட்டதால், 34-யை 12-ஆல் வகுக்க மிச்சம் 10-வரும், மேஷத்திலிருந்து 10-ராசி எண்ணிவர மகரம் வரும்) மகர ராசியே ஜெனன காலத்தில் ஜென்மராசி ஆகும்.

8-வது சுலோகம்:—பிரஷ்ணை காலத்தில் பிரஷ்ணை லக்கினத்தில் ஒரு கிரகமிருந்தால் அதனுடைய ஸ்புடத்தையாவது, அல்லது பல

கிரகங்களிருந்தால் அவைகளில் மிகவும் வலிவுள்ள கிரகத்தின் ஸ்புடத்தைபாவது, 12-அங்குலம் நிகளமுள்ள "சங்கு" என்று சொல்லப்பட்ட கோணமில்லாமல் நேராய்இருக்கின்ற ஒருகுச்சியினுடைய நிழலின் அங்குலத்தின் எண்ணால் பெருக்கி வரும் தொகையை 12-ல் வகுக்க வரும் மிச்சத்தை மேஷம் முதலாய் எண்ண வரும் ராசியே ஜெனன காலத்தில் ஜென்ம லக்கினம் என்று அறிபவும். (a) பிரஷ்ணை காலத்தில் ஜாதகன் உட்கார்ந்திருந்தால் பிரஷ்ணை லக்கினத்திற்கு 7-வது ராசியே ஜாதகனுடைய ஜென்ம லக்கினமென்றும், படுத்துக்கொண்டிருந்தால் பிரஷ்ணை லக்கினத்திற்கு 4-வது ராசியே ஜென்மலக்கினமென்றும், நின்றுகொண்டிருந்தால் பிரஷ்ணை லக்கினத்திற்கு 10-வது ராசியே ஜென்ம லக்கினமென்றும், உட்கார்ந்திருந்து எழுந்திருப்பானாகில் பிரஷ்ணை லக்கினமே ஜென்ம லக்கினமென்றும் அறிபவும்.

(a) உதாரணமாக லக்கினத்திலிருக்கின்ற ஒரு கிரகத்தின் அல்லது பல கிருகங்களில் மிகவும் வலிவுள்ள கிரகத்தின் ஸ்புடம் 6-ராசி, 15-பாகை, 30-கலை, 30-விகலை என்றும், சங்கின் சாயை 6-அங்குலம் என்றும் வைத்துக்கொள்வோம். இந்த ஸ்புடத்தை 6-ஆல் பெருக்க ராசி-39 பாகை-3 கலை-3, விகலை 0 வரும். மேஷம் முதல் 39-ராசி 3-பாகை 3-கலை எண்ணிவர கடக ராசி வரும். ஆகையால் கடகராசியேதான் ஜென்ம லக்கினமாகும்.

9-வது சுலோகம்:—பிரஷ்ணை காலத்தில் பிரஷ்ணை லக்கினம்:—

1. மேஷமாகில்	பிரஷ்ணை லக்கின ஸ்புடத்தை	7-ஆல்	பெருக்கவும்.
2. ரிஷபமாகில்	,,	10	,,
3. மிதுனமாகில்	,,	8	,,
4. கடகமாகில்	,,	4	,,
5. சிம்மமாகில்	,,	10	,,
6. கன்னியாகில்	,,	5	,,
7. துலாமாகில்	,,	7	,,
8. விருச்சிகமாகில்	,,	8	,,
9. தனுசாகில்	,,	9	,,
10. மகரமாகில்	,,	5	,,
11. கும்பமாகில்	,,	11	,,
12. மீனமாகில்	,,	12	,,

பிரஷ்ணை காலத்தில் பிரஷ்ணை லக்கினத்தில் இருக்கும் கிரகம்;—

1. சூரியனாகில் பிரஷ்ணை லக்கின ஸ்புடத்தை		5-ஆல் பெருக்கவும்.	
2. சந்திரனாகில்	,,	5	,,
3. செவ்வாயாகில்	,,	8	,,
4. புதனாகில்	,,	5	,,
5. குருவாகில்	,,	10	,,
6. சுக்கிரனாகில்	,,	7	,,
7. சனியாகில்	,,	5	,,

பல கிரகங்கள் பிரஷ்ணை லக்கினத்திலிருந்தால் பிரஷ்ணை லக்கின ஸ்புடத்தை அந்தந்த கிரகத்திற்குச் சொல்லிய எண்ணால் பெருக்க வேண்டியது. பிறகு மேற்சொல்லியபடி பெருக்கி வந்த தொகைகளை யெல்லாம் கூட்டவும். (a)

(a) உதாரணமாக பிரஷ்ணை லக்கினம் தனுசாகி பிரஷ்ணை லக்கின ஸ்புடம் இராசி 8-பாகை, 20-கலை, 10 என்றும், பிரஷ்ணை லக்கினத்தில் குருவும் சனியும் இருப்பதாகவும் வைத்துக்கொள்வோம். பிரஷ்ணை லக்கினம் தனுசானபடியால், பிரஷ்ணை லக்கின ஸ்புடத்தை 9-ஆலும், பிரஷ்ணை லக்கினத்தில் குரு இருப்பதால் குருவிற்காக 10-ஆலும், பிரஷ்ணை லக்கினத்தில் சனி யிருப்பதால் சனியிற்காக 5-ஆலும் பிரஷ்ணை லககின ஸ்புடத்தைப் பெருக்க வேண்டும். பிறகு வருகின்ற தொகைகளைக் கூட்டி வைத்துக்கொள்ள வேண்டியது.' அதாவது ஸ்புடத்தை லக்கினத்திற்காக 9-லும், குருவிற்காக 10-லும், சனியிற்காக 5-லும், தனித்தனியாய்ப் பெருக்கி பிறகு கூட்டுவதற்குப் பதிலாக, லக்கினம், கிரகங்கள் இவைகளுக்காக வருகின்ற எண்களாகிய 9, 10, 5 ஆகிய இவைகளைக் கூட்ட வருகின்ற மொத்த எண்ணாகிய 24-ஆல் ஸ்புடத்தைப் பெருக்கவும். இவ்விதமாக ராசி 8 பாகை 20 கலை 10-யை 24-ஆல் பெருக்க ராசி 208-பாகை 4-கலை 0-வரும். ராசியாகிய 208, 12 க்கு மேற்பட்டிருப்பதால் இந்த 208 யை வகுக்க மிச்சம் 4- ராசி வரும். ஆகையால் ராசி 4 பாகை 4 கலை 0 கடைசியாக வருகின்றது. இவ்விதமாக ராசிகளுக்காக ஸ்புடத்தைப் பெருக்குவதற்கு இராசி குணாகரம் என்றும் கிரகங்களுக்காக ஸ்புடத்தை பெருக்குவதற்கு கிரக குணாகரம் என்றும் சொல்லப்படும். இங்கு வந்த ராசி 4 பாகை 4 கலை 0 என்பதை குணகம் என்று பெயரிடுவோம்.

குணகம் என்பது பெருக்கி வரும் தொகை. ஆகையால் பெருக்கும் கிரியைக்குக் குணாகரம் என்று பெயர். அஷ்டவர்க்கத்திற்கூட ராசிகளுக்காகவும், கிரகங்களுக்காகவும் பெருக்குவதால், இராசி குணா

ம் கிரக குணகாரம் என்பவை அஷ்டவர்க்கத்தில்கூட உபயோகப்படுத்தப்பட்டிருக்கின்றன.

10-வது சுலோகம்:—இந்த குணகத்தை 7-ஆல் பெருக்கவும், பெருக்கி வந்த தொகையுடன், பிரஷ்ண லக்கினம் சர ராசியானல் 9-ராசி கூட்டவேண்டும். பிரஷ்ண லக்கினம் உபய ராசியானல், பெருக்கி வந்த தொகையிலிருந்து 9-ராசி கழிக்க வேண்டும். பிரஷ்ண லக்கினம் ஸ்திர ராசியானல் பெருக்கி வந்த தொகையையே வைத்துக்கொள்ள வேண்டியது.

(a) இப்படிப் பெருக்கி வந்த தொகையை 27-ஆல் வகுக்க வருகின்ற மிச்சம் ஜெனனகாலத்தில் ஜாதகனுடைய ஜென்ம நட்சத்திரமாகும். பிரஷ்ண லக்கின ஸ்புடத்திற்குச் செய்த கிரிகைகளை எல்லாம் மேற்கண்டபடி 3, 5, 6, 7-ஆம் வீடுகளிற்குச் செய்தால், ஜாதகனுடைய சகோதரன், புத்திரன், சத்துரு, களத்திரம் ஆகிய இவர்களுடைய ஜென்ம நட்சத்திரம் முறையே ஏற்படும் என்பதாம். (b)

(a) நாம் முந்தி எடுத்துக்கொண்ட உதாரணத்தில் குணகம் ராசி 4 பாகை 4 கலை 0 வந்தது, பிரஷ்ண லக்கின ராசி தனுசு என்று வைத்துக்கொண்டோம். இந்த குணகத்தை 7-ஆல் பெருக்க ராசி 28-பாகை 28-கலை 0-வரும். தனுசு உபயராசியானபடியால் ராசி 28-லிருந்து 9 ராசி கழிக்க மிச்சம் ராசி 19 வரும். ஆகையால் ராசி 19, பாகை 28 கலை 0-வரும், (ராசியின் எண் 27 க்கு மேற்பட்டிருந்தால் தான் 27 ஆல் வகுக்க வேண்டியது. 27 க்குள் இருந்தால் 27-ஆல் வகுக்க வேண்டியதில்லை) இங்கு ராசி 19, பாகை 28, கலை 0 என்பதை அப்படியே வைத்துக்கொள்ள வேண்டியது. இங்கு ராசியின் எண் 19 ஆனபடியால் ஜாதகன் ஜெனன காலத்தில் அஸ்வனி முதல் 19 நட்சத்திரம் முடிந்து 20 வது நட்சத்திரமாகி பூராட நட்சத்திரம் நடந்துகொண்டிருந்தது என்பதாம். அதாவது ஜாதகனுடைய ஜென்ம நட்சத்திரம் பூராடம் என்பதாம்,

குணகத்தை 7-ஆல் பெருக்கி வந்த தொகையுடன் சரமானல் கூட்டல் வேண்டும், உபயமானல் கழிக்க வேண்டும் என்பதற்குப் பதிலாக பிரஷ்ண லக்கினம் 1-வது திரேகாணமானல் 9-ராசி கூட்டவேண்டும் என்றும், 3 வது திரேகாணமானல் 9 ராசி கழிக்க வேண்டும், என்றும், 2-வது திரேகாணமானல் ஒன்றுஞ் செய்யாமல் பெருக்குத் தொகையையே வைத்துக் கொள்ள வேண்டுமென்றுஞ் சிலர் சொல்லுகிறார்கள்.

(b) பிரஷ்ணே லக்கின ஸ்புடத்துடன் இரண்டு ராசி கூட்ட 3-ஆம் வீட்டின் ஸ்புடம் வரும். இந்த ஸ்புடத்திற்குக் கிரியைகளை லக்கின ஸ்புடத்திற்குச் செய்ததுபோலவே செய்தால் சகோதரனுடைய ஜென்ம நட்சத்திரம் வரும், (பாவச் சக்கிரம் போடுவதுபோல பிரஷ்ணே ஜாதகத்திற்கும் பாவம் ஸ்புடம் போட்டு 3 வது பாவத்தின் ஸ்புடத்தைக் கணிப்பது விசேஷம். ஆனால் நஷ்ட ஜாதகக் கிரிகைக்குப் பாவஸ்புடம் போடவேண்டியது அனுவசியமாகும். ஆனபடியால் பிரஷ்ணே லக்கின ஸ்புடத்துடன் 2 இராசி கூட்டினால் 3 ஆம் வீட்டின் ஸ்புடம் வரும். இதுவே நமக்குப் போதுமானது) லக்கின ஸ்புடத்துடன் 4, 5, 6, ராசிகள் கூட்ட முறையே புத்திரஸ்தான, சத்துருஸ்தான, களத்திரஸ்தான ஸ்புடங்கள் வரும். இந்த ஸ்புடங்களுக்கும் மேற்கண்டபடி கிரிகைகள் செய்ய புத்திரன், சத்துரு, களத்திரம் இவர்களின் ஜென்ம நட்சத்திரம் ஏற்படும்.

11-வது சுலோகம்:—மேற்சொல்லிய குணகத்தை 10, 8, 7, 5 இவைகளால் தனித்தனியாய்ப் பெருக்கி வரும் தொகைக்கு சர, ஸ்திர, உபய ராசிகளுக்காகச் செய்யவேண்டிய கிரிகையைச் செய்தபிறகு வரும் தொகையைத் தகுந்த (a) எண்களால் வகுக்க ஜெனன காலத்தில் வருஷம், ரிது, மாசம், நட்சத்திரம், திதி, பகல், இரவு, நாழிகை, லக்கினம், நவாம்சை லக்கினம் ஆகிய இவைகள் வரும்.

(a) தகுந்த எண்கள் என்பதை அடுத்த சுலோகத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன,

12-வது சுலோகம்:—குணகத்தை 10 ஆல் பெருக்கி வரும் தொகைக்குச் சர, ஸ்திர, உபயகிரியை செய்துவரும் தொகையை (1) 120-ஆல் வகுக்க வரும் மிச்சம் ஜாதகனுடைய வயதாகும், (2) 6-ஆல் வகுக்க வரும் மிச்சம் சசிருது முதல் எண்ண ஜாதகன் பிறந்த ரிதுவரும். (3) 2-ஆல் வகுக்க வரும் மிச்சம் ஜாதகன் பிறந்தமாதம் அந்த ரிதுவில் முதலாவது அல்லது இரண்டாவது மாதம் என்று ஏற்படும். (a)

குணகத்தை 8-ஆல் பெருக்கி வரும் தொகைக்குச் சர, ஸ்திர உபயகிரியை செய்துவரும் தொகையை (1) 2-ஆல் வகுக்க ஜாதகன் ஜெனனகாலத்தில் சுக்கில பட்சம் அல்லது கிருஷ்ண பட்சம் என்று ஏற்படும், (2) 15-ஆல் வகுக்க ஜாதகனுடைய ஜெனனகாலத்தில் திதி ஏற்படும். (b)

(a) நாம் எடுத்துக்கொண்ட உதாரணத்தில் குணகத்திற்கு ராசி 4 பாகை 4 கலை 0 வந்தது. இதை 10-ஆல் பெருக்க ராசி 41 பாகை

10-கலை 0 வரும். தனுசு ராசி உபய ராசியானபடியால் 9-ராசியைக் கழிக்க, ராசி 32 பாகை 10 கலை 0 வரும். இந்த ராசியாகிய 32-யை (1) 120 ஆல் வகுக்க முடியாததால் இதையே வைத்துக்கொள்ளவேண்டியது. ஆகையால் ஜாதகனுக்குப் பிரஷ்னை கேழ்க்க வந்த காலத்தில் வயது 32 ஆகி 33 வயது நடக்கவேண்டும்.

இந்த ராசியாகிய 32-யை (2) 6-ஆல் வகுக்க மிச்சம் ராசி 2வரும். அதாவது மிச்சம் ராசி 2-பாகை 10-கலை 0-வரும். ஆகையால் ஜாதகன் ஜெனனகாலத்தில் சசி ரிதுவிலிருந்து 2 ரிது சென்று 3-வது ரிது நடந்தது என்பதாம். அதாவது ஜாதகனுடைய ஜெனன காலத்தில் ரிது க்ரீஷ்ம ரிது என்பதாம்.

இந்த ராசியாகிய 32-யை (3) 2-ஆல் வகுக்க மிச்சம் ராசி 0 பாகை 10 கலை 0-வரும். ஆகையால் கிரீஷ்ம ரிதுவிற்குரிய இரண்டு மாதங்களில் முதலாவது மாதத்தில் ஜாதகன் பிறந்தான் என்று அறியவும். (வரும் மிச்சம் ஒரு ராசிக்குள்ளானால் முதல் மாதமாகும். ஒரு ராசிக்கு மேற்பட்டால் 2-வது மாதமாகும்.)

(b) நாம் எடுத்துக்கொண்ட உதாரணத்தில் குணகத்திற்கு ராசி பாகை 4 கலை 0 வந்தது. இதை 8-ஆல் பெருக்க ராசி 33 பாகை 2 கலை 0 வரும். தனுசு ராசி உபயராசியானபடியால் 9 ராசியைக் கழிக்க 24-ராசி 2-பாகை 0 கலை வரும். இந்த ராசியாகிய 24-யை (1) 2-ஆல் வகுக்க மிச்சம் ராசி 0 வரும். அதாவது மிச்சம் ராசி 0 பாகை 2 கலை 0 வரும். ஆகையால் ஜாதகன் சுக்கிலபட்சமாகிய வளர்பிறையில் பிறந்தான் என்பதாம். (மிச்சம் ஒரு ராசிக்குள்ளானால் வளர்பிறை என்றும், ஒரு ராசியிற்கு மேற்பட்டிருந்தால் தேய்பிறை என்றும் அறியவும்.)

இந்த ராசியாகிய 24-யை 15-ஆல் வகுக்க மிச்சம் 9-வரும். அதாவது மிச்சம் ராசி 9-பாகை 2-கலை 0 வரும். ஜாதகன் ஜெனன காலத்தில் 9 திதிகள் சென்று 10-வது திதி நடந்தது என்பதாம். அதாவது ஜாதகன் ஜெனனகாலத்தில் திதி தசமி என்று அறியவும்.

13-வது சுலோகம்:—முந்தி வந்த குணகத்தை 7-ஆல் பெருக்கி வரும் தொகைக்குச் சர, ஸ்திர, உபயகிரியை செய்து வரும் தொகையை (1) 2-ஆல் வகுக்க வரும் மிச்சம் ஜாதகன் பிறந்தது பகல் அல்லது இரவு என்று தெரிவிக்கும், (2) 27-ஆல் வகுக்க வரும் மிச்சம் ஜாதகனுடைய ஜென்ம நட்சத்திரமாகும். (a)

(ய) நாம் எடுத்துக்கொண்ட உதாரணத்தில் குணகத்திற்கு ராசி 4-பாகை 4-கலை 0-வந்தது. இதை 7-ஆல் பெருக்க ராசி 28-பாகை 28-கலை 0-வரும். தனுசு ராசி உபய ராசியானபடியால் 9 ராசியைக் கழிக்க ராசி 19-பாகை 28-கலை 0 வரும். இந்த ராசியின் எண்ணாகிய 19-யை (1) 2-ஆல் வகுக்க மிச்சம் 1 ராசி வரும். அதாவது மிச்சம் ராசி 1-பாகை 28-கலை 0-வரும். ஜாதகன் பிறந்தது இரவு என்பதாம். (மிச்சம் ஒரு ராசிக்குள்ளானால் பகல் என்றும், ஒரு ராசியிற்கு மேற்பட்டால் இரவு என்றும் அறியவும்.)

இந்த ராசியின் எண்ணாகிய 19-யை (2) 27-ஆல் வகுக்க முடியாததால் 19-யை மிச்சமாக வைத்துக் கொள்ளவும். ஆகையால் மிச்சம் ராசி 19-பாகை 28-கலை 0 வரும். ஜாதகனுடைய ஜெனன காலத்தில் 19 நட்சத்திரங்கள் சென்று 20 வது நட்சத்திரம் நடந்துகொண்டிருந்தது என்று அறியவும். அதாவது ஜாதகனுடைய ஜென்ம நட்சத்திரம் பூராடம் என்பதாம். இந்த அத்தியாயம் 10-வது சுலோகத்தின் கீழ் ஜாதகன் ஜென்ம நட்சத்திரம் பூராடம் என்று சொல்லியிருப்பதைப் பார்க்கவும்.

14-வது சுலோகம்:—முந்தி வந்த குணகத்தை 5-ஆல் பெருக்கி வரும் தொகைக்குச் சர, ஸ்திர, உபயக்கிரியை செய்து வரும் தொகையிலிருந்து ஜாதகனுடைய ஜெனன நாழிகை, ஜென்ம லக்கினம், ஓாலக்கினம், நவாம்ச லக்கினம் இவைகளை அறியவும். (a)

(a) நாம் எடுத்துக்கொண்ட உதாரணத்தில் குணகத்திற்கு ராசி 4-பாகை 4-கலை 0 வந்தது. இதை 5-ஆல் பெருக்க ராசி 20-பாகை 20-கலை 0 வரும். தனுசு ராசி உபயராசியானபடியால் 9-ராசியைக் கழிக்க ராசி 11 பாகை 20 கலை 0 வரும். இந்த ராசியின் எண்ணாகிய 11-யை, ஜெனனகாலம் முன்னமே தீர்மானித்த பிரகாரம் பகலாகில் அந்த பகலிற்குரிய பகற்பொழுது என்ற அகசின் நாழிகைக்கு மேற்பட்டிருந்தாலும் அல்லது இரவாகில் அந்த இரவிற்குரிய இரவின்பொழுது நாழிகைக்கு மேற்பட்டிருந்தாலும், அகசு நாழிகை அல்லது இரவு நாழிகையால் வகுக்க வரும். மிச்சம் ஜெனன நாழிகையாகும். (உதாரணமாக ஜெனனம் பகலில் நேர்ந்து அகசு 32 நாழிகையானால் 11-யை 32-ஆல் வகுக்க வேண்டியது. ஜெனனம் இரவிலாகில் இரவின் பொழுது 28 நாழிகையினால் 11-யை 28-ஆல் வகுக்க வேண்டியது.) இங்கு 11-யை வகுக்க முடியாததாகையால் 11-யை மிச்சமாக வைத்துக்கொள்ள வேண்டியது. ஆகவே மிச்சம் ராசி 11 பாகை 20 கலை 0 வருவ

னால் ஜாதகன் ஜெனனமானபோது சூரிய அஸ்தமனத்திலிருந்து 11 நாழிகை செல்லாகி 12 வது நாழிகை நடந்தது என்பதாம். நாம் எடுத்துக்கொண்ட உதாரணத்தில் ஜாதகன் ஜெனித்தது இரவு என்று 13-வது சுலோகத்தின்கீழ் நிர்மானித்திருப்பதால், ஜாதகன் இரவில் சூரியன் அஸ்தமனத்திலிருந்து 11 நாழிகைக்குமேல் 12 நாழிகைக்குள் ஜெனித்தவன் என்று அறியவும், பகலாகில் சூரிய உதையத்திலிருந்தும் இரவாகில் சூரிய அஸ்தமனத்திலிருந்தும் ஜெனன நாழிகை கணக்கிட வேண்டும்.

மேலும் ராசி 11-பாகை 20-கலை 0 என்பதில் உள்ள ராசியின் எண்ணாகிய 11-யை 12-ஆல் வகுக்க முடியுமானால் வகுத்து வரும் மிச்சம் ஜென்மராசியாகும். இங்கு 11-யை 12-ஆல் வகுக்க முடியாததால் மிச்சம்ராசி 11 பாகை 20 கலை 0 வரும். ஆகையால் மேஷம் முதல் 11 ராசி 20 பாகை 0 கலை எண்ணிவர மீனம் வரும். ஆகையால் ஜாதகனுடைய ஜென்ம லக்கினம் மீனம் என்பதாம்.

மேலும் ராசி எண்ணாகிய 11-யை 2-ஆல் வகுக்க முடியுமானால், 2-ஆல் வகுத்து வரும் மிச்சம் ஜென்ம ஓரையாகும். இங்கு 11-யை 2-ஆல் வகுக்க மிச்சம் 1 ராசி வரும். அதாவது மிச்சம் ராசி 1-பாகை 20 கலை 0 ஆகும். ஆகலால் ஜென்ம லக்கின ஓரை இரண்டாவது ஓரையாகும். (மிச்சம் ஒரு ராசிக்குள்ளானால் முதல் ஓரை, ஒரு ராசியிற்கு மேற்பட்டால் இரண்டாவது ஓரை என்பதாம்) இங்கு லக்கினம் மீனராசி அதில் 2-வது ஓரையானபடியாலும், மீனம் இரட்டை ராசியானபடியாலும், ஜென்ம ஓரை சூரியனுடைய ஓரை என்று அறியவும்.

மேலும் ராசி எண்ணாகிய 11-யை 9-ஆல் வகுக்க முடியுமானால் 9-ஆல் வகுத்து வரும் மிச்சம் ஜென்ம நவாம்சமாகும். இங்கு 11-யை 9-ஆல் வகுக்க மிச்சம் 2 ராசி வரும். அதாவது மிச்சம் ராசி 2 பாகை 20 கலை 0 ஆகும் ஆகலால் ஜெனனகாலத்தில் ஜென்ம லக்கினத்தில் 2 நவாம்சம் சென்று 3-வது நவாம்சம் நடந்தது என்பதாம். லக்கினம் மீனம் என்று முன்னமே நிர்மானித்ததால் மீனத்தில் 3 வது நவாம்சம் கன்னியா நவாம்சமாகும். ஆகையால் ஜென்ம நவாம்சம் கன்னியாபுத நவாம்சமாகும்.

15-வது சுலோகம்:—நஷ்ட ஜாதகனுடைய பெயரிலுள்ள எழுத்துக்களின் மாத்திரையின் அளவைக் கூட்டவரும் அளவை 2-ஆல் பெருக்கி அத்துடன் "சங்கு" என்று சொல்லப்படும் குச்சின் சாயையி

னுடைய அங்குல அளவைக் கூட்ட வரும் எண்ணை 27-ஆல் வகுத்து வரும் மிச்சத்தை அவிட்டம் முதல் எண்ண வரும். நட்சத்திரமே ஜென்ம நட்சத்திரமாகும். (a)

(a) உயிர் எழுத்திற்கு மாத்திரை 1, மெய் எழுத்திற்கு மாத்திரை ½, உயிர் மெய்யெழுத்திற்கு மாத்திரை 1 ஆகும். உதாரணமாக ஜாதகனுடைய பெயர் "இராமன்" என்று வைத்துக்கொண்டால் இராமன் என்ற பதத்திலுள்ள எழுத்துக்களுக்காக மொத்தம் மாத்திரை 3½ ஆகும். இதை 2-ஆல் பெருக்க 7-ஆகும். சங்கின் சாபையின் அளவு 6 அங்குலமானால் இந்த 6-யை 7 உடன் கூட்ட 13-வரும். இந்த 13, இருபத்தேழிற் குறைந்து இருப்பதால் 13-யை மிச்சமாக வைத்துக் கொள்ளவும். இந்த மிச்சமாகிய 13-க்காக அவிட்ட முதலாக 13 நட்சத்திரம் எண்ண பூசம் வரும். ஆகையால் ஜாதகனுடைய ஜென்ம நட்சத்திரம் பூசம் என்பதாம். ஜென்ம நட்சத்திரம்காண இந்த வழியும் ஒரு வழியாகும். இன்னம் ஒருவழி 16-வது சுலோகத்திற் சொல்லுகிறார்.

16-வது சுலோகம்:—நஷ்ட ஜாதகனுடைய முகம் எந்த திக்கை நோக்கி இருக்கின்றதோ அந்த திக்கிற்குரிய எண்ணை, நஷ்ட ஜாதகனைச் சேர்த்து எத்தனைபேர் பிரஷ்ண காலத்தில் நஷ்ட ஜாதகனுடைய முகம் நோக்கி இருக்குந் திக்கைப் பார்க்கின்றார்களோ அத்தனையால் பெருக்கி வந்த தொகையை 15-ஆல் பெருக்க வருந் தொகையை, 27-ஆல் வகுக்க வரும் மிச்சத்தை அவிட்டம் முதல் எண்ணவரும் நட்சத்திரமே ஜாதகனுடைய ஜென்ம நட்சத்திரமாகும். (a) திக்கிற்குரிய எண்கள் அடியிற்கண்டபடி ஆகும்.

1.	கிழக்கு	2	5.	மேற்கு	15
2.	தென்கிழக்கு	3	6.	வடமேற்கு	27
3.	தெற்கு	14	7.	வடக்கு	9
4	தென்மேற்கு	10	8.	வடகிழக்கு	8

(a) உதாரணமாக ஜாதகன் வடக்கு முகம் நோக்கி இருந்தானென்றும், அப்போது ஜாதகன் தவிர 3 பேர் வடக்கு முகமாக நோக்கிஇருந்தார்கள் என்று வைத்துக் கொள்ளுவோம். ஆகையால் ஜாதகனைச் சேர்த்து 4 பேர் வடதிக்கை நோக்கி இருந்தார்கள் என்று ஏற்படும். வடதிக்கிற்குரிய எண்ணாகிய 9-யை 4-ஆல் பெருக்க 36 வரும். இந்த 36-யை, 15-ஆல் பெருக்க 540 வரும். இந்த 540-யை 27-ஆல் வகுக்க மிச்சம் 0 வரும். (மிச்சம் சூன்யமாக வந்தால் 27 என்று

வைத்துக்கொள்ளவும்.) அவிட்ட முதல் 27 நட்சத்திரம் எண்ணிவர திருவோணம் வரும். ஆகையால் ஜாதகனுடைய ஜென்ம நட்சத்திரம் திருவோணம் என்பதாம்,

17-வது சுலோகம்:—நஷ்ட ஜாதகம் கணிப்பதற்காக பல வழிகள் இவ்விதமாகச் சொல்லப்பட்டன. புத்தி நுட்பமுள்ள ஜோதிடர்கள் இவ்வழிகளை எல்லாம் நன்றாய் ஆராய்ந்துணர்ந்து உபயோகப்படுத்த வேண்டியது என்பதாம்.

27-வது அத்தியாயம்.

1-வது சுலோகம்.

1. மேஷத்தில் 1-வது திரேகாணம்:—இது ஆயுதங்கள் தரித்த புருட ரூபமுள்ளது. இந்த திரேகாணத்தில் பிறந்தவன் சிவந்த கண்களையும், பயங்கரமான ரூபமுமுள்ளவனும், கறுத்த தேகமுடையவனுமாயிருப்பான். இடுப்பில் வெளுத்த வஸ்திரம் தரித்து கையில் ஆயுதமேந்தி பிறரைக் காப்பாற்றும் நோக்கமுடையவனாகவிருப்பான்.

2-வது சுலோகம்.

2. மேஷத்தில் 2-வது திரேகாணம்:—இது ஸ்ரீ ரூபமும், மிருக ரூபமுள்ளது. இந்த திரேகாணத்திற் பிறந்தவள் குதிரை முகம்போல் நீண்ட முகமும், திரண்டு உருண்ட குடம்போன்ற தொங்கி வயிறும், உடையவள்ளாகவும், நொண்டியாகவும், தாகவிடாய் பொருக்க முடியாதவளாயும், ஆபரணங்களிலும், மதுரமான தின்பண்டங்களிலும் அதிக விருப்பமுடையவளாகவிருப்பாள்.

3-வது சுலோகம்.

3. மேஷத்தில் 3-வது திரேகாணம்:—இது ஆயுதந் தரித்த புருட ரூபமுள்ளது, இந்த திரேகாணத்தில் பிறந்தவன் சிகப்பு நிறமாயும், கோபமுடையவனும், துன்மார்க்க சுபாவமுடையவனுமிருப்பான். சிகப்பு வஸ்திரம் தரித்து கையில் கோல்பிடித்தவனாகவிருப்பான், கலைகள் பலவுங் கற்றவனும், வேலை செய்யப் பிரியமுள்ளவனும் இருப்பான்.

4-வது சுலோகம்.

4. ரிஷபத்தில் 1-வது திரேகாணம்:—இது அக்கினியையுடைய ஸ்திரீ ரூபமுடையது. இந்ததிரேகாணத்தில் பிறந்தவள் திரண்டு உருண்டு குடம்போன்ற தொங்கி வயிறும், அறுபட்டு சுருண்டுள்ள தலைமயிறும்,

உடையவளாகி தீபட்ட வஸ்திரங்களைத் தரித்தவள், தாகவிடாய் பெருக்காதவள், ஆகாரப்பிரியள், ஆபரணத்தில் அதிக ஆசையுள்ளவள்.

5-வது சுலோகம்.

5. ரிஷபத்தில் 2-வது திரேகாணம்:—இது புருஷரூபமும் மிருகரூபமுமுள்ளது. இந்த திரேகாணத்திற் பிறந்தவன் ஆடுபோன்ற முகமும், ரிஷபத்தின் மடிப்பு விழுந்த சதையுள்ள கழுத்துபோன்ற கழுத்தும் உடையவன், தாகமுள்ளவன், அனேக சாஸ்திரங்கள் அறிந்தவன், சங்கீதம், சிற்பம், சித்திரம், நிர்தனம், கல்வி இவைகளில் தேர்ந்தவன், விவசாயத்தில் வல்லவன், ஆடு மாடு வாகனங்கள் உடையவனாகி இவைகளை உபயோகப்படுத்துவதில் திறமையுள்ளவன். அழுக்கு வஸ்திரம் தரித்தவன்.

6-வது சுலோகம்.

6. ரிஷபத்தில் 3-வது திரேகாணம்:—இது புருஷ ரூபமும், மிருகரூபமுமுள்ளது. இந்த திரேகாணத்தில் பிறந்தவன் யானையைப்போன்ற பெரிய தேகமும் விசாலமான பற்களும், ஒட்டையைப்போன்ற பாதமும், சிகப்பு நிறமும் உடையவன், ஆடுகளிடத்திலும் காட்டில் சஞ்சரிக்கும் மிருகங்களிடத்திலும் பழகி அவைகளிடத்தில் மிகவும் பிரியமாயிருப்பவன் என்பதாம்.

7-வது சுலோகம்.

7. மிதுனத்தில் 1-வது திரேகாணம்:—இது ஸ்ரீ ரூபமுள்ளது. இந்த திரேகாணத்தில் பிறந்தவள் அழகுள்ளவள், உயர்ந்த புஜங்களுள்ளவள், காமம் அதிகமாயுள்ளவள், அற்ப புத்திரருள்ளவள், ஆடையாபரணங்கள் அணிந்து அழகாக விருக்கப் பிரியமுள்ளவள், தையல்வேலையில் மிகவும் திறமை வாய்ந்தவள்.

8-வது சுலோகம்.

8. மிதுனத்தில் 2-வது திரேகாணம்:—இது ஆயுதந்தரித்த புருஷரூபமும், பக்ஷி ரூபமும் உடையது. இந்த திரேகாணத்தில் பிறந்தவன், மார் கவசம் பூண்டு வில்லு அம்பு முதலிய ஆயுதங்களை ஏந்தி போர்புரியப் பிரியன், நந்தவனங்களில் வசித்திருக்கப்பட்டவன், தனம், ஆபரணம் ஆகிய இவைகளிடத்தில் அதிக ஆசையுள்ளவன், புத்திரர்களிடத்தில் பிரியமுள்ளவன்.

9-வது சுலோகம்.

9. மிதுனத்தில் 3-வது திரேகாணம்:—இது ஆயுதந் தரித்த புருஷ ரூபமுள்ளது. இந்த திரேகாணத்தில் பிறந்தவன் அனேக சாஸ்

திரங்களைக் கற்றுணர்ந்து கிரந்தங்கள் எழுதும் கிரந்த கர்த்தா, மார் கவசம்பூண்டு வில்லு அம்பு ஏந்தி போர்புரிய வல்லவன், ஆபரணங்களை அணிந்தவனும், அனேக நவரத்தினங்களுடையவனும் இருப்பான் என்பதாம்.

10-வது சுலோகம்.

10. கடகத்தில் 1-வது திரேகாணம்:—இது மிருக ரூபமுள்ளது, இந்த திரேகாணத்திற் பிறந்தவன் பன்றியைப்போன்ற முகமும் குதிரையைப்போன்ற நீண்ட கழுத்தும், யானையைப்போன்ற பெரிய தேகமும், ஒட்டையைப்போன்ற பாதமும் உடையவன், காட்டில் சந்தன மரங்கள் இருக்குமிடத்தில் வசித்துக்கொண்டு கனி, காய், கிழங்கு, இலை இவைகளைத் தின்று ஜீவிப்பவன்.

11-வது சுலோகம்.

11. கடகத்தில் 2-வது திரேகாணம்:—இது ஸ்ரீ ரூபமுள்ளது, இந்த திரேகாணத்தில் பிறந்தவள் எவ்வன வயதுள்ளவள், தலையில் தாமரைப் புஷ்ப மணிந்துகொண்டு சர்ப்பங்களை ஏந்திக்கொண்டு அத்திரத்தின் அருகில் வசித்துக்கொண்டிருப்பவள், கடினமான நெஞ்சுடையவள்.

12-வது சுலோகம்.

12. கடகத்தில் 3-வது திரேகாணம்:—இது புருஷ ரூபமும் சர்ப ரூபமும் உள்ள திரேகாணம். இந்த திரேகாணத்தில் பிறந்தவன், தட்டையான முகமுடையவன், பொன் ஆபரணங்களும், சர்பமும் தேகத்தில் அணிந்துள்ளவன், தன் மனைவியின் நிமித்தமாக ஆபரணங்கள் தேடுவதற்காக கப்பலேறி சமுத்திர யாத்திரை செய்பவன் என்பதாம்.

13-வது சுலோகம்.

13. சிம்மத்தில் 1-வது திரேகாணம்:—இது புருஷரூபமும் மிருக ரூபமும், பக்ஷி ரூபமும் உள்ளது இந்த திரேகாணத்தில் பிறந்தவன் நாய் குணமும், கழுகு குணமும் உள்ளவன், அழுக்கு வஸ்திரங்களைத் தரித்திருப்பவன், பெற்றோரை விட்டு பிரிந்திருப்பவன், மரங்களின் உச்சியில் இருக்கப் பிரியமுள்ளவன்.

14-வது சுலோகம்.

14. சிம்மத்தில் 2-வது திரேகாணம்:—இது ஆயுதந்தரித்த புருஷ ரூபமுள்ளது, இந்த திரேகாணத்தில் பிறந்தவன் குதிரையைப்போன்ற

ரூபமும், வளைந்த மூக்கும் உடையவன், சிங்கத்தைப்போன்ற பயங்கரமான குணமுடையவன், தலையில் புஷ்பங்களைத் தரித்துக்கொண்டு கையில் வில்லு அம்பு ஏந்தி, மான் தோல் கம்பளம் முதலியவைகளைப் போர்த்துக்கொண்டிருப்பவன்.

15-வது சுலோகம்.

15. சிம்மத்தில் 3-வது திரேகாணம்:—இது ஆயுதந்தரித்த புருஷ ரூபமும் மிருக ரூபமுமுள்ளது. இந்தத் திரேகாணத்தில் பிறந்தவன் கரடியைப்போன்ற முகமும், நீண்ட தாடியும், மீசையும், சுருண்ட மயிரும் உடையவன், குரங்கைப்போலத் துன்மார்க்கமான காரியங்களைச் செய்பவன். கையில் கோலேந்தி காய் கனிகள், மாமிசம் முதலானவைகளைக் கொண்டு போகின்றவன் என்பதாம்.

16-வது சுலோகம்.

16. கன்னியில் 1-வது திரேகாணம்:—இது ஸ்ரீ ரூபமுள்ளது. இந்த திரேகாணத்திற் பிறந்தவள், அழுக்கு வஸ்திரங்கள் தரித்தவள், ஆடையிலும் செல்வத்திலும் விருப்பமுள்ளவள், புட்பக் குடலில் புஷ்பங்களை எடுத்துக்கொண்டு தன்னுடைய குருவினுடைய வீட்டிற்குச் செல்பவள்.

17-வது சுலோகம்.

17. கன்னியில் 2-வது திரேகாணம்:—இது ஆயுதந்தரித்த புருஷ ரூபமுள்ளது, இந்த திரேகாணத்திற் பிறந்தவன் தேகமுழுதும் ரோமமுள்ளவன், கறுப்பு நிறமுள்ளவன், கையில் பேனு ஏந்தி வரவு செலவு கணக்குகளைப் பார்ப்பவன், தலையைச் சுற்றி வஸ்திரம் கட்டியிருப்பவன், கையில் பெரிய வில்லும் அம்பும் ஏந்தி இருப்பவன்.

18-வது சுலோகம்

18. கன்னியில் 3-வது திரேகாணம்:—இது ஸ்ரீ ரூபமுள்ளது, இந்த திரேகாணத்தில் பிறந்தவள் மஞ்சள் நிறமுள்ளவள், தெய்வபக்தியால் கோயிலுக்குச் சுத்தமாய்ப்போய் வருபவள், வெண்ணிறமான பட்டு ஆடைகளைத் தரிப்பவள், கையில் அகப்பையும், குடமும் எடுத்துக்கொண்டு செல்பவள் என்பதாம்,

19-வது சுலோகம்.

19. துலாத்தில் 1-வது திரேகாணம்:—இது புருஷ ரூபமுள்ளது. இந்த திரேகாணத்தில் பிறந்தவன், கையில் ஒரு திராசு பிடித்து வல்

றுக்களை எடைபோட்டு அவைகளின் தொகையை அறியவல்லவன், எடைபோடவேண்டிய வஸ்துக்களை கையிலேந்தி அவைகளின் கிரை யத்தைப்பற்றி யோசனை செய்து கொண்டிருப்பவன்.

20-வது சுலோகம்.

20. துலாத்தில் 2-வது திரேகாணம்:—இது புருஷ ரூபமும் பக்ஷி ரூபமுமுள்ளது. இந்த திரேகாணத்தில் பிறந்தவன் கழுகைப்போன்ற முகமுடையவன், பசியும் தாகமும் பொருக்கமுடியாதவன் தன்னு டைய மனைவி மக்களைப்பற்றி எப்போதும் நினைத்துக் கொண்டிருப்ப வன், கையில் பாத்திரமேந்தி கீழே விழ எண்ணமுள்ளவன்.

21-வது சுலோகம்.

21. துலாத்தில் 3-வது திரேகாணம்:—இது புருஷ ரூபமும், மிருக ரூபமும் உள்ளது, இந்த திரேகாணத்தில் பிறந்தவன் குரங்கு போன்ற ரூபமும், நவரத்தினங்களால் அலங்கரிக்கப்பட்ட குதிரைபோ ன்ற முகமும் உடையவன், மார்பு கவசம் பூண்டு பொன்னால் செய்யப் பட்ட அம்பராதூணியையும், வில்லையும்ஏந்தி வனங்களிலும் காடுகளிலு திரிந்து மிருகங்களைப் பயப்படுத்தித்துறத்தவல்லவன், காய்கனிகளும், மாமிசங்களும் எடுத்துக்கொண்டு செல்பவன் என்பதாம்.

22-வது சுலோகம்.

22. விருச்சிகத்தில் 1-வது திரேகாணம்:—இது ஸ்திரீரூபமும், சர்ப ரூபமுமுள்ளது, இந்த திரேகாணத்தில் பிறந்தவள் ஆபரணங்களில் லாதவளாயினும் அழகுள்ளவள், காலில் சர்பஞ் சுற்றப்பட்டிருப்பவள், தன்னுடைய விடத்தை விட்டுக் கப்பல் யாத்திரை செய்து வருபவள்.

23-வது சுலோகம்.

23. விருச்சிகத்தில் 2-வது திரேகாணம்:—இது ஸ்திரீரூபமும் சர்ப ரூபமுமுள்ளது. இந்த திரேகாணத்திற் பிறந்தவள் பெருத்த தேகமு டையவள், தேகம் முழுவதும் சர்பம் சுற்றிக் கிடக்கும், தன்னுடைய புருஷனுடைய அந்தஸ்திற்குத் தகுந்த சுக போகங்களை அனுபவிக்க விருப்பமுள்ளவள்.

24-வது சுலோகம்.

24. விருச்சிகத்தில் 3-வது திரேகாணம்:—இது புருஷ ரூபமும், மிருக ரூபமுமுள்ளது, இந்த திரேகாணத்திற் பிறந்தவன் அகலமான தட்டையான முகமுடையவன், சிங்கத்தைப்போல் உக்கிரமாக காடு

வனாந்திரங்களில் திரிந்து நாய் நரிகள், பன்றி மான் இவைகளைத் துரத்துபவன், சந்தன மரங்களுள்ள காடுகளில் வசிப்பவன் என்பதாம்.

25-வது சுலோகம்.

25. தனுசில் 1-வது திரேகாணம்:—இது ஆயுதந் தரித்த புருஷ ரூபமும் மிருக ரூபமும் உள்ளவன். இந்த திரேகாணத்திற் பிறந்தவன் குதிரையைப்போன்ற தேகமுடையவன், அம்பும் வில்லும் தரித்தவன், யோகிகள் வசிக்குமிடத்திலிருந்துகொண்டு அவர்கள் செய்யும் யாகங்களுக்கு வேண்டிய சாமான்களைத் தயார்செய்து கொடுப்பவன்.

26-வது சுலோகம்.

26. தனுசில் 2-வது திரேகாணம்:—இது ஸ்ரீ ரூபமுள்ளது. இந்த திரேகாணத்தில் பிறந்தவள் சண்பக மலர்போலும் தங்கம்போலும் நிறமுள்ளவளாய் அழகுவாய்ந்தவள், சமுத்திரத்தில் அகப்படக்கூடிய விலையுயர்ந்த வஸ்துக்களும் நவரத்தினங்களுமுடையவள், சிம்மாசனத்திலிருக்கப்பட்ட ராணியாகும்.

27-வது சுலோகம்.

27. தனுசில் 3-வது திரேகாணம்:—இது ஆயுதந் தரித்த புருஷ ரூபமுள்ளது. இந்த திரேகாணத்தில் பிறந்தவன் சண்பகமலர்போலும், தங்கம் போலும் நிறமுள்ள தேகமுடையவன், நீண்ட தாடியும் மீசையும் உடையவன், வெண்ணிறமான பட்டு வஸ்திரமும் மான்தோலும் தரிப்பவன், கையில் கெதையை ஏந்தி சிம்மாசனத்திலிருந்து அரசு செய்பவன் என்பதாம்.

28-வது சுலோகம்.

28. மகரத்தில் 1-வது திரேகாணம்:—இது சங்கிலிபூண்ட புருஷ ரூபமுள்ளது. இதில் பிறந்தவன் விகாரமான முகமும், பன்றியைப்போன்ற தேகமும், தேகமுழுவதும் உரோமமும், மிகவும் வலிவும் உடையவன், மிருகங்களையும் பட்சிகளையும் பிடித்துக் கட்டுவதற்காக சங்கிலியும் கயிறும் உடையவன்.

29-வது சுலோகம்.

29. மகரத்தில் 2-வது திரேகாணம்:—இது ஸ்ரீ ரூபமுள்ளது. இந்த திரேகாணத்திற் பிறந்தவள், நீலவர்ணமான தேகமும், தாமரை இதழ்போன்ற கண்களையுமுடையவள். சங்கீதம், சிற்பம், சித்திரம் முதலிய வித்தைகளில் வல்லவள், அனேக விதமான வஸ்துக்களின்பேரில்

பிரியமுள்ளவள், பலரும் கவனிக்கும்படியான ஆபரணங்களைக் காதில் அணிந்திருப்பவள்.

30-வது சுலோகம்.

30. மகரத்தில் 3-வது திரேகாணம்:—இது ஆயுதந் தரித்த புருஷ ரூபமுள்ளது, இந்த திரேகாணத்திற் பிறந்தவன் தெய்வத்தன்மையுடையவன், கம்பளம் முதலியவைகளைத் தரித்து, மார்பு கவசம் பூண்டு வில்லும் அம்பும் அம்புராதூணியும் ஏந்தி, தோளில் நவரத்தினங்களையுடைய பாத்திரத்தை எடுத்துக்கொண்டு செல்பவன் என்பதாம்.

31-வது சுலோகம்.

31. கும்பத்தில் 1-வது திரேகாணம்:—இது புருஷரூபமுள்ளது, இந்த திரேகாணத்தில் பிறந்தவன் கழுகுபோன்ற முகமுடையவன், கம்பளம், பட்டு வஸ்திரம், மான்தோல் முதலியவை அணிந்துகொள்பவன், ஆகாரம், ஜலம், மதுபானம், எண்ணெய் இவைகளால் நன்மை பெறும்படியான எண்ணமுடையவன்.

32-வது சுலோகம்

32. கும்பத்தில் 2-வது திரேகாணம்:—இது அக்கினி ஏந்திய ஸ்திரீ ரூபமுள்ளது, இந்த திரேகாணத்திற் பிறந்தவள், அழுக்கு ஆடைகளைத் தரிப்பவள், நெருப்பு பிடித்து கொஞ்சம் எரியப்பட்ட மரத்தால் செய்யப்பட்ட வண்டியில் செல்லுபவள், காட்டில் வசிப்பவள், இரும்பைச் சேகரிப்பவள்.

33-வது சுலோகம்.

33. கும்பத்தில் 3-வது திரேகாணம்:—இது புருஷ ரூபமுள்ளது, இந்த திரேகாணத்திற் பிறந்தவன் கறுப்பு நிறமுடையவன், காதுகளில் உரோமமுடையவன், சிரசில் கிரீடம்போல் துணியைச் சுற்றிக்கொண்டு இரும்பு, எண்ணெய், பட்டை, மரம், குடம் இவைகளை ஒருவிடத்திலிருந்து மற்றொருவிடத்திற்கு எடுத்துக்கொண்டு போகின்றவன் என்பதாம்.

34-வது சுலோகம்.

34. மீனத்தில் 1-வது திரேகாணம்:—இது புருஷ ரூபமுள்ளது, இந்த திரேகாணத்திற் பிறந்தவன் யாக பாத்திரங்களும் முத்து, சங்கு, சிப்பி, நவரத்தினங்கள், ஆபரணங்கள் இவைகள் உடையவன், தன் மனைவியிற்காக ஆடை ஆபரணங்களைத் தேடுவதற்காகக் கப்பல்மீதேறி சமுத்திர யாத்திரை செய்பவன்.

35-வது சுலோகம்,

35, மீனத்தில் 2-வது திரேகாணம்:—இது ஸ்ரீ ரூபமுள்ளது, இந்த திரேகாணத்தில் பிறந்தவள் முகம் சண்பக புஷ்பம்போல் பிரகாசமாகவிருக்கும், சினேகிதர்களுடன் பெரிய கொடியுள்ள கப்பலில் சமுத்திர யாத்திரை செய்பவள்.

36-வது சுலோகம்.

36. மீனத்தில் 3-வது திரேகாணம்:—இது புருஷ ரூபமும் சர்ப ரூபமுமுள்ளது, இந்த திரேகாணத்தில் பிறந்தவன் தேகத்தில் பாம்பு சுற்றி இருப்பவன், காட்டில் ஒரு பள்ளத்தின் ஓரத்தில் நிர்வாணமாக நின்றுகொண்டிருப்பவன், பசியினாலும் நெருப்பினாலும் திருடர்களாலும் துன்பப்பட்டு அழுபவன் என்பதாம்.

குறிப்பு:—இங்கு சொல்லிய திரேகாணங்களின் பலன்களில் நல்ல ரூபமுடையதாகவும், பழம், புஷ்பம், நவரத்தினங்கள், குடம், ஆகிய இவைகளை வைத்துக்கொண்டிருப்பதாகவும் சொல்லி இருப்பதற்கு நல்ல பலன் என்று அறியவும், அகோரமானரூபமும், ஆயுதமும் உடையதாய் சொல்லி இருப்பதற்குக் கெட்ட பலன் என்று அறியவும். சர்பம் சங்கிலி இவைகள் சொல்லப்பட்டிருப்பதற்குப் பலன் மூர்ச்சையாயிருத்தல், சிறையிலிருத்தல் என்பதாம்.

28-வது அத்தியாயம்.

1-வது சுலோகம்.

1-வது அத்தியாயம்—இராசி பிரபேதோத்யாயம்
2-வது அத்தியாயம்—கிரகயோனி பிரபேதோத்யாயம்
3-வது அத்தியாயம்—வியோனி ஜன்மாத்யாயம்
4-வது அத்தியாயம்—நிஷேகாத்யாயம்
5-வது அத்தியாயம்—ஜன்மவிதிர் காமாத்யாயம்
6-வது அத்தியாயம்—அரிஷ்டாத்யாயம்
7-வது அத்தியாயம்—ஆயுர்தாயாத்யாயம்
8-வது அத்தியாயம்—தெசாந்தர்தசாத்யாயம்
9-வது அத்தியாயம்—அஷ்டகவர்காத்யாயம்

2-வது சுலோகம்.

10-வது அத்தியாயம்—கர்மாஜுவாத்யாயம்
11-வது அத்தியாயம்—இராஜயோகாத்யாயம்

12-வது அத்தியாயம்—நாபசயோகாத்யாயம்
13-வது அத்தியாயம்—சந்திரயோகாத்யாயம்
14-வது அத்தியாயம்—திவிகிரகயோகாத்யாயம்
15-வது அத்தியாயம்—பிரவிரஜ்பாயோகாத்யாயம்
16-வது அத்தியாயம்—ருக்ஷசீலாத்யாயம்
17-வது அத்தியாயம்—சந்திரராசி சீலாத்யாயம்
18-வது அத்தியாயம்—இராசி சீலாத்யாயம்
19-வது அத்தியாயம்—திருஷ்டிபலாத்யாயம்
20-வது அத்தியாயம்—பாவாத்யாயம்

3-வது சுலோகம்

21-வது அத்தியாயம்—ஆஸ்ரயயோகாத்யாயம்
22-வது அத்தியாயம்—பிரகிர்ணகாத்யாயம்
23-வது அத்தியாயம்—அனிஷ்டாத்யாயம்
24-வது அத்தியாயம்—ஸ்ரீஜாதகாத்யாயம்
25-வது அத்தியாயம்—நைர்யானிகாத்யாயம்
26-வது அத்தியாயம்—நஷ்டஜாதகாத்யாயம்
27-வது அத்தியாயம்—திரேஷ்காணுத்யாயம்
28-வது அத்தியாயம்—உபசம்ஹாராத்யாயம்

4-வது சுலோகம்

(1) பிரஷ்ண பிரமேதம், (2) திதியலாத்யாயம், (3) நட்சத்திரா தானம், (4) திவசாபிதானம், (5) வாரபல லட்சணம், (6) சுஹுர்த்த நிர்தேசஹா, (7) சந்திரபலாத்தியாயம், (8) லக்கின நிக்ஷயம், (9) லக்கினபேதம், (10) கிரகசுத்தி, (11) அபவாத அத்தியாயம், (12) மிஸ்ரக அத்தியாயம், (13) தனுவேபனம்.

5-வது சுலோகம்.

(14) குக்யக பூஜை, (15) சுவர்ப்பன அத்தியாயம், (16) ஸ்கான தி, (17) பிரதிஷ்டை, (18) கிரகயக்ஞம், (19) நிர்கமம், (20) பிரயா ணம், (21) சகுனருதம்.

6-வது சுலோகம்.

(21) விவாகப்படலம், (22) கிரக காணம், பஞ்ச சித்தாந்தம். இவ் விதமாக கணிதம், (அதாவது வானசாஸ்த்திரம்) ஹோரா, சம்ஹிதாஎன்று சொல்லப்பட்ட ஜோதிஷ சாஸ்திரத்தின் மூன்று பாகமும் சொல்லப் பட்டன.

“மேற்சொல்லியவைகளில் கடைசியில் சொல்லிய கிரக காணத் தைப்பற்றி பஞ்ச சித்தாந்தம் என்று சொல்லப்பட்ட என்னுடைய சித்

தாந்தத்தில் தனியாகச் சொல்லி இருக்கின்றேன். இவ்விதமாக ஜோதிஷ சாஸ்திரத்தின் மூன்று பிரிவுகளாகிய வான சாஸ்திரம், ஜாதகம், சம்ஹிதா ஆகிய இவைகளை புத்தி நுட்பமுள்ள ஜோதிடர்களின் நன்மைக்காக நான்சொல்லிஇருக்கின்றேன்'' என்று இவ்விதமாக வராஹ மிகிரர் சொல்லுகிறார்.

7-வது சுலோகம்:—''இந்த கிரந்தங்களைஎல்லாம் நான் பூர்வ கிரந்த கர்த்தர்கள் விபரமாக எழுதி வைத்துள்ள கிரந்தங்களை நன்றாய் வாசித்து ஆராய்ந்து எழுதி இருக்கின்றேன். இவைகளில் முக்கியமான அம்சங்கள் ஏதாகிலும் விட்டுவிடப்பட்டிருந்தால் வாசித்தறிந்த புத்திமான்கள் அதற்காக என்னை மன்னிப்பார்களாக'' என்று வராஹ மிகிரர் சொல்லுகிறார்.

8-வது சுலோகம்.

''நான் எழுதிவைத்த கிரந்தத்தின் நகலை எடுப்பவர்கள் அல்லது கிரந்தத்தைப் போதிப்பவர்கள் என்னுடைய கிரந்தங்களில் எதையாகிலும் விட்டுவிட்டால் வாசித்தறிந்த கல்விமான்கள் அதைச் சேர்த்துவிடுவார்களாக. மேலும் இந்த கிரந்தத்தில் ஏதாகிலும் பிழை தவறுதல் நேரிட்டிருந்தால் வாசித்தறிந்த கல்விமான்கள் அவைகளைத் திருத்தி விடுவார்களாக'' என்று வராஹமிகிரர் சொல்லுகிறார்.

9-வது சுலோகம்:—''அதித்யாசன் என்ற பிராம்மணருடைய புத்திரராகிய வராஹமிகிரர் தன்னுடைய பிதாரிடத்தில் வித்தையைக் கற்று கபித்தா என்ற கிராமத்தில் சூரிய பகவானிடத்தி லிருந்து ஞானத்தை அடைந்து அவந்தி நாட்டில் உஜ்ஜினி நகர இராஜ சபையில் காலங் கழித்து ஜாதக விஷயமாக பூர்வீக ரிஷிகள் எழுதிவைத்த கிரந்தங்களை மிகவும் ஜாக்கிரதையாக ஆராய்ந்தறிந்து இந்த ஜாதக கிரந்தத்தை எழுதினார்'' என்று வராஹமிகிரர் சொல்லுகிறார்.

10-வது சுலோகம்:—''நான் இதுகாறும் பூஜித்து வந்த சூரியன் வசிஷ்டர், அதித்தியதாசன் ஆகிய இவர்களுடைய கிருபானுகூலத்தால் இந்த கிரந்தத்தை நான் எழுதி முடித்தேன். ஜாதக கிரந்தங்களை எழுதிவைத்த பூர்வீக கிரந்த கர்த்தர்களுக்கு நான் நமஸ்காரம் செய்கின்றேன்'' என்று வராஹமிகிரர் சொல்லி இந்த கிரந்தத்தைப் பூர்த்தியாக்கி விட்டார் என்பதாம்.

பிருஹத்ஜாதகம் முற்றிற்று.

(1) 1-வது அத்தியாயம் 4-வது சுலோகத்தின்கீழ் 3-வது பக்கத்தில் சொல்லிய வாக்கியம். (Table)

இராசி, நட்சத்திரப் பாதஸ்புடம்.

இராசி 1	நட்சத்திரம் 2	நட்சத்திர பாதம் 3	பாகை (Degree) 4	கலை (Minute) 5	இராசி 1	நட்சத்திரம் 2	நட்சத்திர பாதம் 3	பாகை (Dagree) 4	கலை (Minute) 5
மேஷம்	அஸ்வணி	1	0	0			3	126	40
		2	3	20			4	130	0
		3	6	40		பூரம்	1	133	20
		4	10	0			2	136	40
	பரணி	1	13	20			3	140	0
		2	16	40			4	143	20
		3	20	0		உத்திரம்	1	146	40
		4	23	20	கன்னி		2	150	0
	கிருத்தி	1	26	40			3	153	20
ரிஷபம்		2	30	0			4	156	40
		3	33	20		அஸ்தம்	1	160	0
		4	36	40			2	163	20
	ரோகணி	1	40	0			3	166	40
		2	43	20			4	170	0
		3	46	40		சித்திரை	1	173	20
		4	50	0			2	176	40
	மிருகசீர	1	53	20	துலாம்		3	180	0
		2	56	40			4	183	20
மிதுன		3	60	0		சுவாதி	1	186	40
		4	63	20			2	190	0
	திருவாதி	1	66	40			3	193	20
		2	70	0			4	196	40
		3	73	20		விசாகம்	1	200	0
		4	76	40			2	203	20
	புனர்பூசம்	1	80	0			3	206	40
		2	83	20	விருச்சி		4	210	0
		3	86	40		அனுஷம்	1	213	20
கடகம்		4	90	0			2	216	40
	பூசம்	1	93	20			3	220	0
		2	96	40			4	223	20
		3	100	0		கேட்டை	1	226	40
		4	103	20			2	230	0
	ஆயிலியம்	1	106	40			8	233	20
		2	110	0			4	236	40
		3	113	20	தனுசு	மூலம்	1	240	0
		4	116	40			2	243	20
சிம்மம்	மகம்	1	120	0			3	246	40
		2	123	20			4	250	0

இராசி 1	நட்சத்திரம் 2	நட்சத்திர பாதம் 3	பாகை (Degree) 4	கலை (Minute) 5	இராசி 1	நட்சத்திரம் 2	நட்சத்திர பாதம் 3	பாகை (Degree) 4	கலை (Minute) 5
	பூராடம்	1	253	20		சதயம்	1	306	40
		2	256	40			2	310	0
		3	260	0			3	313	20
		4	263	20			4	316	40
	உத்திராட	1	266	40		பூரட்டாதி	1	320	0
மகரம்		2	270	0			2	323	20
		3	273	20			3	326	40
		4	276	40	மீனம்		4	330	0
	திருவோண	1	280	0		உத்திரட்	1	333	20
		2	283	20			2	336	40
		3	286	40			3	340	0
		4	290	0			4	343	20
	அவிட்டம்	1	293	20		ரேவதி	1	346	40
		2	296	40			2	350	0
கும்பம்		3	300	0			3	353	20
		4	303	20			4	356	40

குறிப்பு:—இந்த வாக்கியம் தானாகவே விளங்கக்கூடியது. இதைப் பற்றி விபரமாகத் தெரியவேண்டுமானால் நம்மால் எழுதி அச்சிடப்பட்ட "ஜாதக கணிதம்" என்ற புத்தகத்தில் 87-வது பக்கத்தில் 11-வது வாக்கியத்தின் கீழ்சொல்லிய விதியைப் படிக்கவும். அப்படிப் படிக்க இதை உபயோகிக்கும் விதமும் நன்றாய் விளங்கும்.

(2-a) 1-வது அத்தியாயம் 6-வது சுலோகத்தின்கீழ் 7-வது பக்கத்தில் சொல்லிய வாக்கியம். (Table)

நவாம்ச சக்கிரஸ்புடம்.

வரிசை எண்.	நவாம்ச ராசி	முதற்கொண்டு பா	கலை	வரையிலும் பா	கலை	வரிசை எண்	நவாம்ச ராசி	முதற்கொண்டு பா	கலை	வரையிலும் பா	கலை
1	மேஷம்	0	0	3	20	38	ரிஷபம்	123	20	126	40
2	ரிஷபம்	3	20	6	40	39	மிதுனம்	126	40	130	0
3	மிதுனம்	6	40	10	0	40	கடகம்	130	0	133	20
4	கடகம்	10	0	13	20	41	சிம்மம்	133	20	136	40
5	சிம்மம்	13	20	16	40	42	கன்னி	136	40	140	0
6	கன்னி	16	40	20	0	43	துலாம்	140	0	143	20
7	துலாம்	20	0	23	20	44	விருச்சிக	143	20	146	40
8	விருச்சிக	23	20	26	40	45	தனுசு	146	40	150	0
9	தனுசு	26	40	30	0	46	மகரம்	150	0	153	20
10	மகரம்	30	0	33	20	47	கும்பம்	153	20	156	40
11	கும்பம்	33	20	36	40	48	மீனம்	156	40	160	0
12	மீனம்	36	40	40	0	49	மேஷம்	160	0	163	20
13	மேஷம்	40	0	43	20	50	ரிஷபம்	163	20	166	40
14	ரிஷபம்	43	20	46	40	51	மிதுனம்	166	40	170	0
15	மிதுனம்	46	40	50	0	52	கடகம்	170	0	173	20
16	கடகம்	50	0	53	20	53	சிம்மம்	173	20	176	40
17	சிம்மம்	53	20	56	40	54	கன்னி	176	40	180	0
18	கன்னி	56	40	60	0	55	துலாம்	180	0	183	20
19	துலாம்	60	0	63	20	56	விருச்சிக	183	20	186	40
20	விருச்சிக	63	20	66	40	57	தனுசு	186	40	190	0
21	தனுசு	66	40	70	0	58	மகரம்	190	0	193	20
22	மகரம்	70	0	73	20	59	கும்பம்	193	20	196	40
23	கும்பம்	73	20	76	40	60	மீனம்	196	40	200	0
24	மீனம்	76	40	80	0	61	மேஷம்	200	0	203	20
25	மேஷம்	80	0	83	20	62	ரிஷபம்	203	20	206	40
26	ரிஷபம்	83	20	86	40	63	மிதுனம்	206	40	210	0
27	மிதுனம்	86	40	90	0	64	கடகம்	210	0	213	20
28	கடகம்	90	0	93	20	65	சிம்மம்	213	20	216	40
29	சிம்மம்	93	20	96	40	66	கன்னி	216	40	220	0
30	கன்னி	96	40	100	0	67	துலாம்	220	0	223	20
31	துலாம்	100	0	103	20	68	விருச்சிக	223	20	226	40
32	விருச்சிக	103	20	106	40	69	தனுசு	226	40	230	0
33	தனுசு	106	40	110	0	70	மகரம்	230	0	233	20
34	மகரம்	110	0	113	20	71	கும்பம்	233	20	236	40
35	கும்பம்	113	20	116	40	72	மீனம்	236	40	240	0
36	மீனம்	116	40	120	0	73	மேஷம்	240	0	243	20
37	மேஷம்	120	0	123	20	74	ரிஷபம்	243	20	246	40

வரிசை எண்.	நவாம்ச ராசி	ஆதி கோணம் பா	கலை	வரையிலும் பா	கலை	வரிசை எண்.	நவாம்ச ராசி	ஆதி கோணம் பா	கலை	வரையிலும் பா	கலை
75	மிதுனம்	246	40	250	0	92	விருச்சிக	303	20	306	40
76	கடகம்	250	0	253	20	93	தனுசு	306	40	310	0
77	சிம்மம்	253	20	256	40	94	மகரம்	310	0	313	20
78	கன்னி	256	40	260	0	95	கும்பம்	313	20	316	40
79	துலாம்	260	0	263	20	96	மீனம்	316	40	320	0
80	விருச்சிக	263	20	266	40	97	மேஷம்	320	0	323	20
81	தனுசு	266	40	270	0	98	ரிஷபம்	323	20	326	40
82	மகரம்	270	0	273	20	99	மிதுனம்	326	40	330	0
83	கும்பம்	273	20	276	40	100	கடகம்	330	0	333	20
84	மீனம்	276	40	280	0	101	சிம்மம்	333	20	336	40
85	மேஷம்	280	0	283	20	102	கன்னி	336	40	340	0
86	ரிஷபம்	283	20	286	40	103	துலாம்	340	0	343	20
87	மிதுனம்	286	40	290	0	104	விருச்சிக	343	20	346	40
88	கடகம்	290	0	293	20	105	தனுசு	346	40	350	0
89	சிம்மம்	293	20	296	40	106	மகரம்	350	0	353	20
90	கன்னி	296	40	300	0	107	கும்பம்	353	20	356	40
91	துலாம்	300	0	303	20	108	மீனம்	356	40	360	0

(2-b) துவாதசாம்ச சக்கிரஸ்புடம்.

வரிசை எண்	துவாதசாம்ச ராசி	ஆதி கோணம் பா	கலை	வரையிலும் பா	கலை	வரிசை எண்	துவாதசாம்ச ராசி	ஆதி கோணம் பா	கலை	வரையிலும் பா	கலை
1	மேஷம்	0	0	2	30	13	ரிஷபம்	30	0	32	30
2	ரிஷபம்	2	30	5	0	14	மிதுனம்	32	30	35	0
3	மிதுனம்	5	0	7	30	15	கடகம்	35	0	37	30
4	கடகம்	7	30	10	0	16	சிம்மம்	37	30	40	0
5	சிம்மம்	10	0	12	30	17	கன்னி	40	0	42	30
6	கன்னி	12	30	15	0	18	துலாம்	42	30	45	0
7	துலாம்	15	0	17	30	19	விருச்சிக	45	0	47	30
8	விருச்சிக	17	30	20	0	20	தனுசு	47	30	50	0
9	தனுசு	20	0	22	30	21	மகரம்	50	0	52	30
10	மகரம்	22	30	25	0	22	கும்பம்	52	30	55	0
